சிலப்பதிகார வசனம்

★

முழக் வெளியீடு

கழகவெளியீடு : க0௫௫

36

சிலப்பதிகார வசனம்

புலவர் அரசு

சிலப்பதிகார வசனம்

புலவர் அரசு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6, :: சென்னை-1.
1961

இராஜு முதலியார் (1900)

Ed 1 July 1961

CILAPPATHIKARA VACANAM

முத்தையா அச்சகம், சென்னை-14.

பதிப்புரை

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக்கதை புலவர்க்கும் பாமரர்க்கும் ஒருங்கே உள்ளக் கிளர்ச்சி யூட்டும் கதையாய்த்—தமிழ்ப்பண் பாட்டினையும் வீரத்தையும் விளக்கும் ஒளி மணிவிளக்காய்த் — திகழ்ந்து வந்திருக்கிறது. சேரமன்னரின் இளவல் செஞ்சொற்கவிஞர் இளங்கோவடிகளால் யாக்கப்பட்ட இக்காப்பியம் புலவர்க்கே நயமெலாமுணர்ந்தின்புறத் தக்க பெற்றித்தாய் இலங்குகிறது. புலம் முற்றாத மற்றையோர் கதைப் போக்கினில் மட்டு மீடுபடுவாராய்க் கவிஞர் நெஞ்சோடு உறவுகொண்டாடும் நிலை எய்தப்பெறாது போய் விடுகின்றனர். இக் குறை நீக்குதற்கென்றே சிலப்பதிகார வசனம் என்ற இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூல் செய்யுட் காப்பியத்தை இனிய எளிய தமிழில் உரைநடையாக மாற்றித் தருகிறது. சிலப்பதிகார உரைநடையாசிரியர்கள் அனைவருடைய உரைகளையும், பொருள்விளக்கங்களையும் கற்று இவ்வசன மெழுதிய புலவர் 'அரசு' அவர்கள் காப்பிய முழுமைக்கும் பொழிப்புரை கொடுப்பதுபோலப் பொருள் நலங்கள் எல்லாம் விளங்குமாறு அழகுதமிழில் இந்நூலை ஆக்கியுள்ளார். காலத்தாற் பழமை எய்திய காப்பியங்களின் பொருள்களை முட்டுப்பாடின்றி மிக்குக் கல்லாரும் அறிந்து கொள்வான் உரைநடை நூல்கள் ஆக்கும் பணியைத் தலைமேற்கொண்ட இக்கழகம் இத்போழ்து சிலப்பதிகார வசனத்தை முதல்

முறையாக வெளியிடுகிறது; இதற்கு முன்பு பெரியபுராணம், பெருங்கதை, சிந்தாமணி, கம்ப ராமாயணம், திருவிளையாடற் புராணம், வில்லி பாரதம், சூளாமணி, கந்த புராணம் முதலிய நூல்கட்கு உரைநடை நூல்கள் இக்கழகத்தினின்று வெளியிடப்பட்டுள்ளன; அவற்றைத் தமிழகம் விரும்பி ஏற்றுள்ளது.

இவ்வுரைநடையினூடே முக்கியமான வரிப்பாட்டுக்களும், வெண்பாக்களும், பிற பாடற்பகுதிகளும் மூலநூலினின்றுதேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை காப்பிய மணத்தை இவ்வுரை நடையில் அள்ளிப் பரவச் செய்கின்றன என்று கூறலாம். இவையனைத்தும் மனப்பாடம் செய்தற்குரிய சிறப்புடைய பகுதிகளாகும்.

முத்தமிழ்க் காப்பியத்தின் வித்தகப் புலமையை மாணவர்களும், பொதுமக்களும் உணர்ந்து கொள்ளத் துணைபுரியும் இவ்வுரை நடைநூலை வடித்துத்தந்த திரு. புலவர் அரசு அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிலப்பதிகார மூலத்தைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாயும், அக்காப்பியத்தின் பொருளை எளிதிலறிந்துகொள்ளும் துணையாயும் அமைந்துள்ள இவ்வுரைநடை நூல் எல்லாப் பொது நூலகங்களிலும், கல்லூரி உயர்நிலைப் பள்ளி நூலகங்களிலும் இன்றியமையாது இருக்கவேண்டிய பெற்றித்தாகலின் சிறந்த கட்டடத்துடன் அழகுறப் பதிப்பித்து வெளியிடப் படுகின்றது.

தமிழகம் இதனைப் போற்றிப் பயனுறுமாக!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

உள்ளுறை

சிலப்பதிகார வசனம்

பதிகம்

திருக்குண வாயிலில் உள்ள கோயிலிலே அரச இன்பத்தைத் துறந்து, தவக்கோலந் தாங்கியிருந்த, மேலைத் திசை வேந்தனுகிய செங்குட்டுவனெனும் சேரர் பெருமான் தம்பியாகிய (இளங்கோ) அடிகளிடம், செங்குன்றில் வாழ் குறவரெல்லோரும் ஒன்றுகத் திரண்டு சென்று,

"எம் ஊரின் அருகிலே பொன்போலும் மலரையுடைய ஒரு வேங்கை மரத்தின் குளிர்ந்த வளமுடைய நிழலிலே, ஒரு முலையை யிழந்தவளாகிய அழகிய வீரக் கற்புடையாள் ஒருத்தி வந்து நின்றுள். அவளுக்காக வானவர் தலைவனுகிய இந்திரனுடைய பணியாளர் திரண்டு வந்து, கற்புடைய அவள் காதற் கணவனைக் காட்டி, அவளையும் அவனுடன் அழைத்துக்கொண்டு எம் கண் காண வானகத்தே சென்றது ஒரு வியத்தகு நிகழ்ச்சியாக இருந்தது. அதனை நீ அறிந்தருள்க" என்றுரைத்தனர்.

அப்பொழுது செங்குட்டுவன் வியந்து, பரிசில் பெற அருகே வந்திருந்த சீத்தலைச் சாத்தனுர் முகத்தை நோக்கினுன். அவர் அவன் குறிப்பை யறிந்து, 'அவள் ஒரு முலை யிழக்கும்படி நிகழ்ந்த வரலாறெல்லாம் யான் அறிவேன்' என்று கூறத் தொடங்கினுர் :

ஆத்தி மாலை அணிந்த சோழனது பழைய நகரங்களில் ஒன்றுகிய, நீங்காத் திருவிழாச் சிறப்பினையுடைய

காவிரிப்பூம்பட்டினத்திலே, கோவலன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் அவ்வூரிலே நாடகம் சிறப்புறும்படி நடிக்கும் பொதுமகளாகிய மாதவியுடன் கூடி நுகர்ந்த ஒழுக்கத்தாலே பெறுதற்கரிய தன் பொருளையெல்லாம் இழந்தான். அவன் மனைவி கண்ணகி யென்றழைக்கப் பெறுபவள். முன்னமே மாதவியின் பொருட்டு அவளுடைய அணிகளெல்லாம் தொலைந்ததால், தொலையாதிருந்த, வேலைப்பாடமைந்த அவளுடைய காற்சிலம்பை விற்பதற்காகத் தமிழ்ப்பாடலிலே சிறந்த சிறப்பினையுடைய, பாண்டியனது பெரும்புகழையுடைய, மாடங்கள் நிறைந்த மதுரையிலே மனைவியொடும் புகுந்தான்.

மறுநாள் அச்சிலம்பை விற்பதற்குப் பெரிய கடைத் தெருவின்கண் சென்ற கோவலன் (காலன் வந்தாற் போல முன்னே வந்த) பொற்கொல்லனைக் கண்டு அவன் கையிற் கொடுத்து மதிப்பிடச் சொன்னான். பொற்கொல்லன் அச்சிலம்பை உற்று நோக்கி, 'மிகு விலைபெற்ற இச்சிலம்பு அரசமாதேவிக்கே தகுதியன்றி மற்றோர் அணியுந் தகவதன்று. ஆதலின் இதனை அரசனுக்குக் கூறி வருமளவும் இக் கோயிலிலே இருக்க' என்று கோவலனை ஆங்கிருந்த கோயிலிலே இருத்திச் சென்றான்.

கோவலனைத் தான் வருமளவும் வேறொருவர் கண்டு சிலம்பினைப் பற்றிப் பேசாதவாறு ஒரு கோயிலிலேயே இருத்திச் சென்ற பொற்கொல்லன் தான் முன்பு பணிக்களரியிலிருந்து கவர்ந்து கொண்ட அரசியின் சிலம்பு இது என அரசனுக்குக் கூறித் தப்பித்துக் கொள்ளுஞ் சூழ்ச்சியுடன் அரசனிடம் சென்று, 'முன்னர்க் காணமற்போன பலவகை வேலைப்பாடமைந்த சிலம்பைப் பிறநாட்டானாகிய ஒரு கள்வன் கையிற் கண்டேன்' என்றான்.

அதனைக் கேட்ட வேப்பமாலையணிந்த பாண்டியன் தான் முற்பிறவியிற் செய்த தீவினை வந்து விளையும் காலமாதலாலே ஒன்றையும் சிந்தியாதவனாகிக், கொலைத் தொழிலிலே அடிப்பட்ட காவலரைக் கூப்பிட்டு, 'இவனி

கூறிய அக்கள்வனைக் கொல்ல அச்சிலம்பையும் அவனையும் இப்பொழுதே கொண்டுவருவீராக' என்று கூறக் கருதியவன், மனைவியின் மேற் கொண்ட காமத்தாலே தன்னை மறந்து, இச்சிலம்பு இவள் பிணக்கைப் போக்கும் மருந்தாகும் என்று கருதி, வாய்தவறி, 'கொன்று அச்சிலம்பை இப்பொழுதே கொணர்க' என்று கூறிவிட்டான்.

அங்ஙனம் கொன்று கொண்டு வருக என்று அரசன் கூறக் காவலரும் வினைவிளை காலம் ஆதலின் கொன்றனர். அங்ஙனம் கொலைக்களத்திலே பட்ட கோவலன் மனைவி தனக்கு ஆதரவு காணாளாயினள். எனினும், அவள் கற்புடையாளாதலின் அரசன் முன் சென்று அவன் உயிர் கேடுறும்படி கண்ணீர் சிந்தினள். பின்னர் அவன் ஊராகிய மதுரையையும் தன் முலையைத் திருகி அதனகத்தெழுந்த தியாலே சுட்டாள். இங்ஙனம் புரிந்த, பலரும் புகழும் பத்தினியாவாள் இவள்.

இங்ஙனம் சாத்தனர் கூறியதைக் கேட்ட செங்குட்டுவன், 'நீர் முன்னர் வினை விளைகாலம் என்றீர். கோவலனுக்கும் கண்ணகிக்கும் வினைவிளைந்த காலம் என்ன?' என்று வினவினன்.

சாத்தனர் கூறினர் :

வெற்றிமிக்க சேரனே! கேட்பாயாக! அசைவில்லாத சிறப்பினையுடைய மதுரைப் பெருநகரிலே உள்ள மன்றுகளாகிய பொதியில்களில்; இறைவன் எழுந்தருளிய வெள்ளியம்பலத்திலே மதுரையெரிந்த அன்றிரவிலே துயின்றிருந்தேன், நள்ளிரவிலே மதுரையின் காவல் தெய்வம் பெருந்துயரடைந்த வீரபத்தினியின் முன்னர் வெளிப்பட்டு நின்று, "கொதிப்பேறிய நின் சீற்றத்தாலே நின் கொங்கையிலே கொடிய தியை உண்டாக்கினவளே! பைந்தொடியே! உங்களுக்கு முன்னிருந்த நல்வினை முடிந்தது. குன்றாத புகழையுடைய நல்ல கலிங்க நாட்டிலே சிங்கபுரம் என்னும் நகரிலே, சங்கமன்

என்னும் வணிகன் மனைவியிட்ட சாபம் உன் கணவனுக்கும் உனக்கும் இப்பிறப்பின்கண்ணே வந்து மூண்டது; ஆகையால், நீண்டு நெருங்கிய கூந்தலையுடையவளே! உன் கணவனை இப்பொழுது காணமாட்டாய். பதினான்காம் நாள் பகற்பொழுது கழிந்த பிறகு காண்பாய். அவ்வாறு காண்பது மக்கள் வடிவிலன்று; வானோர் வடிவிலே காண்பாய்'' என்று கூறியது. அவ்வஞ்சம் அற்ற கட்டுரையை யான் கேட்டேன்,

இவ்வாறு செங்குட்டுவனிடம் சாத்தனார் கூறக் கேட்ட இளங்கோவடிகள், 'நூலொழுங்கினையுடைய அரசியலிலே சிறிது ஒழுக்கந்தவறினும், அவ்வரசரை அறக்கடவுளே கூற்றுவனாகிக் கொல்லும் என்பதும், புகழமைந்த கற்புடைய பெண்டிரை மக்களே அன்றி வானவரும் முனிவரும் முதலாக யாவரும் சென்று தொழுதல் இயல்பென்பதும், முற்பிறப்பிலே செய்த இருவினையும் செய்த முறையே செய்தவனைத் தேடிவந்து உருவமைந்து பயனை உண்பிக்கும் என்பதும் ஆகிய இம்மூன்று பகுதியும் இந்தச் சிலம்பு காரணமாக முறைப்படி பிறந்தன ஆகையால், சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு தொடர்நிலைச் செய்யுள் செய்து உலகில் யாம் நிறுத்துவோம்' என்று கூறினார்.

அதனைக் கேட்ட சாத்தனார், இவ்வரலாறு புகார், மதுரை, வஞ்சி, மூன்றினும் நிகழ்ந்ததாகலின் முடியுடைய வேந்தர் மூவர்க்கும் உரியது. ஆதலால், அடிகளே† நீங்களே அருளிச் செய்க!' என்று கேட்டுக்கொண்டார்.

சாத்தனார் வேண்டுகோளுக்குடன்பட்ட அடிகள் கீழ்க்கண்டவாறு பிரித்துக்கொண்டு நூல் எழுதினார்.

அவர் செய்த பிரிவு :

1. கோவலன் கண்ணகி மணத்திலே மகளிர் வாழ்த்தும் மங்கல வாழ்த்துப் பாடல். 2. பெற்றோரிருவரும்

---

† 'நீரே அருளுக' என்பதனை வினாப் பொருள் தோன்ற 'நீரே அருளிச் செய்க என்று வினாவிய சாத்தற்கு' என்று பொருள் கூறுவர் அடியார்க்குநல்லார்.

இவர்களை. இல்வாழ்க்கையிலே பழக்கத் தனியே இருக்க விட்ட காதை. 3, ஐந்தாம் ஆண்டிலே தண்டியம் பிடித்து, ஏழாண்டு நடம்பயின்ற மாதவி தன் மங்கைப் பருவத்தே கரிகாலன் முன் அரங்கேற்றிய காதை. 4. அந்திக்காலத்து மாலையைச் சிறப்புச் செய்த காதை. 5. புகாரிலே இந்திரனுக்குத் திருவிழாச் செய்த காதை. 6. விழாவின் இறுதியிலே கடலாடிய காதை. 7. கடலாடிய கோவலனும் மாதவியும் கழிக்கானலில் அமர்ந்து யாழிசைத்துப் பாடிய கானல்வரி. 8. இளவேனிற்காலம் வந்து சேர்ந்த பொழுது, கோவலனைப் பிரிந்திருந்த மாதவி வருந்திய காதை. 9. கண்ணகி தான் கண்ட தீங்கை யுடைய கனவின் திறத்தைத் தேவந்திக்கு உரைத்த காதை. 10. யாவரும் விரும்பி வினவி அறியும் திற முடைய சோழ நாட்டின் மருதநில வளத்தைக் கண்ணகி தன் கணவனுடன் கண்ட காதை. 11. பாலைநிலமாகிய காட்டினைக் கண்டு துன்புற்ற காதை. 12. வேட்டுவப் பெண்ணாகிய சாலினி கொற்றவைக் கோலம் புனைந்து ஆடிய கோலச்சாரி. 13. இதழ் விரிந்த மலர்மாலை யணிந்த கண்ணகியுடன் கோவலன் மதுரைப் புறஞ்சேரி யிற் சென்று தங்கிய காதை. 14. முழங்கும் முரசொலி யிசைக்கும் மதுரையைக் கோவலன் கண்ட காதை. 15. அழகெலாம் பொருந்திய நங்கையான கண்ணகியை மாதரி யிடம் கவுந்தியடிகள் அடைக்கலம் கொடுத்த காதை. 16. கோவலன் கொலைக்களத்திலே வெட்டப்பட்ட காதை 17. தம் சேரிக்கு உற்பாத சாந்தியாக மாதரி முதலான இடைச்சியர் ஆடிய குரவைக் கூத்து. 18. கோவலன் கொலையுண்ட தீயவகையைக் கண்ணகி கேட்டுத் துன்புற்ற இயல்பு. 19. பத்தினிப் பெண்டிர் எல்லோருங் காண நாணத்தை விட்டு வெளிப்பட்ட கோலத்துடன் கண்ணகி ஊர்சூழ வந்த ஊர்சூழ் வரி. 20. புகழ் பொருந்திய பாண்டியனுடன் கண்ணகி வழக்குரைத்த காதை. 21. தான் உரைத்த வழக்கையுந் தோற்று உயிரையுந் தோற்ற நெடுஞ்செழியனின் தேவியை நோக்கிக் கண்ணகி வஞ்சினங் கூறிய இயல்பு. 22. கண்

ணகியின் முலேமுகத்தெழுந்த தீ அவள் ஏவிய இடமெங்கும் பற்றி எரிந்த காதை. 23. அவ்வாறு தீப்படுதலின் அதற்கு ஆற்ருமல் மதுரை மாதெய்வம் தீயைத் தணித்தற்கு வந்து கண்ணகியின் முற்பிறப்புத் தொடர்பைக் கட்டுரைத்த காதை. 24. தேன் ஒழுக மலர்ந்த மாலேயணிந்த குறத்தியர் கண்ணகியை வேங்கைமர நீழலின்கண் கண்டதற்கு உற்பாத சாந்தியாக முருகவேளே நோக்கிச் செங்குன்றின்கண் ஆடிய குன்றக் குரவை.

என்று சொல்லப்பட்ட இந்த இருபத்துநான்குடன், 25. காட்சிக் காதை. 26. இமயத்திலே கற்கொண்ட காதை. 27. கொண்ட கல்லேக் கங்கையாற்று நீர்ப்படுத்தின காதை. 28. அக்கல்லினே நட்ட காதை. 29. அவ்வாறு நடுங்கல்லான பிரதிட்டையும் விழாவும் பெற்ற பத்தினிக் கடவுள் செங்குட்டுவனேயும் நெடுஞ்செழியனேயும் பெருங்கிள்ளியையும் வாழ்த்திய காதை. 30. வாழ்த்திய பின்னர் அப்பத்தினிக் கடவுள் முற்கூறிய மன்னரோடு கனகவிசயர் முதலிய ஆரியமன்னரையுள்ளிட்டவர்கட்கு வரங்கொடுத்த காதை என்னும் ஆறையும் சேர்த்து, முப்பதாக எண்ணப்பட்ட உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுளேப் புகழமைந்த இளங்கோவடிகள் அருளிச் செய்ய, மதுரைக் கூலவாணிகன் சீத்தலேச்சாத்தனுர் கேட்டார்.

இவ்வரையறை அறம் பொருள் இன்பம் என்னும் பால்களின் வகையைத் தெரிந்த செய்யுளின் பதிகமரபாகும்.

— —

உரைபெறு கட்டுரை

பாண்டியன் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் ஆராயாமற் கோவலனைக் கொல்வித்த அன்று முதல் பாண்டியநாடு மழைப் பஞ்சம் மிகுந்து, அதனாலே வறுமை யுண்டாகி வெப்பு நோயும் குரு என்னும் நோயும் இடைவிடாமல் வருத்தியதால், கொற்கையில் இருந்த இளஞ்செழியன் கண்ணகிக்கு ஆயிரம் பொற் கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாலே சாந்தி செய்து திருவிழா நடத்தினான். அன்றுமுதல் அவன் நாடு மிகவும் மழை பெய்து முன் கூறிய வறுமையும் நோயும் நீங்கப் பெற்றது.

அவ்வாறு பாண்டிநாடு வறுமையும் நோயும் அடைந்ததையும் வெற்றிவேற் செழியனெனும் இளஞ்செழியன் விழா நடத்தியதால் மழைபெய்து வறுமையும் நோயும் நீங்கியதையும் கேள்வியுற்றுக் கொங்கு மண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் கண்ணகிக்கு அவ்வாறே சாந்தியும் விழாவும் புரிந்தார். அதனால் வறுமையும் பிணியும் நீங்கப் பருவ மழை பெய்தலில் வழுவாதாயிற்று.

அதனைக் கேள்வியுற்றுக் கடலை அகழாகவுடைய இலங்காபுரத்துக் கயவாகு என்று புகழ்பெற்ற அரசன் கண்ணகிக்கு அவ்வாறே நாடோறும் பலிகொள்ளும் பலிபீடத்தை முன்னர் அமைத்து, பிறகு கோயிலும் கட்டி, முற்கூறிய துன்பங்களைக் கெடுத்து நமக்கு வேண்டும் வரங்களை இவள் தருவாள் என்று துணிந்து, ஆடித் திங்களிலே ஆண்டுவிழாவாகத் தன் நகரத் தெருத்தொறும் உலாச் செய்வித்தான். அதனால் மழை குறைவின்றி நிலைபெற்றது. மழை பெய்தலான் குறைவின்றி விளையும் விளைவினையுடைய நாடாயது இலங்கை.

அதனைக் கேட்டுச் சோழநாட்டு உறையூரிலே அரசு புரியும் பெருநற்கிள்ளி யென்னும் வளவன், 'இவள் பத்தி

னிக் கடவுள் ஆகையால், எவ்வகையாலும் நமக்குத் துன்பத்தைப் போக்கி வரந் தருவாள்' என்று கருதிக் கண்ணகிக்குக் கோயில் அமைத்து நித்தல் விழாவும் நடத்தினான்.

நூற் சிறப்புப் பாயிரம்

வெண்பா

நீடிருங் குன்றம் நிழல்காலும் மண்டிலத்துக்
கோடுகோ டாய்த்தோன்றும் கொள்கைத்தே—கூடலார்
கொண்டாடும் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்
தண்டா வுரைமுத் தமிழ்.

கட்டளைக்கலித்துறை

நலத்தகு நால்வரென் றோதிய நான்முகத் தோன்படைத்த
குலத்ததி கார வணிகர் குலபதி கோத்த தமிழ்ப்
புலத்ததி காரர் உறைபதி பூம்புகார் போற்றநின்ற
சிலப்பதி காரஞ்செய் தான்நெடுஞ் சேரர் சிகாமணியே.

— —

முதலாவது

புகார்க் காண்டம்

1. மங்கல வாழ்த்துப் பாடல்

திங்கள் :

நாம் திங்களை வாழ்த்துவோம்! திங்களை வாழ்த்துவோம்! தாது பரவிய மாலையையுடைய சோழன் தாங்கிய குளிர்ச்சியை யுடைய வெண்குடைபோலப் பொது நீக்கி இவ்வுலகை அளித்தல் செய்தலால் திங்களை வாழ்த்துவோம்!

ஞாயிறு :

நாம் ஞாயிற்றை வாழ்த்துவோம்! ஞாயிற்றை வாழ்த்துவோம்! காவிரி நாட்டையுடைய சோழ மன்னனின் ஆணையாழி போலப் பொலிவு பொருந்திய கொடுமுடியை யுடைய மேருவை வலமாகச் சூழ்ந்து வருதலால் ஞாயிற்றை வாழ்த்துவோம்!

மழை :

நாம் பெரிய மழையைப் போற்றுவோம்! பெரிய மழையைப் போற்றுவோம்! அச்சந்தரும் கடலை வேலியாகக் கொண்ட உலகத்திற்கு அவன் அருள் செய்தலைப் போல மாறுமல் மேலாக நின்று தன் பெயலால் வளம் பெருகச் சுரத்தலாற் பெரிய மழையைப் போற்றுவோம்!

புகார் :

நாம் பொலிவுமிக்க புகாரைப் போற்று வோம்! புகாரைப் போற்றுவோம்! பெருங்கடல் சூழ்ந்த உலகிலே அவன் குலத்தைப் புகழ்கின்றவர் இதனையும் புகழ்வார் ஆகையால் பொலிவுமிக்க புகாரைப் போற்றுவோம்!

பேரறிஞன் அருளிய நூலின் முடிந்த பொருளை உணர்ந்த பெரியோர் பொதியிலும் இமயமும், குடிகள் வேறு நாட்டை நோக்கிச் செல்லாத, தனக்கே உரிய சிறப்பை

யுடைய புகாரும் என்னும் மூன்றும் ஒரு தன்மைய ஆத லான், முதலில் தோன்றிக் கெடுதியின்றி நிலைபெற்றன என்று அவ்வாறு கூறுதலையன்றி அவற்றிற்கு முடி வுண்டென்று கூறுர். ஏனெனில், பொதியிலில் அகத்திய முனிவனும், இமயத்தில் இறைவனும் முனிவர்களும் இருத் தல் போலப் புகாரில் பழங்குடிகளான அரசனும் வணிக ரும் உண்டாகலின் என்க.

கண்ணகி :

புகார் அவ்வாறு நிலைபெற்றதாகையால், துறக்கத்தின் புகழும் நாகருலகமாகிய பவனத்தின் இன்ப மும் நிலைபெற்ற அந் நகரிலே மழைபோலக் கொடுக்கும் கையையுடைய மாநாய்கனுடைய குலத்திலே தோன்றிய மலர்க் கொம்பையும் சிறந்த பொற்கொடியையும் போன்ற வள், பன்னீராண்டிற்குட்பட்ட வயதுடையவள், தாமரை மலரிற் பொருந்திய திருமகளின் புகழ் பெற்ற அழகு இவளழகைப்போன்றதென்றும் குற்றமற்ற அருந்ததியின் புகழ்பெற்ற கற்பு இவள் கற்பைப் போன்றதென்றும் உல கிலுள்ள மாதர்கள் தன்னைத் தொழுது போற்றும்படி விளக்கமான பெருங்குணங்களை விரும்புகின்றவள் ஆகிய கண்ணகியென்ற பெயரால் அழைக்கப்பெறும் ஒருத்தி இருந்தாள்.

கோவலன் :

அப் புகாரிலேயே, பெரிய நிலமெல்லாம் தனியே ஆளும் கரிகாலனை முதலாக வைத்து எண் ணத்தக்க ஒப்பற்ற குடிகளிலே மிகப் பெருகிய செல்வத் தையுடையவனுகிய நல்வினையால் உள்நாட்டினும் வெளி நாட்டினும் இருந்து வரும் தன் செல்வத்தை வறியவர்க்குக் கொடுக்கும் மாசாத்துவான் என்று பெயர் கூறப்படும் வளமிகு வணிகனின் மகன் பதினாருண்டிற்குட்பட்ட வய துடையவனுக இருந்தான்.

அவன் நிலவுலகைக் கடந்த புகழினையுடையான்; பண்ணைக் கடந்த மொழியினராகிய திங்கள் போலும் முகமுடைய பெண்டிர் அவனிடங் கொண்ட காதலால், உலகில் நேரிற் கண்டு புகழப்படும் செவ்வேள் என்று

அவன் புகழைத் தம் ஆயத்திலே பாராட்டிப் பிறரறியப் பரப்பிக் காமக் குறிப்புடன் மனத்திற் கொண்டு போற்று தற்குரியான்; இனி, திருமகளும் கலைமகளும் போர்மகளும் இவனுடைய அழகையும் அறிவையும் வீரத்தையும் பொறையையுங் கண்டு இவனே அவற்றிற்குத் தக்கவன் என்று மனத்துட் கொண்டு போற்றும் கிழமையுடையனாக இருந்தான். மற்றும், மாதர் குழுவிலே இவன் புகழுடையான் செவ்வேள் போன்றான் என்று இசையைப் பரப்ப, மற்றோரும் காதலாற் கொடை, அழகு, வீரம் இவற்றிற்குரியான் எனப்போற்றுமாறிருந்தான். இத்தகைய சிறப்புடைய அவன் கோவலன் என்று பெயர் கூறப்படுவான்.

திருமணம்:

அத்தகைய சிறப்புடைய இருவரையும் அவர்களுடைய பெற்றோர்கள், ஒரு நன்னாளிலே மணவணி, காண்பதற்கு மகிழ்வுடன் பேசி முடித்தனர். பிறகு அவர்கள், அழகிய கலன்களை யணிந்த மாதரை யானையின் கழுத்துப்புறத்திலே இருத்திப் புகார் நகரெங்கும் அவ்விருவருடைய மண மகிழ்ச்சியை அறிவித்தனர். உடனே நகரெங்கும் மங்கல அணியை அணிந்தனர். முரசு முதலியவை முழங்கின. முருடு முதலியவை அதிர்ந்தன. சங்கு முதலியவை ஒலித்தன, அரசன் உயர்வு எழுந்தாற்போல வெண்குடைகள் எழுந்தன.

மாலையணிந்த முடியையுடைய வயிரமணித் தூண்களை வரிசையாக நிறுத்திய மண்டபத்திலே நீலப்பட்டை மேற்கட்டியாகக் கட்டி, அதன்கீழ் நிறுத்தின முத்துப் பந்தலில், வானில் திங்கள் உரோகிணியை அடைந்த நாளில், மிக முதிர்ந்த வயதுடைய பார்ப்பான் வணிகர்க்குச் சோதிடாங்கத்திற் கூறிய நெறியிலே சடங்குகளைக் காட்ட, அருந்ததியின் தகவுடைய கண்ணகியைக் கோவலன் கைப்பற்றித் தீவலம் புரியும் அழகைக் காண்கின்றவர் கண்கள் முற்பிறப்பிலே செய்த தவம் யாதோ?

அப்பொழுது, ஏந்திள முலையினரும் மலர் விரிந்த கூந்தலையுடைய அழகிய பொற்கொடியன்னாரும் விளங்

கும் மேனியரும் ஆகிய மகளிர் நறுமணப் பொருள்களையும் மலர்களையும் சாந்தையும் புகையையும் மலர் மாலைகளையும் இடித்த சுண்ணத்தையும் விளக்கையும் அணிகலன்களையும் விரிந்த முளைப்பாலிகைகளையும் ஏந்தி, ஒசிந்த நோக்கும் முகிழ்த்த மூரலும் உடையராய் உரையாலும் பாட்டாலும், 'இவளும் தன் காதலனைத் தன் கண்ணினும் நெஞ்சினும் பிரியாமற் புணர்வோளாக! இவள் காதலனும் இவளை அகத்திட்டகை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்வோனாக! இருவரன்பும் எப்போதும் ஒருவரன்பாக' என நினைந்து, தம் வழிபடு தெய்வத்தை மனத்தால் வணங்கி அவ்வகை வாழ்த்திப் பின்பு சில மலரைத் தூவி, 'இவ்வுலகில் இமயமலையிலே நிறுவிய ஒளி பொருந்திய புலிக்கொடி பொன்முடியை யுடைய அம்மலையிலேயே நிற்பதாக! எங்கும் தன் போரிலே மேம்பட்ட சினவேலேந்திய கரிகாலன் மாறுபாடில்லாத தன் ஆழியைச் செலுத்துவோனாக!' என்று வாழ்த்தி, அழகிய உலகிலே அருந்ததியைப் போன்ற கண்ணகியை மங்கலம் புனைந்த அழகிய அமளியிலே ஏற்றினர்.

——

2. மனையறம் படுத்த காதை

மணிக்காலமளிமிசை :

புலவர் பாவிலே உரைக்கப் பெறுஞ் சிறப்பினை யுடைய அரசரும் விரும்பும் செல்வத்தையுடைய கடலோடிகளால் நிறைந்த, மன்னர் விரும்பும் பயன் பொருந்திய காவிரிப்பூம் பட்டினம் மரக்கலத்தாலும் காலாலும் கொண்டு வந்து சேமித்தலாலே, அடைதற்கரிய பொருளைத் தருகின்ற புதுமையையுடைய தீவு முதலான நாடுகள் வந்து கூடி ஒருங்கே தொக்காற் போலவுள்ள பண்டத்தால், ஆரவாரிக்கும் கடல் சூழ்ந்த உலகம் முழுதும் ஒன்றாக வரினும் வழங்கக் குறையாத வளமுடையது. ஆகவே, அவ்வாறு அறத்தினுலாகிய பொருளால், அந்நகர்தாமிருப்பதால், உயர்ந்த தானத்தைச் செய்தோர் அடையும் உத்தர குருவினை ஒக்கும்படி குலத்திலே குறையாத செல்வர்க்குத் தோன்றிய பெரிய மலர் போலும் கண்களையுடைய கண்ணகியும் அவளுக்குக் காதலையூட்டுங் கணவனாகிய கோவலனும் உயர்ந்த நிலையையுடைய மாடத்திலே, இடை நிலையின்கண், மயன்செய்து வைத்தாற் போன்ற மணிகளிழைத்த கால்களையுடைய அமளியின்மேல் இருந்தனர்.

அவனும் அவளும் :

அவ்வாறிருக்கும்போது, கழனியிலுள்ள, கழுநீரும் செவ்வாம்பலும், இதழொடியாத சிறப்புமிக்க குவளையும் தாமரையுமாகிய அரும்புகள் வண்டுகள் ஒலிக்க முறுக்கவிழ இவற்றிலுள்ள மணத்திலே தோய்ந்துண்டு, இவற்றின் வேறாகிய மேதக்க தாழையின் விரிந்த வெள்ளிதழ்களிலும் சண்பகப் பொதும்பரிலும் ஒழுங்காக மலர்ந்த மாதவிப் பொதும்பரிலும் உள்ள தேனைத்தேர்ந்து பருகிக், கண்ணகியின் ஒளி பொருந்திய முகத்திலே நெளிவையுடைய கடைகுழன்ற கூந்தலிலே கலவை மணம் பெற வழி காணுமல்

ஏங்கித் திரியும் சுரும்புகளுடனும் வண்டுகளுடனும் செல்வியை நோக்கி, மணிகளிழைத்த மாலையாலே ஒழுங்குற நிரைத்து வகுத்த அழகினையுடைய சாளரத்தின் சிறு புழையாலே செவ்வியறிந்து நுழைந்த மணம் பொருந்திய தென்றலை நுகர்ந்து மகிழ்ச்சியடைந்த இருவரும் புணர்ச்சியை விரும்பிக் காதல் மிகுந்தனர். எனவே, இடைநிலை மாடத்திலிருந்து, மணமலராகிய அம்புடன் வேனில் வேந்தன் வீற்றிருக்கும், நிரைபட அமைக்கப்பட்ட மேனிலத்திலே நிலா முற்றத்தை அடைந்தனர். அங்கே சுரும்புகள் தேனைப் பருகுவதற்குப் பரப்பி வைத்தாற்போலக் கிடந்த மணமலர்ப் பாயலிலே, முதிர்ந்த கடல் சூழ்ந்த உலகமெல்லாம் விளக்கும் ஞாயிறும் திங்களும் சேர இருப்பக் கண்ட காட்சிபோல அமர்ந்தனர்.

அப்பொழுது அவன் அவளுடைய தோளில் கரும்பையும் மலர்க் கொடியையும் மார்பிலே தொய்யிலையும் எழுதினன்.

பின்னர், அவன் அணிந்த, வண்டுகள் முறுக்கை அலர்த்த அலர்ந்த வெண்மையான இதழ்களையுடைய பெரிய ஒளி விடும் மல்லிகை மாலையுடன், அவள் அணிந்திருந்த, இதழ் ஒடியாமற் கட்டின செங்கழுநீர்ப் பிணையல் குலைந்தலைந்து மயங்கத் தம் நினைவெல்லாம் புணர்ச்சியிலே மயங்கக் கூடினர். அப்போது கோவலன் நீங்காத காதலுடன் திருமகளைப் போல்வாளின் முகத்தை நோக்கித் தன் அறிவு முதலியவற்றுடன் சேராத, பொருள் பொதிந்த ஒரு மொழி கூறத் தொடங்கினன்:

நலம் பாராட்டல்:

வானவர் பேன்ற இறைவன் அழகுடன் முடியிற் புனைந்த அருமை யுடையதாயினும், திருமகளாகிய நின்னுடன் பாற்கடலிலே பிறந்த வுடைமையின் தான் முடித்த பிறையை எண்ணுள் திங்களாக்கி நின் அழகிய நெற்றியாக என்று அவ்விறைவன் தரக்கடவன். பகைவரின் போர் முனையிலே தமக்கு வெற்றியைத் தரும் வீரர் சிலர்க்குப் படைக்கலம் முதலியன நல்கல் அரசர்க்கு இயல்பாகையால் உருவமில்லாதவனுகிய

காமன், தன்ஒப்பற்ற பெரிய ஒருகருப்புவில்லைத் திருத்திச் சேமவில்லையுங் கூட்டி இரண்டாக்கி நின் புருவங்களாகுக என்று தரக்கடவன். வான வர்க்குச் சாவை நீக்கும் பயனுடைய அமிழ்திற்கு முன் னர் நீ பிறந்ததால், வானவர் தலைவனுகிய இந்திரன், அசுரரை யழித்துச் சுரரைக் காக்க எடுத்த வச்சிரப் படையை நினக்கு இடையாகுக என்று தரக்கடவன். ஆறுமுகமுடைய முருகவேள் காரணம் வேறென்றுமில்லை யென்ருலும் யான் இறந்து படுதலைத் தன் கண்ணுற் காண வேண்டிப் போலும், தன் கையில் உள்ள அழகிய ஒளியை யுடைய நீண்ட வேல் ஒன்றையும் நின் முகத்தில் சிவந்த மழைக்கண் இரண்டு மாகும்படி ஈந்திருக்கின்றனன்!

அழகிய நெற்றியும் மடநடையும் உடையவளே! பெரிய கரிய பீலியையுடைய நீலமணி நிற மயில்கள் நின் சாயலுக்கு எதிர் நிற்க முடியாமல் தண்ணிய காட்டிலே போய் ஒடுங்கின! அன்னங்கள் நின் மெல்லிய நடைக்கு எதிர் நிற்க முடியாமல், நல்ல நீரை யுடைய கழனியிலே நெருங்கிய தாமரை மலர்களிலே மறைந்தன! எனினும், குழலிசையையும் யாழோசையையும் அமிழ்தத்தையும் கலந்து குழைத்த நின் மழலை மொழிக்கு எதிர் நிற்க முடியாமல் வருந்தின எனினும் சிறிய பைங்கிளிகள் நின்னை வழிபட்டாயினும் மழலை மொழி கற்க நின் மலர்க் கையி னின்றும் நீங்காமல் வெறுப்பின்றி உடனுறைதலைப் பொருந்தி நின்றன. ஆகையால், அக்கிளிகள் இரங்கத் தக்கன!

மணமலர்க் கோதையே! நின்னைப் புனைந்து அழகு செய்யும் மகளிர், குற்றமற்ற மங்கல அணி ஒன்றை மட்டும் அணிந்தாற் போதாதோ? பிற அணிகளையும் அணிந்து பெற்ற பயன் என்ன? பலவகையாக முடியும் நின் கரிய கூந்தலிலே கற்புக்குரிய முல்லை முதலிய சில மலர்களை மட்டும் அணிந்தாற் போதாதோ? மெல்லிய அலர்ந்த மலர்மாலையையும் அணிவதற்கு அந்த மாலை யுடன் அவர்களுக்கு உள்ள உறவுதான் யாதோ? மற்றும்,

கூந்தலுக்கு நெய்யையுடைய நல்ல அகிற் புகையை மட்டும் ஊட்டினுற் போதாதோ? மான்மதச் சாந்தையும் அணிவதற்கு அதனேடு தமக்குளதாகிய கண்ணேட்டம் யாதோ? நின் அழகிய முலைத் தடத்திலே தொய்யில் மட்டும் எழுதினுற் போதாதோ? தனி முத்து வடத்தையும் அணிவதற்கு அதனுடன் அவர்கட்குள்ள நெருங்கிய நட்புத்தான் யாதோ? திங்களனைய நின் முகத்திலே வியர்வு துளிக்கவும் நின் சிற்றிடை வருந்தவும் இங்ஙனம் வேண்டாதனவெலாம் அணிவதற்கு அம்மங்கையர் பேய் பிடித்தவர்களோ ?

*கண்ணுக் கினிமை தருதலால், மாசற வோடிய பொன்னைப் போன்றவளே ! தழுவுதற்குத் தண்மை தருதலாலும் தூய குலத்தில் தோன்றியதாலும் வலம்புரியிற் பிறந்த முத்தனையாய்! உயிர்ப்பின் இனிமையால் தூய மணப் பொருள்களைப் போல்வாய் ! சுவைத்தலினிமையாற் கரும்பை யொப்பாய் ! செவிக்கினிமை தரும் மொழியினிமையால் தேனை நிகர்ப்பாய் ! கிடைத்தற்கரிய பாவையே! சிறந்த அமிழ்தமே! பெருங்குடி வணிகன் பெற்ற பெருமை யுடைய மடமகளே ! நீண்ட கூந்தலையுடைய தையலே ! நின்னை, யான், மலையிடைத் தோன்ருத மணியே என்பேனே ! கடலிடைத் தோன்ருத அமிழ்தமே என்பேனே? யாழிடைத் தோன்ருத இசையே என் பேனே ?

இங்ஙனம், அழிவற்ற, நலம்பாராட்டலாகிய பொருள் நிறைந்த மொழிகளைப் பலபடக்கூறிப் பாராட்டிய விளங்கும் மலர்மாலையான் அவளுடன் செருக்கி மகிழ்ந்து காலங் கழித்தான்.

---

* "மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை" [73-80]

ரைத் தழுவுதலும் அறவோர்க்களித்தலும் அந்தணரோம் பலும் துறவோரை எதிர்கொள்வதும், விருந்தினரைப் புறத்தே கண்டு அழைத்துவந்து ஓம்பலும் பிறவுமாகிய இவற்றோடு பொருந்திய இல்வாழ்க்கையைப் பல படைப் பாகிய செல்வத்தோடு நடத்திப் பயின்று உயர்ச்சி பெறு தலைக் காண விரும்பினாள். எனவே, பணியாட்களுடன் தனியே ஓர் இல்லத்திலே இருத்தினாள். காணத் தகுந்த சிறப்பினையுடைய கண்ணகிக்கு அத்தகைய இல்லற வாழ்விலே சில ஆண்டுகள் கழிந்தன.

தூமப் பணிகள்ஒன்றித் தோய்ந்தால் எனஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமந்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று

——

3. அரங்கேற்று காதை

ஆடல்மகளிரியல்பு:

*தெய்வத் தன்மையை யுடைய பெரிய பொதிய மலையின்கண் வாழும் அகத்திய முனிவர் முன்னர் இந்திரன் அவையிலே இட்டசாபம் இந்திரன் மகனாகிய சயந்தனுடன், அம்முனியரு ளாலே காவிரிப்பூம்பட்டினத்திலே நாடகவரங்கில் வந்து நீங்கப்பெற்ற மாறுபடுதல் இல்லாத சிறப் பினையுடைய வானவர் மகளிரில், வரிசையிற் குன்றாத நாடகத் தொழிலொடு பொருந்திய உருப்பசியாகிய மாதவி மரபில் வந்தவளும், பிறப்பிற் குறைவில்லாத பெரிய தோளையும் தாதுகள் அவிழும் மலர்களையணிந்த, கடை குழன்று சுருண்ட கூந்தலையும் உடைய மாதவி யென்னும் மங்கையைக், கூத்தும் பாட்டும் அழகும் என்று கூறப் பட்ட இம்மூன்றினுள் ஒன்றும் குறைவுறாமல், ஐந்தாம் வயதிலே தண்டியம் பிடிப்பித்து, ஏழாண்டு கற்பித்துப் பன்னிரண்டாம் வயதிலே, வீரக்கழல் அணிந்த காலினை யுடைய சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு அவன் அவையிலே அரங்கேறிக் காட்டலை மாதவியின் அன்னை யாகிய சித்திராபதி விரும்பினாள்.

ஆடலாசிரியனியல்பு:

வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து; ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து என இரண்டிரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும் அகக் கூத்தின் இலக்கணங்களை அறிந்து, வென்றிக்கூத்து முத லாகிய பலவகைப்பட்ட புற நாடகங்களையும் வேந்து விலக்கு, புடைவிலக்கு, ஊர்விலக்கென்று சொல்லப்பட்ட

---

* இக் கதை பின்னர்க் கடலாடு காதையிலே தெளிவாய்க் கூறப்படும்.

விலக்குக்களாகிய பாட்டுக்கு உறுப்பாய் வருகின்ற பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் என்னும் பதினுன்குடனே பொருந்தப் புணர்க்கவும் வல்லானாகி, அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்னும் பதினொரு கூத்துக்களும், ஆக நாடகங்கட்குரிய கந்தம்முதல் பிரயந்தம் ஈருகவுள்ள இருபத்தெட்டு உருக்களும், புறநாடகங்களுக்குரிய தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுள் ஈருக உள்ள செந்துறை விகற்பங்களான உருக்களும் ஆகிய பாட்டுக்களும், அக் கூத்து விகற்பங்களுக்குப் பொருந்திய கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என்னும் வாச்சியக் கூறுகளும் நூல்களின் வழியே விளங்க அறிந்து,

கூத்தும் *பண்ணல் முதலிய எட்டு வகைப்பட்ட குறிக்கோளும் இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் என்று சொல்லப்பட்ட எண் வகைப் பயனும் உடைய பாடலும், கொட்டும், அசையும், தூக்கும், அளவும் ஆகிய தாளங்களும், இத் தாளங்களின் வழியே வரும் செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயில்தூக்கு, நிவப்புத்தூக்கு, கழால்தூக்கு, நெடுந்தூக்கு எனப்பட்ட ஏழு தூக்குக்களும் தம்மிற் கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்தும் முதலாயின நிகழ்த்துமிடத்து*, ஒற்றைக் கையும், இரட்டைக் கையும் அழகுபெறக் காட்டுங் கையும் தொழில்பெறக் காட்டுங்கையும் நூலினகத்துக் கொண்ட கூறுபாட்டையறிந்து,

---

* பண்ணல் முதலிய எட்டையும் சிலப்பதிகாரம். கானல்வரியில் காண்க.

ஃ ஒற்றைக்கை பதாகை முதல் இருபத்து நான்கு என அரும்பத உரையாசிரியரும், முப்பத்துமூன்று என அடியார்க்கு நல்லாருங் கூறுவர். இரட்டைக்கை அஞ்சலிமுதலாகப் பதின்மூன்று என அரும்பதவுரையாசிரியரும், பதினெந்து என அடியார்க்கு நல்லாருங் கூறுவர்.

கூத்துக்களின் வரவு நிகழுமிடத்து, அக்கூத்திலே ஒற்றையிற் செய்த கைத்தொழில் இரட்டையிற் புகாமலும் இரட்டையிற் செய்த கைத்தொழில் ஒற்றையிற் புகாமலும் (தேசியிற் கைத்தொழில் மார்க்கத்துப் புகாமலும் மார்க்கத்துக் கைத்தொழில் தேசியிற் புகாமலும்) களைதலும், புறக்கூத்திலே ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழுமிடத்து ஆடல்நிகழாமலும் களைதலும் குரவைக் கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம்மில் விரவாதபடியும் செலுத்தி அமைந்தவன் ஆடலாசிரியன்.

இசையாசிரியன் இயல்பு:

'கோட்டினது அமைதியும் கொளுவிய ஆணியும்-மாட்டிய பத்தரின் வகையும் மாடகமும்-தந்திரி அமைதியும் சாற்றிய பிறவும் முந்திய நூலின் முடிந்த வகையே' முடிக்கப்பட்ட யாழ்ப்பாடலும், பருமையும் நீளமும் இலக்கணத்துடன் அமைந்து விரல் இடையிட்ட விரல் உளர் துளையும் ஊது துளையும் உடைத்தாய்ச் சுர வேறுபாடுகள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டு நின்ற குழலிசையும், 'செம்முறை உறழ்பே மெய்ந்நிலை கொட்டல்-நீட்டல் நிமிர்த்தல்' என்று கூறப்படுகின்ற வண்ணக் கூறுபாட்டையும் இருவகைத் தாளக் கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணு நிலையினையும் நிலைப்படப்படுத்துத் தூய்தாகக் காட்டுந் தன்மையும், மூலாதாரத்தில் தொடங்கிய மூச்சைக் காலால் கிளப்பிக் கருத்தால் இயக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடலும், தாழ்ந்த குரலினையுடைய தண்ணுமைக் கருவி முதலியன வாசித்தலும், அகக் கூத்துப் புறக்கூத்துப் பதினோராடல் என்று சொல்லப்படும் கூத்துக்களும் வல்லனாகி,

இவற்றுடனே சேர இயற்றிய உருக்களை இசை கொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்க வல்லனாகி,

செந்துறை வெண்டுறை என்னப்படும் இருவகைப் பாடல்களுக்கும் உரிமைப் பொருளாய் அமைந்த இயக்கம் நான்கினையும் அமைத்து, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப்படுஞ் சொற்கள் இசைபூணும் முறையைக் கடைப்பிடித்து, இச் சொற்களின் புணர்ப்புண்ட இசைவேறுபாடுகளையெல்லாம் குற்றந்தீர உணர வல்ல அறிவினையுடையவனாகி,

இயற் புலவன் நினைத்த கொள்கையும், ஆடலாசிரியன் ஈடும் மேல் வரவுகளின் தொகுதியும், இவற்றின் பகுதிக்கு அமைந்த பாடலும் இக்கூத்துக்களை ஆசிரியன் குறிப்புக்கும் பாடலுள்ளிட்டனவற்றிற்கும்சேர இயற்றுமிடத்துக் குற்றந் தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லவன் இசைப்புலவன்.

கவிஞன் இயல்பு:

ஆரவாரத்தையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகிலே வடக்கில் வேங்கடமும், தெற்கில் குமரியும், மேற்கிலும் கிழக்கிலும் நீர்நிறைந்த கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாடறியும்படி முத்தமிழும் செல்லும் என்னும் இயல்புடையவனாகி, வேத்தியல் பொதுவியல் என்று கூறப்பட்ட இரண்டு பிரிவினையுடைய நாடக நூலை நன்றாகக் கடைப்பிடித்து, இசைப்புலவன் ஆளத்தி வைத்த பண்ணீர்மையை முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையும் என்னும் பதினொரு பாகுபாட்டினாலும் அறிந்து, அறிந்தபடி அவன் தாளநிலையிற் பொருந்த வைத்த நிறம் தன் கவியிலே தோன்ற வைக்க வல்லனாகிப், பகைவராற் செய்யப்பட்ட வசையின் அளவறிந்து அவை தோன்றாத முறையிலே வசையற்ற மொழிகளால் நாடகக் கவி செய்யவல்ல நல்ல நூல்களைக் கற்றவன் கவிஞன்.

தண்ணுமையோன் இயல்பு:

எல்லா ஆடல்களும், பண்ணல் முதலாகிய எல்லாப் பாடல்களும், நரம்பின் அடைவால் உரைக்கப்பட்ட பதினாராயிரத்துத் தொள்ளாயிரத்துத்

தொன்னூற்றொன்றாகிய ஆதிப்பிசைகளும் வடவெழுத்து நீங்கி வந்த எழுத்துக்களாலே இசைத்துச் சேர்க்கப்பட்ட வாக்கியக்கூறுகளும் இயலிசை நாடகம் என்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும், நரம்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படாநின்ற பண்ணும் பண்ணியல் திறமும், திறமும் திறத்திறமும், இருவகைத் தாளவிகற்பங்களும், செந்தூக்கு முதலாகிய ஏழு தூக்குக்களும் இவற்றின் குற்றங்களும், இயற்சொல் முதலிய நான்கு சொற்கூறாகிய சொல்லாட்சிகளும், என்று கூறப்பட்ட ஒன்பதினையும் இலக்கணவழியே நுண்ணிதாக அறிந்து,

ஓர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தால் நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும், அவ்விடத்துப் பெறும் இரட்டியை ஒப்பாக உருவான வழி நிற்கும்மானம் நிறுத்திக் கழியும்மானம் கழிக்கவும் வல்லனாகி, இவ்வாறு நிகழ்ந்த உருக்களில் யாழ்ப்பாடலும் குழலிசையும் மிடற்றுப் பாடலும் பொருந்தி நடக்கும் முறை கேட்போர்க்குச் செவி கொள்ளத் தண்ணுமைக் கருவியமைந்த கரணத்தாலே குறியறிந்து சேரவாசித்து, மற்றைக் கருவிகளிற் குறையை நிரப்புதலும் மிகுதியை அடக்குதலும் அவ்வாறு ஆக்கும்போதும் அடக்கும்போதும் இசையில் இரந்திரம் தோன்றுவண்ணம் செய்தலும், செய்யுமிடத்துக் கைத்தொழில் அழகுபெறச் செய்து காட்டலும் வல்லனாகி, அழகுதக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினையும் உடையவன் தண்ணுமையோன்.

குழலோன் இயல்பு:

நூல்களிற் சொன்ன முறைமையாலே சித்திரப் புணர்ப்பும் வஞ்சனைப் புணர்ப்பும் என்று சொல்லப்பட்ட இரண்டு பிரிவினையும் அறிந்து, புணர்க்கத் தக்க பாடலாசிரியனைப் போன்ற அறிவினை உடையவனாகிக்; குழலிலே விரல் உளர்ந்து ஊதும் துளைகள் சுட்டுவிரல் முதலாக விட்டுப் பிடிப்பது ஆரோகணம் ஆதலாலும், சிறுவிரல் முதலாக விட்டுப் பிடிப்பது அவரோகணம் ஆதலாலும் இருதிறத்தினும் இப்படிச் செய்தல் வர்த்தனையாதலான், இம்முறையே நாற்று

மூன்று பண்ணீர்மைகளையும் தம் நிலைகுலையாமற் காட்ட வல்லவனாகிப், பதினாற்கோவையினிடத்துக் குரல் நரம்பு இரட்டிக்க வரும் அரும்பாலையும் இளிநரம்பு இரட்டிக்க வரும் மேற்செம்பாலையும் போல அல்லாத பாலைகளையும் இசைநூல் வழக்காலே இணைநரம்பு தொடுத்துப் பாடும் அறிவினையுடையவனாகிப், பண்ணுதல் அமைந்த முழவின் கண் நெறியினை அறிந்து, தண்ணுமை யாசிரியனொடும் இயைந்து, நிறம் பொருந்திய இளிநரம்பாகிய பட்டடையை யாழ்மேல் வைத்து, அதன் வழியே இசைவல்லோன் பாடிய பாட்டின் இயல்பைப் பாடுகின்ற பண்வரவுகளுக்குச் சுரம் குறைவுபடாமல் நிறுத்தி அந்தப் பண்ணுக்கு அயல் விரவாமல் நோக்கி, வண்ணம் முதலாகக் காட்டப்பட்ட பாடலில் இயன்ற அழகெல்லாம் நிரம்பக்காட்டி, முற்கூறிய முதலும் முறையுமாகிய பண்ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்ப வைத்து,

முதல்நடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப் படாநின்ற இயக்கம் நான்கினும் முதல்நடை மிகவும் தாழ்ந்த செலவினையுடையதாதலானும், திரள் மிகவும் முடுகிய நடையினையுடையதாதலானும், இவை தவிர்த்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுங்கும் இசையொழுங்கும் உடையதாதலானும், கூடைப் பாடல் சொற்செறிவும் இசைச்செறிவும் உடையதாதலானும், சிறப்பு நோக்கி இவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவு நிரம்ப நிறுத்த வல்லனாகிப், பாடலினிடத்துச் சொல் நீர்மையின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தை எழுத்தாக இலக்கணப்படியே குற்றமின்றி யிசைத்துக்காட்ட வல்லவன் குழலோன்.

யாழாசிரியன் இயல்பு:

ஆயப்பாலையாய் நின்ற பதினான்கு கோவை பொலிந்து, செப்பம் உடையதாய்ப் பாடலியல்பு ஒத்தமைந்த சிறப்புடையதாகலின், அதிலே, செம்பாலை, படுமலைப் பாலை; செவ்வழிப் பாலை, அரும் பாலை; கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை

என்று சொல்லப்பட்ட ஏழு பாலையினையும் இணைநரம் பாகத் தொடுத்து நிரம்ப நிறுத்திக் காட்டல் வேண்டும்.

'தார பாகமும் குரலின் பாகமும், நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப, முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும், விளரி குரலாகும் 'என்மனூர் புலவர்' என்னுஞ் சூத்திர விதியின்படி, வரப்பட்ட பாலையின் முடிவு தானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம் பெற்ற இரண்டலகில் ஓரலகையும், விளரிப் பாலையின் முதல்தாரமாதலின் மேல் நிற்கின்ற குரல் நரம்பு பெற்ற நாலலகில் இரண்டலகை யும், தார நரம்பில் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளை கொள்ளும், அந்த நரம்பில் ஒழிந்த ஓர் அலகையும் பண்டை விளரியிலே கூட்ட அவ்விளரி துத்த நரம்பாகும். இப்படிப் பன் னிரு முறை திரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும். இதனைப் பெண்டிர்க்குரிய தானமாகிய பதினாலு கோவையிலே பொருந்தக் கூட்டவேண்டும்.

கூட்டும் முறை:

உழைமுதல் கைக்கிளை இறுதியாக மெலிவு நான்கும் சமம் ஏழும் வலிவு மூன்றுமாய் உழை முதலாகச் செம்பாலை யாயது. தாரம் முதலாகப்பெறும் முறையாய் வந்தபடியே நீங்காமல், கைக்கிளை குரலாகப் படுமலைப் பாலையும், துத்தம் குரலாகச் செவ்வழிப் பாலை யும், குரல் குரலாக அரும் பாலையும், தற்கிழமை திரிந்த பின், முன்பிற்படியே தாரம் குரலாகக் கோடிப் பாலையும், விளரி குரலாக விளரிப்பாலையும், இளி குரலாக மேற் செம்பாலையுமாய், மேற் செம்பாலை இளிநரம் பிரட்டித்த நிலைமையினை யுடைத்தாய், இப்படிச் சமைந்த பதினாலு கோவைப்பாலை நிலையிலும் பண்ணின்ற நிலையிலும் இரட் டித்த குரல் குரலாகிய அரும்பாலையும் இளி குரலாகிய மேற்செம்பாலையும்போல், அல்லாதன ஐந்து பாலையும் உழைகுரலாகச் செம்பாலைக்கு உழை பெய்தும், கைக் கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளை பெய்தும், துத் தம் குரலாகச் செவ்வழிக்குத் துத்தம் பெய்தும், தாரம்

குரலாகக் கோடிப் பாலைக்குத் தாரம் பெய்தும், விளரி குரலாக விளரிப் பாலைக்கு விளரி பெய்தும் பாடப்படும்.

யாழினிடத்து அரும்பாலை முதலாயின இடமுறை மெலியவும் குழலினிடத்துக் கோடிப்பாலைவலமுறை மெலியவும் பாடப்படும். இவ்வாறு வலிவும் மெலிவும் சமனும் எனப்படாநின்ற தானநிலையினையுடைய இசைக் கூறுபாடுகளுக்கெல்லாம் நரம்படைவு கெடாமலும் பண்ணீர்மை முதலாயின குன்றாமலும் புணர்க்க வல்லனாகி, அப் புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசை செய்ய வல்லவன் யாழாசிரியன்.

அரங்கின் இயல்பு :

மதிக்கத் தக்க சிற்பநூலாசிரியர் இயற்றிய இயல்புகளினின்றும் வழுவாமல் அரங்கியற்றுதற்கு, நிலக்குற்றங்கள் நீங்கின இடத்திலே நிலம் வகுத்தல் வேண்டும்.

அத்தகைய நிலம் :

தெய்வத் தானமும் பள்ளியும் அந்தணர் இருக்கையும் கூபமும் குளமும் காவும் முதலாக உடையன. அழியாத இயல்பினை யுடையதாய், நிறுக்கப் பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண் இனிய மணமும் இனிய சுவையும் உடையதாய்த், திண்ணியதாய், எலும்பும் உமியும் பரலும் சேர்ந்த நிலமும், களித்தரை, உவர்த்தரை, ஈளைத்தரை, பொல்லாச் சாம்பல் தரை, பொடித்தரை என்று சொல்லப்பட்ட நிலமும் ஒழிந்து ஊரின் நடுவிலுள்ளதாகித் தேரோடும் தெருக்கள் எதிர்முகமாக்கி யிருத்தல் வேண்டும்.

அத்தகைய நிலத்தைப் பொதியின்மலை முதலான புண்ணிய மலைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலில், கணுவிற்குக் கணு ஒரு சாணாக வளர்ந்ததைக் கொண்டுவந்து, நல்லிலக்கணம் பொருந்திய ஆடவன் கைப் பெருவிரல் இருபத்துநாலு கொண்டதாக நறுக்கிய கோலால் எழுகோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒரு கோல் குறட்டுயரமும் உடையதாய் அளந்தமைத்துக் கொள்ள வேண்டும். தூணுக்கும் அதன்மீது வைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிலே அகலத்துக்கிட்ட

பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்குகோலாக உயரங் கொண்டு, அளவுக்குத் தக வாயில் (உட்புகவும் புறப்படவும்) இரண்டமைத்தல் வேண்டும்.

இவ்வாறு இயற்றிய அரங்கின் மேனிலையிலே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச் சாதியின் பூதங்களையும் யாவரும் புகழ்ந்து வணங்க எழுதிவைத்துத், தூண்களின் நிழல்நாயகப் பத்தியின் கண்ணும் அவையின் கண்ணும் படாதவாறு மாண்புறு விளக்குகளை யேற்றி, இடத் தூணிலையிடத்தே உருவு திரையாக ஒருமுக எழினியும், இரண்டு வலத்தூணிலையிடத்தும் உருவு திரையாகப் பொருமுக எழினியும், மேலே கட்டுத் திரையாகக் கரந்துவரல் எழினியும் வேலைப் பாட்டுடன் அமைத்து, ஓவியம் எழுதிய மேற்கட்டியும் உடையதாய்த், திங்களும் வியாழனும் செவ்வாயும் என்று சொல்லப்பட்ட வெண்ணீர்மை, பொன்னீர்மை, செந்நீர்மை மையென்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப் பெற்ற முத்துமாலைகளாலே சரியும் தூக்கும் தாமமுமாக அசையவிட்டுப் புதுமைதோன்ற அழகுறச் சமைக்கப்பட வேண்டும்.

தலைக்கோல் இயல்பு:

*பெரிய புகழையுடைய மாற்றரசர் போர் செய்து தோற்றுப் புறங்கொடுத்தபோது கைக்கொண்ட அழகிய நற்கொற்றக் குடையின் காம்பைத் தலைக்கோலாகக் கொண்டு, கணுக்கள்தோறும் நவமணிகளாற்கட்டி, இடையிலுள்ள இடங்களைச் சாம்பூநதம் என்னும் பொன்னின் தகட்டாலே நெருங்க மாருகக் கட்டி, மன்னன் கோயிலிலே காப்பமைத்து இருத்தி, இந்திரன் மகன் சயந்தனாக நினைத்து மறைவழிப்படி வழிபடுவது தலைக்கோல். இத்தலைக்கோலை, நாடகக் கணிகை

---

*தலைக்கோலுக்குப் பகைவேந்தர் மதிலின் புறத்து வெட்டின மூங்கிலும்புண்ணியமலையின் மூங்கிலும் பகையரசர் குடைக்காம்பும் [வேத்தியல் பொதுவியல்களுக்குத்] தரும்.

*நல்லநாள்: பூராடம், கார்த்திகை, பூரம், பரணி, இரேவதி, திருவாதிரை, அவிட்டம், சித்திரை, விசாகம், மகம், நல்ல இராசி: இடபம், சிங்கம், துலாம், கடகம், விருச்சிகம், மிதுனம்.

கொள்ளும் *நல்லநாளின்போது, புண்ணிய நதிகளின் நீரைப் பொற்குடங்களிலே கொண்டுவந்து, தலைக்கோலை முழுக்காட்டி, மாலைகளும் அணிவித்துப், பொற்பட்டத்தையும் பிற அணிகளையுமுடைய பட்டத்து யானையின் வாழ்த்துடனே கொடுத்து, வீரமுரசு முதலாயினவும் பல இயங்களும் ஆர்ப்ப, அரசனும் அரசனுடைய ஐம் பெருங்குழுவும் தெருவில் நின்ற தேரினையும் இப்பட்டத்து யானையையும் உடன் கொண்டு வலம் வந்து, தேரில் நின்ற பாடுவான் கையிலே இத்தலைக் கோலைக் கொடுத்துத் தேரினை நகர் வலம் புரிவித்து, அரங்கினை அடைந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்தல் வேண்டும்.

அரங்கிலே ஆடும் இயல்பு:

பின்னர், அரசன் முதல் யாவரும் அவரவர்க்கேற்ற இருக்கையிலே அமர்ந்த பிறகு, இடக்கை முதலிய கருவியாளர், 'ஆடிடம் முக்கோல் ஆட்டுவார்க் கொருகோல்-பாடுநர்க்கொரு கோல் அந்தரம் ஒருகோல்—குயிலுவர் நிலையிடம் ஒரு கோல்' என்று நூல்கூறிய முறைமைகளிலே நின்றனர்.

நாடகக் கணிகையாகிய அரங்கேறுகின்ற மாதவி, அரங்கிலே வலக்காலை முதலில் வைத்தேறிப், பொருமுக எழினிக்கு நிலையிடமான வலப்பக்கத் தூணிடத்தே சேரும் முறைமைப் படி சேர்ந்தாள். அவள் வந்து நின்றவாறே இடத்தூண் நிலையிடமாகிய ஒருமுக எழினியிடத்தை அடைந்த பழைய நெறியியற்கையையுடைய (ஆடி முதிர்ந்த) தோரிய மடந்தையர் நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் * தெய்வப் பாடல் இரண்டினையும் பாடினர்.

தெய்வப்பாடல் இறுதியிலே நின்று கூடி எல்லா இசைக் கருவிகளும் இசைத்தன. அவை எவ்வாறு இசைத்தன எனின் குழலின் இசை வழியே யாழின் இசை நின்றது. மிடற்றுப் பாடல் யாழிசை வழியே நின்றது. யாழ்வழியே அதற்குத் தகத் தண்ணுமை இசை நின்றது. தண்ணுமை வழியே குடமுழா நின்றது. ஆமந்திரிகை

---

* தாளத்திலே ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வருகின்ற ஒரொற்று வாரம் ஈரொற்று வாரம் என்னும் செய்யுட்கள்.

என்னும் கருவி (இடக்கை) முழவொடு கூடிநின்று வாச்சியக் கூறுகளை அமைத்தது. ஆமந்திரிகையுடன் முற்கூறிய கருவிகள் யாவும் பருந்தும் நிழலும்போல ஒன்ருய் நின்றன. பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட * தேசி ஒத்தை ஒரு தாளத்திற்கு இரண்டு பற்ருகப் பத்தும் தீர்வு ஒன்றுமாகப் பதினெரு பற்ருலே நாடக நூல்களின் அமைந்த முறை வழுவாமல் ஆடி முடித்தனள்.

மங்கலப் பண்ணுய் நரம்படைவு முடையதாய் இருக்கின்ற பாலைப்பண்ணை அளவு கோடாதவாறு ஆளத்தியிலே வைத்து அப்பண்ணின்மேல், மங்கலச் சொல்லினையுடையதாய் உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை என்னும் நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் அறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தினுள். மூன்ருெத்துடைய மட்டத்திலே எடுத்து ஒரொத்துடைய ஏக தாளத்திலே முடித்தாள். அழகிய மண்டில நிலையால் இங்ஙனம் முதல் நடையிலும் வாரத்திலும் தேசிக் கூறெல்லாம் ஆடி முடித்தாள்.

பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட வடுகில் ஒத்தையும் தேசியில் ஒத்தைக் காட்டினுற்போல இரட்டிக்கிரட்டியாக ஆடி முன்னர்க்கூறிய தேசியைப் போல வடுகும் மட்டதாளம் முதலாக ஏகதாளம் ஈருக வைசாக நிலையிலே ஆடி முடித்தாள்.

அழகினையுடைய பொற்கொடி, ஆடினுற்போலத், தாண்டவம் நிருத்தம் நாட்டியம் என்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தை யாதலின், அதனை நூல்களிற் சொன்ன முறை வழுவாமல் அவிநயம் காட்டிப் பாவகந் தோன்ற விலக்குறுப்புப் பதினுலின் வழுவாமல் ஆடிக் காட்டினள்.

இம் மாதவியின் கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்குந் தக்கவாறு, தலைக்கோல் பெயர்பெற்று, முன்னரங்கேறப் பெற்று, (இந்த நாடகக் கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரியம் பெறுகை வழக்காத

* அந்தரக் கோட்டு, முகம், ஒத்து என்றும் தேசிக் கூத்திற்குப் பெயர்.

லின்) இவ்வும் ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பெறத்தக்க பச்சைமாலை யொன்றை (ஒரு நாளைய பரியமாக) அரசனுற் பெறப்பட்டாள். அன்றுமுதல் அது அவளுக்கு ஒரு நாளைய பரிசமாயிற்று.

கோவலன் மாதவியை அடைதல்:

மாதவி தனக்கு அரசனுற் கிடைத்த பச்சை மாலையைக் கூனி என்னும் தாதியின் கையிலே கொடுத்து, 'ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் தந்து வாங்குவோன் மாதவிக்கு மணப்பிள்ளை யாவான்' என்று சொல்லி மான்விழியாளாகிய அவளை நகரிற் பெருந்தெருவிலே விற்கும் பண்பினர் போல் நிறுத்தினுள். பெரிய தாமரை மலர் போன்ற கண்ணையுடைய மாதவி மாலையைப் பரியம் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னையும் கொடுத்துக் கோவலன் வாங்கிக்கொண்டு, கூனியுடன் மாதவி மனையை அடைந்தான். அடைந்த கோவலன் மாதவியுடனே அயர்ந்து மயங்கியிருந்து, மாதவியையும் அவள் மனையையும் விட்டு நீங்க முடியாத விருப்பமுடையவனுனன்; தன்னுடைய குற்றம் அற்ற சிறப்பினையுடைய வீட்டையும் மனையாளையும் மறந்தான்.

''எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணுன்கும்
பண்ணின்ற கூத்துப் பதினென்றும்—மண்ணின்மேல்
போக்கினுள் பூம்புகார்ப் பொற்றெடி மாதவிதன்
வாக்கினுல் ஆடரங்கின் வந்து.

4. அந்திமாலைச் சிறப்புச்செய் காதை

அந்திமாலை வந்தது:

ஞாயிறு மேலைத் திசையிலே மறையத் தொடங்கியது. மாலைப் பசுவெயில் நில உலகின் எல்லாத் திசையினும் பரவியது. அத்தோற்றம் தன் காதலனாகிய அரசனைப் பிரிந்து, 'விரிந்த கதிர்களைப் பரப்பி எல்லா உலகத்தையும் ஒற்றை ஆழியாலே ஆண்ட அழிவில்லாதவனை ஈங்குக் காண்கிலேன்! அழகிய இடத்தையுடைய வானிலே நல்ல நிலவைப் பரப்பும் திங்களாகிய செல்வன் எங்கிருக்கின்றனனோ?' என்று கடலை ஆடையாக வுடைய நிலமகள் தன் கொழுநனைக் காணாமல், திசையாகிய தன் முகம் நான்கும் பசப்பூரப்பட்டு மலர்க்கண்கள் நீர் பெருக, மெய்யெங்கும் பனித்து நெஞ்சம் சுழன்றாள் என்று கூறுமாறு இருந்தது.

இங்கு அரசனுக்கு ஒற்றை ஆணையாழியையும் கதிர் ஆழிக் குரிய ஆர்க்கால்களாகவும் கொள்க. ஞாயிற்றிற்கு ஓராழித் தேர் கொள்க. கதிர் கிரணமாகக் கொள்க. மடந்தைக்குப் பசப்பூர்தலையும் குளிர் நோயையும் கொள்க. நில வுலகிற்கு மாலைப் பசுவெயில் பரத்தலையும் பனி விழுதலையும் கொள்க. மடந்தைக்குச் சிவந்த மலர் போன்ற கண்களில் நீர் வருதலையும், நிலத்திற்குச் செம்மலர்களில் கள் பெருகலையும் கொள்க.

இவ்வாறு தன் அரசனை யிழந்து நிலமகள் துன்புறும் பொழுது அந்தி மாலை வந்து தங்கியது. அது வந்தது எப்படியிருந்த தென்றால்,

தம் பெயருக்கு வரும் வரியை அறிந்து கொடுக்கும் குடிகள் துயரம் அடைய, அவ்வாறு கொடாமல் குறும்பு செய்யும் வில்லேந்திய கொடியவர்களாகிய குடிகளைத் துணையாகக் கொண்டு, வெற்றி பொருந்திய படையை

யுடைய வேந்தர் இல்லாத இடம் அறிந்து, அவர் நிலம் எல்லாம் கெடும்படி புதிதாக வளமிக்க, மூதூர்க் கண்ணே வந்து தங்கிய குறுநில மன்னரைப் போலஇருந்தது.

இங்கு வரிகொடுக்குங் குடிகள் தம் மனத்திலே தங்கிய கொழுநரைப் பிரிந்திருக்கும் மகளிராவர்; அவர்கட்கு மாலைக்காலந் துன்பஞ் செய்யும், வில்லேந்திய கொடிய குடிகள் தம் காதலரைக் கூடி மகிழ்ந்து இன்பமுறும் மகளிராவர்; அவர்கட்கு மாலைக்காலம் இன்பஞ் செய்யும்.

அப்பொழுது வேய்ங் குழலிலே வளர்கின்ற முல்லையென்னும் பண்ணிலே கோவலர் வாய் வைத்து ஊதினர். மகளிர் குழலிலே வளர்கின்ற முல்லையென்னும் மலரிலே தும்பியென்னும் ஒருவகை வண்டுகள் வாய் வைத்து ஊதின. அரும்புகள் தம்முள்ளே அடக்கிய மணத்தை இடையிடையே புகுந்து வண்டுகள் உண்ணுதவாறு தென்றலாகிய செல்வன் கடிந்தோட்டி, அந்த மணத்தை மறுகெல்லாங் கொண்டுவந்து தூற்றினன். ஒளி பொருந்திய வளையை அணிந்த மகளிர் மணிவிளக் கெடுத்தனர்.

வெண்பிறை தோன்றியது:

அப்போது இளையராக இருந்தாலும் பகைத்த மன்னரைத் தாக்கி வெல்லும் போரிலே மாட்சிமையுற்ற பாண்டியரின் குலத்துக்கு முதலாகையால் வெண்பிறையானது அந்தி வானத்திலே தோன்றி, வருத்தத்தைத் தரும் மாலையாகிய குறும்பைத் தாக்கித் துரத்திவிட்டு, தன் வெள்ளிய கதிராகிய புகழைப் பரப்பி விண்மீன்களை ஆளத் தொடங்கியது.

காதலரைக் கூடிய மாதவியும் பிறமகளிரும்:

அப்பொழுது அங்நிலவின் வெண்மையாகிய விளக்கத்திலே, வீட்டிலே வளர்ந்த முல்லையும் மல்லிகையும் மற்றும் தாழிக் குவளை முதலிய பல மலர்களும் மலர்ந்த பள்ளியிலே, பொலிவு பெற்று அழகை ஏந்திய அல்குல் தன் மேலிருந்த துகில் விலகப் பெற்றுச் செம்பவளக் கோவையாகிய மேகலை அசைந்தனவாகி இரங்க; நிலவின் பயனைக்

கொள்ளுதற்குக் காரணமாகிய உயர்ந்த நிலா முற்றத்திலே, தன் காதலனாகிய கோவலனுக்கு ஒருபோது கலவியையும் மறுபோது புலவியையும் மாற்றி மாற்றி அளித்து, அப் புணர்ச்சிக் கண்ணே பொருந்திய ஆர்வம் மிக்க மனத்துடன் அவனைக் கூடி, அக் கூட்டத்தால் முன் குலைந்த ஒப் பனையை மேலும் வேட்கை விளைக்கும் ஒப்பனையாகத் திருத்திக் கொண்டிருந்தாள் மாதவி.

அவளைப் போலவே காதலரைக் கூடிய மகளிர் மேலைத் திசையிடத் துண்டான யவன நாட்டுக் கண்டு சருக்கரைத் துண்டோடு, கீழைத் திசையிலே உண்டான கரிய அகில் முதலியவற்றால் புகைக்கும் புகையைத் துறந்து, வட திசையிலுள்ள இமயமலையிலே பிறந்த அழகு பொருந்திய வட்டக் கல்லிலே தென் திசையி லுள்ள பொதிய மலையிலே பிறந்த சந்தனக் கட்டையைச் சுழல அரைத்துத் திமிரத், தாமரையின் வளமிகும் இளந் தளிரையும் தாதினையுடைய அதன் மலரினையும் அழகிய குவளையையும் கழுநீர் மலரையும் பச்சிலையுடன் கலந்து தொடுத்த படலை மாலையுடனே கோவையாக உற்ற பரிய முத்தும் நிற மிகு சுண்ணப் பொடியொடு சிந்திக் கலந்து கிடந்த வளவிய மலர்ப்பாயலிடத்தே அவ்வாறு புணர்ந்த உபகரணப் புணர்ச்சி யிறுதியில் மயங்கிய மகளிர் தென்றலாலே மயக்கந் தீர்ந்து, தம் காதல் மிகுதியால் மயங்கித் தம் உயிர்போலும் கணவரின் மார்பிலே காவிபோலும் கண்மலர்களைப் பொருந்த வைத்து இன்பக் களியான துயில் கூடினர்.

காதலரைப் பிரிந்த கண்ணகியும் பிறமகளிரும்:

அழகிய சிவந்த சிறிய அடிகள் தம்மை அணியும் சிறப்பைச் சிலம்பு பெறாமல் நீங்கவும், மெல்லிய துகிலணிந்த அல்குல் தன்னை அணியும் சிறப்பை மேகலை பெறாமல் நீங்கவும், முகம் தம்மை அணியும் சிறப்பைக் குறிய வியர்வைத் துளிகள் பெறாமல் நீங்கவும், சிவந்த, கயல் போன்ற நீண்ட கண்கள் தன்னை அணியும் சிறப்பை அஞ்சனம் பெறாமல் நீங்கவும் ஒளி பொருந்திய நெற்றி தன்னை அணியும்

சிறப்பைத் திலகம் பெறுமல் நீங்கவும், தன்னைக் கூடினால் அடையும் முத்தனைய ஒள்ளிய முறுவலைக் கோவலன் பெறுமல் நீங்கவும் தன்னை அணிந்தாற் பெறும் கூந்தலின் மணத்தைப் புழுகுநெய் பெறுமல் மறக்கவும், தன் முலை முற்றத்திலே குங்குமக் கலவையால் எழுதாளாய், மங்கல அணியைத் தவிரப் பிற அணிகள் அணிந்து மகிழாளாய், வளைந்த குழையை இழந்து வடிந்து வீழ் காதினளாய்ச் செயலற்றுச் சோர்ந்த நெஞ்சத்தை யுடையவள் ஆயினள் கண்ணகி.

அவளைப் போலவே தம் காதலரைப் பிரிந்த மாதர்கள் பிரிவுத் துன்பம் உறுதலாலே, ஊதுகின்ற துருத்தியின் உலை மூக்குப் போல அழல் எழப் பெருமூச்சு விட்டவர்களாய்க் களிப்பின்றி, இளவேனிலுக் கமைந்த நிலா முற்றப் பள்ளியை அடையாமல் நீங்கிக், கூதிர்க் காலத்திற் கமைந்த இடை நிலத்திலே ஒடுங்கி, அங்கே தென்றலும் நிலவும் புகாமல் சாளரக் கண்களை அடைத்துப், பொதிய மலைச் சந்தனமும் கடல் முத்து மாலையும் மார்பில் முலையிற் பொருந்தப் பெறுமல் வருந்தவும், தாழிக் குவளை தண்ணிய செங்கழுநீர் முதலான குளிர்ந்த மலர்கள் தாம் விரும்பிய மலர்ப்பள்ளியிலே பள்ளித் தாமமாய்ப் பொருந்தப் பெறுமல் வருந்தவும், தன் சேவலொடு புணர்ந்த அன்னப் பேடை அப்புணர்ச்சியால் உருகி உதிர்த்த வயிற்று மயிரை எஃகுதல் செய்து பெய்த பலவகை அணைமீதே மேம்பாடுறத் தம் கணவர் மார்பிலே துயிலும் களித்துயிலைப் பெறுமல், அவருடன் முன்பு ஊடிய காலத்திலே இடை நின்ற குமிழை எறிந்து கடைநின்ற குழையைத் துரந்து (பெருமையும் உரனும் உடைமையால்) கலங்காத நெஞ்சமும் கலங்குமாறு, கடைசிவந்து குறுக்கே பிறழும் நெடிய கண்கள் அங்ஙனம் பிறழ்ந்து உவகை முத்தைச் சிந்தாமற் புலம்பு முத்தைச் சிந்தின.

அன்னமாகிய மென்னடையையும் ஆம்பல் மலரிலே நாறும் தேன் பொருந்திய நல்ல மணத்தையும் தாமரையாகிய சிவந்த வாயையும், குளிர்ந்த அறலாகிய கூந்தலை

யும் உடைய நறுநீர்ப் பொய்கையாகிய பெண், பாணின் இயல்பைத் தம்மிடத்தே உடைய வண்டுகளாகிய பள்ளி யுணர்த்துவோர் புறநீர்மை என்னும் வகையாற் பள்ளி யெழுச்சி பாட, அழகுவரும் குவளையாகிய கண்மலரை விழிக்கப், புள்ளொலியாகிய முரசமொடு பொறிமயிரை யுடைய கோழியும் கூரிய வாயை யுடைய சங்கும் முறை முறை யொலிக்கக், கடல்போலும் பரப்பையும் ஒலியையும் உடைய ஊரைத் துயிலெழுப்பி, அல்லலுற்றபோது வந்து புகுந்த இருள் இங்கிருந்து நீங்கும் வைகறையாமம் வரை யிலும், முன் சென்ற அறையிருளினும் ஓர் யாமத்தினும் அரையாமத்தினும் (மேற் கூறியவாறு கூடிய மகளிரும் பிரிந்த மகளிரும்) ஒரு நொடிப் பொழுதும் துயிலாதவாறு மணமலராகிய கணையுடன் கரும்பாகிய வில்லை ஏந்தி, வென்றி பொருந்திய மீனக் கொடியேந்திய காமவேள் திரிதலால், இப்புகார் நகரம் மிகவும் காவல் சிறந்தது.

கூடினர் பால்நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும கங்குற் பொழுது.

— —

5. இந்திர விழவூரெடுத்த காதை

ஞாயிறு எழுந்தது:

அலையையுடைய கடலை ஆடையாகவும் மலையை முலையாகவும் மலைமுலையையுடைய மார்பிலே பேரியாற்றை ஆரமாகவும் முகிலைக் கூந்தலாகவும் கொண்ட, அகன்ற பரவிய இடத்தையுடைய அரசு கெடுத்து வருந்தும் நிலமடந்தையின் துன்பக் காலத்திலே பசந்து வாரப் பனித்துப் போர்த்த இருளாகிய துகிலைத் தன் கதிராகிய கைகளால் நீக்கி, உலகம் விளங்கும் விரிந்த ஒளியாகிய ஞாயிறு மலருங் கதிரைப் பெரிய உதயகிரியின் உச்சியிலே தோன்றிப் பரப்பியது.

மருவூர்ப்பாக்கம்:

அப்போது, நிலாமுற்றமும், பலவகை அணிகலம் பெய்த சரக்கறையும், மானின் விழிபோலக் கோணஞ் செய்த சாளரங்களையுடைய மாளிகை யிடங்களும், புகார் முகப் பக்கங்களில் தம்மைக் காண் போர் கண்களை மேற்போக விடாமல் தடுக்கும் பயன் நீங்குதல் அறியாத மிலேச்சர் இருக்குமிடங்களும், மரக் கலம் கொடுக்கும் செல்வத்தின் பொருட்டுத் தாம் பிறந்த நாட்டைவிட்டு வந்த பிற நாட்டார் பலரும் ஒருநாட் டாரைப் போலக் கலந்து நெருங்கி வாழும் கடற்கரை யிருக்கையும், தொய்யிற் குழம்பு முதலியனவும், பூசுஞ் சுண்ணமும், குளிர்ந்த நறிய பசுங்கூட்டும், விடுபூத் தொடுபூக் கட்டுப் பூவென்னும் மூவகைப் பூவகையும், 'நேர்கட்டி செந்தேன் நிரியாசம் பச்சிலை, ஆரம் அகில்' என்னும் ஆறும் அடங்கிய புகையுறுப்பும், தம்மிற் பொருந்திய 'கொட்டம் துருக்கம் தகரம் அகில் ஆரம்' என்னும் ஐவகை வாசப் பொருளும் ஆகிய இவற்றை விற்பவர் விற்றுத் திரியும் நகரத் தெருவும்,

பட்டு நூலாலும் எலி மயிராலும் பருத்தி நூலாலும்

நுண்ணிய தொழில்களை ஊசியாலே பிணிக்கும் பட்டுச் சாலியர் இருக்கும் இடங்களும்,

பட்டும் பவளமும் சந்தனமும் அகிலும் குற்றம்அற்ற முத்தும் பிற மணிகளும் பொன்னும் ஆகிய இவற்றைப் பொன்னணிகலத்துடன் அளவிட நினைப்போர் ஓரெண்ணுலும் எண்ணிக் கரைகாணற் கியலாத வளம் ஆங்காங்கே கலந்து கிடக்கும் இடம் அகன்ற தெருக்களும்,

வேறுபட்ட வகை விளங்கிய முதிரை முதலிய பண்டங்களுடன், 'நெல்லுப் புல்லு வரகு தினை சாமை— இறுங்கு தோரை யொடு கழைவிளை நெல்லே' என்னும் எண் வகைக் கூலமும் குவித்து விற்கும் கூலக்கடைத் தெருவும்,

பிட்டு விற்போரும், அப்பம் விற்போரும், கள்ளை விற்கும் வலைச்சியரும், மீன் விற்கும் பட்டினவரும், உப்பு விற்கும் உமணரும் உமட்டியரும், வெற்றிலை விற்போரும் (கயிறு திரித்து விற்போரெனினும் பச்சை ஊனும் சுட்ட ஊனும் விற்போர் எனினும் ஆம்), 'தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம்—கப்பூரம் சாதி' என்னும் ஐவகை வாசம் விற்போரும், ஆட்டிறைச்சி விற்போரும் எண்ணெய் விற்போரும் நிறைந்த ஊன் செறிந்த இருப்பிடங்களும்,

வெண்கலக் கன்னரும், செம்பு கொட்டிகளும், மரம் வெட்டுந் தச்சரும், வலிய கையையுடைய கொல்லரும், ஓவியரும், சிற்பிகளும், உருக்குத் தட்டாரும், இரத்தினப் பணித் தட்டாரும், தையற்காரரும், தோல்வேலை செய்யும் உறைகாரரும், *சிலை கிடை என்பவற்றுற் பூ, வாடா மாலை, பொய்க்கொண்டை முதலிய உருவம் பிறக்குந் தொழிலை மிகுத்துக் காட்டிக் குற்றமற்ற கைத்தொழிலால் வேறுபட்ட தன்மையை உடையோரும், துளைக்கருவியாலும் நரம்புக் கருவியாலும் குரல் முதலாக உள்ள ஏழிசைகளையும், சரிகமபதநி என்னும் ஏழெழுத்துக்களை

* சிலையாற் படிமை படம் முதலியனவும், கிடையால் விலங்கு பறவை பூ, பூங்கொத்து முதலியனவும் அமைப்போருமாம்.

யும் மூவகைக் குழலிலும் நால்வகை யாழிலும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவெழு திறத்தையும் குற்றம் இன்றி இசைத்துக் காட்டவல்ல, பெறுதற்கரிய இசை மரபை அறிந்த குழலர் பாணர் முதலிய பேரிசை யாளர்களும் இருக்கும் இடங்களும்,

ஒழுக்கத்திற் சிறியராய்ச் சிறு தொழிலைப் பிறர்க்குச் செய்து அதனுல் வரும் பொருளேக்கொண்டு வாழும் தொழிலுடையோர் இருக்கையும்,

கொண்டு குற்றம் இல்லாமல் விளங்குவது மருவூர்ப் பாக்கம்.

பட்டினப்பாக்கம்:

மன்னர் பெருந்தெருவும், கொடியணிந்த தேரோடும் திருவிழாத் தெருவும், கடைத்தெருவும், பெரிய குடிப்பிறப்பையுடைய வணிகரின் மாட மாளிகைத் தெருவும், அந்தணர் சேரியும், யாவரும் விரும்பும் குடியினரான உழவரும் விளங்கிய கொள்கையை யுடைய மருத்துவ நூலோரும் சோதிட நூலோரும் வேறு வேறு வகையாக விளங்கிய பலமுறைமையுடன் இருக்கும் இருப்பிடங்களும், முத்துக் கோப்பாரும் தமக்குச் சிறந்த கொள்கையுடன் அழகிய வளேகளே அறுப்போரும் வாழ் கின்ற அகன்ற பெரிய தெருக்களும், நின்றேத்துஞ் சூதர் இருந்தேத்தும் மாகதர், வேதாளிகர் என்னும் இவர் களுடன் நாழிகைக் கணக்கரான கடிகையார், தாம் கொண்ட ஒப்பனையாலும் கூத்தாலும் நலம் பெறும் சாந்திக் கூத்தர், களத்தாடுங் கூத்திகள், அகக்கூத்தாடும் பதியிலார், அன்றைய பரிசங் கொள்வார், மடைப்பள்ளி யாரடியார், தோற்கருவி யிசைப்பவர் படைக்கும் திரு விழாவுக்கும் கொட்டுவார், நகை வேழம்பர் என்னும் இவர்கள் இருக்கும் தத்தம் இனவகை தெரிந்த இருப் பிடங்களும், யானேப்பாகர், தேர்ப்பாகர், சினக்கண்களே யுடைய காலாட்படைத் தலைவர் என்னும் வீரர்கள் இருக் கும் அரசன் அரண்மனையைச் சூழ உள்ள பெரிய பரந்த இருப்பிடங்களும் அமைந்த பெருமைமிக்க சிறப்பினே

யுடைய பெரியோர் திரண்ட பாடல் அமைந்த சிறப்பினை யுடையது பட்டினப்பாக்கம்.

பலி பீடிகை:

பெருமன்னர் இருவர் போர்புரிய வந்து தங்கிய பாசறை இருப்புக்கு நடுப்பட்ட நிலம் போர்க்கள மானாற் போல முற்கூறிய மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என இரு கூறுபட்ட ஊர்க்கு நடுப் பட்ட பொதுநிலமாக உள்ளது நாளங்காடி. அந்த நாளங் காடி நிரை நிரையாக நெருங்கிய சோலையின் மரங்களில் உள்ள கால்களே தூணாகக் கட்டப்பட்ட கடைகளை யுடையதாய்க் கொடுப்போருங் கொள்வோரும் உண்டாக் கும் ஓசை இடையறாது நிலைபெற்றது. அந்த நாளங் காடித் தெருவிலே, வெற்றி பொருந்திய வேலையுடைய முசுகுந்தன் என்னும் வேந்தனுக்குண்டாகும் இடை யூற்றை ஒழிக்க வானவர் தலைவனாகிய இந்திரன் விடுத்த லால், வானவருலகினின்றும் வந்து அந்த நாள் முதலாகப் பலிகொண்டு வாழும் ஒரு பூதத்தின் கோயிலுள்ளது. அக் கோயிலின் வாயிலிலே ஒரு பலிபீடிகை உள்ளது,

அரண்பனை அகப்பரிசார மகளிர் வழிபாடு:

சித்திரைத் திங்களிலே சித்திரை நாளில் முழுமதி சேர்ந்தகாலத்து,நாணமிலாரைப் போல வாய்சோர்ந்துரைக் கும் அழகிய கோலமுடைய மறக்குடிப் பெண்டிர் மேற் கூறிய பலிபீடிகையிலே, புழுக்கிய அவரை துவரை முத லியவற்றையும் எட்கசிவையும், நிணச் சோற்றையும் *பொங்கற் சோற்றையும் படைத்து, மலரைத் தூவிப், புகை காட்டி 'எம் பெருநிலமன்னன் ஆளும் நாடெங்கும் பசியும் பிணியும் பகையும்நீங்கி மழையும்வளமும் பெருகுக!' என்று வாழ்த்தினர், பிறகு, 'முடக்கிய இருகை பழுப்புடை ஒற்றித் - துடங்கிய நடையை உடைய துணங்கைக் கூத் தையும் கை கோத்தாடும் குரவைக் கூத்தையும் ஆடினர். பின்னர் அணங்கெழுந்தாடி ஆரவாரத்துடன் திரும்பினர்,

வீரர்கள் உயிர்ப்பலி: முசுகுந்தன் காலத்திலே, "மருவூரின் கண்ணே உள்ள் படைவீரரும் பட்டினத்

* கள் என்றும் கூறலாம்.

தின் கண்ணே உள்ள படைவீரரும் நான்தான் முந்திச் செல்வேன் என்று போட்டியிட்டுக்கொண்டு பலி பீடிகையை நெருங்கிப் போய் நின்று, தம்மைத் தாமே இடும்பலியை உண்ணும் அப்பீடிகையிலே, 'மன்னனுக்கு உற்ற இடையூற்றை ஒழிப்பாயாக' என வேண்டிக் கொண்டு அப்பூதத்திற்குத் தம்மைப் பலியிட்டோர் அப் பலிக்கும் வலிமைக்கும் வரம்பாகக் கடவர்'' என்று முசுகுந்தன் குழுவும் ஆயமும் வழக்கம் ஏற்படுத்தினர்.

அவ்வழக்கத்தை மேற்கொண்டு, இக்காலத்திலும் மருவூரிலும் பட்டினத்திலும் உள்ள வீரர்கள் கல்லை வீசும் கவணும் ஊன்பொதிந்த கரிய பரிசையும் வேலும் ஏந்திச் சென்று போர்க்களப் பரப்பில் தோள்தட்டி ஆர வாரித்து வெற்றி பெற்று வந்த பிறகு, கண்டோரை அச்சமுறுத்திக் கடைசிவந்த, சுடுங்கொள்ளி போலும் பார்வையை உடைய தமது பசுந்தலையை, 'அரசன் வென்றி கொள்க' எனக் கூறும்படி அரிந்து, அரிந்த தலை யிலே குலைந்த மயிரையும் கோதி முடித்துக் குருதிப் பொட்டை நுதலிலே அணிந்து அழகுறப் பீடிகையிலே வைத்த அப்போதே, அந்தக் குறையுடல்கள் தமக்கு வாயில்லாமையால் தம் தோளிலே பூண்டிருந்த மயிர்க்கண் முரசின் வாயால், 'உயிர்க்கடன் தந்தோம்; கொண்மின்' என்று கூறுவதுபோல் முழங்கிச் சிறந்த பலியை ஊட்டினர். மயிர்க்கண் முரசாவது புலியொடு போர்புரிந்து அதனைக் கொன்று முழங்கிக் கோட்டிலே மண் கொண்ட ஏறு இறந்துழி அதன் தோலைச் சீவாது போர்த்த முரசம் ஆகும்.*

முன்னுளிற் கரிகாலன் பெற்ற வென்றியைக் குறிக்கும் மண்டபம் :

தமிழ்நாட்டின் எல்லையிலே தன்னோடு எதிர்த்துப் போர் புரியும் அரசரை மேற்குந் தெற்குமாகிய இரண்டு திசையினும் பெறாத கரிகாலன் போரிலே கொண்ட பெருங்காதலாலே, வடதிசை

* இங்குக் கூறிய வீரப்பலியைக் கலிங்கத்துப்பரணியிற் கோயில் பாடியது என்னும் பகுதியிலும் காண்க.

பெருந்திசையாகையாலே பகைவர் கிடைப்பர் என்றெண்ணி அத்திசை செல்வதற்கு விரும்பி வாளையும் குடையையும் மயிர்க்கண் முரசையும் நல்ல நாளிலே போகவிடுத்து, 'என் வலிமை பொருந்திய தோள் பகைவரைப் பெறுக' என்று தான் வழிபடு தெய்வத்தை மனத்தால் வணங்கி அவ்வட திசை நோக்கிச் சென்றநாளில், இமையவர் வாழும் இமயமலை பகையாகக் குறுக்கிட்டுத் தடை செய்ததென்று கருதி மனம் சலித்து மீளும்போது, 'மேலும் செல்ல முயலும் என் ஆவல் பின்னிட்டு நீங்க இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிட்டுத் தடுத்தது' என்று முனிந்தவன்போல அதன் பிடரிலே தன் புலிக் கொடியை எழுதித் தான் விரும்பிய போரைப் பெறுமல் மீண்டான்.

அவ்வாறு மீண்ட கரிகாலனுக்குக் கடலை எல்லையாக உடைய அழகிய வச்சிர நாட்டு மன்னன் தான் செலுத்த வேண்டிய முறைமைப்படி திறையாக விடுத்த அவன் வெற்றியிலே பெற்ற முத்தின் பந்தரும், வாட்போரிற் சிறந்த மகத நன்னாட்டு மன்னன் பகை கொண்டு பொருது தோற்றுத் திறையாகத் தந்த பட்டி மண்டபமும், அவந்தி அரசன் விருப்புடன் கொடுத்த மிக உயர்ந்த தொழிற் சிறப்புடைய வாயில் தோரணமும், ஆகிய இம் மூன்றும் பொன்னாலும் மணியாலும் புனையப்பட்டன வெனினும் நுண்ணிய தொழிலிற் கைவந்த கம்மியராற் செய்யப் படாதன; இவற்றை அக்காலத்துக் கொடுத்த அம் மூன்றரசருடைய முன்னோர் ஒவ்வொரு காலத்தே ஒவ்வோரிடத்துச் செய்த உதவிக்குக் கைம்மாருக மயனாற் செய்து தரப்பட்டன. இவை தனித்தனியே சேய் நாடுகளிலே இருந்து, கரிகாலன் ஆணையாலே காவிரிப்பூம் பட்டினத்தே கூடின, பெரியோராற் போற்றப்படுஞ் சிறப்பின வாயின. இம் மூன்றும் இப்போது ஒரு மண்டபத்திலே அமைந்துள்ளன.

வெள்ளிடை மன்றம் :

மேற் கூறிய மண்டபமே அன்றி வேறொரு மன்றம் உள்ளது. அம்மன்றத்தில் அளவும் நிறையும் எண்ணு

மாகிய இலக்கங்கள் இட்டு, வெளி நாட்டு மக்களாகிய உடையவரின் பெயர்கள் பொறித்துப் பல பொதிகள் அங்கே கிடக்கும். பொருட் சாலை வாயிலும் பற்றுயத் துக் கருந்தாழாகிய காவலும், உடையோர் காத்திருக்குங் காவலும் இல்லை. எனினும், அப்பொதிகளைக் களவாடு வோர் உளரெனின் அவர் கழுத்துக் கடுக்கப் பொதியை வைத்து ஊரைச் சூழ்விப்பின் அல்லது அவர் எடுத்த பொதியைக் கொண்டு போக விடாது. ஆதலாற் கள வென்பதனைக் கனவிலும் மனத்தால் நினைப்பினும் நினைப் போரை நடுங்குவிக்கும் வெளியான இட முடையது அம்மன்றம்.

இலஞ்சி மன்றம் :

வேருெரு மன்றம் உள்ளது. அங்கே கூனும் குறளும் ஊமும் செவிடும் உள்ளோரும் தொழு நோயால் அழுகும் மெய்யை உடையோரும் புகுந்து முழு கின அளவிலே, பழுதில்லாத தோற்றத்தை யுடைய நல்ல நிறம் பெறுகையினுலே தன்னை வலம் புரிந்து தொழுது ஆடி நீங்கும் பொய்கை ஒன்று உள்ளது.

நெடுங்கல் மன்றம் :

மற்ருெரு மன்றம் உள்ளது. அங்கே வஞ்சனை யாலே சிலர் கொடுத்த மருந்தை உண்டு பித்தேறிய வரும், நஞ்சை யுண்டு நடுங்கு துயர மடைந் தோரும், அழலும் நஞ்சை யுடைய அரவின் வாயிலே உள்ள கூரிய பற்கள் அழுந்தக் கடியுண்டோரும், பிதுங் கின கண்களையுடைய பேயினுற் பற்றப்பட்டுக் கொடுந் துன்ப மடைந்தோரும் ஒரு முறை சுற்றி வந்து தொழுத அளவிலே அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமாகிய ஒளியை உமிழும் ஒரு நெடிய கல் நாட்டப்பட்டு நிற்கும்.

பூதசதுக்கம் :

நாற்சந்தி கூடும் இடத்திலே ஒரு பூதம் உள்ளது. தம்மைப் பிறர் நம்புவதற்குத் தவக் கோலத்திலே மறைந்து நின்று, அத் தவத்திற்கு இழுக்கான நெறியிலே ஒழுகும் பொய் வேடத்தாரும், தம்மைத் தம் கணவர் நம்புதற்குப் பொய் யொழுக்கத்திலே மறைந்து

நின்று கவர்ச்சியுடன் ஒழுகும் அலவற் பெண்டிரும். தம் படை குடி முதலிய ஐந்தினோடும் உயிர் உறுப்பு உரிமைக்குத் தம்மைத் தேறி அளித்த அரசரைக் கீழறுக்க எண்ணும் அமைச்சரும், தம் மனைவியரைத் தனியே விட்டுத் தனித்திருக்கும் பிறர் மனைவியரை விரும்பும் தீயொழுக்க முடையோரும், தம் நெஞ்சறியப் பொய்ச் சான்று புகல்வோரும், சிறப்புச் செய்தபோது அருகே நின்று புகழ்ந்துரைத்து அவர் புறத்தே பழி தூற்று வோரும் ஆகிய இவர்களே என் கையிற் கொண்ட இப் பாசத்தினிடத்தே அகப்படுவோரென அவ்வூர் நாற்காத எல்லையுங் கேட்கும்படி தனது கடிய குரலால் உணர்த் திப் பின் அங்ஙனம் செய்வோரைப் பாசம் கட்டிவர நிலத்திற் புடைத்து உண்ணும் தன்மை யுடையது அப் பூதம். அப்பூதம் நிற்கும் அந்தச் சதுக்கம் பூத சதுக்கம் எனப்படும்.

பாவை மன்றம் :

பாவை மன்றம் என ஒன்றுள்ளது. அங்கே அரசனுடைய செங்கோல் கோடினும், அறநூல் முறைப்படி அறங்கூறும் அவையத்தார் உரைக்கும் நடுவு நிலை பிறழ்ந்து ஒருதிறம் பற்றினும் நாவாற் கூருது நீர் சொரிந்து கண்ணாற் கூறும் ஒரு பாவை நிற்கிறது.

பலியிடல் :

முற்கூறப்பட்ட வெள்ளிடை மன்றம் முதலாகப் பாவைமன்றம் இறுதியாக உள்ள உண்மைத் திறத்தை உணர்ந்த சான்றோர் போற்றும் ஐவகை மன்றத்தும் முதலிற்கூறிய மண்டபத்தும் அரிய பலியிட்டனர்.

விழா :

வச்சிரக்கோட்டத்தில் இருக்கும் திருவிழா முரசை எடுத்துக், கச்சை அணிந்த யானையின் பிடரி டத்தே ஏற்றி என்றும் இளைய வெண்மையான ஐராவதம் நிற்குங் கோயிலிலே சென்று இந்திரனை அது கொணரும் படி விழாவின் முதலும் முடிவுஞ் சாற்றினர். நிலமிசைத் தங்கிய முறையையுடைய கற்பகத்தருக் கோட்டத்தின் முன்னர் எண்வகை மங்கலமும் ஐராவதமும் எழுதிய

கொடியை வானிலே பறக்குமாறு விடுத்தனர். மரகதம் வயிரம் என்னும் இவற்றைப் புருவம் பிறக்கஆயப் பலகை யாகப் படுத்து, அதன்மீது திரண்ட செம்பவளத் தூண் களை நிறைத்த பைம்பொன் திண்ணையை யுடைய மாளிகை களின் வாயில்தோறும் கிம்புரி செறிந்த கொம்பினையும் அங்காந்த வாயாலே கான்ற முத்தொழுங்கையும் எண் மங்கலங்களையும் பொறித்த வாசிகை வடிவாக வளையச் செய்த மகர தோரணங்கள் நிலைபெறுத்தப் பெற்றும், குற்றமற்ற பசும் பொன்னாற் செய்த நிறை குடமும் பாலிகையும் பாவை விளக்கும் பைம்பொற் கொடியும் தூய மயிர்க் கவரியும் பிறவும் அழகிய சுண்ணப் பொடி யுடன் பொருந்தியும் தெருக்கள் பொலிவுற்றன.

முற்கூறிய பலிமுடிந்த பிறகு, அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் தூதுவர் சாரணர் என்னும் ஐம்பெருங் குழுவும், கரணத்தியலர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்னும் எண் பேராயமும் தெரு விலே குழுமினர். அவர்களுடன் அரசகுமரரும் பரதகுமர ரும் புரவியும் களிறுந் தேருங் கொண்டீண்டினர். மிகப் பெரிய நிலவுலகிலே தம்முடைய அரசியல் மேம்படுவதற்கு, மன்னுயிர் காக்கும் ஆயிரத்தெட்டரசர்களின் தலையிலே சுமப்பித்துக் கொண்டுவந்த, காவிரியின் மலர்த்தாது நிறைந்த பெரிய சங்கமத் துறையிலே குளிர்ந்த நறிய புண்ணிய நீரைப் பொற்குடத்திலேந்தி மண்ணுலகு மருளவும் வானுலகு வியப்பவும் 'புகழ்பெற்ற எம் வேந்தன் வெற்றி பெறுக!'' என்று வாழ்த்தி விண்ணவர் தலைவனை இந் நகரிலே சிறப்புற நீராட்டினர். (விண்ணவர் தலைவனை நீராட்டலென்பது அவன் படையாகிய வச்சிரத்திற்கு நீராட்டலாகும்.)

என்றும் யாக்கையிற் பிறவாத பெரியோனாகிய சிவ பெருமான் கோயிலும். ஆறுமுகத்தையும் செய்ய நிறத்தை யும் உடைய முருகவேளின் அழகிய கோயிலும், வெள்ளிய வளை போலும் நிறத்தையுடைய பலராமன் கோயிலும்,

நீலமணிபோலும் நிறமுடைய திருமால் கோயிலும், முத்து மாலை அணிந்த வெண்கொற்றக் குடையையுடைய இந்திரன் கோயிலும் மிக்க முதுமையை யுடைய முதல்வனாகிய பிரமனுடைய வாய்மையிலே தவறாத நான்மறைகளுங் கூறிய முறைப்படி ஒருபால் தீ வளர்த்தனர்.

ஒருபால் வசுக்கள், எண்மரும் கதிரவர் பன்னிருவரும் உருத்திரர் பதினொருவரும் மருத்துவர் இருவரும் ஆகிய முப்பத்து மூன்று தேவரும் பதினெண் வகைப்பட்ட கணங்களும் என வேற்றுமையுறத் தெரிந்து வகுக்கப்பட்ட தோற்றத்தையுடைய கடவுளரின் விழாச் சிறப்புற்றது.

ஒருபால், அறவோராகிய சமணர் பள்ளியும், புத்தர் பள்ளியும், புறத்தேயுள்ள ஸ்ரீ கோயிலும் ஆகிய எல்லாவற்றிலும்அறமுரைத்தலும் புராணம்படித்தலும் பிறவுமாகிய புண்ணியச் செயல்கள் மிக்கன. ஒருபால், பகை வேந்தரையும் பிறரையும் சிறை நீக்குதற்குக் கொடித் தேரையுடைய வேந்தனின் அருள் சிறந்தது.

ஒருபால், குழலும் தோலும் நரம்பும் குரலும் என்னும் இவற்றை இசைக்கவல்ல கண்ணுளாளர் கருவிக் குயிலுவர் பண்ணியாழ்ப் புலவர் பாடற்பாணர் என்னும் இவர்களாலே அளந்தறிதல் இயலாத சிறப்பையுடைய இசைகள் மிகுந்தன.

இவ்வாறு இரவும் பகலும் நடை பெறுதலால் முழவின் கண்கள் அடங்குதல் இன்றிக் குறுந்தெருக்களிலும் தேர் செல்லும் பெருந் தெருக்களிலும் நடைபெறும் திருவிழாவாற் 'களிப்புற்றது காவிரிப்பூம் பட்டினம்.

அப்போது தெருவின் காட்சி:

தான் விரும்பிக் காதலிக்கப்பெற்ற கொழுநனைப் பிரிந்து அலர் அடையாத அழகிய கொடுங்குழையை யுடைய மாதவியுடன், வீட்டிலே வளர்க்கப்பட்ட முல்லை, மல்லிகை, இருவாட்சி, தாழியில் உள்ள

குவளை, செங்கழுநீர் ஆகிய மலர்கள் தொகுக்கப் பெற்ற பிணையலாலே பொலிவடைந்து, காமத்தாலே களித்து மகிழ்ச்சியடைந்து, அழகிய நறிய மணமிகு பூங்காவிலே களியாட்டை விரும்பி, நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பையுடைய நாளங் காடியிலே மலர் விற்கும் இடங்களில் பல மலர் மணமாகிய புதிய மணங் கண்டு புகுந்து அதிற் புகையும் சாந்துமாகிய இவற்றின் செவ்வி வாய்ப்பு மிகுந்து, நகைத்து விளையாடும் குழுவுடன் காமக் குறிப்பாகிய மகிழ் மொழியிலே இடைவிடாமற் பயின்று, குரல் என்னும் இசையைப் பாடும் வாயையுடைய பாண ருடன் நகரிலுள்ள மிகு காமுகருடன் திரிகின்ற கோவலன் போல,

எல்லோரும் காதலிக்கும் கொழுவிய நனையாந் தன்மையை விட்டு, முதிர்ந்து செவ்வி கெடாத வளைந்த பழகிய தளிரையுடைய மாதவி யென்னும் குருக்கத்தி யுடன் முல்லையும் மல்லிகையும் இருவாட்சியும் குவளையும் செங்கழுநீரும் ஆகிய மலர்கள் பயின்ற பிணையலிலே படிந்து, நாடோறும் மகிழும் இருப்பையுடைய நாளங் காடியிலே மலர் விற்கும் இடங்களிலே பல மலர்களின் புதிய மணங்கண்டு புகுந்த இளி யென்னும் இசையைப் பாடும் வாயையுடைய வண்டுகளும் இளவேனிலும் தென்ற லும் உலாவும் இந் நகரத் தெருக்களிலே,

"அழகிய வானிலே உலாவும் அரவாகிய பகை துன் புறுத்தும் என்று அச்சமுற்று அவ்வானிலே திரியாமல், ஒரு பெரிய முகிலைச் சுமந்து; சிறிய முயலை ஒழித்து, இரு பக்கத்தினும் இரண்டு கரிய கயல்களையும் இடையே ஒரு குமிழ மலரையும் எழுதி, இங்ஙனம் வேற்றுருக்கொண்டு இந்நிலத்தே திங்கள் திரிகின்றதோ? தான் முன்பு இறை வன் நெற்றி விழியால் இழந்த உடம்பைப் பெறுவதற் காக ஈரம் வாய்ப்புப் பெற்ற திங்களாகிய பெரிய நிலத் திலே உள்ள சீர்மை வாய்ந்த தாளியையுடைய அமிர்த கலையின் நீரைப் பருகி வளரும்படி காமன் வளர்த்த வான வல்லி மின்னுக்கொடி இந் நிலத்திலே வந்திருக்கிறதோ?

இந்த வளவியநகரம் இருநில மன்னனாகிய கரிகாலனுக்குத் தன் பெரு வளத்தைக் காட்டுவதற்குத் திருமகள் புகுந்த நகரம் என்று கருதி, எரிபோலும் நிறமுடைய ஓர் இலவ மலரையும் பல முல்லை அரும்புகளையும் மற்றும் இரண்டு கரிய பெரிய குவளை மலர்களையும் ஒரு குமிழ மலரையும் மலர்ந்து இங்ஙனம் கொண்ட உள் வரிக் கோலத்துடன் தன் அன்பு மிகுந்த துணையைத் (திருமகளைத்) தேடிக் கள்ளத்தாமரை திரிகின்றதோ? முன்னர் ஓடியொளித்த பெருவாயையுடைய கூற்றுவன் தான் ஆணுருவுடன் திரிந்து பல உயிர்களையும் கவர்ந்தால், அரசன் செங்கோலை மறுத்ததாகும் என்று அஞ்சி, மறைந்து நின்று கவர விரும்பிக், கடுத்த முகத்தையும் இடிக்குங் குரலையும் மாற்றி, நாணமுடைய கோலத்துடன் நகை முகத்தை நிலம் நோக்கி வளைத்துப், பண்ணணைய மொழியை நரம்பையும் திவவையும் உடைய யாழ்போல் மிழற்றிப் பெண் வடிவுடன் ஆண்மை திரியாமல் திரிகின்றனனோ?'' என்று கண்டோர் காமுற்றுக் கூறும்படி, உருவிலாளனாகிய காமனின் பெரும் படைஞராகிய பொதுமகளிர் மிக நெருங்கி வருதலால், எதிர்வரும் மாந்தர் தம் மார்பாலே தள்ளிச் செல்லும்போது, அப்பொது மகளிர் முலையில் எழுதிய தொய்யில் முதலிய கோலம் அம்மாந்தரின் மார்பெலாம் பொருந்திவிடும். அப்போது அம் மாந்தர்கள் தம் மார்பிலே பொது மகளிரால் நேர்ந்த சுவடு கண்டு தம் கற்புறு மனைவியர் ஊடுவர் என்றஞ்சி விருந்தினரொடு தம் இல்லிலே புகுவர். விருந்தோடு புக்க கணவருடன் உறைதலை விரும்பிய மனைவியர் வழிபாட்டுடன் ஏற்பர். அவ்வாறு ஏற்ற அருந்ததிபோலுங் கற்புடைய இல்லற மகளிரை அப்பெருந்தோட் கணவர் நோக்கி, 'இம் மாதருடைய ஒளி பொருந்திய முகத்திலே உள்ள, நீலமணி போலும் இதழையுடைய குவளை மலர்கள் புறங்கொடுத்தோடற்குக் காரணமாகிய கருங் கண்களின் கடைச்சிவப்பு அவ்விருந்தால் தீராதிருப்பின் இப் பெரிய நிலப்பரப்பு இவர்களூடலுக்கு ஒரு மருந்தையும் தரவல்லதோ?' என்று தம் நெஞ்சொடு கூறிச் செயலற்று நடுங்குவர்.

கண்ணகியும் மாதவியும் :

அத்தலைக்கய இந்திர விழாவில் நள்ளிரவிலே, உள்ளே இருக்கும் நறிய தாதுகள் தேனூறித் துளித்தலால் அகம் நிறைந்து மீது அழியப் பொழிய நின்று நடுங்கும் கழுநீர் மலரைப் போலக் (கோவலன் பிரிவினல் வாடிய) கண்ணகியின் கருங் கண்களும், (கோவலன் கூட்டத்தாற் களிப்புற்ற) மாதவியின் சிவந்த கண்களும் உள் நிறையை மறைத்ததனுலே மனத்தை யொழித்து நீரைச் சொரிந்தன. மற்றும் கண்ணகியின் இடக் கண்ணும் மாதவியின் வலக்கண்ணும் துடித்தன.

——

6. கடலாடு காதை

ஒரு விஞ்சை வீரனும் அவன் காதலியும் கண்ட காட்சி:

பெருமைமிக்க வெள்ளி மலையின்கண் அகன்று உயர்ந்த வடசேடியிலே தேன் ஒழுக மலர்கின்ற மலர்களை யுடைய ஒரு பொழிலிடத்தே; கரிய கயல்போலும் நீண்ட கண்களையுடைய தன் காதலியுடன் தங்கிக் காமக் கடவு ளுக்கு விருப்பத்துடன் திருவிழா ஒன்றை ஒரு விஞ்சை வீரன் நடத்தினான். அவ்விழா பங்குனித் திங்கள் இருபத் தொன்பதிற் சித்திரை நாளிலே முடிந்தது. முடிந்த பிறகு, 'தென் திசையிலே ஒரு வளமிக்க நகரிலே இந்திர விழா வுக்குக் கால்கொண்டு கொடி யெடுக்கும் நாள் இந்தச் சித்திரை நாள்' என்று தன் காதலியிடங் கூறி மேலும் கூறுகிறான் :

"அந் நகரிலே, நாளங்காடியில் ஒரு பூதம் அமர்ந்து பலியுண்ணும் இடம் உள்ளது. அப்பூதம் அங்கு வந்த வரலாறென்னவென்றால், முன்னாளில், இந்திரனேவலால் அமராவதியை வீரக்கழலணிந்த முசுகுந்தன் காத்திருந் தான். அப்போது விரைந்த செலவையுடைய அசுரர் கூட்ட மாக வந்து நெருங்கி முசுகுந்தனுடன் பொருது தோற்ற னர். பின்பு தம்மில் ஒத்துக்கூடி அம்முசுகுந்தனுடைய கண்ணும் நெஞ்சமும் இருள்மிகும்படி ஒரு கணையை விடுத்தனர். ஒரு பூதம் அக்கணையைத் தடுத்து முசுகுந்த னைக் காத்தது. இந்திரன் அப்பூதத்தை முசுகுந்தனுக்கு மெய்க்காப்பாக ஏவினான். அது புகாரிலே திருந்திய வேலேந்திய அவனுடன் வந்து தங்கிக் கோயில் கொண் டது. அதனையும் நாளங்காடியையும் காண்போம்.

மற்றும், முன் அசுரரால் வந்த இடர் தொலைய அமராவதியைக் காத்ததனால், அந்த இந்திரன் கொடுக்க,

இவன் மரபினோர் கொண்டு வந்து பொய்வகை யில்லாமற் புவியிலே நிலைபெற வைத்த அழகுமிக்க சிறப்பினை யுடைய ஐவகைப்பட்ட மன்றங்களின் சிறப்பையும் காண் போம்.

"யாழாசிரியனாகிய நாரதமுனிவன் யாழின் ஏழிசை யின்பமும் விளங்கப்பாடும் பாடலையும், பற்றுப்பாடுவா ளுடைய வாரம் பாடலையும், நாடகத்தினையும் உருப்பசி இந் திரனுடைய செவிநிறையப் பாடிக் கண்கள் நிறைய ஆடு தலும் விரும்பாளாதலால் வீணை மங்கலம் இழந்து, மண் மிசைத் தங்குக! இவளும் மண்ணிற்போய்ப் பிறக்க என்று சபித்தலின், அதனைப் பெற்றுவந்த பிறந்த மாதவி யின் வழிமுறையிலே தோன்றிய, அரவணைய அல்குலை யுடைய மாதவியின் ஆடலையும் அங்குக் காண்போம்.

"ஆகவே, துடியிடையாய்! அந்நகருக்குப்போய் அவற் றைக் கண்டு களித்து இந்திரனையும் வணங்குவோம்; வரு வாயாக"

இவ்வாறு கூறி அப்பொழுதே அவளுடன் புறப் பட்டான்.

அவ்வாறு புறப்பட்டவன் கொடுமுடியை உடைய இமயமலையையும், செழுநீர் நிறைந்த கங்கையாற்றினை யும், அவந்தி நகரையும், விந்தமலை சூழ் காட்டையும், திரு வேங்கட மலையையும், நிலம் சுமக்க இயலாத விளைவை யுடைய காவிரி பாயும் சோழ நாட்டையும் தன் காதலிக்கு விளக்கிக் கூறிக் காட்டினான், ஆங்காங்கே உள்ள பயனை நுகர்தற்கு வேண்டிய நாட்கள் வரையில் தங்கினான். பிறகு, சில நாளிலே தோட்டப் பகுதிகள் நிறைந்த புகா ரிலே வந்து, முன்னர் அவளுக்குக் கூறிய முறைப்படி இடமும் அமைதியும் இவை எனத் தொழுது காட்டி, வானவரும் விரும்பிக் காணும் வளமுடைய அம்மூதூரின் கண் நடக்கும் விழாவைத் தானும் காதலியுமாக இருந்து காண்பானாயினான்.

“திருமாலைப் பரவும் தேவபாணியும், வருணப்பூதர் நால்வரையும் பரவும் நால்வகைத் தேவபாணியும், பல வகை உயிர்களும் தன் கலையால் நலம் பெறுந் தன்மையை உடைய வானின் ஊர்ந்து செல்லும் திங்களும் பாடிப் பிறகு, அவதாளம் நீங்கவும் தாள இயல்பு பொலிவுறவும், பாரதி ஆடியதும் வானவர் புரம் எரிய வேண்டுதலால் வடவைத் தீயைத் தலையிலே கொண்ட பேரம்பு ஏவல் கேட்ட அளவிலே, அந்தத் திரிபுரத்தில் அவுணர் வெந்து விழுந்த வெண்பலிக் குவையுடையதும் ஆகிய பாரதி யரங்கத்திலே உமையவள் ஒரு கூற்றினளாய் நின்று பாணி தூக்குச் சீர் என்னும் தாளங்களைச் செலுத்த, வானவர் யாவரினும் உயர்ந்த இறைவன் சயானந்தத்தாலே கை கொட்டி நின்று ஆடிய *கொடுகொட்டி யென்னும் ஆடலும், வானோராகிய தேரிலே நான்மறைகளாகிய விரைபரி பூட்டி, நீண்ட பின்புறத்தை மறைத்து நீண்ட துகிலை முடித்துக் கூர்முள் பிடித்துத் தேர்முன் நின்ற நான்முகன் காணும்படி பாரதி வடிவாகிய இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய பாண்டரங்கம் என்னும் ஆடலும், மை வண்ணனாகிய திருமால் ஆடிய பத்தாடல்களில், கஞ்சனு டைய வஞ்சத்தினால் வந்த குவலயாபீடம் என்னும் யானை யின் கோட்டை ஒடித்து நின்றாடிய †அல்லியத் தொகுதி என்னும் ஆடலும், வாணன் என்னும் அவுணனை வெல் வதற்கு, மல்லனாகச் சேர்ந்தாருடன் சென்று, அறைகூவி மெய்புடைத் தெழுந்து அவனை நெருங்கிச் சடங்காகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்த மல் என்னும் ஆடலும், கரிய கடலின் நடுவிலே நின்ற சூரனுடைய வேற்றுருவாகிய வஞ்சத்தை அறிந்து அவன் போரை வென்ற முருகன் அக்கடலின் நடுவிலே அலைகளே அரங்கமாக நின்று துடியைக் கொட்டி ஆடிய துடிக்கூத்து என்னும் ஆடலும், அவுணர்

---

* தீமடுத் தெரியும் திரிபுரத்தைக் கண்டும் இரங்காது ஆடியதால் கொடுகொட்டி யாயிற்று.

† முகம் மார்பு கைகால்களின் வட்டனை அவிநயம் முதலியன இருந் தும் தொழில் செய்யாது நிற்றலின் தொகுதி என்றார்.

தாம் போர் செய்ய எடுத்த படைக்கலங்களைப் போருக்கு ஆற்றாமல் எறிந்துவிட்டு வருத்தம் உற்ற அளவிலே முற் கூறிய முருகன் தன் குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுக எழினியாக நின்று அவர்கள் முன் ஆடிய குடைக்கூத்து என்னும் ஆடலும், காமன் மகன் அநிருத்தனைத் தன் மகளாகிய உழையின் பொருட்டு வாணன் சிறை வைத்ததாலே, அவ்வாணனுடைய சோ என்னும் நகரத் தெருக்களிலே சென்று நிலம் கடந்த நீலநிறக் கண்ணன் குடம் கொண்டு ஆடிய குடம் என்னும் ஆடலும், *ஆண்மைத் தன்மையிலே திரிந்த பெண்மைக் கோலத்துடன் காமன் ஆடிய பேடு என்னும் ஆடலும், காயும் சினமுடைய அவுணர் வஞ்சத்தாற் செய்யும் கொடுந் தொழிலைப் பொறுதவளாய் மாயோளால் ஆடப் பட்ட மரக்கால் என்னும் பெயரையுடைய ஆடலும், அவுணர் கொடிய போர் செய்தற்குச் சமைந்த போர்க் கோலத்துடன் மோகித்து வீழும்படி, கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யவளாகிய திருமகள் ஆடிய பாவை என் னும் ஆடலும், வாணனுடைய முற்கூறிய பெரிய நகரிலே வடக்கு வாயிலின்கண் உளதாகிய வயலிடத்தே நின்று அயிராணி என்னும் மடந்தை ஆடிய †கடையம் என்னும் ஆடலும் அவரவருடைய அணிகளுடன் அவ ரவருடைய கொள்கை வழுவாமல், பொருந்தி நின்றாட லும் வீழ்ந்தாடலும் ஆகிய அவரவரை நீங்காத மரபினை யுடைய பதினொரு வகைப்பட்ட ஆடலும் அந்த ஆடல் களுக்குத் தக்க பாடல்களின் வேறுபாடும் அவற்றிற்கென விதித்த தகுதிப் பாட்டுடன் புலப்பட அவற்றைக் காண் பாயாக எனக் காட்டினான். பின்னர், அன்று தாதவிழும் மலர்ப் பொழிலிடையே இருந்து நான் கூறிய மாதவி மரபிலே வந்த மாதவி இவளே' என்று மாதவியைக் காட்டித் தானும் கண்டு மகிழ்வடைந்தான் அம்மேதகு சிறப்பினையுடைய விஞ்சையன்.

---

* இது தன் மகன் அநிருத்தனைச் சிறைமீட்ட பின்னர்க் காமன் சோ நகரத்திலே ஆடியது.

† கடையம் - கடைசிக் கூத்து.

மாதவி :

மணநெய் பூசியதனுல் மணங்கமழும் தன் நறியகூந்தலைப் பத்து வகைத் துவராலும் ஐவகை விரையாலும் முப்பத்திரண்டுவகை ஓமாலிகையாலும் ஊறிக் காயப்பட்ட நல்ல நீராலே நிறம்பெற மாதவி ஆடினுள். பின்னர் அக்கூந்தலைப் பொலிவினையுடைய புகையாலே புலரச் செய்து, ஐவகையுற வகுத்த வகைதோறும் கொழுவிய கத்தூரிக் குழம்பை ஊட்டினுள். செம்பஞ் சூட்டிய அழகிய சிவந்த சிற்றடிக்குப் பொருந்திய நலத் தகும் மெல்லிய விரல்களிலே செறிக்கத்தக்க மகரவாய் மோதிரம் பிலி கால் மோதிரம் முதலிய நல்லணிகளைச் செறித்தாள். காற்சவடியும் சிலம்பும் பாடகமும் சதங்கையும் காற்சரியும் ஆகிய இவற்றைக் காலுக்குப் பொருத்தம் உற அணிந்தாள். குறங்குசெறி என்னும் அணியைத் திரண்ட துடையினிடத்தே செறித்தாள். பெரிய முத்துக் கோவை முப்பத்திரண்டாற் செய்த விரிசிகை என்னும் கலையை நீலநிறம் விளங்கும், பூத்தொழிலையுடைய நீல நிறம் பொருந்திய உயர்ந்தசால்வையின்* மீதே உடுத்தாள். காமத்தையுண்டாக்கும் மாணிக்க வளையுடன் நீங்காமல் பொன் தொடராலே பிணித்த முத்துவளையைத் தோளுக் கணிந்தாள். முகப்பிலே கட்டிய மாணிக்கத்துடன் பத்திகளில் வயிரங்கள் அழுத்தப்பட்ட சித்திரத் தொழிலையுடைய சூடகமும் செம்பொன்னுலே செய்த வளையும் நவரத்தின வளையும் சங்கவளையும் பவழ வளைகளும் ஆகிய வற்றை அழகிய மயிரையுடைய முன்கைக்குப் பொருத்தம் உற அணிந்தாள். வாளைமீனின் திறந்த வாயை வணங்கும்படி செய்யும் முடக்கு மோதிரமாகிய நெளியும், சிவந்த ஒளி உச்சமாகக் கதிர்வீசும் மாணிக்க சூழியும், பக்கத்தே வளைந்து திரைகின்ற ஒளியையுடைய வயிரம் சூழ்ந்த மரகதக் கடை செறியும் பிறவுமாகிய அணிகளைக் காந்தள் மலரனைய மெல்லிய விரல்கள் மறையும்படி அணிந்தாள். அழகிய கழுத்திலே முத்துமாலையுடன் விரசங்கிலி, நுண்

* உடையின் உள்ளே என்று அரும்பத உரையாசிரியர் கூறுவர்.

ணிய தொழிலையுடைய நேர்ஞ்சங்கிலி, பூணத்தகும் நாண், கைபுனைந்த தொழில்களையுடைய சவளி சரப்பளி முதலான பிறவற்றையும் அணிந்தாள். முற்கூறிய அணிகளுக்கெல்லாம் தலையொன்றாய்க் கோக்குவாய்ப் படுகண் தொடக்கிய பன்மணிக் கோவையால் தூக்காகச் செய்யப்பட்ட பின்தாலியால் பிடரை மறைத்தாள். அழகிய காதுகளில் ஒன்றில் இந்திர நீலக் குதம்பையையும், மற்றொன்றில் இடையிடை திரண்ட சந்திரபாணி யென்னும் வேறு பெயருடைய முற்றும் வயிரம் இழைத்த குதம்பையையும் அணிந்தாள். கரிய பெரிய கூந்தல் அழகுறும்படி சீதேவி யென்னும் பணியுடனே வலம்புரிச்சங்கும், பூரப்பாளையும். தென்பல்லி வடபல்லி என்னும் இவைகளும் தம்மில் தொடர்ந்து ஒன்றான தலைக்கோலத்தை அணிந்தாள்.

இவ்வாறு அணிந்து கொண்டு கூடலையும் ஊடலையும் கோவலனுக்கு அளித்துத் தகுதிமிக்க சேக்கையாகிய பள்ளியிலே இருந்த மாதவி, திருவிழாவிற்குக் கொடியெடுத்த நாள் முதல் இருபத்தெட்டு நாளும் திருவிழா நடந்து, மறுநாள் கொடியிறங்கி, விழா ஆற்றுப்படுத்திய மறுநாள் முழுமதி நாள் வந்ததனால், பகைவருக்கு அச்சத்தை யூட்டும் பழம்பதியினின்றும் கடற்கரையிலே இடம் பிடிக்க விரைந்து செல்லும் மக்களோடு தானும் மடலவிழும் தாழை புன்னை முதலியவற்றையுடைய கழிக்கானல் பொருந்திய கடல்விளையாட்டைக் காணும் விருப்பத்துடன் கோவலனை வேண்டினாள். அவனும் உடம்பட்டான்.

கடற்கரையை அடைதல் :

பொய்கைகளில் தாமரை மலர்ப் பள்ளியிலே துயில்கின்ற பறவைகள் அதனை நீங்குதலாலே வாய்விட்டுப் புலம்பவும் வைகறைப் பொழுதென்பதனைக் கோழிகள் அறிவிக்க, வைகறையிலே செறிந்த இருளையெல்லாம் வெள்ளியாகிய விளக்குக் கடிந்து விலக்கியது. அக்காலத்தே மதாணி முதலிய பேரணிகலன்களை

அணிந்து, முகில்போலும் வண்கையையுடைய கோவலன் அரசவூர்தியாகிய அத்திரியில் ஏறினன். தாரணிந்த மார்பனாகிய அவனுடன் செல்லுதற்கு மானின் பார்வையுடையாளும் மூடுவண்டியில் ஏறினள்.

கோடி என்னும் எண்ணைப் பலகோடி மேல் அடுக்கப்பட்ட வளவிய நிதித்திரளையுடைய மாடங்கள் நிறைந்த தெருக்களிலும் அங்காடித் தெருவிலும் மலரணிதற்குக் காரணமாகிய மை விளக்குடன் மாணிக்க விளக்குகளையும் எடுப்ப அவ்விடத்தே உள்ள தாசியர் மலரையும் கொடியான அருகையும் நெல்லையும் மங்கலாகத் தூவி, இரு மருங்கிலும் தம் அணிகலன் ஒலிக்கத் திரிந்து பெயர்தலையுடைய திருமகளுக்கு இருப்பிடமாகிய அவ்விடத்தை அரிதில் அவ்விருவரும் கழிந்தனர். பின்னர், மகரம் திரிதரும் கடலின் வளத்தைக் கொணர்தலாலே உயர்ச்சி பெற்ற நகரத் தெருவினூடே சென்றனர். மரக்கலங்கள் அளித்த செல்வத்தையுடைய தம் நாடுகளை விட்டுப் போந்த பிறநாட்டினர், அலைகொண்டுவந்த வெண்மணலையுடைய அலைவாய் இருக்கையிலே பலவகைக் கூலமும் குவித்த தெருவிலே இன்ன சரக்கு இங்கே உளதென்று குறிக்கும் கொடிகளெடுத்த ஒழுங்குற்ற சேரிகளைக கடந்து நெய்தலங் கானலை அடைந்தனர்.

கடற்கரையில் :

எழுது வண்ணமும் சாந்தும் மலரும் சுண்ணமும் பண்ணிய வகைகளும் ஆகியவற்றை விற்போர் விளக்கும், திண்ணகத்தாற் செய்யும் தொழில்களிலே தேர்ந்த பணித்தட்டார் பணிபுரியும் இடங்களில் வைத்த விளக்கும், பிட்டு வாணிகர் பிட்டு விற்பதற்கு ஒழுங்காக வைத்த விளக்கும், அப்பவாணிகர் குடத்தண்டின் மேல் காரகலிலே வைத்த விளக்கும், பலபண்டமும் விற்கும் மிலேச்ச மகளிர் தம் கடைகளில் வைத்த விளக்கும், இடையிடையே மீன் விற்போர் விளக்கும், விளங்கும் நீர்ப்பரப்பிலே திசையறியாது ஓடுகின்ற, மொழி வேறு

பட்ட நாட்டுக் கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்கும், மீன்களைத் தடுத்துப் பிடிக்கும் வலையையுடைய பரதவர் தோணியில் வைத்த விளக்கும், மொழிவேறுபட்ட நாட்டினராகிய மிலேச்சர் வேறு துறைகளிற் செல்லாமற் பனைகளைக் காலாக நாட்டி அதன்மீது மண்ணிட்டெரிக்கும் திநா என்னும் விளக்கும், மிகவும் பெரிய பண்டங்களையுடைய பண்டசாலை காப்போர் இட்ட விளக்கும் என எல்லை அறியாதனவாகி எண்ணுதற்கியைந்து ஒன்றி மிகுதலாலே, 'மாவைத் தம்மிற் கலந்தாலொத்த நுண்மணல் மீது இட்ட வெண் சிறுகடுகும் புலப்படக் காணும் காட்சியை உடையதாகிய, மிக்கநீர்ப் பரப்பிலே மண மலர்த் தாமரையை வேலியாக வுடைய மருத நிலத்தினும் அழகுறத் தோன்றுகிற, தாழையை வேலியாக உடைய நெய்தல் நிலத்திலே கழிக்கானலின்கண் மாதவி தன் விளையாட்டுத் தோழியரோடு சென்று விளையாடினுள்.

நிறைநிறையாகக் குவித்த குற்றம் அற்ற காட்சியையுடைய மலைதரும் பல பண்டங்களும் கடல்தரும் பல பண்டங்களும் ஆகிய வளம் ஆங்காங்கே மயங்கிக் கிடக்கின்ற கலங்கள் அசைகின்ற கடற்றுறைமுகங்களிலே சோலைசூழ்ந்த இருப்பிடத்தில், அரசகுமரரும் அவர்களுடைய உரிமைச் சுற்றமும் வணிக குமரரும் பலவேறு வகைப்பட்ட ஆயமகளிரும் ஆடல் மகளிரும் பாடல் மகளிரும் குழுமிக் குழுமி இருக்கும் இடங்கள்தோறும் உண்டாகும் வேறு வேறு ஆரவாரமும் அவ்விடங்களிற் சூழ்ந்த எழினிகளிலே காணப்படும் வேறு வேறு கோலமும், வானிற் பரவிய பெரும் புகழையுடைய கரிகால் வளவன் புதுப்புனல் விழாக் கொண்டாடும் தலைநாட் போலவே, இந்த இந்திர விழாவின் இறுதிற் புனலாடுமிடங்களும் வீறுபெறத் தோன்றின. கடலினது கரையைக் குத்தியிடிக்கும் காவிரியின் புகார் முகம் எங்கும் வெற்றிடமின்றிச் சேர நெருங்கிய நால் வகை வருணத்திலும் உள்ளாருடைய அடக்கவியலாத ஆரவாரம் எல்லாம் கூடிஒரொலியாய் ஒலித்தன.

இந்நிலையிலே தன் ஆயத்தாருடன் விளையாடுதலைப் பொருந்திய பெரிய மலர் போலும் கண்களையுடைய மாதவி, கடலின் புலவு நாற்றத்தை மாற்றும் மடலவிழும் மலர்களையுடைய தாழையை வேலியாகக்கொண்டு நடுவண் உளதாகிய புன்னை நிழலில், அழுக்கற்ற மணல் பரவிய நிலத்திலே ஓவியத் திரையை வளைத்து மேற்கட்டுங்கட்டியிடப்பட்ட யானைக் கொம்பாலாகிய வெண்கால் அமளியின்மேல், வருந்தி நின்ற வயந்தமாலையின் கையிலுள்ள நல்ல யாழைச் செவ்வையுற வாங்கிக் கோவலனுடன் சேர அமர்ந்தாள்.

வேலை மடல்தாழை யுள்பொதிந்த வெண்தோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
களிநறவம் தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் தேர்.

——

7. கானல்வரி

மாதவி யாழைப் பண்ணுறுத்திக் கோவலனிடம் கொடுத்தல் :

ஓவிய மெழுதிய திரைச்சீலையினுள் இருந்து, வள விய கோட்டு மலரை யணிந்திருக்கும் மைதீட்டிய பெரிய கண்களையுடைய மணமகளிர் ஒப்பனைபோல ஓவியச்சீலை யாகிய உறையினுட் புகுந்து வளவிய கோட்டிலே மலரை யணிந்து அழகுற்றுப், பத்தர், கோடு, ஆணி, நரம்பு என் னும் இவ்வுறுப்புக்களிலே குற்றமில்லாத யாழை வயந்த மாலை கையிலிருந்து மாதவி தொழுது வாங்கினாள். வாங் கியவள் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்று முன் னோர் விதித்த எண் வகையாலும் இசையெழுப்பினாள்.

பண்ணல் :

"வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின்(று) இளிவழி கேட்டும்......
இணைவழி ஆராய்ந்(து) இணைகொள முடிப்பது
விளைப்பரு மரபிற் பண்ண லாகும்"

பரிவட்டணை :

"பரிவட் டணையின் இலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவிற் றாகி
வலக்கை இருவிரல் வனப்புறத் தழீஇ
இடக்கை விரலின் இயைவு தாகத்
தொடையொடு தோன்றியும் தோன்றா தாகியும்
நடையொடு தோன்றும் நயத்த(து) ஆகும்"

ஆராய்தல் :

"ஆராய்தல் என்ப(து) அமைவரக் கிளப்பின்
குரல்முத லாக இணைவழி கேட்டும்
இணையிலாவழிப் பயனொடு கேட்டும்
தாரமும் உழையும் தம்மிற் கேட்டும்

துத்தமும் விளரியும் துன்னுறக் கேட்டும்
விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும்
தளரா தாகிய தன்மைத் தாகும்''

தைவரல் :

''தைவரல் என்பது சாற்றுங் காலை
மையறு சிறப்பின் மனமகிழ்(வு) எய்தித்
தொடையொடு பட்டும் படாஅ தாகியும்
நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி
ஓவாச் செய்தியின் வட்டணை ஒழுகிச்
சீரேற் றியன்றும் இயலா தாகியும்
நீர வாகும் நிறைய(து) என்ப''

செலவு :

''செல வெனப் படுவதன் செய்கை தானே
பாலை பண்ணே திறமே கூடமென
நால்வகை இடத்து நயத்த(து) ஆகி
இயக்கமும் நடையும் எய்திய வகைத்தாய்ப்
பதினே ராடலும் பாணியும் இயல்பும்
விதிநான்கு தொடர்ந்து விளங்கிச் செல்வதுவே.''

விளையாட்டு :

''விளையாட் டென்பது விரிக்குங் காலைக்
கிளவிய வகையின் எழுவகை எழாலும்
அளவிய தகைய(து) ஆகும் என்ப''

கையூழ் :

''கையூ ழென்பது கருதுங் காலை
எவ்விடத் தானும் இன்பமும் சுவையும்
செவ்விதின் தோன்றிச் சிலைத்துவரல் இன்றி
நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி
நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும்
பாற்படத் தோன்றும் பகுதித்(து) ஆகும்''

குறும்போக்கு :

''துள்ளற் கண்ணும் குடக்குத் துள்ளும்
தள்ளா தாகிய உடனிலைப் புணர்ச்சி
கொள்வன எல்லாம் குறும்போக்(கு) ஆகும்''

இசையெழுப்பிப் பண்வகையாற் குற்றந் தீர்ந்திருப்பதை உணர்ந்து, மரகதமணி மோதிரங்கள் செறிந்த விரல்கள் பாடுகின்ற வண்டின் கிளைகளை ஒப்பப் பல நரம்புகளின் மேலும் படர, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், சிறப்புற உருட்டல், தெருட்டல், அள்ளல், அழகுறு பட்டடை என்று இசையோர் வகுத்த எட்டு வகையான இசைக் கரணங்கள் பொருந்திய வகையைத் தன் செவியினால் உணர்ந்தாள்.

வார்தல் : சுட்டுவிரல் செய் தொழில்.

வடித்தல் : சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்.

உந்தல் : நரம்புகளை உந்தி, வலிவிற் பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழி பட்டதுமென்றறிதல்.

உறழ்தல் : ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்.

உருட்டல்: இடக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், சுட்டொடு பெருவிரல் கூட்டியுருட்டலும், இருபெருவிரலும் இயைந்துடன் உருட்டலும் ஆகும்.

தெருட்டல்: "தெருட்டல் என்றது செப்புங் காலை உருட்டி வருவ தொன்றே மற்ற-ஒன்றன் பாட்டுமடை 'ஒன்ற நோக்கின் வல்லோ ராய்ந்த நூலே ஆயினும் – வல்லோர் பயிற்றும் கட்டுரை யாயினும்- பாட் டொழிந்(து) உலகினில் ஒழிந்த செய்கை யும்-வேட்டது கொண்டு விதியுற நாடி*

---

* இதன் குறையும் மற்றும் இரண்டு இசைக்கரணத்துக்கு விளக்கமும காணப்படவில்லை. இவை இசைத் தமிழ்ப் பதினாறு படலத்துள் கரண ஓத்துள் காணப்படும் என்று அரும்பதவுரைகாரர் கூறுகிறார்.

பின்னர், இப்போது இதனை வாசிக்க வேண்டுமென்று ஏவுகிலேன். வாசிக்குந் தாளம் யாதென்று அறியலுறு கிறேன் என்பாள்போலக் கோவலன் கையிலே யாழை நீட்டினுள். அவன் அதனை வாங்கி, காவிரியை நோக்கின வையும் கடற் கானல்வரியும் ஆகியவற்றை மாதவியின் மனம் மகிழ வாசிக்கத் தொடங்கினுன்.

வரிப்பாட்டாவது:

பண்ணும் திறமும் செயலும்பாணியும் ஒரு நெறியின்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டன் இயல்பும் ஆறன் இயல்பும் பெற்றுத், தன் முத லும் இறுதியும் கெட்டு, இயல்பும் முடமுமாக முடிந்து, கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெருதும் வரும். அது தெய்வஞ் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும். தெய்வஞ் சுட்டியது கூடை, வாரம் என இரு வகைப்படும். "கூடை யென்பது கூறுங்காலை — நான் கடியாகி இடையடி மடக்கி — நான்கடி அஃகி நடத்தற் கும் உரித்தே" "வாரம் என்பது வகுக்குங் காலை — நடையினும் ஒலியினும் எழுத்தினும் நோக்கித் — தொடை யமைந்(து) ஒழுகும் தொன்மைத்(து) என்ப"

இங்குவரும் வரிப்பாட்டு மக்களைப்பற்றியது. முதலில் வரும்பாட்டு மூன்றும் ஆற்றுவரி. இனி முகமுடைவரி முக மில்வரி படைப்புவரி என மூவகைப்படும். முகமுடை வரி யாவது "நிலம் முதலாகிய உலகியல் வரிக்கு — முகமாய் நிற்றலின் முகமெனப்படுமே" முகமுடைவரி மூன்றடி முதலாக ஏழடியீருக வரும். 'சிந்தும் நெடிலும் சேரி னும் வரையார்' முகமில் வரியாவது: முகமொழிந்து ஏனை உறுப்புக்களான் வருவது, படைப்பு வரியாவது: எல்லா உறுப்பும் ஒன்ருனும் பலவானும் வெள்ளையானும் ஆசிரியத் தானும் கொச்சகம் பெற்றும் பெருதும் வேறு வேருகி...வருவதி.

வரி : ஆற்றுவரி வண்ணம் : ஒழுகு வண்ணம்

திங்கள் மாலை வெண்குடையான்
  சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
  புலவாய் வாழி ! காவேரி !
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
  புலவா தொழிதல் கயற்கண்ணாய் !
மங்கை மாதர் பெருங்கற்பென்(று)
  அறிந்தேன் வாழி! காவேரி! 1

மன்னும் மாலை வெண்குடையான்
  வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
  புலவாய் வாழி ! காவேரி !
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
  புலவா தொழிதல் கயற்கண்ணாய் !
மன்னும் மாதர் பெருங்கற்பென்(று)
  அறிந்தேன் வாழி ! காவேரி ! 2

உழவர் ஓதை மதகோதை
  உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
  நடந்தாய் வாழி ! காவேரி !
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
  நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன்
  வளனே வாழி ! காவேரி ! 3

[காவேரி யணங்கே! திங்கள் போன்ற தண்மை யுடைய மாலையணிந்த வெண்குடையுடைய சோழன் செங்கோல் செலுத்திக் கங்கையைக் கூடினும் நீ புலவாதிருக்கின்றனை! அத்தகைய நீ வாழ்க! கயலனைய கண்களையுடையாய்! அவ்வாறு புலவாதிருத்தலே மங்கையரின் அழகிய கற்பென அறிந்தேன்! காவேரியே! வாழி!]

[காவேரி யணங்கே! மாலையணிந்த நிலைபெற்ற வெண்குடையுடைய சோழன் தன் மாறுபடாத செங்கோலைச் செலுத்திக் குமரியைப் புணர்ந்தாலும் நீ புலவா திருக்கின்றனை. கயலனைய கண்களையுடையாய்! அவ்வாறு புலவாதிருத்தலே நிலைபெறும் மாதரின் பெருங்கற்பென அறிந்தேன்! காவேரியே! வாழி!]

[காவேரி யணங்கே! உழவர் ஒலியும் மதகின் ஒலியும் நீர் உடைங்தெழும் ஒலியும் புதுப்புனலாடுவாரொலியும் சிறந்து பேரொலியாக எழ நீ நடந்து சென்றனை! அவ்வாறு நடந்தனவெல்லாம் வாய்காவாமல் வஞ்சினம் கூறும் வீரர் ஒலியையுடைய வளவனுடைய வளனே என அறிந்தேன்! காவேரியே! வாழி!]

ஆற்றுவரி பாடிய பின் சார்த்து வரி பாடினன். "பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும்-சார்த்திப் பாடின் சார்த்தெனப்படும்" இது, முகச்சார்த்து, முரிச் சார்த்து, கொச்சகச் சார்த்து என மூவகைப்படும். முகச் சார்த்து: மூன்றடி முதல் ஆறடி ஈருக வரும், இடையே நான்கடியானும் ஐந்தடியானும் வரப்பெறும். முரிச் சார்த்து: "முரிந்தவற...குற்றெழுத்தியலாற் குறுகிய நடையாற் — பெற்ற அடித்தொகை மூன்றும் இரண்டும் - குற்றம் இல்லெனக் கூறினர் புலவர்". கொச்சகச் சார்த்து: கொச்சகம் போன்று முடியும். இங்குப் பாடியது முகச் சார்த்து.

சார்த்து வரி: முகச்சார்த்து

வேறு

கரியமலர்நெடுங்கண் காரிகைமுன்
  கடல்தெய்வம் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறன்இலர்என்(று)
  ஏழையம் யாங்(கு) அறிகோம்? ஐய!
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும்
  ஆம்என்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தும்கண்(டு) ஆம்பல்
  பொதியவிழ்க்கும் புகாரே எம்ஊர். 1

காதலர் ஆகிக் கழிக்கானல்
  கையுறைகொண்(டு) எம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாம்இரப்ப
நிற்பதை யாங்(கு) அறிகோம்? ஐய!

மாதரார் கண்ணும் மதிநிழல்நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டுசல்
ஆடும் புகாரே எம்ஊர். 2

மோது முதுதிரையால் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி, ஐய!
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
போகாப் புகாரே எம்ஊர். 3

[ஐயனே! கரிய மலர் போன்ற நீண்ட கண்களை யுடைய இவள் முன்னர்க் கடல் தெய்வத்தைக் காட்டிக் காட்டிச் செய்த அரிய சூளைப் பொய்த்த இவர் அறநெறி விட்டவர் என்று ஏழையேம் எப்படி அறிவோம்? விரிந்த ஒளியையுடைய திங்களும் விண்மீன்களும் இவையென எண்ணி வெண்சங்கத்தையும் முத்தையும் கண்ட அல்லி மலரவிழும் புகாரே எம் ஊராகும்.

ஐய! அன்புடையராகி இக் கழிக் கானலிலே எம்பின் கையுறையேந்தி வேண்டிவந்த இவர், இப்போது அன்பில ராகி யாம் அவரை வேண்டி நிற்போம் என்பதை எப்படி அறிவோம்? மாதர்களின் கண்ணையும் நீரிலே திங்களின் நிழலிலே மலர்ந்த நீல மலரையும் வேறுபாடறிய முடியா மல் வண்டுகள் ஊசலாடும் புகாரே எம் ஊராகும்.

ஐய! மோதுகின்ற பேரலைகளாலே மொத்துப்பட்டு வந்து அசைந்த முரலும் வாயையுடைய சங்குகள், பெண் கள் மணல்மீதிழைத்த விளையாட்டில்நலத்தை உழுது அழித்தலாலே வருந்தி அப்பெண்கள் தாம் அணிந்த குவளைமலர் மாலையால் அவற்றை ஓச்சும்போது, அக் குவளைமலர் மாலையிலிருந்து சிந்திய மலர்களை 'ஒருக்கணித் துப் பார்க்குங் கண்களோ' என்று ஐயுற்றுப் பார்ப்போர் கண்கள் விலகாத புகாரே எம் ஊராகும்.]

இச் செய்யுட்கள் மூன்றும் தோழி தலைமகன் முன் நின்று வரைவுகடாயவை. முன்னிற்கும் தலை மகனைப் படர்க்கையாகக் கொண்டு கூறினாள். கையுறை மறுத்தல் என்றும் கூறலாம் என அரும்பதவுரையாளர் கூறுகிறார்.

-வேறு-

முகமில் வரி

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல்உழுத
தோற்றம் ஆய்வான்.
பொறைமலிபூம் புன்னைப் பூவுதிர்ந்து நுண்தாது
போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும். 1.

இது குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதல் மிகுதியைக் குறிப்பினால் அறிந்து கூறியது.

[கானல் துறையிலே மணலிலே தோய்ந்து மேயும் வலம்புரி உழுத சுவடு மறையும்படி, புன்னை சுமந்த மிகுதியான மலர்கள் உதிர்ந்து நுண்ணிய மகரந்தம் போர்க்கும் கானலிலே இவளுடைய முழுமதிபோலும் முகத்திலே பொருந்திய கயற்கண்கள் செய்த, மருந்தாற் போக்க முடியாத நோயைச் சுணங்கு பரவிய இவளுடைய மென் முலைகளே தீர்க்க வேண்டும் போலத் தெரிகிறது!]

கானல் வரி

நிணங்கொள் புலாலுணங்கல் நின்றுபுள் ளோப்புதல்
தலைக்கீ டாகக்
கணங்கொள் வணடார்த் துலாம்கன்னி நறுஞாழல்
கையில் ஏந்தி
மணங்கமழ் பூங்கானல் மன்னிமற் (று) ஆண்டோர்
அணங்குறையும் என்ப தறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ. 2

வலைவாழ்நர் சேரி வலைஉணங்கும்
 முன்றில் மலர்கை யேந்தி
விலைமீன் உணங்கல் பொருட்டாக
 வேண்டுருவம் கொண்டு வேறோர்
கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம் வாழ்வ (து)
அலைநீர்த்தண் கானல் அறியேன்
 அறிவேனேல் அடையேன் மன்னோ 3

இவை கழற்றெதிர் மறை.

நிணம் கொண்ட புலால் வற்றலைக் காத்து நின்று பறவைகளை ஓட்டுதலைச் சாக்காகக் கொண்டு, வண்டுகள் குழுமி ஆரவாரித்து மொய்க்கும் நறுமணமுள்ள கன்னி ஞாழலைக் கையில் ஏந்தி மணமிகும் மலர்க் கானலையடைந்து ஆங்கு ஓர் அணங்கு உறைகிறாள் என்பதை அறிகிலேன். அறிந்தால் வந்திரேன்.

வலைஞர் வாழும் சேரியிலே வலைகள் உலரும் முன்றிலிலே மலரைக் கையில் ஏந்தி, காய்ந்த மீனை விற்பதற்காக அதற்குப் பொருந்திய உருவத்தைக் கொண்டு, கொலைவேல் அனைய நெடுங் கண்களை யுடைய கொடிய கூற்றம் அலைவீசும் தண்ணிய கானலிலே வாழ்வதை அறியேன், அறிவேனேல் வந்திரேன்.

நிலைவரி

(முகமும் முரியும் தன்னொடு முடியும்
நிலையை உடையது நிலையெனப் படுமே)

வேறு

கயல்எழுதி வில்எழுதிக் கார்எழுதிக் காமன்
செயல்எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ ? காணீர் !
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் (து) அரவஞ்சி வாழ்வதுவே, 1

எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
கறைகெழுவேல் கண்ணோ கடுங்கூற்றம் காணீர் !
கடுங்கூற்றம் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயல் மகள்ஆ யதுவே. 2

புலவுமீன் வெள்ளுணங்கல் புள்ளோப்பிக் கண்டார்க்(கு)
அலவநோய் செய்யும் அணங்கிதுவோ காணீர்!
அணங்கிதுவோ காணீர் அடும்பமர்தண் கானல்
பிணங்குநேர் ஐம்பாலோர் பெண்கொண் டதுவே. 3

[இவை மூன்றும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை.]

கயலையும் வில்லையும் முகிலையும் (கண், புருவம், கூந்தல்,) எழுதிக் காமன் செயலாகிய பிறரை வருத்தும்தொழிலையும் எழுதிப் பணிக்குறையற்ற முகம்திங்கள் என்றே அறிவீராக! அத் திங்களே அழகிய வானில் உலவின் அரவு பற்று மென்றஞ்சிப் படகோட்டிகள் வாழும் இச் சிற்றூரிலே வாழ்கிறது!

அறுக்கப்பட்ட வளைகள் ஒலிக்க, இருபக்கத்தினும் ஓடும், ஊன் பொருந்திய வேலனைய கண்கள் கடிய கூற்றம் என்று அறிவீராக! அக் கடிய கூற்றமே கடல் வாழ்வோரின் சிற்றூரிலே, மடப்பம் பொருந்திய மெல்லிய சாயலையுடைய பெண்ணாகியது.

புலால் கமழும் வெள்ளிய காய்ந்த மீனைப் பறவைகள் தின்னாமல் ஓட்டிக்கொண்டு, பார்த்தார் வருந்த நோய் செய்யும் தெய்வம் இது என்று அறிவீராக! அத் தெய்வமே அடுப்ப மலர்களையுடைய தண்ணிய கானலிலே, ஊடும் இயல்புடையாளாகிய, ஐம்பாலையுடைய பெண் உருவங் கொண்டது.

வேறு

முரிவரி

(எடுத்த இயலும் இசையும் தம்மின்
முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே)

பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனையிடர் செய்தவையே.

திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே எனையிடர் செய்தவையே. 2

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவள் திரியிடமே
முளைவளர் இளநகையே முழுமதி புரைமுகமே
இளையவ ளிணைமுலையே எனையிடர் செய்தவையே. 3

[இவை மூன்றும் பாங்கன் கேட்பத் தலைமகன் உற்ற துரைத்தவை.]

எனை இடர் செய்தவை பொழில் தரு நல்ல மணமிகு மலர்களும் புது மலரின் மணம் விரியும் மணலும் அவளுடைய குற்றமற்ற அழகிய மொழியும் பருத்த இளமுலையும் முழுமதி யனைய முகமும் வளைந்த புருவங்களாகிய இணை விற்களும் எழுதவியலாத மின்னனைய இடையுமாகும்!, அலைவிரியும் கடற்கரையும் அழகிய மணல் பரந்த இடமும் மணம் விரியும் கட்டப்பட்ட கூந்தலும் திங்களனைய அழகிய முகமும் கயலனைய இணைவிழிகளும் ஆகும்! சங்குகள் மிகுந்த கடற்கரையும் மணம் பரவிய பொழிலும் அப்பொழிலிலே கட்டவிழ்ந்த நல்ல மலரும் தனியே என் வரவை நோக்கி அவள் திரியும் இடமும் முளைத்து வளர்ந்த இளமுறுவலும் முழுமதியனைய முகமும் அம் மங்கையின் இணைமுலைகளும் ஆகும். !

திணை நிலை வரி

வேறு

கடல்புக் (கு) உயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்!
உடல்புக் (கு) உயிர்கொன்று வாழ்வைமன் நீயும்!
மிடல்புக் (கு) அடங்காத வெம்முலையோ பாரம்!
இடர்புக் (கு) இடுகும் இடை-இழவல் கண்டாய்! 1

கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை!
நெடுங்கண் வலையால் உயிர்கொல்வை மன்நீயும்!
வடங்கொள் முலையால் மழைமின்னுப் போல
நுடங்கி உகும்மெல் நுசுப்(பு)இழவல் கண்டாய்! 2

ஓடும் திமில்கொண்(டு) உயிர்கொல்வர் நின்னையர்!
கோடும் புருவத்(து) உயிர்கொல்வை மன்நீயும்!
பீடும் பிறர்எவ்வம் பாராய் முலைசுமந்து
வாடும் சிறுமெல் மருங்கிழவல் கண்டாய்! 3

[இவை மூன்றும் புணர்ச்சிபெட இடந்தலைப்பாட்டிற் புணர்தலுறுவான் கூறியவை.]

நின் தமையன்மார் கடலிற் சென்று மீன்களைக் கொன்று வாழ்வர். நீயும் என் உடலிலே புகுந்து உயிர் கொன்று வாழ்வாய். திண்மை மிக்கு மார்பில் அடங்காது வளர்ந்த நின் வெம்முலைகளின் சுமையாலே இடரிலே அகப்பட்டு வருந்தும் இடையை முன் கூறிய உயிர்க் கொலையாகிய தீவினையாலே இழந்து விடாதே! உன் தந்தை வளைந்தகண்களையுடைய வலையாலே மீன்களின் உயிரைக் கொல்வான். நீயும் நின் நீண்ட கண்களாகிய வலையாலே என் உயிரைக் கொல்வாய். இத்தீவினையாலே ஆரம் அணிந்த முலையாலே, முகிலிடை மின்னுக் கொடி போல அசைந்து ஒடியும் மெல்லிய இடையை இழந்து விடாதே!

கடலில் ஓடும் படகைக் கொண்டு மீன்களின் உயிர்களை நின் தமையன்மார் கொல்வர். நீயும் வளைந்த புருவத்தாலே என் உயிரைக் கொல்வாய். மேலும் பிறர் துன்பத்தைப் பார்த்திருத்தலே உனக்குப் பெருமையாக உள்ளது. இத் தீவினையாலே முலைகளைச் சுமந்து வாடுகின்ற மெல் லிடையை இழந்து விடாதே

நீ விரும்பினல் தழுவி நின் இடையின் மெலிவைத் தீர்ப்பேன் என்பது கருத்து.

வேறு

பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய! கொடிய! 1

புன்னை நிழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
பொன்னே வெய்ய! கூற்றம்! கூற்றம்! 2

கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல! வெய்ய! வெய்ய! 3

[இவை மூன்றும் குறியிடத்துக் கண்ட பாங்கன் சொல்லியவை; புணர்ந்து நீங்குவான் விடுத்தல் அருமையால் ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குச் சொல்லியவையுமாம்.]

பவள உலக்கையைக் கையாலே பற்றி, வெண்முத்துக்களைக் குற்றுவாளின் செங்கண்கள் நிறத்தினாலே குவளை எனல் வேண்டா! கொடியவை! கொடியவை! புன்னைமர நிழலிலே புலவுநாறும் அலையோரத்திலே அன்னம் இவள் நடையைப் பார்த்து நடக்கும்படி நடப்பவளின் செங்கண்கள மிகுதியுங் கூற்றுவன்! கூற்றுவன்! தேனையுடைய நில மலரைக் கையில் கொண்டு காயும் மீனை உண்ண வரும் பறவைகளை ஓட்டுவாள் செங்கண்கள் வடிவால் ஊன்படியாத வேலல்ல! கொடியவை! கொடியவை!

வேறு

சேரல்! மடஅன்னம்! சேரல்! நடைஒவ்வாய்!
சேரல் மடஅன்னம்! சேரல் நடைஒவ்வாய்!
ஊழ்திரைநீர் வேலி உழக்கித் திரிவாள்பின்
சேரல்! மடஅன்னம்! சேரல் நடை ஒவ்வாய்! 1

[இது காமம் சாலா இளமையோள்வயின் ஏமம் சாலா இடும்பை எய்தியோன் சொல்லியது.]

விளையாட்டு விருப்பினால் கடற்கரையிலே மணலை உழக்கித் திரிகின்ற இவள் பின்னாலே அன்னமே! செல்லாதே. ஏனெனில் நீ அவள் நடைபோல நடக்கமாட்டாய்.

மாதவி கோவலனிடமிருந்து யாழை வாங்கி வாசித்தல்

இவ்வாறு கோவலன் வாசித்தபோது, அவன் வாசித்த உருக்கள் களவில் தலைமகன் கூற்றாதலால், அப்பாடல் கேட்ட மான்கண் அனைய கண்களையுடைய மாதவி,'இவன் தன் நிலை வேறுபட்டான். ஏதோ குறிப்புண்டு போலும்' என மனத்திடைப் புலந்தாளானாலும் கூட்டத்தினால் மகிழ்ந்தாள் போலக் காண்பித்துக்கொண்டு, தானும் வேறு குறிப்பினள் போலக் கானல் வரிப் பாணியை, நெய்தல் நிலத் தெய்வம் வியப்படையவும் பேருலகோர் மனம் மகிழவும் யாழிசையோடு கலந்தமைந்த குரலாலே பாடத் தொடங்கினாள்.

ஆற்றுவரி

வேறு

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி. 1

பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகசைய நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி காவேரி. 2

வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழி யுய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி 3

காவிரியே! நின் பக்கலிலே வண்டுகள் மிகுந்து ஆரவாரிக்க மணிகளும் பூக்களுமாகிய ஆடையைப் போர்த்துக் கரிய கயலாகிய கண்ணால் விழித்து நோக்கியவாறு, பெண்மையால் ஒதுங்கி நடந்தாய்! நீவாழி! அவ்வாறு

நடந்தவெல்லாம் உன் கணவனுன சோழனுடைய திருந்திய செங்கோல் கோடாமல் இருக்கவே என அறிந்தேன்! வாழி! மலர் நிறைந்த காவிலே மயில் ஆடவும், விரும்பிக் குயில்கள் இசைபாடவும் அழகிய மலர்மாலைகள் உன் பக்கலிலே அசையவும் நடந்தாய்! நீ வாழி! அவ்வாறு நடந்தனவெல்லாம் நின் கணவனுன சோழனுடைய, அச்சமூட்டும் வேலின் திறம் என அறிந்தேன் வாழி!

அவன் வளநாடு மகவாகவும் நீ தாயாகவும் இருந்து, ஊழி முதலாகக் காக்கும் பேருதவியை விடாமல் இருப்பாய்! வாழி! அவ்வாறு விடாமல் காப்பதெல்லாம் ஆணை ஆழியாலே உலகை யாள்வானும் கதிரவன் மரபினனும் ஆகிய சோழன் அருளேயாகும்! வாழி!

சார்த்து வரி

வேறு

தீங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவல்
ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலும் மால்மகன்போல்
வருதிர் ஐய
வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம்
விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல் மீளும்
புகாரே எம்மூர். 1

[இது கையுறை மறுத்தல்.]

இனிய ஒளி வீசும் முகத்தாளின் சிவந்த வாயிலுள்ள அழகிய பற்களை ஒவ்வா எனினும் இம் முத்துக்களை வாங்கிக் கொள்க என்று அவற்றைக் கையுறையாகக் கொண்டு ஒவ்வொருநாளும் திருமாலின் மகனுன காமனைப்போல் வருகின்றீர்! ஐயனே எம் ஊராகிய புகார் எத் தன்மைத்தென்றல், விளங்கும் ஒளியையுடைய வெண் முத்துக்களைக் கடல் தன் அலைகளாலே கொணர்ந்து வீசிவிட்டு மணம் மிகும், கடற்கரையில் உள்ள பூமாலைகளை எடுத்துக் கொண்டு வணிகரைப்போல மீள்கின்ற சிறப்புடையது.

ஆதலால், முத்துக்கள் கையுறையாக ஏற்றுக் கொள்ளப் படா.

மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம்யாங்
கறிகோ மைய
நிறைமதியு மீனும் எனஅன்னம் நீள்புன்னை
அரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப லூதும்
புகாரே எம்மூர். 1

உண்டாரை வெல்நறா வூணொளியாப் பாக்கத்துள்
உறையொன் றின்றித்
தண்டா நோய் மாதர் தலைத்தருதி என்பதியாங்
கறிகோம் ஐய
வண்டால் திரையழிப்பக் கையான் மணல்முகந்து
மதிமேல் நீண்ட
புண்தோய்வல் நீர்மல்க மாதர் கடல்தூர்க்கும்
புகாரே எம்மூர். 2

[இவை யிரண்டும் தோழியிற் கூட்டங் கூடிப் பின்பு வந்து வரைவேன் என்றாற்குத் தோழி கூறியவை.]

ஐயனே! கொடிய வலைஞர் சேரியிலே தம்மைக் களவிலே கூடியவரைப் பிரிந்திருக்கும் மடவாரின் செங் கையிலுள்ள வளையல்கள் பிரிவுத் துயராலே கழன்று, பிறர் அறிய அலர் தூற்றுவதை ஏழையேமாகிய யாம் யாங்ஙனம் அறிவோம்? நீண்ட புன்னை மரத்தின் மலர்ச் சுமை தாங்காத கொம்பிலே அன்னப்பறவை ஏறியபோது, அந்த அன்னமும் புன்னை மலரும் வானத்திடையே முழு மதியும் விண்மீன்களும் போற் காணப்பட, வண்டுகள் இர வென எண்ணி ஆம்பல் அரும்புகளை ஊதி மலர்விக்க முயலும் புகாரே எம் ஊராகும்!

ஐயனே! தம்மை உண்டவரைக் கடுமை செய்யும் கள்ளாகிய ஊணை மறைக்காத வலைஞர் பாக்கத்திலே உள்ள மாதர்க்கு மருந்து பிறிதில்லாப் பிரிவுநோயைத் தலைக்கொளத் தருவாய் என்பதை யாம் எங்ஙனம் அறி

வோம்? சிறுமிகள் தாம் இழைத்த வண்டலைக் கடலலை அழித்தலினால், தம் மதி முகத்திலே நீண்ட ஊன் பொருந்திய வேலனைய கண்களிலிருந்து நீர் பெருகத் தம் கையிலே மணலை அள்ளிக் கடலைத் தூர்க்கும் புகாரே எம் ஊராகும்.

களவிலே கூடியிருக்கும் நேரத்தினும் பிரிந்திருக்கும் நேரம் மிகுதியாகையாற் பிரிவைப் பொறாத தலைவியின் மெலிவு மற்றோருக்கு 'இவள் காதலனைப் பிரிந்து வருந்துகின்றாள். களவுக் கூட்டம் உண்டுபோலும்' என அறிவித்துவிடும். எனவே, மணந்து கொண்டார் பிரிவின் துயரமும் பிறர் தூற்றும் அலரும் இல்லாமற் போம் என்று தோழி தலைவனுக்குக் கூறுகிறாள்.

திணை நிலைவரி

வேறு

புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி ஐம்பாலோய் வண்ணம் உணரேனால். 1

[இஃது, அறியேன் என்று வலிதாகச்சொல்லிக் குறை நயப்பித்தது.]

வளைந்து சுருண்ட கூந்தலை யுடையாய்! பூங்கொத்துக்கள் நிறைந்த பூங்கானலிலே தன்னைக்கூடிய துணையுடன் ஆடும் புள்ளிகளையுடைய நண்டையும் நோக்கி என்னையும் நோக்கித் தன் உணர்வு தன்னை விட்டு நீங்கச்சென்ற, ஒலிக்கும் அலைகளையுடைய கடல் துறைவனுடைய நிலையை யான் உணரேன்.

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால். 1

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்நீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ. 2

புள்ளியன்மான் தேர்ஆழி போன வழியெல்லாந்
தெள்ளுநீர் ஓதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீர் ஓதஞ் சிதைத்தாய்மற் றெம்மோடீங்கு
உள்ளாரோ டுள்ளாய் உணராய்மற் றென்செய்கோ. 3

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே. 4

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய் வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய்போல் தீர்ந்திலையால் வாழி கடலோதம். 5

[இவ்வைந்தும் காமம் மிக்க கழிபடர் கிளவி. தலைவி கூற்று]

அழகிய மெல்லிய கொத்துக்களையுடைய அரும்புகளே! அன்னங்களே தம்முடைய நல்லருளும் தாமும் தம் புரவித் தேரும்...எம்மை நினையாது நீங்கி விட்டார்! விட்டால் விடுக! நம்மை மறந்த தலைவரை நாம் மறக்க மாட்டோம்!

இனிய கள் பொருந்திய வாயையுடைய நெய்தலே! துன்பம் மிகும் இம்மாலைப் பொழுதிலே என் கண்களைப் போலத் துன்பத்தால் வருந்தாமல், கள்ளுண்ட மயக்கத்தாலே இனிமையாகத் துயில்கின்றாய்! நீ காணும் கனவிலே அக்கொடியவர் இக்கடற்கரையிலே வந்ததாகக் கண்டாயோ.?

பறவைகளைப் போல விரைந்தோடும் புரவிகள், பூட்டிய தேரின் கால்கள் சென்ற சுவட்டினையும், தெள்ளிய நீரையுடைய கடலே! நீ சிதைத்து விட்டனையே. என்

செய்வேன் ? நீயும் எம்மை நினையாத தலைவர் போலவே என் நிலையை நினைத்திலையாதலால் என் நோயை அறியாய்! என் செய்வேன்.

எம்மொடு பொருந்திய எம் காதலரின் ஆழிபூண்ட நீண்ட தேர் ஊர்ந்த வழி மறையக் கடலலைகள் அவ் வழி மேல் ஊர்கின்றன! தண்ணிய மலர்க்காவே! பெடையுடன் கூடியாடும் அன்னமே! மிகக் குளிர்ந்த துறையே! இச் செயல் தகாதென நீங்கள் கூறிலிர்!

கடலலையே எம்மொடு பொருந்திய எம் காதலரின் ஆழி பூண்ட நீண்டதேர் ஊர்ந்த வழி மறைய ஊர்ந்தனை! வாழி! இச்செயலால் நீ எம்முடன் உறவுபோலிருந்து உறவு விலக்கி நின்றாய்! வாழி!

மயங்கு திணை நிலை வரி

வேறு

நன்னித் திலத்தின் பூண்அ ணிந்து நலஞ்சார் பவளக்
கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந் திரையு லாவு
கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண் கொடியோன் எய்த
புதுப்புண்கள்
என்னைக் காணு வகைமறைத்தால் அன்னை காணின்
என்செய்கோ. 1

வாரித் தரள நகைசெய்து வண்செம் பவள
வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றில் திரையு லாவு
கடற்சேர்ப்ப
மாரிப் பீரத் தலர்வண்ண மடவாள் கொள்ளக்
கடவுள்வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தாரென் றன்னை அறியின்
என்செய்கோ. 2

புலவுற் றிரங்கி அதுநீங்கப் பொழிற்றண் டலையிற்
புகுந்துதிர்ந்த
கலவைச் செம்மல் மணங்கமழத் திரையு லாவு
கடற்சேர்ப்ப
பலவுற் றொருநோய் துணியாத படர்நோய் மடவாள்
தனியுழப்ப
அலவுற் றிரங்கி அறியாநோய் அன்னை அறியின்
என் செய்கோ. 3

[இவை மூன்றும் அலர் அறிவுறுத்தி வரைவு கடாவுதல்.]

நல்ல முத்துக்களைப் பூணுக அணிந்து, அழகிய பவளத்தைக் கலையாக உடுத்துச் செந்நெல்லையுடைய கழனிசூழ்ந்த பழனந்தொறும் அலைகள் உலாவும் கடல் துறைத் தலைவனே! புன்னை மரச் செறிவிலே, மீனக் கொடியோனான காமன் எய்த கணைகளால் மேலும் மேலும் உண்டாகும் புதுப் புண்களை நான் காணாதவாறு தலைவி மறைக்கின்றாள். இந்நிலையை அன்னை கண்டால் என் செய்வேன்?

முத்துக்களாலே நகைத்து வளவிய செம்பவளத் தாலே வாய் மலர்ந்து, வலைஞர் சேரியிலே வலைகள் உணங்கும் முன்றில்தோறும் அலைகள் உலாவும் கடல்துறைத் தலைவனே! மழைக்காலத்துப் பீர்க்க மலரின் வண்ணத்தைத் தலைவிகொள்ள, அதனைக் கண்ட அன்னை கடவுளரை வழிபட்டு இக்கொடுமை செய்தார் யார் என்றறியின் என் செய்வேன்?

புலால் நாற்றங்கொண்டு இரங்கி, அது விலகுமாறு பொழில்களிலும் தோட்டங்களிலும் புகுந்து அங்கு உதிர்ந்து கிடக்கும் கலவையாகிய பழம்பூவின் மணத்தில் அளைந்து மணம் கமழ உலாவுகின்ற அலையை உடைய கடல்துறைவனே! பல நோய்களிலும் பொருந்தியிருப்பதால் இந்நோய் இது எனத் துணிய முடியாமல் மிகுநோய் கண்ட தலைவி தனியே துன்புற, அலவுறலும் இரங்கலும் அறியாத அவளது நோயை அன்னை அறிந்தால் என் செய்வேன்!

வேறு

இளையிருள் பரந்ததுவே எற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ எரிசிந்தி வந்தவிம் மருண்மாலை. 1

கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் புரையுண்கண் எவ்வநீ ருகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம் மருள்மாலை. 2

பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூற நெடுங்கணீர் உகுத்தனவே
துறுமலர் அவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையாய் என்னுயிர்மேல் வந்தஇம் மருள்மாலை. 3

[இவைமூன்றும் பொழுதுகண்டு ஆற்றாளாகியதலைவி தோழிக் குரைத்தது.]

முன்னிருள் பரவியதே! ஞாயிறு மறைந் தனனே; நீக்குதற் கரிய வருத்தத்தால் வந்த நீரைக் கண்கள் பொழிந்து சிந்தினவே! முறுக்கவிழ்ந்த மலர்க் கூந்தலாய்! எவ்வளை நெகிழ அந்தி வானத்திலே செந்தீயைப் பொழிந்து வந்த இந்த மயக்கந்தரும் மாலைக்காலம் நம்மைப் பிரிந்தார் நாட்டினும் உளதாகுமோ?

ஞாயிறு மறைந்தனனே! கரிய இருள் பரவியதே! செவ்வி பொருந்திய மலரனைய, மையுண்ட கண்கள் துன்ப நீரைச் சொரிந்தனவே! புதிய மதியனைய முகத்தாய்! திங்களை யுமிழ்ந்து ஞாயிற்றை விழுங்கி வந்த இந்த மயக் கந்தரும் மாலைப்போது நம்மைப் பிரிந்து சென்றவர் நாட்டி னும் உளதாகுமோ?

பறவைகளின் பாட்டுக்கள் அடங்கினவே! ஞாயிறு மறைந்தனனே! நிறுத்தினாலும் நில்லாத பிரிவு நோய் மிகுதலால் நீண்டகண்கள் நீரைச் சொரிந்தனவே! மிகு மலர் விரிந்த கூந்தலாய்! கொடுந்தன்மை யுடையதாய் என்னுயிரைக் கொள்ள வந்த இந்த மயக்கந்தரும் மாலைப் போது நம்மைத் துறந்தவர் நாட்டிலும் உளதாகுமோ?

சாயல் வரி

வேறு

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்தல் அழித்துப் போனு ரொருவர்
பொய்தல் அழித்துப் போனு ரவர்நம்
மையல் மனம்விட் டகல்வா ரல்லர். 1

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்ரு ரொருவர்
நீநல் கென்றே நின்ரு ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர். 2

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்னல் நோக்கி நின்ரு ரொருவர்
நென்னல் நோக்கி நின்ரு ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர். 3

[இவை மூன்றும் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்; ஆற்றுவித்தற்பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்பட மொழிந்ததுவுமாம்.]

தாழை வேலியை யுடைய கழியினிடத்தே ஒருவர் வந்து எம் விளையாட்டை மறப்பித்துப் போயினர். அவர் நம் காதல் மனத்தைவிட்டு நீங்கமாட்டார்.

கானலை வேலியாக வுடைய கழியினிடத்தே ஒருவர் வந்து, 'நீ அருள்புரிவாய்' என்றே நின்றார். அவர் நம் மான் போலும் நோக்கத்தை மறவார்.

நேற்று, அன்னம் தன் துணையுடன் ஆடுவதைப் பார்த்து அதனையே நோக்கி நின்றார் ஒருவர். அவர் நம்மைப் பற்றிய சுணங்கு போலவே நம்மைப் பிரிந்து செல்லார்.

முகமில் வரி

வேறு

அடையல் குருகே அடையலெங் கானல்
அடையல் குருகே அடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே அடையலெங் கானல்.

இது காமம் மிக்க கழிபடர் கிளவி.

குருகே! எம் கானலில் வந்து அடையாதே! அடையாதே! குருகே! எம் கானலில் வந்து அடையாதே! அடையாதே! உடைந்து விழும் அலைகளையுடைய கடல் துறைத் தலைவனுக்கு எம் மிக்க பிரிவுநோயை உணர்த்தாய்! ஆதலால் குருகே! எம் கானலில் வந்து அடையாதே! அடையாதே!

இவ்வாறு அவன் பாடினாற் போலவே பாடிய மாதவி மேலும் தன் காந்தளனைய மெல் விரலாலே கைக்கிளை சேர் குரல் இனிய தொடைச் செவ்வழிப் பாலை இசையை எழுப்பி, அதற்கிசையப் பாடி யொரு பண்ணைப் பாடினாள்.

வேறு

நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாயால் மாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்
கொளைவல்லாய் என்னாவி கொள்வாழி மாலை. 1

பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளின் நீழல்
இருந்தேங்கி வாழ்வார் உயிர்ப்புறத்தாய் மாலை
உயிர்ப்புறத்தாய் நீயாகில் உள்ளாற்ரு வேந்தன்
எயிற்புறத்து வேந்தனோ டென்னாதி மாலை. 2

பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலைநீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை. 3

[இவை மூன்றும் மாலைப்பொழுது கண்டு தலைவி கூறியவை.]

மாலைப் பொழுதே! வலையர் விளரி கூறும் பாலையை இளி முதலாகக் கைக்கிளை ஆருவதாகக் கொள்ளும்படி வந்து தங்கினை! இவ்வாறு கொண்டதனால் நீ என் உயிரைக் கொள்ள வல்லாய், வாழ்வாயாக!

மாலைப்பொழுதே! பிரிந்து செல்கின்றவர் பரிவுடன் கூறிய மிக்க அருளின் நிழலிலே இருந்து ஏங்கி வாழ்கின்றவரின் உயிரை முற்றுகையிட்டாய்! அவ்வாறு முற்றுகையிட்டனையேல் உள்ளிருந்து ஆற்ற முடியாத வேந்தனை முற்றுகையிட்ட மதிற் புறத்து வேந்தனுக்கு நீ என்ன உறவு ஆகிறாய்?

மருளைத் தரும் மாலைப்பொழுதே! துன்பநோய் மிக, ஞாயிறு போய் மறைய, உலகமெங்கும் கண்ணை மூட நீ வந்தாய்! நீ இத்தகைய மாலையானால், அவர் என்னை மணந்தவராயின் உலகமே வறுமை கொண்டதாகும். வாழ்வாயாக!

> தீத்துழைஇ வந்தஇச் செல்லன் மருள்மாலை
> தூக்காது துணிந்தஇத் துயரெஞ்சு கிளவியால்
> பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
> மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும். 1

[இது வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகன் சிறைப் புறத்தானாகக் கூறியது.]

பெருமைமிக்க கடல் தெய்வமே! 'தீமை கலந்து வந்த துன்பந்தரும் இந்த மயக்கம் மிகும் மாலைப் பொழுதைப் பற்றிச் சிந்தியாமலே, துணிவைத்தரும் நன்மொழிகளாலே, (நின்னைப் பிரியேன் என்று தலைவன்) மலர் மணங்கமழும் கானலிலே கூறிய பொய்ச் சூளைப் பொறுத்துக் கொள்க! என்று நின் மலரடியை வணங்குகிறோம்.]

இவ்வாறு மாதவி பாடக் கேட்ட கோவலன், 'நான் கானல்வரி பாடினேன். அவளும் அப்படிப் பாடாமல், என்னை யொழிய வேறொரு பொருள்மேல் மனம் வைத்து, மாயப் பொய் பலவற்றைக் கூட்டும் மாயத்தாள் பாடினாள்' என, யாழிசைத்த பொருளின்மேல் மனம் வைத்துத் தன் ஊழ்வினை வந்து சிறிய தாகலின், முழுமதியனைய முகத்தாளாகிய மாதவியைத் தழுவியிருந்த கையை நெகிழ விட்டு, அவளுடன் புறப்படாமல், 'பொழுது கழிந்தது. ஆதலின் எழுமின்' என்று ஏவலாளர் சூழ்தரக்

கோவலன் பேரயினன். பின்னர், மாதவி, தாது விரியும் மலர்ப் பொழிலிலே, ஆரவாரித்துக் கொண்டிருந்த ஆயத்தினை அடக்கிச் செயலற்ற மனமுடன் காதலன் இன்றித் தனித்து வண்டியிலேறிப் 'பேருலகத்து வேந்தரெல்லாம் தலைவணங்கும், சூழி யானையையும் சுடர் வாளையும் உடைய சோழனின் ஒழுங்கான வெண் கொற்றக்குடை சக்கரவாளகிரியை உள்ளே அகப்படுத்திக்கொண்டு கவித்திடுக' என வாழ்த்தியவாறு சென்று தன் மனையை அடைந்தாள்.

——

8. வேனிற் காதை

இளவேனில் வந்தது

"வடக்கின்கண் திருமாலின் குன்றமாகிய வேங்கடமும் தெற்கின்கண் குமரிக்கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின் கண்ணும் கடலுமே எல்லையென்று வரையறைப் படுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலையுடைய நல்ல தமிழ் நாட்டிலே, மாடங்கள் நிறைந்த மதுரையும், பெருமைசான்ற உறையூரும், ஆரவாரம் மிக்க வஞ்சியும், மிகுதியான நீரையுடைய புகாரும் ஆகிய நான்கு நகரினுக்கும் அரசனுகித் தன் தேரும் புரவியும் யானையும் படையும் வைத்து வீற்றிருந்த புகழ் பொருந்திய சிறப்புடைய மாரனுகிய மன்னனுக்கு மனம் மகிழும் துணையாகிய இன்பத்தைத் தரும் இளவேனில் என்னும் இளவரசன் இப்போது இங்கே வந்து விட்டான்" என்று, வளம் பொருந்திய பொதிய மலையில் இருக்கும் அகத்தியன் பெற்ற இளங்காற்றுகிய தூதன் குயிலோனுக்குக் கூறினன். ஆகையால், 'வென்றி பொருந்திய மீனக் கொடியையுடைய காமன் சேனையாய் உள்ளோர் யாவரும், குற்றமற்ற அழகிய ஒப்பனையைக் கொள்ளுங்கள்' என்னும் பொருள் படும்படி, பூங்கொடிகள் நெருங்கிய பொழில் என்னும் பாசறையில் இருக்கும் அக் குயிலோன் என்கிற சின்னம் ஊதுவோன் தென்றல் தூதன் தனக்குப் பணித்த மொழியைச் சேனைக்குக் கூறினுன்.

மாதவியின் செயல்

கடலில் ஆடுதலாகிய விளையாட்டிலே மடல் அவிழும் கானல் விளையாட்டின்கண், கோவலனெடு ஊடுதலால், தனியாளாகத் தன் மனையை அடைந்த, கரியமலர் போலும் நீண்ட கண்களையுடைய

மாதவி, குயிலோன் கூறிய மொழியைக் கேட்டு விருப்ப முடையவளாய், அப் பருவத்திற்கேற்ப, வானுற வோங் கியமேல் நிலையிலே, வேனிலுக்குரியதாகக் கட்டப்பட்டு ஒரு பக்கத்தே யிருந்த நிலா முற்றத்தை அடைந்தாள். அங்கே அமர்ந்த மாணிழையாள், தென் கடலிலே தோன் றிய முத்தும் தென் மலையிலே பிறந்த சந்தனமும் தன் கையுறையாகவேனில் வேந்தனுக்கு இடுந் தன்மைய ஆதலின், கழிந்த பனிக் காலத்திலே குங்குமத்தால் அலங் கரிக்கப்பட்ட முலைமுற்றமாகிய பரப்பிலே (மார்பில்) அம் முத்தையும் சந்தனத்தையும் கையுறையாக ஏந்தினுள். (சந்தனத்தைப் பூசி முத்துமாலையை அணிந்தாள்.)

பின்னர் † ஒன்பது வகைப்பட்ட இருப்பினுள் முதற் கண் உளதாகிய பதுமாசனம் என்னும் ஆசனத்திருந்தாள்; கோவை கலங்கா மரபினையுடைய யாழைக் கையிலே வாங்கினுள்.

விருத்தி என்பது இருப்பு. ஓவிய நூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பல உள. அவற்றுள் இருத்தல்: திரிதரவு உடையனவும், திரிதரவு இல்லனவும் என இரு பகுதிய. திரிதரவுடையன: யானை, தேர், புரவி, பூனை முதலியன. திரிதரவு இல்லன ஒன்பது வகைப்படும். அவை: பது முகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் என்பவை. "ஒண்வினை ஓவியர் கண் ணிய விருத்தியுள்—தலையதன் உம்பர்த் தான் குறிக் கொண்ட—பாவை நோக்கத் தாரணங் கெய்தி' (பெருங் கதை—நருமதை சம்பந்தம்: 46-48) என்று பிறருங் கூறினுர்.

---

†இருபத்தொரு கோவை முதலாக நாலுற்கோவை யீருகக் கிடந்த கோவைகளுள் ஒன்பான் கோவையில் மேற்செம்பாலை தார' முதலென்பது. 'தலையின தாரம் செய்யுந் தாரம்' என்பதனுற் பெற்றும். ஒன்பான் கோவை 'தொண்டுபடுதிவவின் முண்டக நல்யாழ்' என ஆசிரியமாலை யுள்ளுங்கண்டு கொள்க— அரும்பதவுரை ஆசிரியர்.

நாடக நூலார், இவ்விருப்பை ஐம்பதென விரிவரையறையாற் கூறித் தொகை வரையறை கூறுவார், அவற்றை ஒன்பதின் அடக்கினர்; 'ஆதிப்பா விருத்தி ஐம்பதின் புலவோர்—ஓதிக் கொண்டன ஒன்பான்' விருத்தி என்று கூறியது காண்க.

அவற்றுள் தலைக்கண் விருத்தி பதுமாசனம்.

பதுமாசனத்திருந்து யாழைக் கையிலே வாங்கிய மாதவி வலக்கையைப் பதாகையாகக் கோட்டின் மிசையே வைத்து, இடக்கை நால் விரலால் மாடகத்தைத் தழுவிச் [1]செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்னும் வெவ்விய பகை நரம்பு நான்கும் புகாமல் நீக்கும் விரகை அறிந்து, [2]மயங்கா மரபினையுடைய பதினன்கு கோவையாகிய சகோட யாழை உழை குரலாகக் கைக்கிளை யிளுகக் கட்டி, [3]இணை, கிளை, பகை, நட்பு என்ற இந் நான்கினுள் இசை புணரும் குறிநிலையைப் பொருந்த நோக்கிக் குரல் முதலாக எடுத்து இளி குரலாக வாசித்தாள்.

---

1. செம்பகை—தாழ்ந்த இசை [இன்பமின்றி இசைத்தல்] ஆர்ப்பு—மாத்திரை கடந்த சுருதி [ஓங்க இசைத்தல்]. கூடம்—இசை நிறையாதது [தன் பகையாகிய ஆறு நரம்பின் இசையிற் குன்றித் தன் ஓசை மழுங்கல்]. அதிர்வு—நரம்பைச் சிதற உந்தல்.

2. குரல்முதல் ஏழினும் முதலில் தோன்றியது தாரம். 'தாரத்துள் தோன்றும் உழை ; உழையுள் தோன்றும்—ஒரும் குரல்; குரலினுள்தோன்றிச்—சேரும் இளியுள்-தோன்றும் துத்தத்துள் தோன்றும் விளரியுள்-கைக்கிளை தோன்றும் பிறப்பு' என்பதனல், தாரத்தில் முதற் பிறப்பாகிய உழை குரலாய்க் கைக்கிளை தாரமாகிய கோடிப்பாலை முதற் பிறக்கட்டி என்றபடி'

3. "இணை எனப்படுவ கீழும் மேலும்--அணையத் தோன்றும் அளவின என்ப." 'கிளை எனப்படுவ கிளக்குங் காலைக்--குரலே இளியே துத்தம் விளரி--கைக்கிளை என ஐந்தாகும் என்ப."

பகை—கூடம். "நின்ற நரம்பிற்கு ஆறும் மூன்றும்-சென்று பெற நிற்பது கூடம் ஆகும்."
நட்பைப் பற்றிய குறிப்பு இல்லை 'நட்பு--நாலு நரம்பு' என உள்ளது. அரும்பதவுரையாசிரியர் 'நட்பென்றது-நாலாம் நரம்பு' என்றெழுதி யுள்ளார்.

பின்னர், முன் கூறின வகையே உழை குரலாய கோடிப்பாலை அகநிலை மருதமாகவும், உழைகுரலாய்க் கைக்கிளை குரலாய மேற்செம்பாலை புறநிலை மருதமாக வும், குரல் குரலாய செம்பாலை அருகியன் மருதமாகவும், குரல்தாரமாய்த் தாரங்குரலாய விளரிப்பாலை பெருகியல் மருதமாகவும் இங்குச் சொல்லப்பட்ட சாதிப் பெரும் பண்ணையும் ஓசை இனிமை பெ.ற நோக்கி, வலிவு, மெலிவு, சமன் என்னும் மூவகைப்பட்ட சுருதியும் நிற்கும் நிலை யிலே நிறுத்தி முறைப்படி அத் தொழிலைக் கழித்துத் திறங்கட்குப் பிறப்பிடமாயுள்ள இந்தச் சாதிப் பெரும் பண்களுள் புறநிலை மருதப்பண்ணை வாசித்தலிலே மயங்கினுள்.

இவ்வாறு குரலிலும் யாழிலும் மயங்கிய மாதவியா கிய பூங்கொடி நறுமலர் வாளியினுலே பெருநிலம் முழுதை யும் ஆண்ட ஒப்பில்லாத தனிச் செங்கோலையுடைய ஒருவ னுகிய காமன் ஆணையினுலே, ஒரு திசை மட்டும் அன்றி, உலகமெங்கும் எதிர்கொண்டு தொழுது வணங்கப்படும் அவன் திருமுகத்தைப் போகவிடக் கடமைப்பட்டுள் ளோம் என்னும் நினைவினுலே பிறந்த செவ்வியை உடைய வளானுள். அதனுல் சண்பகமும் மாதவியும் பச்சிலையும் பித்திகையும் வெண்மலராகிய மல்லிகையும் வெட்டிவேரும் செங்கழுநீரும் ஆகிய இவற்ருெடு நெருங்கத் தொடுக் கப்பட்ட மலரின் மணம் மாறுபடும் செவ்வியை யுடைய மாலையின் இடையிலே தொடுத்த செவ்வி எதிர்கொள்ள முதிர்ந்த தாழை மலரினது முடங்கிய வெண்தோட்டிலே, அதற்கு அயலில் உள்ள பித்திகையினது வளமிகும் அரும்பாகிய எழுத்தாணியைக் கையில் எடுத்து, அதனைச் செம்பஞ்சின் குழம்பிலே தோய்த்து உதறி எழுதத் தொடங்கினுள்.

"உலகிலே மிக்கிருக்கும் பல்லுயிர்களையும் தாம் மகிழும் துணையுடன் கூட்டுவிக்கும் இனிய இளவேனில் என்பவன் இளவரசன். ஆதலால், ஒழுங்கு றச் செய்யான்.

அவன் அல்லாமல், அந்திப்பொழுதின்கண்ணே தோன்று கின்ற காமக் கலக்கத்தின் மேலே வந்து தோன்றிய திங்க ளாகிய செல்வனும் இன்று உண்டான பண்பேயன்றிப் பிறப்பினும் செவ்வியன் அல்லன். ஆதலின் கூடியோர் கால இடையீடுபடினும், பிரிந்தோர் தம்துணையை மறந் தாலும் தன் மலர்க்கணையாலே இவர்களுடைய நல்லுயி ரைக் கொள்ளுதல் அவனுக்குப் புதிய நிகழ்ச்சியன்று. இதனை அறிமின்!"

இவ்வாறு பொருள் அமைத்து, அறுபத்துநான்கு கலைகளும், வழிபட்டுப் புகழ்ந்து பின்வர, அவற்றுள் பண் களும் திறங்களுமாகிய அவை புறங் கூறப்படும் நாவி னுலே, கட்டவிழ்ந்தே ஒப்பற்ற காமத்தை யூட்டும், முற் ருத மழலைச் சொல்லுடன் அப்பாசுரத்தைப் பேசிப் பேசி எழுதி முடித்தாள். பின்னர்ப் பசந்த மெய்யுடன் துன்பந் தரும் மாலைக்காலத்தே வசந்தமாலையை வருகளனக் கூப் பிட்டுத் தூயமலர் மாலையிலே எழுதிய பொருளை யெல்லாம் கோவலன் ஏற்கும் முறையிலே சொல்லி இப்பொழுதே இங்கே கொணர்வாயாக என்ருள்.

கோவலன் செயல்

அவள் மாலையை வாங்கிய, வேலனைய செவ்வரி பரந்த கண்களையுடைய வசந்தமாலை சென்று எண்வகைக் கூலங்களும் விற்கப்பெறும் தெரு விலே கோவலனிடம் அளித்தாள்.

கோவலன் வசந்தமாலையை நோக்கிக் கூறுகிருன்:—

சிறிய கரிய புருவமாகிய வில்லும், கண்களாகிய் குவளையும், மூக்காகிய குமிழும், இதழாகிய கொவ்வையும் ஆகிய இவற்றை உறுப்பாகக் கொண்ட திலகத்தினையும் கூந்தலையுமுடைய மாதர் ஒளிமிகு முகத்தின் கண் மதர்த்த நோக்கத்துடன் என்மேற் காதலையுடையாள்

போலத் தோன்றி முதற்கண் எதிர்முகமாக நின்று நடித்த [1]'கண்கூடு வரி' என்னும் கோலமும்,

புயலைச் சுமந்து வருந்திக் கதிரைப் பொழியும் திங்களிடத்தே, கயல்கள் உலாவித் திரிகின்ற அழகிய செவ்வியுடன், பாகைப் பொதிந்த பவளத்தைத் திறந்து, ஒளியைத் தருகின்ற முத்தைப் போன்ற முறுவலின் அழகைக் காட்டி, வருக என வந்து' போக எனப் போகிய கரிய நெடிய கண்ணுளுடைய [2]காண்வரி என்னும் கோலமும்,

யான் ஊடிப்பிரிந்த போதில் அந்திமாலை வந்ததாக, அதற்குப் பிரிவை யாற்றுமல் வருந்தி, என் மனநோய் மிகும் வறுமையைத் தான் அறிந்து, கிளிபோன்ற மொழியையும் இளவன்னம் போன்ற நடையையும் களித்த மயில்போலும் சாயலையும் மறைத்தவளாய்ப், போர் வேலனைய கண்களையுடைய தன் பணிப்பெண்களின் கோலத்தைக் கொண்டு தனியே வந்து நின்று நடித்த [3] உள்வரி என்னும் கோலமும்,

[4]அணிகலன்களை அணிந்தாலும் தாங்காத யிடையினையுடையாள், சிலம்பு வாய்விட்டுப் புலம்பவும் மேகலை வாய்விட்டு ஆர்க்கவும் காதல் நோக்கமுடையாள் போல வந்து, தன்னைப் பிரிதலால் தன்மை வேறுபட்ட என் வறியநிலையறிந்தும் என்னைத் தழுவாமற் புறத்தே நின்று நடித்த புறவரி என்னும் கோலமும்,

---

1. 'கண்கூடென்பது கருதுங்காலை–இசைப்ப வாராது தானே வந்து–தலைப்பெய்து நிற்கும் தன்மைத் தென்ப.' கண்கூடு காட்சி; ஒருவர் கூட்டலின்றித் தானே வந்து நிற்கும் நிலைமை.

2. 'காண்வரி என்பது காணுங்காலை–வந்த பின்னர் மனமகிழ்வுறுவன-தந்து நீங்கும் தன்மைய தாகும்'

3. 'உள்வரி என்ப துணர்த்துங் காலை–மண்டல மாக்கள் பிறிதோருருவம்–கொண்டும் கொள்ளாதும் ஆடுதற் குரித்தே' உள்வரி: வேற்றுருக் கொண்டு நடித்தல். மண்டல மாக்கள் அரசர். பாண்டவர் பிறிதுருவங் கொண்டதும் அதுவே.

4. 'புறவரி என்பது புணர்க்குங்காலை–இசைப்ப வந்து தலைவன் முற்படாது–புறத்து நின்றுடி விடைபெறு வதுவே.' புறவரியாவது தலைவனுடனணைபாது புறத்தே நின்று விளையாடுவது.

[1]அழகிய நுதலாள் கோதையும் குழலும் தாது பொருந்திய அளகமும் ஒற்றை வடமான முத்துமாலையும் அழகிய முலைகளும் மின்னனைய இடையை வருத்தத் தோன்றிப் பணி மகளிர் மொழிகேட்டு மறுமொழி கூறப் புணர்ச்சியை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற என்னுடைய புலவி மொழியைக் கேட்டு, அதனை இருபுற மொழிப் பொருளாகக் கொண்டு தளர்ந்த சாயலுடனும் அழகிய மென்மையான, கூந்தலுடனும் புலந்து போகின்றாள் போல நடித்துப்போன கிளர்வரி என்னும் கோலமும்,

[2]‘யான் பிரிந்துறையும் பொழுதில், பிரிவாற்றாது வருந்தினவள் போலப் பாவித்து, என்னுடைய நெருங்கிய கிளையினர்க்குத் தனது மிக்க துயரத்தைத் தன் மயக்கத்தினாலே தேர்ந்து தேர்ந்து சொல்பவள் போல நடித்த தேர்ச்சி வரி என்னும் கோலமும்,

[3]வண்டுகள் முரன்று மலர்விக்கும் மலர்மாலையுடையாள் மாலைக் காலத்திலே மயங்கிக் கண்டவரிடத்திலெல்லாம் தன் காம நோயைக் கூறி நடித்த காட்சி வரி என்னும் கோலமும்,

[4]அயலவர் முன்னர்த் தான் மேன்மேலும் மயங்கிய மயக்கத்தை அவர்கள் எடுத்துத் தீர்த்த நடிப்பாகிய எடுத்துக் கோள் வரி என்னும் கோலமும்,

---

1. ‘கிளர்வரி என்பது கிளக்குங் காலை-ஒருவர் உய்ப்பத் தோன்றி அவர்வாய்—இருபுற மொழிப் பொருன் கேட்டுநிற் பதுவே’ கிளர்வரி என்பது நடுநின்றார் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது
2. ‘கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்—பட்டதும் உற்றதும் நினைஇ யிருந்து—தேர்ச்சியோடுரைப்பது தேர்ச்சி வரியாகும்’
3. காட்சி வரி என்பது கருதுங்காலைக்—கெட்ட மாக்கள் கிளைகண் டவர் முனர்ப்—பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே’ காட்சி வரி—தன் வருத்தத்தைப் பலரும் காணும்படி நடித்தல்.
4. ‘எடுத்துக் கோளை மிசைக்குங் காலை—அடுத்தடுத் தழிந்து மாழ்கி அயலவர்—எடுத்துக்கோள் புரிந்தது எடுத்துக் கோளே’ எடுத்துக் கோள்வரி யென்றது தான் செயலற்று வீழ்ந்தாளாக வீழ்ந்து, பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல்.

ஆயிழையாய் ! அவள் ஆடல் மகளாதலின் அப்பைந் தொடியாட்கு இங்ஙனம் நடித்தல் தகுதியாயிற்று.

இவ்வாறு கூறி அழகினையுடைய பொன் தோட்டை அணிந்த திருமுகத்தையுடைய ஆயிழையாள் எழுதிய தாழைமடலில் உள்ள திருமுகத்தைக் கோவலன் மறுத்தான். அதற்கு வருந்தி வாடிய உள்ளத்துடன் வசந்த மாலை மாதவியிடம் விரைந்து சென்றுரைத்தாள்.

மாதவியின் கவலை

அதனைக் கேட்ட கரியமலர் போலும் கண்களை யுடைய மாதவி, 'இன்னும் இம் மாலைப் பொழுதினுள் வருவார். வாராராயினும் காலைப்பொழுதிலே இங்கே அவரைக் காண்போம்' என்று கூறினாள். எனினும், வாராரென உள்ளம் உணர்ந்ததால், தான் இருந்த மலர்ப் பாயலின் கண்ணே செயலற்ற நெஞ்சுடன் வீழ்ந்து அப் படுக்கையிலே கண்ணிமை பொருந்தாமற் கிடந்தாள்.

வெண்பா

க. செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தார் அசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனல் வந்ததால் என்னுங்கொல் இன்று
வளவேனற் கண்ணி மனம்.

2. ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்ஆணை
கூடுமின் என்று குயில் சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்.

——

9. கனாத்திறம் உரைத்த காதை

தேவந்தி

கதிரவன் மறைந்தான். கொடியிடை மகளிர் பரவிய இல்லமெங்கும் அம்மாலையிலே அரும்பின் முறுக்கவிழ்ந்த ஒளிமிகும் முல்லை மலரை நெல்லுடன் தூவி மனைவாழ் தெய்வத்தை வணங்கி, மணி விளக்கை மைவிளக்குடன் ஏற்றினர். பின்னர், இரவிலே தம் கணவர் மார்பைத் தம் முலையாற் பொருந்துதற்கேற்ற மாலைக் கோலங் கொண்டனர்.

அப்போது தேவந்தியென்னும் பார்ப்பனப் பெண்ணொருத்தி கண்ணகியிடம் வந்து, 'கணவனைப் பெறுவாயாக' என்று வாழ்த்தினாள்.

அந்தத் தேவந்தியின் வரலாறு:

முன்னொருநாள் மாலதி என்னும் ஒரு பார்ப்பனி தன் மாற்றாள் குழந்தைக்குப் பசுவின் பாலைச் சங்கால் ஊட்டிய போது, பால் விக்கியதால், அவள் கையிலேயே குழந்தை மரித்தது. 'என் கணவனும் மாற்றாளும் என் மேல் அடாப்பழி கூறுவரே அன்றி ஏற்பன கூறார். இதற்கு என்செய்வேன்!' என்றேங்கிய அவள் மகவைக் கையில் ஏந்திக் கற்பக மரம் இருக்கும் கோயில் (சாந்தி கரைக் கோயில்) வெள்ளையானைக் கோயில், அழகிய பல தேவர் கோயில், கீழைத் திசையில் தோன்றுகின்ற கதிரவன் கோயில், திருக்கயிலைக் கோயில், முருகவேள் கோயில், வச்சிரப்படைக் கோயில், புறம்பணையானாகிய சாதவாகனன் கோயில், அருகன் கோயில், திங்கள் கோயில் ஆகிய கோயில்களெங்கும் போய்க் கைகுவித்தாள்: 'தெய்வங்களே! எம்முடைய இக்கொடிய வருத்தத்தை நீக்குமின்' என இரந்தாள். ஒரு தெய்வமும்

தீராமையின் அங்கெங்கும் நில்லாமல் வந்து பாசண்ட நூல்களையுணர்ந்த சாத்தன் கோயிலை அடைந்து அவனை வேண்டி வரங்கிடந்தாள்.

அப்போது, சுடுகாட்டுக் கோயிலிலே இருக்கும்; இடு பிணங்களைத் தின்னும் இடாகினிப் பேய் பழிப்புக்கிட மான வடிவுடைய ஓர் இளம் பெண்ணுக மிகுந்த இருள் நேரத்திலே மாலதியிடம் வந்து, 'குற்றமில்லாத வளே! முற் பிறப்பிலே புண்ணியம் புரியாத வர்க்குத் தெய்வம் வரங்கொடுப்பதில்லை. இது பொய்ம் மொழியன்று; மெய்ம்மொழியே' என்று கூறினுள். பிறகு, 'உன் கையிலிருக்கும் இப்பிணத்தைக் கொடு; பார்க்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே அப் பிணத்தைப் பிடுங்கித் தன் மடியிலே (வயிற்றில்) வைத் துக் கொண்டாள்; (விழுங்கிவிட்டாள்).

இக்கொடுமையைக் கண்ட மாலதி, இடியொலி கேட்ட மயில்போல ஏங்கியழுதாள். அவள் நிலைக்கிரங் கிய சாத்தன், 'அன்னையே! நீ ஏங்கி அழாதே. நீ செல்லும் வழியிலே பொதும்பரிடத்தே உயிருடன் கிடக்கின்ற குழ வியைக் காண்பாய்' என்று தான் அக்குழவியாக அப் பொதும்பரிடத்தே கிடந்தான். ஏங்கியழுதுகொண்டிருந்த அவள் அந்த மாயக் குழவியை ஐயங்கொள்ளாமல் தன் குழவியென்றே எண்ணி எடுத்து வயிற்றிலே அணைத்துக் கொண்டுபோய்த் தன் மாற்ருள் கையிலே கொடுத்தாள்.

பின்னர், அத்தெய்வமாகிய சாத்தன், இருமரபினும் தூயவனுன மறையவன் பின் செல்லும் மகனுகி, உயர்ந்த பொருளையுடைய கல்வி கேள்வித்துறையெலாம் முற்ற வுணர்ந்து தெளிந்து, தந்தையும் தாயும் இறந்த பிறகு, அவர்களுக்கு நீர்க்கடனெல்லாம் செய்து, தன்தாயத்தாரு டன் வழக்குரைத்து வென்று, தான் மணந்த தேவந்தியென் பாளுடன் எட்டியாண்டு கூடி வாழ்ந்தான். இங்ஙன்ம் தன் மனைவிக்கு வேண்டும் பொருளெலாம் தேடி வைத்த பிறகு, ஒருநாள் இவள் மலரனைய மையுண்ட கண்கள்

பொறுப்பனவாக என ஆற்றலளித்துத் தன் தெய்வத் தன்மை பொருந்திய மூவாத இளங்கோலத்தைக் காட்டினுன். பின் அவளைத் தேற்றி, அவள் விருப்பத்தின்படி 'எம் கோயிலுக்கு வருக' எனக் கூறி, மற்ருேரிடம் தான் நீராடும் பொருட்டு உலகமெங்கும் உள்ள நீர்த் துறைகளை நாடிப் போவதாகக் கூறி மறைந்தான்.

பின்னர் அத்தாய மொழியினளான தேவந்தி, 'என் உள்ளத்தைப் பிணித்த கணவன் நீர்த்துறைகளெங்கும் போய் நீராடுவேன் என்றுரைத்து என்னைவிட்டகன்ருன். மீண்டும் இவ்விடத்தே அவன் மனந் திரும்புமாறு செய்து அழைத்துத் தருவாய், என்று சாத்தனை வேண்டுவதாக ஒரு பெயரிட்டுக்கொண்டு, அவன் கோயிலை வழிபடுவதை நாடொறும் கடனுகக் கொண்டிருந்தாள்.

அவள், கண்ணகியாகிய நல்லாளுக்கு நேர்ந்த குறையை எண்ணிய உள்ளத்திலே வருத்தமுடையவளாய் அக்கோயிலுக்குப் போய் அறுகையும் சிறு பூவையும் நெல்லையுந் தூவி வழிபட்டுக் 'கண்ணகி தன் கணவனை அடைய அருள்க' என்று வேண்டினுள். பிறகு, கண்ணகியை அடைந்து, 'கணவனை அடைவாய்' என்று வாழ்த்தினுள்.

கண்ணகி தேவந்தி உரையாடல்

அப்பொழுது கண்ணகி கூறுவாள் :

"செறிந்த வளையலையுடையவளே! நீ வாழ்த்தியவாறு கணவனை அடைவேன். ஆயினும், என் நெஞ்சம் ஐயுறுகின்றது. அது எதனுல் எனின், நேற்றிரவு கனவின்கண் என் கணவர் என்னைக் கையைப்பற்றி அழைத்துச் சென்ருர். யாங்கள் ஒருபெரிய நகரினுட் புகுந்தோம். அந்நகரிலே எங்களுக்குத் தகாததொரு பொய்யுரையை அவ்வூரார் இடுதேள் இடுமாறுபோல என்மேல் இட்டனர். அங்ஙனம் அவரால் இடப்பட்ட அப்பொய்ம்மையாலே கோவலனுருக்கு ஒரு தீங்கு உற்றதென்று பிறர் சொல்லக் கேட்டேன். அதுபொருமல், அவ்வூர் அரசன் முன்னர்

இதுவரை செல்லாதேன் சென்று, வழக்குரைத்தறியாதேன் வழக்கும் உரைத்தேன். அதனுல், அவ்வரசனுக்கும் அவ் வூர்க்கும் ஒரு தீங்கு நேர்ந்தது. அவை தீக்கனுவாதலான் நினக்குக் கூறேன். இவ்வாறு தீவினையுற்ற என்னேடு பொருந்திய மிக்கோனுடன் யான் அடைந்த நன்னிலைகளை நீ கேட்டாயாயின் நினக்கு நகைப்பை உண்டாக்கும்.''

இவ்வாறு கண்ணகி கூறக்கேட்ட தேவந்தி, ''பொற் ருெடியே! கனவை நினைத்துக் கலக்கமுறல் வேண்டாம்: நீ அவனுல் வெறுக்கப்பட்டவளுமல்லை. நின் கணவன் பொருட்டு இயற்றவேண்டிய ஒரு நோன்பை முற்பிறப் பிலே விட்டுவிட்டாய். அதனுல் உண்டான தீங்கு மிகுதியாகும். அத்தீங்கும் கெடுவதாக! காவிரி தன் நீரைக் கொண்டு சென்று கடலுடன் மோதி அலைக்கும் சங்கமுகத்தின் அயலிலே உள்ள, மலரிதழ் அவிழும் நெய்தற் கானலிலே இரண்டு குளங்கள் உள்ளன. அவற் றிற்குச் சோமகுண்டம் சூரியகுண்டம் என்று பெயர். அவற்றின் துறையிலே முழுகிச் சென்று காமவேளின் கோயிலை அடைந்து அவனைத் தொழுதவர்கள் இப்பிறப் பிலுள்ள நாளெல்லாம் தம் கணவரோடு பிரிவின்றியிருந்து இவ்வுலக இன்பத்தை நுகர்வார்கள்; மறுமையிலும் போகபூமியிலே போய்ப் பிறந்து, கணவருடன் பிரி வின்றி மூன்று பல்லங்காலம் இன்பம் துய்ப்பர். ஆகையால் அவற்றில் ஒருபோது ஆடக்கடவோம்'' என்றுரைத்தாள்.

அதைக் கேட்ட கண்ணகி, 'அவ்வாறு முழுகித் தெய்வந் தொழுதல் எமக்குத் தகுதியன்று' என்ருள்.

கோவலனுங் கண்ணகியும்

இவ்வாறு இவர்கள் உரையாடிக்கொண்டிருந்த மாலை நேரத்தில்—கொடியிடை மகளிர் தம் கணவரைக் கூடுவ தற்குக் கோலங்கொள்ளும் நேரத்தில்—கோவலன் வந்து தன் மனையின் வாயிலில் நின்ருன். அவனைக் கண்ட சிற் றேவற் பெண்ணெருத்தி, 'யாரோ நம் வாயிலிற் காத்திருக்

கிறார்கள்' என்று கூறிச் சிறிது நெருங்கிச் சென்று பார்த்து, 'நம் கோவலர்!' என வியந்து வந்து கூறினாள்.

கோவலன் உள்ளே வந்து பெருமையமைந்த பள்ளியிடத்தே அமர்ந்தான். கண்ணகியின் உடல் மெலிவையும் மன வருத்தத்தையும் கண்டு, 'எல்லாப் பொருளினும் பொய்யை மெய்யாகப் பொருந்துவிக்கும் வஞ்சகியுடன் கூடி ஆடிய ஒழுக்கத்தினாலே, நம் முன்னோர் தேடித்தந்த மிகுந்த குன்றனைய செல்வமெல்லாவற்றையும் அவள் பொருட்டுத் தொலைத்தேன். அதனால், இப்போதுண்டான வறுமை எனக்கு நாணத்தைத் தருகிறது,'' என்றான்.

இங்ஙனம் அவன் தன்னைப் போற்றி வறுமையைப் பற்றிக் கூறியதைக்கேட்ட கண்ணகி, மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமையால் தளர்ந்து கூறினனென்று கருதி, ஒளி பொருந்திய முகத்தே நலம் பொருந்திய புன்முறுவலைக் காட்டி, 'இன்னும் ஓர் இணைச் சிலம்புகள் உள. அவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றாள்.

கோவலன் அவள் கூறியதற்கு மனம் வருந்தி, ''நல்லணியுடையாய்! இதழ் விரியும் மலர்க் கோதையாய்! கேள், நீ கூறிய இச்சிலம்பை நான் வாணிக முதலாகக் கொண்டு, முன்னர் அழித்த அணிகலன்களுடன், போக்கிய பொருளையும் திரட்ட விரும்பினேன். அதற்காக, விரிந்த புகழுடைய மாடங்கள் நிறைந்த மதுரைக்குச் செல்ல வேண்டும். என்னொடு 'நீயும் புறப்படுவாயாக!' என்று உரைத்து, முற்பிறப்பிலே தான் செய்த தீவினை நெடுங்காலம் நின்று நெஞ்சை ஒருப்படுத்தலால், அவ்வினையின் ஏவலைக் கொண்டவனாகி, இரவின் இருளைக் கதிரவன் போக்குவதற்கு முன், அவ்விடத்தினின்றும் புறப்பட்டான்.

———

வெண்பா

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க—மூதை

வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

[கண்ணகி கண்ட கனவு மாதவியின் வேண்டுகோளை வீணாக்கவும், முந்தைய தீவினை கடைக் கூட்டவும், இரவின் இருளைக் கதிரவன் போக்குமுன் வழிக்கொண்டான் கோவலன்.]

10. நாடுகாண் காதை

புகாரை விட்டு நீங்குதல்

* உலகிற்குக் கண்ணாகிய கதிரவன் வானில் தோன்றி விளங்காத வைகறையாகிய யாமத்திலே, மீன்களுடன் அழகு பெற்றொழுகும் வெண்திங்கள் வானிலிருந்து நீங்கிய பின்னர்க் கரிய இருள் இறுதியாக நின்ற கங்குற் பொழுதிலே, முன்செய்த தீவினை முறையாக வந்து கோவலன் மனத்தைத் தூண்டியது. அதனால் அவன், கண்ணகி அன்பொடு வளர்த்ததனால் ஏழகமாகிய ஆட்டுக் கடாவும் எகினமாகிய கவரிமானும் தூய மயிரினையுடைய அன்னமும் இனமல்லவாயினும் ஒன்றற்கொன்று துணையாகத் திரிந்து கொண்டிருக்கின்ற, தாளொடு செய்யப் பெற்ற பெருமை பொருந்திய சிறப்பினையுடைய மிகவும் பெரிய கதவையுடைய இடைகழியைக் கண்ணகியுடன் கடந்துசென்றான். ஆங்கே பாம்பணையின்மீது அறிதுயில் புரியும் மணிவண்ணன் என்னும் திருப்பெயரை யுடைய திருமால் கோயிலை வலஞ்செய்தான். பின்னர், ஓங்கிய ஐந்து பனையினையும் பசுமையான இலைகளையும் உடைய போதி மரத்தின் நிழலிலே எழுந்தருளிய புத்தனுடைய மொழியாகிய ஆகமத்தை வான்வழிச் செல்லும் சாரணர்

---

* இங்குக் கூறிய காலம் சித்திரைத் திங்களிலே சோதி நாள். திதி மூன்றாம் பக்கம். வாரம்–ஞாயிறு. இத் திங்கள் இருபத்தெட்டில் சித்திரையும் பூரணையும் கூடிய சனி வாரத்திலே கொடியேற்றி, 'நாலேழ் நாளினும்' என்பதனால் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து, கொடியிறக்கி' வைகாசி இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன்றாம் பக்கமும் சோம வாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி, ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதில் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்தில் நிலவுபட்ட அந்தரத் திருளிலே என்றவாறு. அது பூருவ பக்கம் என்பது தோன்றக்' 'காரிருள் நின்ற கடை நாட் கங்குல்' என்றார். 'குண முதல் தோன்றிய வர்ரிருண் மதியில்—தேய்வனக் கெடுக நின் தெவ்வர் ஆக்கம்' என இருண் மதி யென்றார் மதுரைக் காஞ்சி யுள்ளும்———அடியார்க்கு நல்லார்.

மறைய இருந்து ஓதி, யாவருக்கும் பொருள் விளங்க உணர்த்தும் சிறப்பினையுடையனவும் இந்திரனால் அமைக்கப்பட்டனவும் ஆகிய விகாரங்கள் ஏழினையும் அடைவே கண்டு வணங்கிச் சென்றான்.

ஊனாகிய ஊணைத் துறந்து, வாய்மையாகிய நோன்பொடு பொருந்தி, அழுக்காறு அவா முதலியவற்றைக் கைவிட்டு, அறநூல் முதலியவற்றை அறிந்து, ஐம்புலனையும் அடக்கிய கோட்பாட்டை உடையவராய், உண்மை வகை உணர்ந்த பெரியோர் திரண்ட அருகன் கோயிலில் அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேட்டிகள் நிலைபெற்ற ஐந்து சந்தியும் கூடிவந்து கலந்திருக்கிற மிகப்பெரிய மன்றிலே, பொன் மலர் நிறைந்த அசோகினது அழகு விளங்கும் நிழலிலே, விழா அயனாதிகளிலும் விழவுகளிலும் வானசாரிகள் வரத் தகும் என்று, சாவகர் எல்லோரும் கூடியிட்ட விளங்கும் ஒளியையுடைய சிலாவட்டத்தைக் கோவலனும் கண்ணகியும் தொழுது வலங்கொண்டனர். மலையிலே தோன்றி வரும் பேரியாறு போல உலகினர் போக்குவரவு செய்தற்குக் கோபுரத்துடன் அமைந்த ஊர்வாயிலை அக்காலத்துப் போவாருடன் கலந்து கடந்து, அரசனுக்குக் காமன் வேனிலையும் தென்றலையும் திறையாக இடுவதற்குப் பொருந்திய பல மலர்கள் நிறைந்த நல்ல மரங்களின் நிழலையுடைய * இலவந்திகையின் மதிற் புறத்தை அடைந்தனர். இருமருங்கும் கவிந்த பொழில்களைக் கொண்ட புது நீராடச் செல்லும் பெரிய வழியை யுடைய காவிரிக் கரையில் திருமுகத்துறை கழிகின்ற வாயிலையும் கடந்தனர்.

பின்னர், மேலைத் திசையை நோக்கிச் சென்று வளவிய புனலையுடைய காவிரியின் பெரிய வடகரைப் பொழிலூடே நுழைந்து சென்று, ஒருகாவதம் போய்க் கவுந்தியடிகள் இருக்கும் பள்ளிக்குப் பக்கத்தே, அழகினை

* இலவந்திகை, அரசனும் அவனைச் சார்ந்தோரும் பயிலும் மலர்ப் பொழில்.

யுடைய செறிந்த இளமரக்காவிலே தங்கினர். அப்போது, நறுமணம் பொருந்திய ஐவகைக் கூந்தலையுடையாள், இனி இஃது ஒடியும் எனத்தக்கதாகிய கொடி போலும் இடையும் அடியும் வருந்தி, இளைப்பினாலே மேல் மூச்சு வாங்கி, முற்றாத மழலை மொழியாலே கூரிய முறுவல் தோன்ற, 'மதுரை மூதூர்' யாது என வினவினள்.

அதனைக் கேட்ட கோவலன், 'மணமிகுங் கூந்தலை யுடையாய்! நம்முடைய பெரிய நாட்டைக் கடந்து ஆறைந்து காவதத்திலே மிகவும் அருகில் மதுரை மூதூர் உள்ளது!' என்றுரைத்து வருத்த மிகுதியால் நகைத்தான். பிறகு, தேன்போலும் மொழியையுடைய கண்ணகி யுடன் சென்று தவவேலிக் கண் இருந்த கவுந்தியடிகளைக் கண்டு அடியிலே வணங்கினர்.

கவுந்தியடிகளின் துணை:

அவர்களைக் கண்ட கவுந்தியடிகள் 'அழகும், குடிப்பிறப்பும், ஒழுக்கமும், இறைவன் நூலிற் கூறிய நோன்பு தவறாமையும் என்னும் இவற்றையெல்லாம் உறுதியாகவுடைய நீங்கள் தீவினை யாளரைப் போல நும் இருப்பிடத்தைவிட்டு வருதற்கு நீங்கள் கருதியது யாது?' என்று வினவினர்.

கோவலன், 'மிக்க தவமுடையீர்! இவ்வினாவிற்கு விடைகூற முடியாதவனாக இருக்கின்றேன். என் எண்ணம் மதுரை மூதூரிலே தங்கி, யான் நினைத்த பொருளைத் தேடவேண்டும் என விரும்புகிறது' என்றான்.

கவுந்தியடிகள், 'அங்ஙனமாயின், இவளுடைய பாடகமணிந்த சிற்றடிகள் பருக்கைக் கற்களாகிய பகையை வெல்லமாட்டா. ஆகையால், நீவிர் காட்டை இடையிட்ட நாட்டைக் கடந்து செல்ல இவள் செவ்வி தக்கதன்று. இனி வருவதை அறிவார் யார்? மேலும் குடிப்பிறப்பிற்கும் இவளை உடன்கொண்டு செல்லுதல் ஏற்றதன்று' என்றார்.

அதற்குக் கோவலன் மறுமொழி கொடாமலும் மதுரை செல்லுதலே நோக்கமாக இருத்தலைக் கண்ட கவுந்தியடிகள், 'இங்ஙனம் செல்வது தகாதெனவும் போதலிலேயே கருத்துக் கொண்டீர். மறவுரைகளை விடுத்த குற்றமற்ற பொருட்பயனையுடைய பெரியோரின் நூலைக்கேட்டு, அந்நாலின் வழியே அறிவனை வணங்கு தற்குத் தென்தமிழ் நாட்டிலுள்ள குற்றமற்ற மதுரைக் குச் செல்லும் எண்ணம் முன்னரே எனக்கும் உண்டு. ஆகையால், என்னுடன் நீவிரும் வரலாம்' என்றார்.

அவ்வுரை கேட்ட கோவலன் உள்ளம் களித்தது. அவன் உடனே கவுந்தியடிகளின் அடிகளைக் கையால் தொழுது, நாவினால் ஏத்தி, 'அடிகளே! தாங்களே இவ்வாறு கூறினால், தொடிவளைத் தோளியாகிய இவள் துயரைத் தீர்த்தேனாகின்றேன்' என்றுரைத்தான்.

"கோவல! நாம் செல்ல முடிவுசெய்த இந்த நெறியிலே துன்பந்தரும் பலவும் எங்கும் உள்ளன. அவற்றை நீ அறியாய். நான் சொல்லுகிறேன், கேள். வெயிலின் வெப்பத்தைக் கண்ணாலும் பார்க்க இயலாத இம்மெல்லிய இயல்பை யுடையாளை அழைத்துக்கொண்டு மலர் நிறைந்த சோலையினூடே செல்வோமென்றால், அங்கே நிலம் பிளக்கும்படி இடங்கொண்டு கிடந்த வள்ளிக்கிழங்கை அகழ்ந்து கொண்ட குழிகளைச் சண்பக மரங்கள் நிறைந்த மகரந்தம் சேர்ந்த வாடிய மலர்கள் பொய்க்குழிகளாக ஆக்கி, அவ்விடங்களை அறிந்து பாதுகாத்துச் செல்லாத மாந்தர்க்குச் செயலற்றுப் போம்படி துன்பத்தை விளைவிக்கவுங் கூடும்.

அன்றி, அவ்வாறு உதிர்ந்த பழம்பூ மறைத்த குழியுள்ள வழியைக் கண்டு விலக நிலம் நோக்கிச் செல்வோரை, முற்றிய தெங்கம் பழங்கள் தாழ்ந்த மரங்களிலிருந்து பகைபோல முட்டினும் முட்டும். இனி, வெள்ளிடையே செல்வோம் எனின், ஆங்கே மஞ்சளும் இஞ்சியும் தம்மில் மயங்கிய பிணக்கத்தையுடைய தோட்டங்களிலே

பாத்திகள் தோறும் பலவின் செஞ்சுளைகளிலுள்ள வெண்மையான கொட்டைகளாகிய பரல்கள் இவள் மெல் லடிக்குப் பகையாய் உறுத்தும். கயற் கண்ணுளின் காதல் கணவனே! இவ் வழிகளை விட்டு வயல் வழியே போவோம் எனின், மலர் மணம் கமழும் குளங்களிலே மீனிரை தேறும் நீர்நாயைக் கண்டாலும், அந்த நீர் நாயாற் கௌவப்பட்ட நீண்ட முதுகையுடைய வாளை மலங்குகள் நெளியும் வயல்களிலே கயல்கள் பிறழக் குறுக்கிட்டுப் பாயினும், இக் காரிகையாள் கலங்குவாள். அஃதன்றியும், கரும்பில் தொடுத்த பெரிய தேனடைகள் சிதைந்து வடிந்த தேன் கரும்பந் தோட்டம் சூழ்ந்த பொய்கை நீரிலே கலந்திருக்கும். அடங்காத நீர் வேட்கையாலே தேனைப் பருக லாகாதெனும் நம் சமயவிதியை மறந்து மயங்கித் தன் குடங்கையாலே இவள் முகந்து பருகவும் நேரலாம். மற்றும், களைபறிப்பார் பறித்து வரம்பில் இட்ட குவளைப் பூவுடன், அப்பூவினுள்ளே மது மயக்கத்தாலே ஒடுங்கிக் கிடக்கின்ற பொறியையும் வரியையும் உடைய வண்டினத்தை, வழிச்செல்லும் வருத்தத்தாலே நீவிர் உணர்வு மயங்கி வெறும்பூவெனக் கருதி அடியிட்டு மிதித்தலுங் கூடும். இனி, அலையெறியும் நீரையுடைய பெருவாய்க் காலின் கரை வழியே போவோம் எனின், புள்ளிகளை யுடைய பெரிய நண்டுகளும் நத்தைகளும் உள்ளவழி அறிந்து காலால் முன்பு நடக்கும் முறையினுல் நம் அடியிலே அகப்படுமாயின் அவை பெறும் நோயால் நாம் அடையும் கொலைப்பாவம் தாங்கவியலாததாகும்.

இங்ஙனங் கூறிய வயலும் சோலையும் அல்லது வேறுபட்ட நெறி நாம் செல்வதற்கு இல்லை. ஆதலால், நெறித்த நீண்ட சிகையினை யுடையாய்! நீ நின் காதலியுடன் அவ்வவ்விடங்களைக் குறிப்பால் அறிந்து, அவை கெடுதியடையாமற் பார்த்துச் செல்வாயாக!''

இவ்வாறு கூறிய கவுந்தியடிகள் குற்றமற்ற ஐயமேற்கும் கலமும் தோள் மேல் உறியும் கையிற் பீலியும் கொண்டு, பஞ்ச மந்திரமே நமக்கு வழித்துணையாகுக

எனச் சொல்லிச் சென்றார். அவருடன் பற்றற்ற ஒழுக்க முடைய இருவரும் சென்றனர்.

வழிச் செலவு.

கோள்களிற் சனியானது இடபம் சிங்கம் என்னும் இவற்றோடு மாறுபடினும், வானிலே தூமக் கோள் எழினும், விரிந்த கதிரையுடைய வெள்ளிக் கோள் தென் திசையிலே பெயர்ந்தாலும், காற்று மோதும் குடக மலையினது உச்சியிலே கடிய குரலை யுடைய இடியேற்றுடன் சூல் முற்றிய பருவமுகில் தன் பெயலாகிய வளத்தைச் சுரத்தலால், அம்மலையிலே பிறந்த பல பொருள்களுடன் விரைந்து வரும் காவிரி நீர் முகத்தைக் குத்தி இடிக்குங் கடல் தன் வளத்தைக் கொண்டு, எதிர்தலாலே தேங்கி, வாய்த்தலைக் கிட்ட கதவின்மீது எழுந்து குதிக்கும் அப் புதுப்புனல் ஒலியே அன்றி, நீரிறைக்கும் பத்தரும், பூட்டையும் பேரிசை யேத்தமும் மிகுதியான நீரையுடைய இடாவும் போன்றவை ஒலியாத கழனியிலே செந்நெல்லும் கரும்பும் சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலைச் செறுவிலே உண் டாகிய தாமரைக் காட்டில், கம்புள் கோழியும், பெருங்குரல் நாரையும், சிவந்த காலையுடைய அன்னமும், பசிய காலை யுடைய கொக்கும், காட்டுக் கோழியும், உள்ளானும், குளுவையும், கணந்துட்புள்ளும், பெருநாரையும் வெல்லும் போரிலே வல்ல அரசர் இருவர் போர் செய்யும் இடம் போலப் பலவேறு வகைப்பட்ட வகையையும் ஒலி யையும் உடையனவாய் ஒலிக்கும் மிக்க ஒலியும், உழ வரால் உழப்படாத சேட்டுக் குழியிலே சேற்றினுள்ளே புகுந்து அழுந்திய கழுவாத மயிரையுடைய யாக்கை யையும் சிவந்த கண்ணையும் உடைய எருமை தன் தினவை யுடைய முதுகை உரிஞ்சுதலாலே, புரி தேய்ந்து அற்றுச் சரிகின்ற அரிவில்லாப் புரிக்கூட்டிலுள்ள வளமிகும் பல வகை நெல்லும் கவரித் தொங்கல் போல விளைந்து கிடக்கும் செந்நெற் கதிர்த் தலையிடத்தே சொரியக் கரிய

கைகளையுடைய தொழிலாளரும் உழவரும் கூடி ஒலிக்கும் ஒலியும், மணமிகு மலராகிய களையைக் களைந்துவிட்டு, முடியாகவுள்ள நாற்றை அலகாக எடுத்து நட்டு, வளையல் அணிந்த தோளும் மார்பும் தாம் விளையாட்டுக் கெறிந்த சேறுதோய்ந்த கோலத்துடன் சிறப்புறத் தோன்றுகின்ற, (கள்ளுண்டதனுற்) சிவந்த கயலனைய நீண்ட கண்களையும் சிறிய மொழியையும் உடைய உழத்தியர் கள்மயக்கத் துடன் பாடும் விருந்தாகிய பாட்டின் ஒலியும், செந்நெற் கதிருடன் கொழுவிய கொடித் தன்மையுடைய அறுகை யும் குவளையையும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பார் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோர் பாடும் ஏர்மங்கலப் பாட்டொலியும், நெல்லை அரிந்து போரிட்டோர் சூட்டைக் கடா விடுதலால் எழுந்த முகவைப் பாட்டொலியும், தெளிந்த ஓசையை யுடைய கிணைப் பொருநர் கேட்டோர் மகிழும்படி செருக்குடன் எடுத்த மார்ச்சனையை யுடைய திரண்ட முழவின் ஓசை யும் பேரியாற் றடைகரையிலே முறையாகக் கேட்டு உள் ளத்தை அவ்வொலிகள் கவர்தலால் வழிநடை வருத் தத்தை நெஞ்சிற் கொள்ளாராய்ச் சென்றனர்.

புலி எழுதிய கொடியை உயர்த்த தேரையுடைய உரவோனுன கரிகாலனுடைய கொற்றத்துடன், மழைக் கும் ஆதரவாகிய, அழல் விளங்கும் சாலையில் உண்டான மறையோரால் ஆக்கப்பட்ட வானவர் உணவின் புகை, இறை உயர்ந்த மாடமாகிய அகங்கள் எங்கும் போர்த்த லால், மஞ்சு போர்த்த மலைபோல மாண்புறத் தோன்றும் மங்கல மறையோர் சேரிகளையும், பரவிய நீரையுடைய காவிரியின் மக்களாய் (வேளாளராய்) இரப்பவர் சுற்றத் தையும் புரப்பவர்தம் கொற்றத்தையும் தம் உழவி னிடத்தே விளைப்போர் வாழ்வனவும் தூற்றாத நெற் பொலியின்மேற் கரும்பாலையின் புகை பரவிக் கருநிறம் பெற்று முகில் தவழும் மலை போலத் தோன்றுவனவு மாகிய பழைய வலிமை பொருந்திய ஊர்களையும்

இடையிடையே கொண்ட நாட்டை யெல்லாம் கண்டு, நாளொன்றுக்குக் காத வழிக்கு மேல் நடக்க முடியாமற் பல நாட்கள் நடந்து சென்றனர்.

சாரணர் சேவை

ஒருநாள், ஆற்றை மறைக்கும் அரங்கத்தில், வேறிடத்தில்லாத இயல்பினதாய், வளைந்த மூங்கில் முள்ளால் வளைக்கப்பட்ட வேலியை யுடைய மரம் பொருந்திய செறிந்த சோலையிலே, வானவர் வாழ்தற்கொத்த, மலர் நிறைந்த, ஒரு பக்கத்திலே, பட்டினப்பாக்கத்தின் உயர்ந்த பெரிய மன்றிலே அசோகின் நீழலில் உலக நோன்பிகள் இட்ட ஒளி பொருந்திய சிலாதலத்தின் மேல் எழுந்தருளிப் பெருமகனுற் செய்யப்பட்ட, சகசம் கர்மக்ஷயம் தெய்வீகம் என்னும் மூன்று துதிசயங்களுந் தப்பாத ஆகம நூலின் உண்மைத் தன்மையை உடைய அறவொழுக்கத்தை யாவருக்கும் அருளிச் செய்யும் சாரணர் இருவர் அப் பட்டினப் பாக்கத்தை விட்டுவந்து இவர்கள் தங்கியிருந்த இடத்திலே தோன்றினர்.

அவர்கள் வந்ததைக் கண்ட கோவலனும் கண்ணகியும் முன் செய்த வினைகளெல்லாம் கெட்டோடுக என்று நினைத்துக் கவுந்தியடிகளுடன் சென்று, அடியிலே முடியுற வீழ்ந்து வணங்கினர். சாரணர் இருவரில் மூத்தவன் தன் அவதி ஞானத்தாலே அவர்கள் வந்த நிலை அறிந்தவனுயினும், ஆர்வமும் செற்றமும் தன்னைவிட்டுப் போகும்படி நீக்கிய வீரனுகையால் இவர்கள் அடைந்த துன்பத்திற்குத் தான் வருந்தானுகி, மிக்க பெரிய தவச் சிறப்பையுடைய கவுந்தியே! யாவரானும் ஒழிக்க ஒழியாததாய் நுகர்விக்க வந்து நிற்கின்ற தீவினையைப் பார்' என்று கூறி மேலும் கூறுகிருன்:

"விளையும் நிலத்திலே விதைத்த வித்துப் போலப் பயன் தோன்றும்படி கண்கூடாக நல்வினை வந்து ஊட்டும் காலத்து அப்பயன்கள் ஒழிக்க ஒண்ணுதன

வாகும். அவ்வாறே இதுவும் ஒழிக்க ஒழியாது. உடம்பில் நின்ற உயிர்களும் கொடிய காற்று வீசும் பரந்த வெளியில் அகப்பட்ட விளக்கைப் போல மாயுமே யல்லாமல் உடம்பிலேயே பொருந்தி நில்லா.(கோவலனும் கண்ணகியும் அடையும் பயனை யுணர்ந்தே இவ்வாறு கூறினர்). எல்லாப் பொருளையும் அறியும் அறிவை யுடையோனும், அறஞ் செய்தலையே தொழிலாக வுடையோனும், எல்வாவுயிர்கட்கும் ஆதரவானவனும், ஞானாவரணீயம், தரிசனுவரணீயம்,வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்னும் எண்வகைக் கன்மங்களையும் வென்றவனும், செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்தவனும், கேவல ஞானியும், அறங்களுக்கு அடிப்படை யானவனும், எல்லோருக்குந் தலைவனும், தானே அறமானவனும், உண்மைப் பொருளா யுள்ளவனும், புதியவனும், பழையவனும், எல்லோர்க்கும் அறிவாயுள்ளவனும், சினத்தைக் கீழ்ப்படுத்தியவனும், வானவர்க்கு முதலானவனும், வீட்டுலகிற்குத் தலைவனும், மேலானவனும், குணத்தை யுடையவனும், மேலுலகிற்கு ஒளியானவனும், தத்துவங்களை யுடையோனும், ஒடுங்கினவனும், வானவாசியும், எல்லாவற்றிற்கும் காரணமானவனும், எண்வகைச் சித்திகளையும் உண்டாக்கினவனும், பெரியவனும், நாயக மூர்த்தியும், விளங்கும் ஒளியும், எப்பொருளிலும் தங்குவோனும், குரவனும், இயற்கைப் பண்பினனும், எம் தலைவனும், நிறைந்த புகழுடையோனும், குணங்களைச் செல்வமாக உடையவனும், நலமருள்வோனும், ஐசுவரிய முடையோனும், தானே தோன்றியவனும், நான்முகனும், பகுப்புடைய ஆகமங்களை யுண்டாக்கினவனும், வழிபாட்டுக் குரியவனும், அருள்பர மூர்த்தியும், கடவுளும், அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த தரிசனம், அனந்த சுகம், நிர்க்காமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்யம், அழியாவியல்பு என்னும் எட்டுப் பண்புகளுடையோனும், ஓட்டம் அற்ற பொன்னை யொப்பானும். வானவனும், அங்கம் பூர்வம் பகுசுருதி என்னும் ஆகமங்கள் மூன்றிற்கும் முதலாக உள்ளவனும், அறியாமை

நீங்க விளங்கும் ஒளியும் ஆகிய திருப் பெயர்களை யுடை யோனால் ஓதப்பட்ட ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றால் அன்றி, இப் பிறவிச் சிறையிலிருந்து புழுக் கறையாகிய இவ்வுடம் புடைய எவராலும் வெளியேற முடியாது,"

இவ்வாறு சாரணர் அருளிச் செய்த உண்மை மொழியைக் கேட்டுத் தவத்திற்கு முதல்வியாகிய கவுந்தி யடிகளும் தம் கைகளைத் தலைமீது குவித்து வைத்துக் கொண்டு கூறுவார்:

"காமம் வெகுளி மயக்கங்களைக் கெடுத்தவனால் ஓதப் பெற்ற ஞான பாதமாகிய திருமொழியைக் கேட்பதற்கு என் செவியகம் திறக்குமே யன்றிப் பிறிதொன்றுக்குத் திறவா. என் நாவும் காமன் செயலை வென்ற அப்பெருமா னுடைய ஆயிரத்தெட்டு வகைப்பட்ட திருப் பெயர்களை நவிலுமேயன்றிப் பிறிதொன்றினை நவிலாது. என் கண்களும் ஐவகைப் பொறிகளையும் வென்றவனுடைய அடியிணைகளைக் காணுமேயன்றி மற்ற வானவரின் அடி யிணைகளைக் கையகத்தே கிடைப்பினும் காணா. என் பயனற்ற யாக்கையும் அருளால் அறத்தைப் பூண்ட அவ னுடைய திருமேனியை வணங்கும் பொருட்டுப் புவியிற் பொருந்துமேயன்றிப் பிறிதொன்றற்குப் பொருந் தாது. என் இரு கைகளும் அருகர்களுக்கு அறங்கூறும் அறிவனுக்காக என் முடிமேற் குவியுமே அன்றிப் பிறி தொரு தேவர் பொருட்டுக் குவியா. என் தலையின் உச்சி யும் மலர் மீது நடந்த அவனுடைய மலரடிகளாகிய அணியை அணியப் பொறுக்குமே அன்றிப் பிறிதொன் றனையும் அணியப் பொறாது. என் உள்ளமும் முடிவற்ற இன்பமாகிய அனந்த சுகத்தையுடைய இறைவன் அருளிச் செய்த ஆகமமாகிய மொழியை உருப்பெற ஓதிப் புடை பெயருமே அன்றிப் பிறிதொரு மொழியை ஓதிப் புடை பெயராது."

இவ்வாறு அப்பெருமானுடைய புகழ்மொழிகளை ஓதக் கேட்ட சாரணர்கள் அப்புகழ் மொழிகளிலே மனம்

ஒன்றி, அவ்விடத்திடப்பட்டிருந்த சிலாவட்டத்தினின்றும் எழுந்து, அதற்கு ஒரு முழ உயரம் மேலாக நின்று, 'பிறப்பைத் தரும் பாசம் கவுந்தியடிகளைப் பற்ருமற் கெடுவதாக!' என்று கூறி, வான வழியாக விரைந்து சென்றனர்.

அவ்வாறு சென்றவர்களை மூவரும் நோக்கித் தொழுது, 'பந்தம் அறுவதாக!' என்று பணிந்து சென்றனர். வழியிலே காவிரியாறு குறுக்கிட அதனை, மாடம் போல் அமைந்த படகிலேறிக் கடந்து தென்கரையை அடைந்தனர். ஆங்கே, மலர்கள் சூழ்ந்து கிடந்த ஒரு பூம்பொழிலிலே தங்கினர்.

அப்போது ஒரு புதிய பரத்தையும் வீண்மொழியாடும் ஒரு கீழ்மகனும் இவர்களிருக்கும் மணம் பரவிய அப்பொழிலை அடைந்தனர். கோவலனையுங் கண்ணகியையுங் கண்டு, 'இவர்கள் காமனும் இரதியும் போலிருக்கின்றனர். யாரெனக் கேட்டறிவோம்' என்று தம்முட் பேசிக்கொண்டு, கவுந்தியடிகளிடம் சென்று, 'நோன்பிருந்து உண்பதால் மெலிந்த மெய்யையும் நுண்ணிய தவத்தையும் உடையீர்! உம்முடன் வந்த இவர்கள் யார்?' என்று வினவினர்.

கவுந்தியடிகள், 'இவர்கள் என் மக்கள் என்று அறிவீராக! மக்களுடம்பையுடைய இவர்கள் காமனும் இரதியும் அல்லர். வழிவந்த வருத்தத்தால் மிகவும் சோர்ந்தனர். நீவிர் அவர்களை நெருங்காமல் விலகிப் போமின்' என்ருர்.

"நூல்களைக் கற்று, அவற்றின் பொருளையும் உணர்ந்தவரே! ஒரு வயிற்றிற் பிறந்தோர்கள் கணவனும் மனைவியுமாய்க்கூடி வாழக்கடவதென்று நீர் கற்ற நூற்களிற் சொல்லியதுண்டோ? சொல்லியிருப்பிற் கூறுவீராக!" என்று அக் கீழ்மக்கள் வினவினர்.

இவ்வாறு இவர்கள் இகழ்ந்துரைத்த தீமொழியைக் கேட்ட கண்ணகி செவியைப் புதைத்து நடுங்கினள்.

கவுந்தியடிகள் சினந்து, "என் பூங்கொடியை இவர்கள் இகழ்கின்றனர். இவ்விகழ்ச்சியால், துடக்கு முட்களையுடைய காட்டில் நுழைந்து திரியும் முது நரியாகக் கடவர்" என்று சபித்தனர்.

அச்சாபம் தவத்தின் விளைவாகியதாதலால் அக்கயவர்களைச் சென்று பற்றியது. கவுந்தியடிகள் சபித்ததையறியாத நறுமலர்க் கோதையளாகிய கண்ணகியும் நம்பியாகிய கோவலனும் குறு நரிகளின் நெடுங்குரலாகக் கூவும் விளியைக் கேட்டு நடுங்கினர்.

"செய்தவ முடையீர்! ஒழுக்கநெறியினின்றும் நீங்கியோர் தகுதியில்லாதன கூறினும், இஃது அவர் அறிவின்மையாலே கூறியதன்றோ என்று உயர்ந்தோர் தம் அறிவினாலே உணர்தல் வேண்டும். நும்முடைய திருமுன் தவறிழைத்த இவர்க்கு இனிச் சாபம் நீங்கி உய்யும்படி நேருங்காலத்தை உரைத்தருள்வீர்" என்று வேண்டினர்.

"தம் மனம் மொழி மெய்களால் துன்பம் வரும் என்பதனை அறியாமையால், இன்று இழிபிறப்புற்ற இவர்கள் உறையூரின் மதிற்புறத்தே காவற் காட்டிலே திரிந்து பன்னிரண்டு திங்கள் வரையிலே இவ்வாறு துன்ப முற்றலைந்த பிறகு. முன்னைப் பிறப்பைப் பெறுவாராக!" என்று கவுந்தியடிகள் சாபவிடை செய்தார்.

பிறகு, தவப் பெருஞ் சிறப்பையுடைய அடிகளும் கண்ணகியும் கோவலனும், முறம்போலுஞ் செவியையுடைய வாரணமாகிய யானையைப் போரிட்டுக் கெடுத்த புறத்தே சிறகையுடைய வாரணமாகிய கோழி யென்னும் உறையூரிலே விருப்பத்தோடு புகுந்தனர்.

கட்டுரை

சேர சோழ பாண்டியரெனும் முடியுடை வேந்தர் மூவருளும் சோழர் குலத் தோன்றல்களுடைய அறமும் வீரமும் ஆற்றலும் அவர் தம்முடைய பழமையான வெற்றியையுடைய மூதூரானது பண்பினாலே மேம்படுதலும், விழா நிறைந்த சிறப்பும், வானவர் வரவும், குறையாத இன்பத்தையுடைய சோழ நாட்டுக் குடியும், செல்வப் பெருக்கும் அவர்களுயை தெய்வக் காவிரியின் குற்றமற்ற சிறப்பும் வானம் தவறாமல் புதுப் புனலைப் பொழிதலும், அரங்கும் ஆடலும் இசையும் பாட்டும் நாடக உறுப்பாகிய பாரதி விருத்தியும் திணை நிலை வரியும் சார்த்துவரி முதலிய பல வரிகளால் வருவனவும், பொருந்திக் கிடந்த யாழின் தொகுதியும் ஈரேழாகத் தொடுத்த சகோடமும், இட நிலைப் பாலையும், தாரத்து ஆக்கமும், தான் அறிந்த பண்ணும், ஊரின் வண்ணமும் இவற்றுடன் ஈண்டுச் சொல்லப் படாத பிற பொருள்வைப்புடன் ஒன்றித் தோன்றும் ஒப்பற்ற முறையின் நிலைபேறும் ஒரு தன்மையுற விளங்கிக் கிடந்தது.

———

வெண்பா

காலை அரும்பி மலரும் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்

[கடலை அகழாகக் கொண்டு அமைந்த நிலவுலகிலே தொடர்ச்சியான புகழாற் பொருந்திய காவிரிப்பூம்பட்டினம் காலையில் தோன்றி மலரும் ஞாயிறும், மாலையிலே தோன்றும் முழுமதியும் போல் வாழ்க]

இரண்டாவது

மதுரைக் காண்டம்

11. காடுகாண் காதை

உறையூரில்

உறையூரை அடைந்த மூவரும், ஆங்கு அருகன் பள்ளியில் தங்கினர். அப்போது, மாதவத்தாட்டியாகிய கவுந்தியடிகள், தெய்வத் தன்மையால் எப்போதும் மாலையாகவே மலர்ந்து தாழ்ந்த அசோகினது வளமிகும் நிழலின் கண்ணே, மூன்று திங்களை அடுக்கினாற் போலும் திருமுக்குடையின் கீழ் இளஞாயிற்றின் ஒளியினும் மேம்பட ஒளி மிகும்படி வீற்றிருந்த அருகப் பெருமானை வணங்கி, முன்னர் ஆற்றிடைக் குறையாகிய அவ்விடத்திலே சாரணர் கூறிய தகுதிமிக்க நல்லுரையை உறையூரில் நிக்கந்தன் (அருகன்) பள்ளியிலுள்ள முனிவர்க்கெல்லாம் தகுதி பெற மொழிந்தனர். பின்னர் மூவரும் ஆங்குள்ள சாவகர் வாழும் இல்லத்திலே தங்கினர்.

பின்னர்த் தென்திசை நோக்கிச் செல்லும் தங்கள் செலவிலே விருப்புற்றுக் கோழியூரை வைகறையிலே கடந்து செல்லும்போது, கீழ்த்திசையிலே ஞாயிறு தோன்றி அத்திசையை விளக்கினான். அப்போது, வளவிய நீர் நிறைந்த மருதமும் பொய்கையும் சிறந்ததாகிய ஓர் இளமரக்காவின் மண்டபத்தை அடைந்து தங்கினர்.

மாங்காட்டந்தணன்

அப்போது முதிய மறையவன் ஒருவன், ''வேந்தர் யாவரினும் மிகுந்த பெரிய தகுதியையுடைய எம் வேந்தன் வாழ்க! இவ்வுலகை அவனே ஊழிதோறும் ஊழிதோறும்

காத்திடுக! முன்னொரு காலத்துத் தன் பெருமையின் அளவை அரசர்க்குக் காலால் மிதித்து உணர்த்தி வேலால் எறிந்த அப்பழம் பகையைக் கடல் பொருமல், பின்னர் ஒரு காலத்திலே அவனது தென் திசையின் கண்ணுள்ள பஃறுளி யாற்றுடனே பல பக்கமலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொடிய அக்கடல் கொண்டதனுல், வட திசையிலுள்ள கங்கையாற்றினையும் இமய மலையினையும் கைக்கொண்டு அவற்றுடன் * தென்திசையை ஆண்ட தென்னவன் வாழ்க! திங்களாகிய செல்வனுடைய மரபு மேம்படுதற்கு, இந்திரன் பூட்டிய திண்மை மிகுந்த ஆரத்தை ஒளிபொருந்திய தன் மார்பிலே பூண்ட பாண்டியன் வாழ்க! இவன் நம் தலைவனின் சென்னி முடியிலே வளையை உடைத்தோன் என்று இடியை உடைய பருவ மழை, தன் நாட்டிலே பெய்தல் தொழிலைச் செய்யாது சென்றதாக, நீங்காத விளையுளாகிய மிக்க வளம் சுரக்கும் படி அதனை விலங்கிட்டாண்ட மன்னவன் வாழ்வானாக!''

என்று குற்றந் தீர்த்த சிறப்பினையுடைய தென்னவனை வாழ்த்தியவாறு வந்து தங்கியிருந்தான்.

அவனைக் கோவலன் நோக்கி, 'நும் ஊர் யாது? இங்கு நீர் வந்தவாறு என் ?' என்று வினவினுன். மிக்க சிறப்பினையுடைய அம்மறையவன் கோவலனுக்கு விடையாகத் தான் வருகின்ற பொருளைக் கூறுகிருன் :

"நீல நிற முகில் நெடிய பொன்மலையினிடத்தே பக்கங்களில் விரிந்து மிகாமல் ஒக்கப்படிந்திருக்குமாகில் அதனைப்போலத் தனது படம் விரித்தெழுந்த ஆயிரந்தலையையும் பிறர்க்குக் கிடைத்தற்கரிய வலிமையையும் உடைய பாம்பணைப் பள்ளிமீதே வானவர் பலரும் தொழுதேத்தும்படி அலைவிரியும் காவிரி யாற்றிடையிலே மிகப் பெரிய அரங்கத்திலே திருமகள் பொருந்திய மார்

---

*'அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானுட்டுக் குண்டூர்க் கூற்றமும என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்'—அடியார்க்கு நல்லார்.

பன் அறிதுயில் கொண்ட கோலத்தையும் கொடிவழித் தீர்த்தம் முதலிய மிக்க அருவி நீரையுடைய வேங்கடம் என்று பெயர் கூறப்படும் மலையின் உச்சிமீதே விரிகதிரை யுடைய ஞாயிறும் திங்களும் இருமருங்கினும் ஓங்கி விளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீலநிற முகில் மின்னலாகிய புத்தாடையை உடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றாற்போலப் பகையை வருத்தும் ஆழியையும் பால் போன்ற வெண்சங்கையும் அழகிய தாமரைக் கைகளிலே வலனும் இடனும் ஏந்தி, அழகு விளங்கும் ஆரத்தைத் திருமார்பிலே பூண்டு, பொற்பூ ஆடையை உடுத்து வெளிப்பட்ட சிவந்த திருக்கண் மலரை யுடைய நெடியோன் நின்ற கோலத்தையும் காட்டுவாயாக என்று என் கண் என் உள்ளத்தைக் கவலைப்படுத்திய தாலே இங்கு வந்தேன். ஆங்கே குடகு மலைப் பக்கத்து மாங்காடென்னும் ஊரின்கண் உள்ளவன் நான். அப் பாண்டியனுடைய நாட்டிலுள்ள சிறப்பையும், கொடை அளி முதலிய அவன் செய்கைகளையும் கேட்டதுடன் நில்லாமற் கண்மணி குளிரும்படி கண்டேன். ஆகையால் அவன் புகழை நாவால் வாழ்த்தியிருந்தேன். என் வரவு இது.''

இவ்வாறு முத்திவளர்ப்போன் கூறக்கேட்ட கோவலன், 'பெருமை மிக்க முதிய மறை முதல்வனே! மதுரைக்குப் போகும் நல்வழியைக் கூறுக' என வினவினான்.

அதற்கு மாங்காட்டந்தணன் கூறுகிறான் :

''கொடுமை புரிதலே கொண்டு, குடிகளை ஓம்பாத அமைச்சருடனே, நாள்தோறும் ஆராய்ந்து முறை புரியாமல் அரசனும் கோல் கோடுதலான் அரசியலை இழந்த பரந்த நிலம்போல, முதிர்ந்த வேனிலாகிய உரிய அமைச்சனுடன் வெங்கதிராகிய வேந்தன் தானும் வெப்பம் மிகுதலால், முல்லை குறிஞ்சி யென்னும் இருதிணையும் தம் இயற்கை கெட்டு, முறைமை திரிந்து, தம் நல்லியல்பை யிழந்து தம்மைச் சேர்ந்தோர்க்கு நடுங்குந் துயரைக்

கொடுத்துப் பாலையென்னும் ஒரு வடிவத்தைக் கொள்ளும் இக்கொடிய காலத்தே இக்காரிகையுடன் நீங்கள் வந்தீர்கள்.

பாறையும் துறுகலும் அரிய வழியின் நெறிமயக்கமும் பேய்த் தேரும் ஆகிய இவை அடைவாகக் கிடந்த இந்தத் தொலைவில்லாத பெரிய சுரத்து நெறியைக் கடந்து சென்று கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டினுக்கும் பொதுவாகிய ஏரியின் கரையைக் கடந்து சென்றால், முடியிலே பிறைமதியைக் கண்ணியாகச் சூடிய இறைவன் ஏந்திய கண்ணறையாகிய வாயையுடைய சூலத்தைப்போல மூன்று வழிகள் அறிதற்கியலாதபடி கவர்த்துத் தோன்றும்.

அவற்றுள் வலப்பக்கம் கிடந்த வழியிலே நீவிர் போகத் துணிந்தால், விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், உலர்ந்த தலைகளையுடைய ஓமையும், பொரிந்த அடிப்பாகத்தையுடைய வாகையும், தண்டு காய்ந்த புறக்காழாகிய மூங்கிலும், வரியையுடைய் மரல் நீர் வற்றித் திரங்கிக் கரிந்து கிடக்கும் இடங்களும் அங்கே நீர் பருகுதலை விரும்பி அவ்விருப்பத்தாலே உழைமான் நின்று கூப்பிடும் காடும், வேடரூரை அடுத்த காடுமாகிய அவை கடத்தற்கரியன. அவற்றைக் கடந்து சென்றால், அங்கே மலைச் சாரலில் விளையும் ஐவனம் என்னும் நெற்பயிரும், முறிக்கும் பருவத்தையுடைய கரும்பும் கொய்யும் பருவத்தையுடைய தினையும், வளமிகும் புனத்திலே விளைந்த வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், அழகிய கொடியை உடைய கவலையும், வாழையும், கமுகும், நீண்ட குலைகளையுடைய தெங்கும், மாவும் பலாவும் என்னும் இவை தன்னைச் சூழ அடுத்து ஓங்கிய பாண்டியனுடைய சிறுமலை என்னும் மலை விளங்கித் தோன்றும். அம்மலையை வலப்பக்கத்தே கொண்டு இடப்பக்கத்தே கிடந்த வழியிலே சென்று பெரிய மதுரை மாநகரையடைமின்!

அவ்வழிச் செல்வீராயின், இடப்பக்கத்திலே, சிறகை யுடைய வண்டுகள் செவ்வழி என்னும் யாழ்ப் பண்ணைப் பாடும் தாழ்ந்த தடத்தோடும் தாழ்ந்த வயலோடும் குளிர்ந்த மலர்ப் பொழிலோடும் அரிய சுரங்கள் பலவும் இடையிடையே கிடந்த காட்டு நெறியையும் கடந்து அழகர் மலையெனும் திருமால் குன்றத்தை அடைந்தால் அங்கே மயக்கத்தைப் போக்கும் பிலத்துவழி யொன்றுண்டு. அப்பிலத்தினுள்ளே, வானவர்களாற் போற்றப்பட்டு, யாவரும் வியக்கும் இயல்பினையுடைய புண்ணிய சரவணம் பவ காரணி, இட்டசித்தி என்னும் பெயர் எங்கும் பரவி, இடையறாத சிறப்புடன் ஒருங்கே சேர்ந்திருக்கின்ற பொய்கைகள் உள்ளன. அவற்றுட், புண்ணிய சரவணத்தில் முழுகுவீராயின் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் நூலை அறிந்திடுவீர். இது நினைவின்றியே பெறும்பேறாகும். பவகாரணி யென்னும் பொய்கையிலே குளிப்பீராயின்* இப்பிறப்பிற்குக் காரணமாகிய பழம் பிறப்பை உணர்வீர். இட்டசித்தியிற் படிவீராயின் நீர் நினைத்த எண்வகைச் சித்திகளையும் (தவஞ் செய்து வருந்திப் பெறாமல்) நினைத்துழிப் பெறுவீர்.

அத்தகைய பிலத்திலே புகவிரும்பினீர் எனின், மிகவும் உயர்ந்த அத்திருமலைக்கண் உள்ள பெரியோன் சேவடிகளைக் கையாலே தொழுது மனத்தாலே நினைத்து மொழியாலே வாழ்த்திக்கொண்டு அம்மலையை மும்முறை வலஞ் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தவுடனே பாதாள கங்கைக்கு மேலே உள்ள நிலம் பிளக்கும்படி அறுத்து விழும் சிலம்பாறு என்னும் அகன்ற ஆற்றின் கரையிலுள்ள, விளக்கமான அரும்புகள் அவிழ்ந்த மலர்களையுடைய கோங்குமா நிழலிலே, ஒரு பொற்கொடி போலவும் மின்னற்கொடி போலவும் தோற்றமும், புயல்போன்ற (ஐவகையாக முடிக்கும்)

* முன்னும் பின்னுமாகிய இரு பிறப்பையும் உய்த்துணர்தற்குக் காரணமாகிய இப் பிறப்பிலே எப்பிறப்பையும் எய்தவுணர்வீர் என்றும் பாவத்தான் வரும் பிறப்புக்களை யென்றும் பொருள் கூறலாம் என்பர் அடியார்க்கு நல்லார்.

கூந்தலும், வளைந்த தொடி புனைந்த தோளும் உடையவள் ஒருத்தி தோன்றுவாள். அவள், இப்பிறப் பிற்கின்பமும் மறுபிறப்பிற்கின்பமும் இவையிரண்டும் ஒழிந்து எக்காலத்தும் ஒன்றுந் தன்மையாய்க் கோடுதலும் அழிவும் இன்றி நிற்கும் இன்பமுமாகிய பொருள்கள் *யாவை? அவற்றை நீவிர் உரைமின். யான் இந்த அடிமலையிலே வாழ்வேன். வரோத்தமை யென்பது என் பெயர். யான் வினவிய இவற்றிற்கு விடையுரைத்தவர்க்கு வேண்டும் பணி புரிவேன். ஆகையால், திருத்தகவுடையீர்! உரைத்தீராளுல் உமக்கு இப்போதே இப்பிலவாயிலின் கதவைத் திறந்து தருவேன்'' என்று சொல்வாள்.

அவள் வினவியவற்றிற்கு விடை யுரைப்பின், கதவைத் திறந்து பிலத்திற்கு வழி காட்டுவாள். அவள் காட்டும் வழியிலே நீண்ட இடைகழி வாயில்கள் பலவுள. அவற்றைக் கடந்தால் இரட்டைக் கதவையுடைய வாயில் ஒன்று காணப்படும். அதற்கு மேலாகச் சென்ருல், வட்டிகையிலே எழுதிய பாவை போல்வாள் ஒருத்தி தோன்றி, 'ஈறில்லாத †இன்பம் யாது? அதனை உரைத்தீராயின் நீவிர் இந்த முப்பொருளினும் விரும்பிய பொருளைப் பெறுவீர். நும் அறியாமையால் உரையீராயினும் நும்மை வருத்தமாட்டேன். நீர் செல்லவேண்டிய வழியிலே செலுத்துவேன்' என்பாள். அவள் வினவுக்கு விடை கூறுவார் எனின், முன் கூறப்பட்ட மூன்று பொய்கைகளின் கரையிலே கொண்டு போய்விட்டு அவற்றின் பெயரையும் தன்மையையும் உரைத்துத் திரும்பி விடுவாள்.

ஓதுதற்கும் உணர்தற்கும் அரிய மறையிலுள்ள ஐந்தெழுத்தாலும் எட்டெழுத்தாலும் ஆகிய மந்திரம் இரண்டையும் ஒன்றுபட்ட மனத்தால் எண்ணி, நாவால் ஓதி அங்குள்ள பொய்கைகளில் நீங்கள் விரும்பிய ஒன்

* முறையே புகழ், புண்ணியம், வீடு என்று கூறப்படும் பொருள்கள்.
† இன்பம்: வீடு

றிலே விருப்பத்துடன் நீராடினல், அவற்றின் பயனகக் கிடப்பவை தவங்களைச் செய்தோர்க்கும் காணத்தகும் மரபினையுடைய அல்ல. இனி, அப்பொய்கைகளின் பயனை விரும்பாவிட்டால், அவற்றை நினையாமல், அம் மலைமீது நின்ற திருமாலின் பொலிவு பொருந்திய தாமரை மலரனைய திருவடிகளை நினைப்பீராக, அவ்வாறு நினைத்தால், அப்போதே, அவனுடைய கலுழன் எழுதிய கொடிமரம் பொருந்தி நிற்கும் நிலையிடத்தைக் காண்பீர். கண்டவுடன் அவன் திருவடி நிலை நும்மை ஏற்றுப் பிறவித் துன்பத்தைக் கெடுக்கும். அதனல், பின்னர்ப் பரமபதத்திற்குச் செல்லுதல் உண்மையென்று இன்பமுற்று மாட்சிமை பொருந்திய மரபினையுடைய மதுரைக்குச் செல்லுவீர்களாக ! இதுவே பிலத்தின் காட்சி.

இனி, அந்த இரண்டுபக்க வழிகளிலும் போகாவிட்டால், இடைப்பட்ட வழி நேர்வழி. அவ் வழியிலே இனிய பொழில் சூழ்ந்த ஊரும், ஊர்களை யிடையிட்ட பல காடுகளுங் கடந்தால், கடப்பதற்கு அரிய அவ்வழியிலே மிக்க துயரைத் தருவதொரு தெய்வம் உண்டு. அத்தெய்வம் தோன்றி, வழிப் போவாரை இடுக்கணென்றும் புரியாமல், நடுக்கமில்லாத நயத்தினலே மேலே செல்லவொட்டாமல் தடுக்கும். அத்தகைய தெய்வத்தைத் தப்பினல் அப்பெரிய வழி போவார். யாவருக்கும் தெளிவாகத் தோன்றிக் கிடக்கும். ஆதலால், நீவிர் விரும்பிய வழியே செல்க ! யானும் பெருநிலத்தைக் கடந்த நீண்ட முடியை உடைய அண்ணலின் திருவடிகளைத் தொழும் விருப்புடன் வந்தேனதலால், அதற்குச் செல்வேன்''

இவ்வாறு பெருமறையோன் வாயால் வழிமுறைமைகளைக் கேட்ட கவுந்தியடிகள் ஒரு பொருள்பொதிந்த உரையை உரைப்பாராயினர் :

" நல்லொழுக்கத்தை விரும்பிய கொள்கையையுடைய நான்மறையாளனே ! எமக்கு நீ கூறியவாறு பிலம்புக வேண்டும் பெற்றி வேண்டுவதில்லை. ஏனெனில், வானவரினும் மிக்க ஆயுளையுடைய இந்திரன் தோற்றுவித்த

ஐந்திரம் என்னும் இலக்கணத்தை எம்முடைய அருக குமரன் அருளிச்செய்த பரம ஆகமங்களிற் காணலாம். ஆதலின் நின் புண்ணிய சரவணத்திற் பொருந்த வேண்டியதில்லை. முற்பிறப்புச் செய்தியை இப் பிறப்பிலே அதன் பயனை நுகரும்போது அறிவதனால் நீ கூறிய பவகாரணியில் முழுகி யறிய வேண்டியதில்லை. இட்ட சித்தியில் முழுகியடைய வேண்டிய இன்பங்களை வாய்மையில் வழுவாமல் மன்னுயிரை ஓம்புதலாற் பெறலாமே? அத்தகையோர் அடையாத பொருள் உண்டோ? ஆதலால், யாங்கள், எங்கட்குத் தோன்றிய வழியிலே செல்வோம். *நீ 'காமுற்ற தெய்வத்தைச் சென்று கண்டு அடிபணிய நீயும் செல்வாயாக!''

இவ்வாறு அவனுக்கேற்றவற்றை உரைத்துக் குன்றாத ஒழுக்கத்தை யுடைய கோவலனுடனே அன்றைக்குத் தங்குதற்குரியதொரு பதியிலே தங்கினர்.

காமுறை தெய்வம்:

வைகறையி லெழுந்து நடந்து சென்று முன்னாட் போலவே மற்றொரு பதியிலே தங்கி, மறுநாளும் சென்றனர். அப்பொழுது கரிய பெரிய கண்களையுடைய கண்ணகியும் கவுந்தியடிகளும் வழி சென்ற வருத்தத்தினாலே ஒரு பக்கத்தே தங்கினர். மறையவன் கூறிய இடை நெறியிலே ஒரு பக்கத்திலுள்ள ஒரு பொய்கையின் கரையை அடைந்து நீர் பருகும் வேட்கையுடன் ஒரு துறையிலே இறங்கி நின்றான். அப்பொழுது அந்த மறையவன் கூறிய வனதெய்வம் தன் காதலின் மிகுதியாலே சென்று கூடக்கருதி, மாதவிமேல் விருப்பங் கொண்டவன் நம்மிடமும் கொள்வான் என்று எண்ணி, மாதவியின் தோழியாகிய வசந்தமாலை போல் உருவங்கொண்டு அவன் முன் தோன்றி, ஒரு மலர்க்கொடி காற்றினாலே நடுக்க

* ''காமுறு தெய்வம்-காமமுறுந் தெய்வம் (காமக் குரோதாதிகளை யுடைய தெய்வம்.) கண்டு அடிபணிய—(நீ அத்தெய்வம் இத்தகைய தென்று) கண்டிருந்தும் அடி பணிய'' —இவ்வாறு அடியார்க்கு நல்லார் நய முரைப்பர்.

முற்ற தென்னும்படி அவனுடைய இணையடிகளிலே வீழ்ந்து பொய்க் கண்ணீரைச் சிந்தினுள். பின்னர், மாதவி கூறியதைக் கூறுகின்றவள்போல, ''மணமலர் மாலையிலே எழுதி வைத்த ஓலைப் பாசுரத்திலே தவருக ஒன்றும் எழுதிலேன். நீ கூறிய மொழிகளிலே சில தவறுண்டு போலும். அதனுலேயே கோவலன் எனக்குக் கொடுமை செய்தான்'' என்று மாதவி என்னை நோக்கிக் கூறி மயங்கி வீழ்ந்து மிக்க துயரமுற்ருள். பிறகு, ''முனிவராயினும் கற்ருேராயினும் நன்மை தீமை அறிந்தோராயினும் இது மனத்தை மயக்கும் பிணியென்று நினைத்து முகத்தையும் நோக்காமல் விலகிச் செல்லும் இப் பொது மகளிருடையே வாழ்க்கை கடைப்பட்டதே போலும்!'' என்று சொல்லித் தன் சிவந்த அரிபரந்த கொழுங் கண்களாலே வெண் முகத்தைச் சொரிந்து, விரும்பி முலைமீதணிந்திருந்த வெள் ளொளி தவழும் குளிர்ந்த தனி முத்து வடத்தையும் வெறுத்தவளாய், அதனைத் தன் கையாலே அறுத்துச்சிந்தி, என்னையும் வெறுத்துத் துறந்து விட்டாள். ஆதலின், நீங்கள் மதுரை யென்னும் மூதூராகிய நகரை நோக்கி வந்ததை, வழியில் எதிர்ப்பட்டோர் கூறியதால், வாணிகச் சாத்துடன் போந்து தனிமையால் துயரமுற்றேன். பகுத்துக்கூற முடியாத சிறந்த பண்புடையோனே! எனக்கு நீ கூறும் பணி மொழி யாது?'' என்று வினவினுள்.

இயக்கியின் நடிப்பையும் மாய மொழியையுங் கேட்ட கோவலன், 'மதியை மயக்குந் தெய்வம் இக் கொடிய காட்டில் உண்டென்று அந்தணன் கூறினு னுதலின், மந்திரத்தால் இந்த ஐவகைப்பட்ட சில்லோதியை யுடையாளைத் தெய்வமகளா மானிட மகளா எனத் தேர்ந்தறிவேன்' என்று நினைத்து, நாவினுலே பாய்கலையூறும் பாவையான அந்தரி மந்திரத்தை ஓதினுன். அவன் செயலைக் கண்ட இயக்கி அஞ்சி, 'யான் இவ் வனத்திலே திரிகின்ற இயக்கி நின்னை விரும்பி மயக்க வந்தேன். யான் செய்த இப் பிழையைப் புன மயிலின் சாயலையுடைய நின் மனைவிக்கும் புண்ணிய முதல்விக்கும் அறிவியாதே செல்க!' என்று

வேண்டிக் கொண்டு தானும் தன்னிடம் புக்காள். கற்பி ஞலும் தவத்திஞலும் சிறந்த அவர்கள் தவறு கண்டாற் பொருமற் சபிப்பரென்று அந்த இயக்கி அவ்வாறு கூறிஞள்.

ஐயை கோயிலே அடைதல்:

இயக்கி மறைந்தபிறகு, கோவலன் ஒரு தாமரை இலே யிலே தண்ணீரை முகந்து கொண்டு சென்று, நீர் வேட்கை யாலே வருத்தமுற்ற கண்ணகியின் சோர்வைத் தவிர்த் தான். அப்போது வானிலே வெங்கதிரவனின் எழுச்சி மிக்க வெம்மை செய்யத் தொடங்கியது. ஆகையால், பாலேத் தன்மை கொண்ட இக்காடு செல்வதற்கு இய லாது என்று முடிவு செய்தனர். ஆகையால், கோவலனும் வளேந்த மகரக் குழையணிந்த கண்ணகியும் கவுந்தியடி களும் வழி மயக்கத்தை யுடைய அப்பாலே நிலப் பரப் பிலே, குரவம், வெண்கடம்பு, கோங்கு, வேங்கை என்னும் இம் மரங்கள் தம்மில் தலே மயங்கிய பொழில் சூழ்ந்த இடத்திலே, வழிச் செல்வோரின் கைப் பொருளா கிய வளத்தை அல்லாமல், மழை வளத்தை விரும்பாத, வில் தொழிலேயே உழவுத் தொழிலாகவுடைய மறவர் கூற்றை மாறுபடுத்தும் வலியுடன் கொடிய வில்லே யேந்திப் பகைவர் இருப்பிடத்தே புகுந்தால், அவர்களுக்கு வெற்றியை நல்கி, அதற்கு விலேயாக மிக்க ஆண்மைத் தன்மையை உடைய அவிப்பலியைத் தான் பெறுதற்கு வழி பார்த்திருக்கும் நெற்றிக்கண்ணே யுடைய குமரியும் விண்ணேர் பரவும் பாவையும் குற்றமற்ற சிறப்பினே யுடைய துறக்க நாட்டையுடையவளும் ஆகிய ஐயையின் கோயிலே அடைந்தனர்.

12. வேட்டுவ வரி

சாலினி செயல் :

வெங்கதிரின் வெப்பம் மிகுந்து செல்லும் வழி வெம்மை விளைக்கும் பாலைத் தன்மையை அடைந்தாலும், நறிய பல வகைக் கூந்தலையுடைய கண்ணகி நடுங்குதற்குக் காரணமான துன்பத்தை அடைந்து, மெய் வருந்திச் சிறிய அடிகள் கொப்புளங் கொண்டதாலும் மேலே நடக்க முடியாமற் பன்முறையும் பெருமூச் செறிந்தாள். எனவே, அவர்கள் மேலே செல்லாமல், நோய் தணியும்படி, முற்கூறிய ஐயையின் கோயிலை அடைந்து, பலரும் சென்று பயிலாத ஒரு பக்கத்திலே அமர்ந்திருந்தனர். இவர்கள் செயல் இங்ஙனமாக, இனி, ஆங்கு மறவர் குடியாகிய சிற்றூரிலே நடைபெற்றதைக் கூறுவோம்.

இடும் முள்ளை வேலியாகவுடைய, கொள்ளையடித் துண்ணும் வேடருடைய சிற்றூரின் நடுவிலுள்ள மன்றிலே, அம்பை வழங்கும் வில்லேந்திய மறவர் குடியிற் பிறந்த உரிமையை யுடையவளும் பழங்கடனை, ஐயைக்குக் கொடுத்துப் போந்தவளும் ஆகிய சாலினியானவள், தெய்வத் தன்மையுற்று மெய்ம்மயிர் சிலிர்த்து மூரிநிமிர்ந்த கைகளை ஒற்றையும் இரட்டையும் ஆக்கி, அவிநயத்தோடு கூட்டித் தாளத்திற்கு ஒப்ப அடிபெயர்த்து வேடர் வியப்ப ஆடிக் கூறுவாள் :

“நீங்கள் முன்பு கூறிய நும் கடனைக் கொடாததாலே, வலிய வில்லையுடைய எயினர் மன்றுகள் இன்று பாழ்பட்டன. பகைவருடைய ஊர்களில் கல்லென்னும் ஒலியுடன் ஆநிரைகள் மிக்கன. இம் மறக்குடியிலே தாயம்பற்றி வருகின்ற எயினரும் தமக்கு முறைமையாகி வருகின்ற ஆறெறிதல் சூறையிடுதல் ஆநிரை கொள்ளுதல் முதலியவற்றால் விளையும் வளம் குன்றி, அறக்குடிகளைப் போலச் சினங் குறைந்து செருக்கு அடங்கி விட்டார்கள்.

கலையாகிய ஊர்தியை யுடைய கொற்றவை தான் கொடுத்த வென்றிக்கு விலையாகிய உயிர்ப் பலியை உண்ணக் கொடுப்பின் அல்லது நும் வில்லுக்குப் பொருந்திய வென்றியைக் கொடுப்பாளல்லள். களவு செய்துண்ணும் உணவையுடைய வேடர்களே! நும் சுற்றத்தினர் மது வுண்டு. களிக்கும் வாழ்வை நீர் விரும்பினீராயின் செல் விக்கு நேர்ந்த கடனைக் கடிதிற் கொடுமின்கள்!''

வேடர் குடிக் குமரியைக் கொற்றவை போல அணிவித்தல்:

இவ்வாறு சாலினி கூறினவுடன் வேடர்கள், தாம் சுட்டிய பகைவர் தலையைத் தாமே அறுத்திட்டு எண்ணு வதன்றிப் பகைவர் சுட்டி யெண்ணுதல் அவரிடத்து முடிவு போகாமைக்குக் காரணமாகிய தம் பழங்குடியி லுள்ள குமரி ஒருத்தியை; அவளுடைய குறிய நெறித்த கூந்தலைச் சடையாகக் கட்டி, அம்முடியிலே சிறிய வெள்ளிய அரவினது குருளையாகப் பொன் நாணை வளை யக் கிடத்தினர். காவற்காடு சூழ்ந்த தோட்டப் பயிரை அளித்த பன்றியின் கோட்டைப் பறித்து, அதனை இளைய வெள்ளிய பிறையென்னும்படி சாத்தினர். கொடுந்தன்மை மிக்க வலிய புலியின் வாயைக் கிழித்து உதிர்த்த பற்களை வரிசையாகத் தொடுத்துத் தாலியாகக் கட்டினர். புலியி னுடைய வரியும் புள்ளியும் தம்முள் மயங்குதலை யுடைய தோலை மேலே மேகலையாக வுடுத்தினர். வயிர வில்லை வருந்தி வளைத்து அவள் கையிலே கொடுத்தனர். பின்னர் அவளை முறுக்குண்ட கொம்புகளையுடைய் கலையின் மீது இருத்தினர்.

பிறகு, பாவையும் கிளியும் தூவியையும் அழகிய சிறகுகளையு முடைய காட்டுக் கோழியும் நீல நிற மயிலும் பந்தும் கழங்கும் காணிக்கையாக நல்கி வணங்கி வாழ்த் தினர். பின்னர் ஏவல் மகளிர் வண்ணத்திற் குரியவற்றை யும் சுண்ணப் பொடியையும் சாந்தையும் அவரை துவரை முதலிய சுண்டலையும் எட்கசிவையும் நிணச் சோற்றையும் பூவையும் புகைப்பொருளையும் பொருந்தி நறுமணப்

பொருளையும் ஏந்தியவராய்ப் பின்வர, வழி பறிக்கும் போது கொட்டும் பறையும் சூறை கொள்ளும்போது ஊதும் சின்னமும் துத்தரிக் கொம்பும் குளிக் குழலும் எறி மணியும் ஆகிய இவை கலந்தொலிக்கச் சென்று கொற்றவையின் முன்னே நிறுத்தினர்.

வேடர் வழிபாடு :

அவ்வேடர்கள், தாம் கொடுத்த வெற்றிக்கு விலையாகிய உயிர்ப்பலியை உண்ணும் விரிந்த பலி பீடத்தை முதலிலே வணங்கினர். பின்னர், விரைந்து செல்லும் கலையாகிய ஊர்தியை உடையாளைக் கையால் தொழுது ஏத்தினர்.

சாலினி கூற்று :

அப்பொழுது கொற்றவையை வழிபடுஞ் சாலினி தன்மீது கொண்ட தெய்வத் தன்மையாலே, இணையான மலர்போலும் சிறிய அடிகள் நோவ வருந்தி, அவ்வருத்தம் நீங்கக் கணவனுடனே இருந்த கண்ணகியை நோக்கி,

“இங்கிருக்கின்ற இவள் கொங்க நாட்டினை ஆளும் செல்வி, குட நாட்டினை யாளும் அரசி, தென் தமிழ் நாடாளும் அன்னை, முற்பிறப்பிற் செய்த தவத்தின் கொழுந்து இவ்வுலகிற்கு முழு மாணிக்கம் போன்று, உயர்ச்சிபெற்ற பெண்ணுருக்கொண்ட தொரு திருமணி” என்று மிகுத்துரைத்தாள்.

அவ்வாறு மிகுத்துரைத்ததைப் பொறாத கண்ணகி, இம்முதறிவாட்டியாகிய சாலினி தெய்வமயக்கத்தாலே கூறினள் எனக் கருதி, நாணினால் கணவனது முதுகின் பக்கத்தே மறைந்து அவளது அறிவின்மையை இகழ்ந்த புதிய சிறு நகையுடன் நின்றாள்.

அமரிளங்குமரியின் அருள்

மதியாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னியையும், நுதலைத் திறந்து விழித்த இமையாத நாட்டத்தினை

யும் பவளம் போலும் வாயையும் வெள்ளிய முறுவலையும் கரிய கண்டத்தினையுமுடையாள், கொடுஞ் சினத்தை உடைய வாசுகியை நாணுகப் பூட்டி மேருமலையை வில்லாக வளைத்தவள், நஞ்சு ஊறும் துளையெயிற்றையுடைய பாம்பாகிய கச்சினுலே பிணித்த முலையினள், வளையணிந்த கையிலே சூலத்தை ஏந்தியவள், சிங்கத்தை உரித்து அதன் தோலை மேகலையாக வுடுத்து யானையை உரித்து அதன் தோலை உத்தரியமாக அணிந்தவள், இடக்காலிலே சிலம்பையும் வலக்காலிலே வீரக்கழலையும் ஒலிக்க அணிந்த சிற்றடிகளையுடையாள், மேலான வெற்றியை யுடைய வாள்தொழில் வாய்ப்புப் பெற்ற கொற்றவை, உடலுக்குத் தலை வேருன வடிவினையும் திரண்ட தோளினையும் உடைய விக்கிரமன் என்னும் அசுரனின் தலையைத் துணித்து அதன்மீது நின்ற தையல், தேவரும் முனிவரும் வணங்கப் பெற்றவள், புனைவில்லாதவள், அழிவில்லாதவள், வெண்ணிறமுடையாள், சமரில் வல்லவள், சூலமேந்தியவள், நீலநிறமுடையாள், திருமாலின் தங்கை, கொடிய வாளை கையிலே பிடித்த ஐயை, திருமகள், பாயும் கலையை ஊரும் பாவை, ஆயும் கலையின் வடிவாகிய பாவை, அழகிய தொடியையும் கலங்களையும் உடைய பாவை, * ஆகிய குமரி, வேடர்களுக்குப் பண்டு அருளாதிருப்பினும் தன் தமர் தொழ வந்த அந்த வேடர்குடிக் குமரியின் வரிக்கோலம் வாய்ப்புடையதென்று கண்டு அருளினள்.

ஐயை முன்றிற் சிறப்பு

கண்ணுதற் பெருமானுடைய இடப்பாகத்தை ஆளுதலுடையாளின் பலி முன்றிலிலே, எங்கும் மணம் வீசும் சுரபுன்னையும் நரந்தையும் நிரலாகப் பூத்தன! ஆச்சாவும் சந்தனமும் உயர்ந்து பூத்தன! சேமரமும் மாமரமும்

---

* மாலும் அயனும் தொழத் தோன்றிய கன்னிக் கோலமுடையாளாய்ப் பொருந்திய குமரி ஆகியவள் இச்சாலினி கொண்ட வரியுறு கோலம் வாய்ப்புடைத்தாயிருப்பது கண்டு, பண்டு அருளாதிருப்பினும் இப்போது மகிழ்ந்து அருளினுள்-என்றும் கூறலாம்.

செறிந்து பூத்தன! பிறை நீங்காத சடையை யுடையாள் திருமுன்றிலிலே வேங்கைகள் செம்பொன்னை மலர்ந்து சொரிந்தன! நல்லிலவங்களின் கொம்புகள் செவ்விதழைப் பூத்துச் சொரிந்தன! புன்க மரங்கள் தங்கள் கொம்பு களிலிருந்து வெண்பொரிகளைச் சிந்தின! திருமாலுக்கிளை யாளின் திருமுன்றலில், மணங் கமழும் வெண் கடம்பும் பாதிரியும் புன்னையும் குரவமும் கோங்கமுமாகிய இவை மலர்ந்தன. இக்கொம்பரின் மீது வண்டினம் தேனினத் துடன் யாழினிசைப் போலப் பாடும்.

வள்ளிக் கூத்து

(சாலினி கொண்ட கோலத்தை வியத்தல்)

கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்.

ஐயை திருவினணி கொண்டு நின்றவிப்
பையர வல்கு றவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
எய்வி லெயினர் குலனே குலனும்.

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றவிவ்
வாய்தொடி நல்லா டவமென்னை கொல்லோ
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வி லெயினர் குலனே குலனும்.

[இறைவி அணியாகக் கொண்டவற்றைக் கொண்டு நின்ற இச்சாலினி முன் செய்த தவம் எத்தவமோ! இவள் பிறந்த குடியிலே பிறந்த வில்தொழிலில் வல்ல மறவர் குலமே குலமாகும்!

இந்த ஐயையின் அழகிய கோலத்தைக் கொண்டு நின்ற அரவின் படம் போலும் அல்குலையுடைய இவள் முன் செய்த தவம் எத்தவமோ! இவள் பிறந்த குடியிலே பிறந்த அம்பைச் செலுத்தும் வில்லையுடைய வேடர் குலமே குலமாகும்!

பாயும் கலைப் பாவையின் கோலத்தைக் கொண்டு நின்ற அழகிய தொடியை உடைய இச்சாலினி முன் செய்த தவம் என்ன தவமோ! இவள் பிறந்த குடியிலே பிறந்த மூங்கில் வில்லையுடைய எயினர் குலமே குல மாகும்!]

முன்னிலைப் பரவல்

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமே னின்றாயால்
அரியரன்பூ மேலோ னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்.

சங்கமுஞ் சக்கரமுஞ் தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமே னின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்.

[விண்ணவர் வணங்க, நான் மறைக்கும் மறைப் பொருளாய்த் தன்னை வழிபடுவோர் ஞானத்தின்கண் எழுங் கொழுந்தாகிச் சலிப்பின்றி நிற்கும் நீ, புலித் தோலை உடுத்தி, யானைத் தோலைப் போர்த்திக் காட்டிலே எருமையின் கரிய தலைமேல் நின்றாய்! இது என்ன மாயம்!

அரனும் அரியும் அயனுமாகிய இவர்களின் இதயத் தாமரையிலே நிலைபெற நின்று விளங்கும் விரிந்த கதிர் களையுடைய விளக்காகி நிற்கின்ற நீ, வரிவளையணிந்த கையிலே வாளை ஏந்திப் பெரிய மகிடாசுரனைக் கொன்று, கரிய முறுக்குண்ட கொம்பையுடைய கலையின் மீது நிலைத்து நின்றாய்! இது என்ன மாயமோ!

கங்கையைச் சடைமுடியின் மீதணிந்த இறைவனது இடப்பக்கத்திற்குரிய மங்கை கொண்ட உருவாய் மறை கள் போற்ற அவற்றிற்குத் தோன்றாமல் நிற்கின்ற நீ,

சங்கினையும் சக்கரத்தினையும் கையில் ஏந்திச் சிவந்த கண்ணையுடைய அரிமாளுகிய சினத்தையுடைய விடையின் மீதே நின்ருய்! இது என்ன மாயமோ!]

வென்றிக் கூத்து

அவ்விடத்தே, கொன்றை மலரையும் துளவ இதழையுங் கலந்து தொடுத்த மலர் நிறைந்த மாலையைத் தோளின் மீதணிந்து, அசுரர் போரிலே வாடும்படி அமரர்க்காக ஆடிய கூத்தை ஆடுதற்கு ஈண்டு உட்படுவாள்.

கூத்துள் படுதல்

ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு
மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கான்மேல்
வாளமலையாடும் போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கான்மேல்
வாளமலை யாடுமாயிற்
காயா மலர்மேனி யேத்தி வானோர் கைபெய்
மலர்மாரி காட்டும் போலும்.

[அழகிய பொன்னாற் செய்த அரிபொருந்திய சிலம்பும் வளையலும் மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்ப, வஞ்சனையாகப் போர் புரியும் வாளவுணர் செய்யும் போர் வீழும்படி இந்த நங்கை மரக்கால்மேல் நின்று வாட்கூத்தாடுவாள். அவ்வாறு ஆடும்போது, விண்ணவர்கள் இவளுடைய காயாமலர் போலும் மேனியை வாழ்த்தும் வகையிலே பெய்யும் மலர் மாரியை அக்கூத்துக் காட்டும்.]

*கொற்றவை நிலை

உட்குடைச் சீறூ ரொருமகனு னிரைகொள்ள
வுற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும்
வேண்டும்போலும்

* பு. வெ. வெட்சிப் படலம் 20. 'ஆளிமணிக் கொடி' என்ற செய்யுள் (வெட்சி)

வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும்
வேண்டின் வேற்றூர்க்
கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக்
காட்டும் போலும்.

[பகைவருக்கச்சத்தையூட்டும் சிற்றூரிலே தனக்கிணையில்லாத வீரன் நிரை கொள்ளத் தலைப்பட்ட விடத்து, அவனுக்குப் போர்ப் பூவாகிய வெட்சி மலரை அணிவிப்பதற்கு வெள்ளிய வாளுழத்தி (கொற்றவை) வேண்டும். அதற்காக அவளும் அவனுடன் செல்ல நினைத்தபோது, பகைவருரைச் சூழ்ந்த காட்டிலுள்ள காரி என்னும் பறவை தனது கடிய குரலாலே அவர்க்கு வரும் கெடுதியை முன்னறிவித்து நிற்கும்.]

*கள்விலையாட்டி மறுப்பப் பொருமறவன் கைவி லேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப்
போகும் போலு
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப்
போகும் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங்
கொடுமரமுன் செல்லும் போலும்

[கள் விற்பவள் இவன் பழங்கடன் கொடாமையால் மேலும் கள் கொடாமல் மறுப்ப, அது பொருத வீரன் அந்நிலையே வில்லைக் கையில் ஏந்திப் பறவைச் சகுனமும் தன் கருத்திற் கேற்பப் பொருந்துதலின், பகைவர் நிரை கொள்ளுதலை விரும்பிப் போவான். அவ்வாறு போகும்போது, தான் கொண்ட ஆளிக்கொடியை உயர்த்திக் கொற்றவையும் வில்லின் முன்னே செல்வாள்.]

கொடையென்னும் துறை; கண்டார் கூற்று

இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன.

---

* பு. வெ. வெட்சிப் படலம் 2. 'அருஅ நிலைச்சாடி' என்ற செய்யுள். (தன்னுறு தொழில்)

முருந்தே ரிளநகை காணுய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்னகணி முன்றி னிறைந்தன.

கயமல ருண்கண்ணாய் காணுய்நின் னையர்
அயலூ ரலற வெறிந்தநல் லானிரைகள்
நயனின் மொழியி னரைமுது தாடி
எயின ரெயிற்றியர் முன்றி னிறைந்தன.

துறைப்பாட்டு மடை

[மாமை நிறமுடைய இளைய வேட்டுவமகளே! முன்னுளில் நின் தமையன்மார் கவர்ந்துகொண்டு வந்த நல்ல ஆனிரைகள், வேல்வடிக்கும் கொல்லனும், துடிகொட்டும் புலையனும் பாடவும் புணர்க்கவும் அடைக்கவும் வல்ல யாழ்ப்பாணரும் என்னும் இவர்களுடைய முன்றிலிலே நிறைந்தன. நீ இவற்றைக் காண்பாயாக!

முருந்து போலும் இளமுறுவலையுடையாய்! நின் தமையன்மார் முன்னுளிலே கரந்தையார் அலறும்படி கைப்பற்றி வந்த இனநிரைகள், கள் விலையாட்டியும் நல்ல வேய்த் தொழிலை ஆராய்வோனும் பறவை நிமித்தங் கூறுவோனும் என்று கூறப்பட்ட இவர்களுடைய முன்றிலிலே நிறைந்தன. நீ இவற்றைக் காண்பாயாக!

பெரிய மலர் போன்ற மைதீட்டிய கண்களையுடையாய்! நின் தமையன்மார், அயலிலுள்ள ஊர் அலறும்படி முன்னுளிலே வென்று கொண்டு வந்த நல்ல ஆனிரைகள் இனிமையறியாத மொழியையும் நரைத்து நீண்ட தாடியையும் உடைய வேடரும் அவ்வாறே முதிர்ந்த வேடிச்சியரும் ஆகிய இவர்களுடைய முன்றிலின் நிறைந்தன! இவற்றை நீ காண்பாயாக!]

அவிப்பலி; குருதிப்பலியுமாம்

நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை,
கைச்சிலையும் நல்கும்யாம் காணேம்கொல்-மிச்சில்கூர்,

-வாளின் வாய்த் தீண்டாத வான்குருதி மெய்சாய்ப்பத்-தாளின் வாய் வீழ்த்தான் தலை" என்று வருமாதலான்.

சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்
இடர்கெட வருளுநி னிணையடி தொழுதேம்
அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே.

அணிமுடி யமரர்த மரசொடு பணிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேம்
கணநிரை பெறுவிற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே.

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவ ரெயினர்க ளரையிருள்
அடுபுலி யனையவர் குமரிநி னடிதொடு
படுகட னிதுவுகு பலிமுக மடையே.

[ஞாயிற்றின் வெம்மை உலகை வருத்தாமல் அவ் வெம்மையைத் தாமே தாங்கி ஞாயிற்றுடன் சுழன்று திரிதலைச் செய்யும் முனிவர்களும் வானவரும் ஆகிய இவர்களின் இடர் நீங்கும்படி அருள் செய்யும் நின் அடியிணையைத் தொழுதோம். கொலைத் தன்மையும் வலிமையும் உடைய எயினர் அடையும் வெற்றிக்கு விலையாக, நின் மலரடியைத் தொட்டுச் சூளுற்ற கடனாகிய, மிடற்றினின்றும் உமிழும் குருதியாகிய இதனை ஏற்றுக்கொள்வாயாக!

அழகிய முடியையுடைய வானவர் தம் அரசனோடு வந்து பணிதலைச் செய்யும் நீலமணிபோலும் உருவினையுடையாய்! நின் அடிமலரைத் தொழுதோம். ஆனிரைத் தொகுதியைப் பெறும் எயினர்கள் தம் பகையை வெல்வதற்குக் காரணமான விலையாக இடுங்கடனாகிய நிணத்தொடு கலந்து சிந்துகின்ற குருதிப்பலியாகிய இதனை ஏற்றுக் கொள்வாயாக!

துடியும் சிறு பறையும் கொம்பும் வெடிபட முழங்கப் பாதியிரவிலே வருகின்றவர்களும் கொல்லும் புலிபோன்ற

வர்களுமாகிய எயினர்கள் முன்னுளில் நின் மலரடியைத் தொட்டுச் சூளுற்ற கடனுகிய மிடற்றினின்றும் சொரி கின்ற குருதியாகிய பலியைக் கொள்வாயாக!]

பலிக்கொடை

வம்பலர் பல்கி வழியும் வளம்பட
அம்புடை வல்வி லெயின்கட னுண்குவாய்
சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு பிறையுடன் சேர்த்துவாய்.

துண்ணென் றுடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணி லெயின ரிடுகட னுண்குவாய்
விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்.

பொருள் கொண்டு புண்செயி னல்லதை யார்க்கும்
அருளி லெயின ரிடுகட னுண்குவாய்
மருதி னடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளுஞ் சகட முதைத்தருள் செய்குவாய்.

[சங்கரி! அந்தரி! நீலி! சடைமுடியிலே பாம்பைப் பிறையுடன் முடித்தவளே! வழிப்போவார் மிகுந்து அவரை வருத்திக் கொள்ளும் பொருளாகிய வளம் வழி தோறும் உண்டாகுக! அதற்கு விலையாக வல்வில் எயின ராகிய யாம் இடும் இப் பலிக்கடனை உண்பாயாக!

வானவர் அமுதத்தை யுண்டாலும் சாகின்றனர். நீயோ ஒருவரும் உண்ணாத நஞ்சை யுண்டும் சாவாதிருக் கின்றனை! அத்தகைய அழிவற்ற நீ, கேட்டோர் துணுக்குறத் துடிகொட்டுதலுடன், பகைவர் துஞ்சும் பொழுதில் ஊர்க்கொலை செய்யும் கண்ணோட்ட மில்லாத மறவர் நினக்கிடும் கடனுகிய இதனை உண்பாயாக!

நின் மாமன் செய்த வஞ்சமாகிய மருதின் மீதே நடந்து, அதனைச் சாய்த்து, உருளும் இயல்பினதான சக டத்தையும் உதைத்தருள் செய்யும் நீ, வழிப் போவார் பொருளைக்கொண்டு அவர்களுக்குப் புண்ணைக் கொடுப்ப

தன்றி, அவரிடம் சிறிதும் அருளும் இயல்பில்லாத மறவர் இடும் கடனாகிய இதனை உண்பாயாக!]

வாழ்த்து

மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே.

[முதிய மறையை அருளிய பிரமனுக்குப் பின்னவனாகிய குறுமுனி வாழும், சந்தனம் அகில் முதலிய மரங்களாலே சுவைமிக்குயர்ந்த பொதியிற் பொருப்பனாகிய வெற்றியை விரும்பும் பாண்டியன், பகைவருடைய முனையிடமும் அவர் மீட்கும் தொழிலும் பாழ்படும்படி வெட்சி சூடுவானாக!]

துறை என முன் வந்ததனால் கொற்றவைக்குப் பரவுக்கடம் பூண்டலும் கொள்க.

"வந்த நிரையின் இருப்பு மணியுடன்
எந்தலை நின்றலை யாம்தருதும்—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை! கொற்றம் கொடு"—

பெரும்பொருள் விளக்கம்

——

13. புறஞ்சேரி யிறுத்த காதை

அம்பணவர் சேரி அடைதல்

முன்கூறிய சாலினியாகிய பெண் அணிந்த கோலமும் கூத்தும் முடிந்தபிறகு, கோவலன் தவ முதல்வியாகிய கவுந்தியடிகளின் திருந்திய அடியைச் சென்று வணங்கி, 'இவ் வழகிய தன்மையினுள் இந்தக் கொடிய கதிரின் வெம்மை தன் மெய்யிலே படப் பொருள். மேலும் இவளுடைய சிற்றடியும் வெம்மை மிகும் பருக்கைக் கற்களையுடைய இப்பாலை நிலத்திலே (கொப்புளங் கொண்டதால்) படிந்தில. ஆகையால் பகற் பொழுதிலே நம் செலவைத் தவிர்தல் வேண்டும். இனி, நேரிட்டோரைக் கைக்கொள்ளுதற்குரிய வலிமையுள்ள கரடியும் தாம் அகழக்கூடிய கொடிய புற்றினை அகழா. ஒளி பொருந்திய வரியையுடைய புலிகளும் மான் கூட்டத்தை வருத்த மாட்டா. இரைதேடும் முதலையும் பாம்பும் பேயும் இடியும் ஆகிய இவை தம்மை நலிந்தவர்க்கு வருத்தம் உண்டாக்கத் தக்கனவாயினும் உண்டாக்க மாட்டா. செங்கோன்மையை உடைய பாண்டியர் தம் ஆணையாற் காக்கும் நாடென்பது திசையெங்கும் பரவிய இசை மிகப் பெரியது என்பதே இந்த நன்னிலைக்குக் காரணம். ஆகையாற், பகலிலே ஞாயிற்றின் ஒளியினும், பல்லுயிர்க்கும் அருள் புரியும் இரவில் உண்டாம் வெளிச்சத்திலே, நெடிய இடைப்பட்ட வழியைக் கடத்தற்கு வரும் தவறொன்றும் இல்லை'' என்று கூறினன்.

'கவுந்தியடிகளும், 'நீ கூறியவாறே இரவிலே செல்லலாம்' என்றார். எனவே, கொடுங்கோன்மையை யுடைய வேந்தனின் குடிகள் அவன் போகுங் காலத்தையும் தண்ணளி வேந்தன் வரும் காலத்தையும் நோக்கி யிருப்பது போல, வெங்கதிரவன் மறையும்பொழுதையும் தண் கதிரவன் வரும்பொழுதையும் இவர்கள் நோக்கி யிருந்தனர்.

அப்போது பாண்டியன் குலத்திற்கு முதல்வனாகிய திங்கட் செல்வன் பலவகையான விண்மீன்களாகிய தானையுடன் பால்போன்ற தண் கதிர்களைப் பரப்பித் தோன்றினான்.

அந்நிலையிலே பார்மகள் கண்ணகியை நோக்கிப், 'பாவையே! முன்னாளிலே நின் கணவன் நின்னைப் பிரிந்திருந்த இளவேனிற் காலத்திலே, வான்மீன் ஒழுங்கு போன்ற முத்துவடமும் சந்தனக் குழம்பும் நின் சீரிய அழகிய இளமுலைகளைச் சேராமல் நீங்கவும், பல வகைப் பூந்தாதும் கழுநீர்ப் பிணையலும் முல்லை மலரின் தொடர் பருத பூங்குழலிலே பொருந்தாதொழியவும், அழகிய சந்தனத் தளிருடன் பல மலர்களின் இதழும் நின் சிவந்த தளிர்போலும் மேனியைச் சேராமல் ஒழியவும் பொதிய மலையிலே தோன்றி மதுரையிலே வளர்ந்து புலவர் நாவிலே பூத்து நிலைபெற்ற தென்றலுடன் வெண்மையான ஒளியையுடைய திங்களின் கதிர் நின் மெய்யிலே சொரிதல் ஒழியவும் வேண்டினை. *இப்பொழுது வேனில் திங்கள் இவ் வெண் கதிரை நின் மெய்யிலே சொரியுமாறும் விரும்பியிருப்பையோ? இராய்" என்றுரைத்து வருந்தி நெட்டுயிர்ப்புடன் துயின்றனள்.

இவ்வாறு இரவு வந்ததாக, அரிய வழியிலே இதுவரையில் வருந்தி வந்த கண்ணகியைக் கோவலன் நோக்கி, 'இவ்விரவில் நாம் செல்லும் வழியிலே புலிமறுகும், பேராந்தை குழறும்; கரடியும் இடிக்கும். இவற்றிற்குத் துணுக்குறாது வருவாயாக' என்று கூறி, இவட்குக் கண்கள் துயிலால் மயங்குதலானும் கால் நிலத்திற் படமுடியாத காரணத்தாலே குஞ்சித்துத் தளர்ந்து நடத்தலானும் வளைவையுடைய வளைபொருந்திய அவள் செங்கைக்குத் தன் தோள் ஆதார மாதலை அவ்வாறு கூறிப் பற்றிக் கொள்ளும் முறையையும் காட்டி, மேலும் அவள் மனத் துயரம் நீங்குதற்காக மறவுரைகளினின்றும் நீங்கிய

*கவுந்தியடிகளுடன் வருதலாற் புணர்ச்சி நிகழ்தற்கிடமில்லையென இவ்வாறு கூறினாள்.

மாசற்ற கேள்வியையுடைய கவுந்தியடிகள் கூறும் அறவுரைகளைக் கேட்டு, அவ்வுரைகளாலே, தொலைத்தற் கரிய வழியைத் தொலைத்துச் சென்றனர்.

அப்போது வேனில் நிலைபெறுதலாலே வெந்து கரிந்து கிடந்த மூங்கிற் காட்டிலே காட்டுக்கோழிச் சேவல்கள் வெங்கதிரின் எழுச்சியை அறிவித்தன. இவர்களும், நாவினாலே மறைநூலை நவிலாமல் வரிப்பாட்டை நவிலும் கோட்பாட்டையுடைய நூலணிமார்பர்கள் வாழும் சேரியை நெருங்கினர். அங்கே ஊருக்கயலதாகிய இடத்திலே ஒரு கோயிலிலே தங்கினர்.

பின்னர்க், கோவலன் அந்தப் புலரிக்காலத்தே மாதவத் தாட்டியையும் தன் காதலியையும் ஒரு குற்றமற்ற சிறப்பினையுடைய ஓர் ஒதுக்கமாகிய அடைப்பகத்தே இருத்தி; அங்கிருந்த இடுமுள் வேலியை ஒரு முள்ளைப் பிரித்து நீங்கிக் காலைக் கடனைக் கழித்தற்கு, அந்த நீண்ட நெறியிலே உள்ள நீர்நிலை யொன்றின் அருகே சென்று நின்றான்.

மாதவியின் முடங்கல் :

அவ்வாறு வந்துநின்ற கோவலன், தன் காதலியுடன் கானக நெறியிலே வந்ததை எண்ணி யெண்ணி, உலையில் ஊதும் துருத்தி போல நெடி துயிர்த்து, உள்ளம் வெதும்பிக் கலங்கித் தனிமையுற்று நிறம் வேறுபடுதலால், அங்கு வந்த கௌசிகன் கட்புலன் மயங்கி ஐயமுற்று, அவ்வையந் தெளிதற் பொருட்டு, பசிய இலைகளையுடைய, குருக்கத்தி படர்ந்த நிழலையுடைய இடத்தை அடைந்து அதனைப் பார்த்து, *" ஏ மாதவியே! கோவலன் பிரியக் காமத் தீயினாலே கொடிய துயரமுற்று, அலரைப் பொறாமல் அப்பொழுதே வருந்தி நின்ற மாதவியைப் போன்று, நீயும் இளவேனில் நீங்க, அப்பொழுதே அதற்காற்றாமல்

*மாதவி என்பது குருக்கத்திப் புதரையும் மாதவியையும் குறிக்கும். அலர் என்பது மலரையும் பிறர் பழித்தலையும் குறிக்கும்.

பொறுத்தற்கரிய வெம்மையை யுடைய முதுவேனிற் காலத்து வெயிலால் துயரமுற்று அலரைப் பொருமற் களைந்து அக்கால நெருக்கத்துடன் வருந்தினை! இது மாதவி யென்னும் பெயர் வாசி போலும்!'' என்றான்.

கோவலன் அம்மொழி கேட்டு, 'நீ இங்குக் கூறிய இம் மொழிக்குப் பொருள் யாது?' என்று வினவினான். ஐயமுற்றிருந்த கௌசிகன் அம் மொழியாலே, இனி ஐய மிலேன்; தெளிந்தேன்' என எண்ணி அவரருகே வந்து 'கோவலன் பிரிவினாலே அவன் தந்தையும் தாயும் அரிய மணியை இழந்த நாகம் போல அழகும் ஒளியும் நீங்கி ஒடுங்கியதும், நெருங்கிய சுற்றத்தார் இனிய உயிரை யிழந்த நாகம்போலச் செயலழிந்து துயர்க் கடலிலே முழுகியதும், கோவலன் தந்தை தன் பணியாளரைநோக்கி, எல்லாத் திசையினும் போய்க் கோவலனைத் தேடிக் கொண்டு வருக என, அவர்கள் அவ்வாறே சென்றிருப் பதும், எவ்வளவு சிறிய தொழிலானாலும் தந்தை யேவிய பணியைச் செய்தலே அரிய பொருளாவதன்றி, அரசாட்சி எப்போதும் எள்ளி நீக்கத் தகுந்ததே என்று கருதி, அடை தற்கரிய கொடிய காட்டை யடைந்த இராமனைப் பிரிந்த அயோத்தி செயலற்று மயங்கினாற் போலப் பெரிய புகழை யுடைய புகாரின் கண் உள்ளோர் யாவரும் மிகவும் அறிவு மயங்கியதும், திருமுகத்தை மறுத்துக் கூறிய மறு மொழியை வசந்தமாலையின் வாயாலே கேட்ட மாதவி பசந்த மேனியுடன் நினைவாகிய வருத்தம் உற்று, உயர்ந்த எழுநிலையுடைய மாடத்திலே நாலாவது நிலத்தில் ஒரு படுக்கையமைந்த சேக்கையிலே மயங்கி வீழ்ந்ததும், அவ் வாறு பிரிவு நோயுற்றவள் அடைந்த துன்பத்தைக்கேட்டுக் களிப்பிழந்து தாழ்ந்த துயரங்கொண்டு தான் சென்றதும், அப்போது மிக்க துயரமுற்ற மாதவி, 'நின் இணையடியைத் தொழுதேன். எனக்கு இவ்வாறு வந்த துயரைத், தீர்ப்பாயாக! எனச் சொல்லித் தன் கையால் எழுதி இவ்வோலையை என் கண்மணியனையானுக்குக் காட்டு வாயாக' என்றுதன் கையிலே தந்ததையும், அவ்வாறு தந்த

ஓலையை எடுத்துக் கொண்டு இடைவழியெங்கும் திரிந்து தேடியும் காணாமல் தான் சென்ற நாடுகளும்''

அவ்வழி மருங்கேயிருந்து ஒழிவின்றி யுரைத்தபிறகு, அழிதலைப் பொருந்திய உள்ளத்தையும் நிறைந்த காம நோயையும் மலர் அவிழ்ந்த நெளிந்த கூந்தலையும் உடைய மாதவி தந்த ஓலையைக் கோவலன் கையிலே கொடுத்தான்.

கோவலன் அதனை வாங்கினான். அப்போது, அவ் வோலையின் மடிப்புறத்திலே பதித்த மண்ணின் மேல் மாதவி தன் குறுநெறிக் கூந்தலாலே ஒற்றிய பொறி, தன்னுடன் அவள் கூடி வாழும் காலத்தே தன் கையால் அவள் கூந்தலுக்கு வாசநெய் பூசிய தன்மையைத் தனக்கு உணர்த்திக் காட்டியதாகையால், அதனைக் கடிதிற் பிரிக்க மனம் வராமற் சிறிது மயங்கியிருந்து, பிறகு, பிரித்து, ஏட்டைச் சுருள் நீக்கி, அதனுட் கிடந்த வாசகத்தின் பொருண்மையை நோக்கினான்.

அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி.

"அடிகளின் திருவடிகளின் முன்னர் யான் திசை நோக்கி விழுந்து வணங்கினேன். இதனைத் திருவுளத்திலே கண்டருள்க!

வடிமொழி உணர்ந்து குற்றம் தீர்ந்த நல்ல காட்சியை உடைய உயர்ந்தோனே! இருமுதுகுரவர் பணி விடை ஒழிந்ததன் மேலும் குலத்திற் பிறந்து கற்புடையவளுடனே இரவின்கண் நகரின் இடையிலிருந்து கழிந்து போதற்கு வந்த பிழைப்பு யாது? அதனை அறியாமையால் என் பிழைப்போ என்று அவலித்து அரற்றிக் கவலித்துக் கையாற்றிலே நெஞ்சம் அழுங்குகிறது. என் பிழைப் பெனினும் மகளிர் சொல் குற்றமறுத சொல்லென்று திரு

வுள்ம் பற்றுதல் வேண்டும். இதுவேயும் அன்றி எனக்கு இப்பொழுது நடக்கின்ற இச்செயலறவு நன்றன்று. இதனைக் கடியல் வேண்டும். ஆதலான் இவ்வாறன்றி நினக்கு ஒரு புகழ்க் குறைபாடின்றாகப் போற்றுவாயாக!"

இவ்வாறு அவ்ள் ஓலைப்பாசுரத்திலே எழுதிய பொருளெல்லாம் உணர்ந்து, மனம் குழைந்து, 'அவளாற் குற்றம் இல்லை; என்னுடையதே; என த் தளர்ச்சி நீங்கினன். பின்னர், ஓலைப்பாசுரத்தின் பொருளை ஆராய்ந்து, "இம் மண்ணுறு முடங்கல் என்னைப் பெற்றோர்க்குத் தகுதியுடையதாகப் பொருளுரை பொருந்தியது. கோசிக மாணியே! என் குரவரின் மாசற்ற மலரடியைத் திசைநோக்கித் தொழுதேன். இவ்வோலையைக் காட்டு" எனக் கொடுத்தான். மேலும், 'என் பொருட்டாக அவர்கள் மெய்ந் நடுங்கும் நடுக்கத்தைப் போக்கி, அகத்தில் நிகழும் இடுக்கணும் நீக்குதற்கு விரைந்து செல்க!' எனப் போக்கினன்.

அம்பணவருடன் கோவலன்

பிறகு, குற்றம் அற்ற கற்பினையுடைய தன் மனைவியுடன் இருந்த மாசற்ற கொள்கையையுடைய கவுந்தியடிகள் இருக்கின்ற இடத்தை அடைந்தான்; அங்கே கொற்றவையின் வெற்றி பொருந்திய அசுரருடன் பொருத போர்க்கோலத்தைப் பாடும் பாட்டினையுடைய அம்பணவரிலே தானும் ஒருவனாகக் கலந்து கொண்டான். சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என வடமொழியில் வழங்குகின்ற பண், பண்ணியல் திறம், திறம், திறத்திறம் என்னும் இவற்றுள் தன் பண்ணியல் அத்திறமாய்த் தனக்கினமான செந்திறத்தொடு புரிந்த, நாற்பெரும் பண்ணிற்கும் முதலாகிய நால்வகை யாழினுள்ளும் செங்கோட்டியாழிலே அறுவகையுறுப்பினுள் தந்திரிகரம் திவவு என்னும் இரண்டையும் உறுதிபெறக் கட்டினன்.

[தந்திரிகரமென்பது நரம்பு துலக்குதற்குத் தகைப்பொழிய இருசாண் நால்விரல் நீளமாகக் குறுக்கிடத்தே சேர்க்கும் ஐம்பத்தோருறுப்பு. திவவென்பது நரம்புகளை

வலிபெறக் கட்டும் வார்க்கட்டு. செங்கோட்டியாழ் அறு வகையுறுப்புக்களையுடையது.]

பின்னர், அந்த யாழ் ஒற்றென்னும் உறுப்பையுடைய தாகையால், அவ்வுறுப்புடன் பற்றைப் பிறப்பிக்கும் நெறிப்படச் சேர்த்தினன்; உழை குரலாகவும் கைக்கிளை தாரமாகவும் நரம்புகளை நிறுத்தினன்; அதாவது, அரும் பாலையென்னும் இசையைப் பிறப்பித்தான். உழை முன் னர்க் கூறிய நூல்களின் வரலாற்று முறைமையான் வந்த மூவகைத் தானத்தாலும், சதி பாய்ந்து செல்லும் கலையை யுடைய பாவைபோல்வாளது பாடற்பண்ணை ஆசான் என்னும் பண்ணியலாகிய நால்வகைச் சாதியினும் பொருந்துதல் வரச் செவிப்புலத்தால் அறிந்தான்.

[ஆசான் சாதி நான்கு: அகச்சாதி காந்தாரம்; புறச் சாதி சிகண்டி, அருகுசாதி தசாக்கரி, பெருகுசாதி சுத்த காந்தாரம். பண் நூற்று மூன்று. அவை பண், பண் ணியல், திறம், திறத்திறம் என நால்வகைப்படும். அவற் றுள் இது திறம் கூறியது, மூவகைத்தானம்: எழுத்து, அசை, சீர்.]

அறிந்தபின், பண்ணையும் திறத்தையும் அவருடன் கலந்து வாசித்தான்.

பிறகு, அவரைக் 'கூடல் நகரம் இங்கிருந்து எத் துணைக் காவதம்? கூறுங்கள்' என்று வினவினன்.

அதற்கு அவர்கள்,

"அகிற்சாந்தும் கமழும் குங்குமப் பூங்குழம்பும் நாவிக் குழம்பும் குளிர்ச்சி நலத்தைக்கொண்ட சந்தனச் சாந்தும் கத்தூரிச் சாந்துமாகிய இத்தெய்வமணம் கமழும் வளவிய சேற்றினில் முழுகித், தேன் சேர்ந்த கழுநீர் மலராலும் சண்பக மலராலும் ஆகிய மாலையுடன் குருக் கத்தியும் மல்லிகையும் மனையின் கண் வளர்ந்த முல்லையும் என்னும் மலர்ந்த மலர்களால் நிரைத்த பொலிவினை யுடைய அணையிலே பொருந்தி, அடுக்களைகளில் தாளிப்பு

முதலிய புகையும் அகன்ற அங்காடியிலே அப்பவாணிகர் அப்ப வகைகளைத் தட்டின்றிச் சுடுகின்ற புகையும், மைந்தரும் மகளிரும் மயிருக்கும் துகிலுக்கும் மாலை முதலியவற்றிற்கும் எடுத்த அழகிய இனிய அகிற் புகையும் வேள்விச்சாலைதோறும் எழும் புகையும் ஆகிய இப்பல வகையான வேறுபட்ட புகையை அளாவி, இந்திரனாலே பூட்டப்பட்ட விளக்கமுற்ற ஆரத்தையுடைய மார்பாலே வெல்லும் போரை வல்ல பாண்டியனது கோயிலிலே யாவராலும் அளவிட்டறியப்படாவாகிய ஆருயிரைப் பிணிக்கும் இக் கலவைத் தொகுதி தன் மெய்யெல்லாம் கமழும்படி தோன்றிச், சங்கப் புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச் சிறப்புக்களை யுடைத்தாகையாற் பொதியின் தென்றல் தன்னை ஒவ்வாமைக்குக் காரணமாகி மதுரைத் தென்றல் வந்தது. இதனைக் காணீர். அதனால் அப் பாண்டியனது செல்வம் மிக்க மூதூர் மிகுந்த சேய்மையிலுள்ளதன்று. மற்றும், அங்குச் செல்வோர் உம்மைப் போன்ற பண்புடையராக இல்லாமல் வேறுபட்டவராயிருப்பினும் நில்லென்பாரில்லை" என்று கூறினர்.

மதுரையை நெருங்கினர்-காலை ஒலி கேட்டனர்

இவ்வாறு அவர்களுடன் அளவளாவிய கோவலன் அன்று அங்கே தங்கி மறுநாள் செல்லக் கருதி, முதல்நாள் சென்றது போலவே கவுந்தியடிகளுடன் மனைவியுந் தானுமாக இரவிலேயே வழிக்கொண்டான். வைகறையிலே மதுரையை நெருங்கினர். அப்போது, அழிக்குந் திறலையுடைய ஆலவாய்க் கடவுளின் அகன்ற பெரிய கோயிலிலும் பெரும் புகழையுடைய மன்னவன் கோயிலிலும் வேறுபட்ட பகுதியாகிய சிறப்பையுடைய காலைமுரசமாகிய பேரிசைப் பல்லியம் பெயர்ந்து கூடி ஒலிக்கும் ஒலியும், அந்தணர்கள் நான்மறை நவில்விக்கும் பள்ளிதோறும் மறைக்குரிய சுருதி குன்றாமல் ஓதும் ஒலியும், பெருந்தவத்தினர் வைகறையிலே மந்திரம் ஓதுவதால் மிகுந்த ஓசையும், பிறக்கிடாத வென்றியையுடைய வேந்தனாற் பெற்ற சிறப்புடன் வாள்வீரர் தம்தம் வீரத்திற்கு எடுத்த வரிசையை

யுடைய முரசு முதலியவற்றின் நாளணி ஓசையும், மறம் மிகுந்த பகைமன்னரைப் போரில் வென்று கொண்டுவந்த போர்க்களிற்றின் பிளிறோசையும், காட்டிற் பற்றிவந்த வலிய களிறுகளின் பிளிறோசையும், பந்திதோறும் நின்ற குதிரைகள் போரை யெண்ணிக் கனைக்கும் ஒலியும், கிணைப் பறையையுடைய மள்ளர் மருதநிலந்தோறும் வைகறையிலே அதனைக் கொட்டும் ஒலியும் இவைபோன்ற பிறவுமாகிய அக்கூடலிலே எழும் ஒலியெல்லாம் கார்க் கடல் முழக்கமென ஆர்த்து எதிர்கொள்ளுதலால், மதுரையை நெருங்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சி முன்பு வருந்திய வருத்தமெல்லாவற்றையும் நீக்கியது.

வையை

கரையின் புறப்பக்கமெங்கும் குரவும் மகிழும் கோங்கும் வேங்கையும் வெண்கடம்பும் சுரபுன்னையும் மஞ்சாடியும் மருதும் உச்சிச் செலுந்திலும் செருந்தியும் சண்பகமும் ஆகிய இவை பாதிரியுடன் பலவகை மலரும் விரிந்து சூழ்ந்தவை மேலே உடுத்த பூந்துகிலாகவும் கரையின் அகப்பக்கமெங்கும் குருக்கத்தியும் செம்முல்லையும் முசுண்டையும் மோசி மல்லிகையும் வெள்ளை நறுந்தாளியும் வெட்பாலையும் மூங்கிலும் மூங்கிலிலே படர்ந்த பெருங்கையால் என்னும் கொடியும் குட்டிப் பிடவமும் இருவாட்சியும் ஆகிய பல மலரும் விரிந்து, பூங்கொடிகள் நிரையுற நெருங்கிப் படர்ந்து பொருந்தியவை தன்னை நெருங்கிச் சூழ்ந்த கோவையாகவும் மேகலையாகவும் கொண்ட வளைந்த கரையாகிய அகன்றேந்திய அல்குலையும் அகற்சியையும் பொலிவையுமுடைய இடைக்குறையிலே பக்கங்கள் புடைக்கொண்டு, கோங்கு வேங்கையென்னும் பல மலராகிய சுணங்காலே உயர்ச்சி பெற்று ஒன்றுக்கொன்று எதிராக விளங்கிய மணற் குன்றாகிய கதிர்த்த அழகிய இளமுலைகளையும், கரையிலிருந்து சொரிந்த முருக்கிதழாகிய செவ்வாயையும், அருவி நீருடன் இடையறாது வந்த முல்லையாகிய முறுவலையும் உடையாள் - குறுக்கே மறிந்தும் நெடுக ஓடியும் திரிகின்ற கயலாகிய நீண்ட கண்

களையும், இருமருங்கினும் அலைகள் அரித்த மணமலர் நீங்காத விளங்குகின்ற அறலாகிய கூந்தலையும், உலகைக் காப்பதற்குப் பல பொருள்களையும் விளைத்து உண்பித்தலான மிக்க பெரிய ஒழுக்கத்தினையும் உடையாள் - புலவர் நாவினாலே புகழப்படுகிறவள் - அடைந்தோர்க்கு அளவின்றி இன்பம் அளித்தலாலே திருமகள் போன்றவள் - பருவம் பொய்யாததாலும் வேற்று வேந்தர் அணுகாமையாலும் பாண்டியரின் குலக்கொடியாயுள்ளவள் ஆகிய வையை யென்னும் பெயருடையாள்,

கண்ணகிக்கு மேல் வரும் துன்பங்களைத் தான் முன்னரே அறிந்தாள் போலத், தன்னைக் கொண்டு அருச்சித்தார்க்கு நலம்பல நல்கும் நறுமண மலராடையால் தன் மெய்ம் முழுதும் போர்த்துத், தன் கண் நிறைந்து நின்ற நீரைப் புறத்திடின் வருந்துவர் என்று உள்ளடக்கியவளாய்க் காணப்பட்டாள்,

புறஞ்சேரி யடைந்தனர்

வைகையைக் கண்ட கண்ணகியும் கோவலனும், 'பூவால் மறைந்த இது புனல் யாறு அன்று; பூவாறு' என்று புகழ்ந்து தொழுதனர். அங்கே, ஓடக்கோலுக்கு நிலைக்காத துறையிலே செல்வோரைச் செலுத்தும் குதிரை முக ஓடமும் யானைமுக ஓடமும் சிங்கமுக ஓடமும் ஆகிய இவற்றிலே ஏறிப் பலர் செல்லும் துறையிருந்தது. இவர்கள் அத்துறையிலே செல்லாமல் தனித்துச் செல்லக்கருதி அதற்கயலதாகிய துறையிலே மரப் புணையிலே சென்று, தேன் மணக்கும் மலரையுடைய சோலை பொருந்திய தென் கரையிலே பலரும் செல்லாத ஓரிடத்தே சென்று தங்கினர்.

பின்னர் விண்ணவர் வாழும் மதுரையை வலங்கொண்டு செல்வது மிகவும் பெரிய புண்ணியச் செயலாகும் என்றெண்ணி, அழித்தற்கியலாத காவற்காடு சூழ்ந்த கிடங்கின் புறத்தைச் சூழ்ந்து வந்து, கரிய பெரிய குவளையும் ஆம்பலும் தாமரையும் கண்ணகிக்கும் கோவல

னுக்கும் தனித்து வரக்கடவு துன்பத்தை ஐயமில்லாமல் அறிந்தன போல, வண்டுகள் இரங்கும் பண்ணீர்மையைக் கொண்டு, பரிவுற்று வருந்தி ஏங்கியழுது *கண்ணீரைக் கொண்டு காலுற நடுங்கின.

பகைவர் வருந்தப் போரை வென்று எடுத்த—புற மதிலின் உச்சியில் உள்ள—கொடிகள் இவர்களை இந் நகரிலே வராதீர்கள் என்பன போலத்தம் கையினாலே மறித்துக் காட்டின.

இத்தகைய காட்சியுடன், பறவைகளால் அழகு செய்யப்பட்ட ஏரியும் பண்ணையும் கழனியும் சோலையும் தெங்கும் கமுகும் வாழையும் மூங்கில் திரளால் இடப்பட்ட தண்ணீர்ப் பந்தரும் பொருந்தி விளங்கிய மதுரை மூதூரின் புறமதிலிடத்ததாய், அறத்தைப் புரியும் தவத்தினரன்றி மற்றையோர் தங்குதற்கியலாத புறஞ்சேரியிலே கவுந்தியடிகள் அறிவனை வணங்கும் எண்ணத்தையும் இவ்விருவரும் சிலம்பு விற்றுப் பொருளீட்டும் எண்ணத்தையும் உடையவர்களாய்ப் புகுந்தனர்.

———

* கண்ணீர்: கண் + நீர்; கள் + நீர். கால: கால், காற்று. கால் நடுங்கின; காற்றால் அசைந்தன.

14. ஊர்காண் காதை

காலைமுரசம் :

வைகறையின் கழிவும் புலரியின் முன்னுமாகிய அந் நேரத்தே புறஞ்சேரி யிடத்தனவாகிய பொழில்களிலும் விளக்கமான நீர் நிறைந்த பண்ணையிலும் வளைந்த நெற் கதிரையுடைய கழனியிலும் உள்ள பறவைகள் துயி லெழுந்து ஆரவாரித்தன. பொய்கைகளில் தாமரை மல ரின் அரும்புகளைமுறுக் கவிழ்த்து மலர்த்திய, உலக முழு தும் வணங்கும் கதிர் மண்டிலமானது, பகை மன்னர் தலைகள் நடுங்க விதிர்த்து ஏந்திய வாளையுடைய பாண்டி யனின் புகழால் ஓங்கி, வன்மையால் உயர்ந்த கூடலாகிய ஊரைத் துயிலெடுப்பித்தது.

அப்போது, இறைவி கண் புதைத்தபொழுது நெற்றி யிலே புறப்படவிட்ட கண்ணையுடைய இறைவன் கோயி லிலும், கருடக் கொடியை உயர்த்த திருமாலின் கோயி லிலும், மேழியாகிய படையை வலத்தே ஏந்திய பலதேவன் கோயிலிலும், கோழிச் சேவலைக் கொடியாகக் கொண்ட முருகவேள் கோயிலிலும், * அறமும் அதன் துறைகளும்

---

*அறம் இல்லறம் துறவறமென இருவகைப்படும்.

1. இல்லறம் : கற்புறு மனையுடன் இல்லின்கண் இருந்து செய்யும் அறம்.

இல்லறத்துறை : தன்னை யொழிந்த மூவர்க்கும் துறந்தார்க்கும் துவ் வாதவர்க்கும் இறந்தார்க்கும் ஐம்புலத்தார்க்கும் துணையாதல் முதலாயின.

துறவறம் : படநாகம் தோலுரித்தாற்போல, அகப்பற்றும் புறப் பற்றும் அற்று இந்திரிய வசம் அறுத்து முற்றத் துறத்தல்.

துறவறத்தின் துறை : சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

சரியை : அலகிடல் முதலியன. கிரியை : பூசை முதலியன. யோகம் : எண் வகைய. அவை : இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், சமாதி என்பன.

இயமம்: பொய் கொலை களவே காமம் பொருள் நசை இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்.

நியமம் : பெற்றதற் குவத்தல், பிழம்பு நனி வெறுத்தல், கற்பன கற்றல், கழிகடுந் தூய்மை, பூசனைப் பெரும் பயம் ஆசாற் களித்தலொடு, பயனுடை மரபின் நியமம் ஐந்தே.

விளங்குவதற்குக் காரணமாகிய அறவோர்களுடைய இருப்பிடங்களிலும், மறமும் அதன் துறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய மன்னவனது கோயிலிலும் பல வகையாலும் பொருந்திய சிறப்பினையுடைய காலைப் போதின் முழவம் தூயவெண் சங்கொடும் கொம்பொடும் முழங்கின.

கோவலன் இரக்கம்-கவுந்தியடிகளின் தேறுதல் மொழி :

அக் காலத்தே, கோவலன் சென்று தியானத்திலிருந்த கவுந்தியடிகளைக் கையால் தொழுது போற்றி, "செய்தவமுடையீர்! யான் ஒழுக்கந் தவறியோரின் இயல்புடன் நறுமண மலர் போலும் மென்மையாகிய மேனியையுடைய இவள் நடுங்கித் துயரமுறும்படி, முன்னம் கனவிலும் நினைந்தறியாத நாட்டிலே, அரிய வழியிலே எங்குந் திரிந்து இழிவுற்றேன். அடிகளே! இம் முது நகரிலே வாழும் வணிகர்க்கு யான் என் நிலையை உணர்த்தி வரும் வரை இவளுக்குத் துன்பமேதுமின்றிக் காத்தருள வேண்டும்" எனக் கூறக் கருதியவன் தெளிந்து, "போதுவல் யானும் போதுமின்' என்ற அப்போது இவள் நும் திருவடியாகிய காவலை யுடையாள். ஆகையால், இவளுக்குத் துன்பமேதும் வராது" என்று கூறினன்.

கவுந்தியடிகள் கூறுகிறார் :

"முற் பிறப்பிலே நல்வினையை மிகுதியுஞ் செய்த நீ அதனை விட்டுச் சிறிது தீவினையுஞ் செய்ததனாலே, நின் உறவினரையும் தந்தையின் செல்வத்தையும் விட்டுக் காதலியுடன் தனித்துத் துன்பமுற்றாய். 'யாவராயினும்

ஆசனம்: நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தலென்று— ஒத்த நான்கின் ஒல்கா நிலைமையோடு—இன்பம் பயக்கும் சமயம் முதலிய— அந்தமில் சிறப்பின் ஆசனம் ஆகும்.

வளிநிலை: உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்— தந்தம் இயக்கம் தடுப்பது வளிநிலை.

தொகை நிலை: பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை—ஒரு வழிப் படுப்பது தொகைநிலை யாமே.

பொறை நிலை: மனத்தினை ஒருவழி நிறுப்பது பொறை நிலை.

நினைதல்: நிறுத்திய அம் மனநிலை தெரியாமல்—குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே.

சமாதி: அங்ஙனம் குறித்த அம் முதற் பொருளொடு—தான் பிறனாகாத் தகையது சமாதி.

எந்த உயிருக்கும் தீமை செய்வதினின்றும் நீங்குமின்! நீங்கிராயின் அதன் விளைவாகிய துன்பத்தை அத்தீவினை ஊட்டிவிடும்' என்று அறங்களை அறிவிக்கும் பெரியோர் ஒவ்வும் முறையாலே நாவாகிய குறுந்தடியாலே வாயாகிய பறையை அறைந்து கூறினும் புண்ணியத்தின் உறுதி யற்றோர் அதனை உறுதியாக உட்கொள்ளாமற் பின்னர்த் தீமையுடைய வெவ்வினை தோன்றித் துன்பத்தை யூட்டும் போது தம்முடைய அறியாமையை ஆதரவாகக் கொண்டு மிகவும் செயலற்று வருந்துவர். கற்கப்படுவன கற்று அவற்றின் பயனை யுணர்ந்த பெரியோர் போக்க முடியாத தீவினைப் பயனாகிய துன்பத்தை நுகரும்போது, அதற் கிரங்கிச் செயலற்று நில்லார். இது நாம் செய்த தீவினை யின் பயனாக வந்தது என்று அமைதியுறுவர்.

இனி, மகளிரைக் கூடுதற் பொருட்டு முயற்சி செய்வ தால் வருந் துன்பமும், புணர்ந்த பிறகு பிரிவினால் வருந் துன்பமும், கூட்ட முயற்சியும் பிரிவும் நீட்டித்தபோது உரு விலாக் காமன் ஒறுப்பதால் வரும் துன்பமும் என முற்றும் துண்பமே யாம். மற்றுப் பொருளீட்டப் புகினும் அதற்கு முயற்சியால் வரும் துன்பமும் அப் பொருளை யிழத்தலால் வரும் துன்பமும் ஈட்டல் முயற்சி யும் இழப்பும் நீட்டித்தபோது கட் புலனாகாத வறுமை ஒறுத்தலால் வரும் துன்பமும் என முற்றும் துன்பமே யாம். எனினும், இன்பமும் பொருளும் எனும் இவ் விரு திறத்தினும் தோன்றும் துன்பம் எல்லாம் மகளிரைப் புணர்ந்து மயங்கினவர்கட்கன்றிப் பற்றற்ற தனி வாழ்வை யுடைய பெரியோர்க் குண்டாவதில்லை. அங்ஙனமாகிய துன்பங்களை இன்பமெனக் கொண்டோர் அடைய்க்கூடிய இடங்கொள்ளாத் துன்பங்களை மனத்தால் உணர்ந்தவ ராய், முனிவரால் நீக்கப்பட்ட இவ்விருவகைக் காமமே சார்பாகப் பற்றுள்ளத்தில் நின்று வருந்தித் துன்பக் கட லில் அழுந்திக் கரைகாண முடியாத இடும்பையுற்றோர் இன்று நின்னளவினர் அல்லர்; முன்னும் அளவிறந் தோரிருந்தனர். இத்தகைய நிலை பழகிப்பழகி வந்த தொன்மையுடைய்து.

தன் தந்தையின் ஏவலாலே மனைவியுடன் காட்டிற்குப் போய்த் தன்னை அவள் பிரிய நேர்ந்தபோது கடிய துன்பத்தை உழந்தவன் மறை முதல்வனான நான்முகனைப் பெற்றவன் என்பதனை உலகமெல்லாம் அறியவும் நீ அறியாயோ! அஃது உலகிலே நடக்கும் புராண கதையுமாயிற்று. இனி, நளனென்பவன் முன் புட்கரனுடன் பொருத சூதின் ஆயத்தால் மண்ணையும் அரசையும் இழந்து தன் மனைவியுடன் கொடிய கானத்திலே அலைந்தான். அவன் வேறொரு பொருள்மேற் சென்ற காதலாலே அவளைப் பிரிந்தானல்லன். அவளும் தீமையொடு வாடும் சிறுமையுடையவளுமல்லள். மேலும், அவர்கள் ஒன்றிய காதலினர் இங்ஙனம் இருந்தும், அடர்த்தியாக மரங்கள் செறிந்த காட்டிலே நள்ளிரவாகிய யாமத்திலே அவளைத் துயிலிடை விட்டு நீங்கியது முன் செய்த தீவினையே அன்றி, அவள் பிழையாலே என்று சொல்ல வேறு காரணமிருப்பின் நீ கூறுவாயாக.

நீயோ, அவர்களைப் போன்று காதலியரைப் பிரிந்து துன்பமுற்றாயல்லை; இவளைப் பிரியா வாழ்வு பெற்றாய்.

ஆதலால், நீ இத்தகைய நிலையை எண்ணி வருந்தாமற் சென்று இம் மன்னவன் கூடலில் சாவக நோன்பு நிகழ்த்தற் குரிய இடத்தைக் கண்டறிந்து வருவாயாக!.

மதுரை மறுகிலே கோவலன்:

இவ்வாறு கவுந்தியடிகள் கூறிய மொழியினாலே தெளிந்த கோவலன் அரணுகக் கட்டு வேலி சூழ்ந்த காவற் காட்டுடன் தானும் வலமாகச் சூழ்ந்து கிடந்த, விளங்கும் நீர்ப் பரப்பையுடைய அகழிக்குப் பெரிய துதிக்கைகளையுடைய யானை நிரைகள் வருகின்ற சுருங்கையைக் கீழே கொண்டு மேலே பொருந்திய தெருவைக் கடந்து சென்று, பல காவலையும் உடைய மதிலின் வாயிலிலே காத்திருக்கும் காவலிற் சிறந்த, கொல்லும் வாளை யேந்திய ய்வனரால் இவன் புதியவன் என்று ஐயம் உறாத முறையிலே வாயிலைக் கடந்து உட் புகுந்தான். ஆயிரங் கண்களையுடைய

இந்திரனது அரிய மணிக் கலன்கள் இட்டுவைத்த, பணிப் பெட்டகத்தைத் திறந்து வைத்தாற் போன்ற மதில் வட்டத்தையுடைய அக நகரை அடைந்தான்.

வையம் காவலர் மகிழ்தரும் மகளிர் வீதி:

மேலைக் காற்று விசைத் தெறிதலாலே மாடங்களில் எடுத்த கொடிகள் நுடங்கும் அத் தெருவிலே உள்ள பொதுமகளிர் தாம் காதலிக்குஞ் செல்வத்தையுடைய காமுகருடன் கூடி, இடையறுமற் பெருகும் நீரையுடைய வையை யாற்றிலே மருதமோங்கிய துறைமுன்னர் அழகுறப் பரவிய இடைக் குறையிலே வெண் மணலையுடைய அடைகரையிலே உயர்ந்த பள்ளியோடத்துடன் நாவாய் முதலியவற்றில் அமர்ந்து செலுத்தியும், புணைகளைத் தழுவி நீந்தியும் நீர் விளையாட்டிலே மகிழ்ந்து,

குளிர்ந்த நறுமணமுள்ள முல்லை மலரும், ஆழ்ந்த நீரிலுள்ள குவளை மலரும், தம் கண்போல மலரும் நெய்தல் மலரும் என்னும் இவற்றைத் தம் கொண்டைகளிலே மிக்குற வைத்துப் பொருந்தச் செருகி, வெண்மையாக மலர்ந்த மல்லிகை மலருடன் குளிர்ந்த செங்கழுநீர்இதழ்களையும் கால் நெருங்கக் கட்டுவதால் தலை மலர்ந்த பிணையலையும் கொற்கைத் துறையிலே கிடைக்கும் பெருமுத்தாலே செய்த வடத்தையும் அணிந்து, தென்திசைக் கண்ணுள்ள மலயமலையிலே தோன்றிய சந்தனக் குழம்பை மெய்ம் முழுதும் அப்பிப், பொன்னாற் செய்த கொடிகளையுடைய மதுரை மூதூரின் அயலதாகிய பொழிலிலே விருப்புடன் விளையாடி,

ஞாயிறு மறைந்தவுடன் அங்கிருந்து வந்து இளநிலா முன்றிலிலே முன்னர்ப் புனலிலும் பொழிலிலும் ஆடியிளைத்த கோலத்தைத் தம் கொழுநர் பாராட்டித் தீர்த்தலால், கண்டோர் விரும்பும் மலர்ப் பாயலிலே இனிமையுடன் அமர்ந்து, பூத் தொழிலையுடைய செம்பட்டை அரைமீதுடுத்துப், பூங்கொத்தையுடைய கூந்தலிலே

செங்குடச மலரை முடித்துச், சிறு மலையிலே மலர்ந்த நறிய செந்தாழிப் பூவுடன் குறிஞ்சியின் நறுமணமிகும் நாண் மலரைச் சூடிக், குங்கும நிறமுடைய சந்தனத்தைக் கொங்கையிலே எழுதிச், சிவந்த சுண்ணம் அப்பிய மார்பிலே செங்கொடு வேரியின் செழுவிய மலராலே கட்டப் பட்ட பிணையலை அழகிய பவளக் கோவையுடன் பூண்டு, பறந்து திரியும் மலைச் சிறகை அறிந்த வச்சிரப் படையேந்திய இந்திரனுக்குக் கூடலைச் செவ்வணி யணிந்து காட்டுதற்குக் காராகிய மன்னன் வாடைக் காற்றோடு வரும் கார்காலம் எங்கே உள்ளது?

அக்காலம் அன்றியும்,

சிற்பநூல் வல்லவராலே சிறப்பித்துச் செய்யப்பட்ட முகில் தோய உயர்ந்த மாடங்களிலே, மரக்கலம் தந்த அகிலாகிய விறகாலே, இளமை தவழும் மகளிர், தடாக்களில் இடப்பட்ட நெருப்பிலே காய்வதை விரும்பி, நறுமணச் சந்தன மணிந்த மார்பினரான மைந்தருடன் குறிய கண்களையுடைய சாளரங்களை அடைக்கும் கூதிர்க் காலம் எங்கே உள்ளது?

அக்கால மன்றியும்,

வளமிகும் மனையிலே இள நிலா முன்றிலிலே மகளிரும் மைந்தரும் அமர்ந்து இள வெயிலை நுகரும்படி, விரிந்த கதிரையுடைய கதிரவன் தெற்கே தள்ளி எழுந்து இயங்குவதாலே வெண்முகில் அரிதாகத் தோன்றும். முன் பனிக் காலம் எங்கே யுள்ளது?

அக்காலம் அன்றியும்,

கீழைத் திசையிலே தொண்டி யென்னும் நகரில் உள்ள சோழ மன்னராலே வங்கத்திரளுடன் திரை யிடப்பட்ட தொகுதியான அகிலும், பட்டும், சந்தனமும், வாசப் பொருளும் கருப்பூரமும் என்னும் இவற்றை அவ் வங்கத் திரளுடன் சுமந்து வந்த கொண்டற் காற்று என்னும் நண்பனொடு கோமக

னது கூடற் பதியிலே புகுந்து காமவேளின் வில் வெற்றி நிகழா நின்ற விழவைக் காணும் பங்குனித் திங்களீருகப் பொருந்திய பின்பனிக் காலமாகிய அரசன் எங்கே யுளன்?

[அகில்: அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் முதலியன.

துகில்: கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டு கில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங் கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக் காசு, வேதங்கம், புங்கர்க் காளகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல் யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச் சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி முதலியன.

ஆரம்: மலையாரம், தீரமுரன் பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேரச்சுக் கொடி, முதலியன.

வாசம்: அம்பர், எச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங் கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலம் முதலியன.

கருப்பூரம்: மலைச்சரக்கு, கலை, அடைவு சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மாரப் பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன், சீனச் சூடன் முதலியன.]

மாலை போல மலரும் குருக்கத்தி கொடியெடுக்க வும், காவும், காடும் மணமலரேந்தவும் தென்னவனுடைய பொதியிலின் தென்றலுடன் அம் மன்னவனுடைய கூடல் நகரிலே புகுந்து, தாம் மகிழுந் துணைகளைத் தழுவுவிக்கும் இனிய இளவேனில் என்னும் அரசன் எங்கே?

இவ்வாறு அழகிய கொடி போன்ற மகளிர் அவ்வக் காலத்தே அவ்வவ் வின்பங்களை நுகர விரும்பித் தம்மை

யுடைய பெருமைமிக்க கொழுநருடன் இருந்து பருவங்களை எண்ணும் வருத்தமில்லாத காலத்தே,

கன்றுகள் மேவிய பிடித்திரளுடன் அவற்றைக் காக்கும் களிற்றினமும் கண்டு நடுங்கும்படி, வெம்மைநிலை பெற்ற மலைசார் நாட்டுக் காடெங்கும் தீப்பட்டெரியும்படி முழங்கும் அழலை மூட்டிக், கோடைக் காற்ரூடு வந்து புகுந்து, கூடலை ஆண்ட வேனில் அரசன் தனக்குப் புகலிடமாகிய வேற்றுப் புலத்தை அடைய முயலா நின்ற மிகு வெயிலையுடைய முதுவேனிலின் கடை நாளிலே,

கூடாரப் பண்டியும் கடகத்தண்டும் பல்லக்கும் என்னும் இவ்வரிசைகளைப் பெற்றதேயன்றி, நீராவிச் சோலைக் கண்ணே தமக்கு உற்ற துணைவனாகிய அரசனோடு மேவி மெய்தொட்டு விளையாடும் மகிழ்ச்சியும், கவரியும் அடைப்பையும் உடைவாளும் எடுக்கும் வரிசையும் தம் கோமகன் கொடுப்ப, அவ்வாறு பெற்ற செல்வம் எக்காலத்தும் பிறழாத வாழ்க்கையை யுடைய பொற்றொடி மகளிர் நாடோறும் புதியவருடன் மணம் புணர்ந்து, அப்புணர்ச்சியாலுண்டான வருத்தம் அகற்றிச் செருக்குண்டாக்குதற்கு ஏவல் மகளிர் பொன் வள்ளத்திலே ஏந்திய அழகிய இனிய கள்ளாகிய தேறலைப் பருகினராய்ப் பின்னும் மயங்கி, இதழினாலே மறைகின்ற விழிகளைப் பூவின் இதழில் மறைகின்ற தம் இனமெனக் கருதிச் சேர்ந்த பொறியையும் வரியையும் உடைய வண்டினத்தை மாலையைப் பரிந்து அதனாலே ஓட்டக் கருதியவர் மெய்ம்மயக்கத்தாலே கை சோர்தலால், அவை மொய்க்காத இடங்களைக் கடிந்து, முன்னர்ப் புலவிக் காலத்தில் இலவிதழ்போலும் செவ்வாயில் முத்துப்போல இளநகையரும்பத் தம் கேள்வரைக் கவவுக் கொண்டு நெருக்கிய புலவிக் குறையாக நெஞ்சிற் கிடந்ததைக் கூறக் கருதிய கட்டுரையைத் தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்னும் எண்வகையிடத்துடன் நாவால் நவிலப் பெறுமற் குழறுதலால் கேட்டோர்க்கு நகைப்பை யுண்டாக்கும் கிளவியும், நீர்க்கீழுள்ள அழகிய

செங்கழு நீர் அரும்பை நெகிழ்த்துப் பார்த்தாற் போன்ற சிவந்த கயல்போலும் நெடிய கண்ணின் செழுங்கடையாலே செய்த பூசலும், கொலைக்குரிய விற்போலும் புருவத்தின் கோடிகள் உள் வளையத் திலகம் பொருந்திய சிறிய நுதலில் அரும்பிய வியர்வையும் ஆகிய இவை நீங்கும் செவ்வி பார்த்து வருந்தும் மேம்பட்ட குடிப் பிறந்த செல்வருடன் வையங் காக்கும் அரசரும் விரும்பும் மகளிர் வாழும் தெருக்களைக் கோவலன் கண்டான்.

பொது மகளிர் தெரு :

* ஓடாகிய சுடுமண் ஏருத, குற்றமற்ற செங்கோற் சிறப்பினையுடைய முடிசூடிய அரசர் வந்து பிறரறியாமல் தங்கும் காவல் மனையிலே வாழும் வாழ்க்கையும், வேத்தியல் பொதுவியல் என்று சொல்லப்பட்ட இரு வகைக் கூத்தின் தாள அறுதிகளையறிந்து அவை மயங்காத மரபிலே ஆடும் ஆடலும்,

கண்கூடு வரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக் கோள் வரி யென்னும் எண் வகை வரிக் கூத்துக்களும்,

† கொட்டும் அசையும் தூக்கும் அளவும் ஆகிய தாளங்களும்,

இத் தாளங்களின் வழியே வரும் செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத்தூக்கு, கோயில்தூக்கு, நிவப்புத்தூக்கு, கழால்தூக்கு, நெடுந் தூக்கெனக் கூறப்படும் ஏழு தூக்குக்களும்,

இவற்றுடன் கூடியிசைக்கும் மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை யெனப்படும் நால்வகை உத்தமமான

---

*'குற்றஞ் சாட்டப்பட்டுச் செங்கல் லைத் தலையிலே சுமவாத வாழ்க்கை' என்றுமாம்.

†கொட்டு : அரை மாத்திரை ; வடிவு : க. தொழில் : அமுக்குதல்.
அசை : ஒரு மாத்திரை ; வடிவு : எ. தொழில் : தாக்கியெழுதல்.
தூக்கு : இரு மாத்திரை ; வடிவு : உ. தொழில் : தாக்கித் தூக்குதல்.
அளவு : மூன்று மாத்திரை : வடிவு : ∴. தொழில் : தாக்கின ஓசை மூன்று மாத்திரை வருமளவும் வருதல்'

தோற் பெருங் கருவிக் கூறுபாடுகளையும் உணர்ந்து, நிற்ற லும் இயங்கலும் இருத்தலும் கிடைத்தலுமாகிய நால்வகை மரபினையுடைய அவிநய நிலத்திலும் சரிகமபதநி என்னும் எழுத்துக்களினடியாகப் பிறக்கும் குரல் முதலாகிய எழு வகை நிலத்திலும் சென்று பொருந்தும்படி கோப்புக்களை விரிக்கும் மலைத்தற்கரிய சிறப்பினையுடைய தலைக்கோ லரிவையும், ஆடி முதிர்ந்த பின் வாரப்பாடலை மட்டும் மேற்கொண்டு, ஆடல் மகளிரின் காலுக்கு ஒற்றறுத்துப் பாடும்போது இடத்தாண் சேர்ந்து இயலும் தோரிய மடந் தையும், உகம் என்னும் தலைப்பாட்டைப் பாடும் கூத்தி யும் ஔகம் என்னும் இடைப் பாட்டைப் பாடும் கூத்தி யும் என நால்வேறு வகையுடன் கூடித் தத்தம் ஆடல் பாடல் அழகென்னு மிவற்றாற் பெற்ற சீரின் வழிப்பட்ட ஒன்றுமுதல் ஆயிரத்தெண் கழஞ் சீருக யாவரும் விரும் பத்தகும் முறைமையினால் நாடோறும் பெறும் முறையி னின்றும் வழுவாத. நீண்ட வருத்தும் அணங்கு போல்வா ருடைய கண்ணாகிய வலையில் அகப்பட்ட போதே பெறு தற்கரிய தம் அறிவு முதலியவை கெடத் தவத்தோராயி னும் நல்ல மலர்ந்த மலர் தோறும் சென்று அவற்றின் தேனைப் பருகிப் பிறகு, திரும்பிப் பாராமற் செல்லும் வண்டு போல ஒருவழித் தங்காது புதிய மகளிரைப் புணர்ந்து செல்லும் காமுகராயினும், காமவின்பத்திற்குப் புதியவராய் முன்பு நுகர்ந்தறியாத பேதையராயினும் நாடோறும் புணர்ச்சி மயக்கத்தோடு கூடிய இனிய துயி லுடன் தங்கும்படி செய்யும் இயல்பினராய்ப் பண்களையும் அவற்றின் திறங்களையும் பழித்த இனிய மொழியை யுடைய் அறுபத்து நான்கெனத் தொகுத்த கலைகளில் வல்லோராகிய, பதியிலாரின் சிறுபொருள் பெரும் பொருள் என்னும் இருவகைத் தெருக்களையும் கண்டான்.

அங்காடித் தெரு

கொல்லாப்பண்டியும், தேர்வட்டையும், அழகிய தேர் மெட்டும், மெய்யில் இடும் கவசமும், விரும்பப்படும் மணிகள் அழுத்தின அங்குசமும், தோற்கைத் தளமும்

*கருவியின்றிச் செய்த அரைப் பட்டிகையும், கட்டுக் குழியமும், மிகவும் வெள்ளிய சாமரமும், 'பன்றிமுகக் கடகும், தோற் கடகும், கானமெழுதிய கவசமும், குத்துக் கோல்களும், செம்பினாற் செய்தனவும், வெண்கலத்தாற் செய்தனவும், அல்லிக்கயிறு குசைக்கயிறு முதலிய புதுமையாக முடிவனவும், †மாலையின் வருக்கமாகப் புனைவனவும், ஈர்வாள் முதலிய கருவிகளும், ஆனைக்கொர்பு முதலியவற்றைக் கடையும் தொழிற் கருவிகளும், அகிற்புகைக் குறுப்பாயினவும், மயிர்ச்சாந்துக் குறுப்பாயுள்ளனவும் (மெய்ச்சாந்தும் ஆம்). பூவினாற் புனையப் பெறும் மாலை வகைகளும் என இன்ன வகைகள் இன்னவற்றிற்கு என்றறிதற்கரிய வளங்கள் மயங்கிக் கிடக்கின்ற, அரசரும் காண விரும்பும் செல்வமிகும் அங்காடித் தெருக்களைக் கண்டான்.

ஒன்பான் மணிகள் விற்கும் தெரு

வயிரம் :

நூலோரால் குன்றுதலையுடைய என்று வரைந்து சொல்லப்பட்ட குற்றம் பன்னிரண்டனுள் காகபாதமுங் களங்கமும் விந்துவும் ஏகையும் ஆகிய நான்கு குற்றங்களும் நீங்கிக், குன்றுதலவாகிய குணங்கள் ஐந்தையும் வருணம் நான்கின் நிறங்களையும் இந்திரவில் போலும் ஒளியையும் உடையவை வயிரச் சாதி.

குற்றம் பன்னிரண்டாவன : சரைமலம், கீற்று, சப்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், இருத்து, கோடியில்லன, கோடிமுரிந்தன, தாரை மழுங்கல்.

குணங்கள் ஐந்து : எட்டுப் பலகை, ஆறுகோடி, தாரை, சுத்தி, தராசம்.

*நோய் தீர்க்கும் மருந்தென்றுங் கூறலாம் என்பர் அடியார்க்குநல்லார்.

†இவை தூக்கு வர்க்கம். கிடையினாலே மாலை விசேடங்களாகப் புனைந்து விற்கப்பெறும் மலர்மாலை வர்க்கமும் எனப—அடியார்க்குநல்லார்.

நால்வகை வருண ஒளி: அந்தணன் வெள்ளை, அரசன் சிவப்பு, வைசியன் பச்சை, சூத்திரன் கருமை.

மிக்க குற்றங்கள் நான்கின் பயன்: 'காகபாத நாகங் கொல்லும்' 'மலம் பிரியாதது நிலந்தரு கிளை கெடும்' 'விந்து சிந்தையிற் சந்தாபம் தரும்' 'கீற்று வர லினை ஏற்றவர் மாய்வர்'

குணங்கள் நான்கின் பயன்: 'மறை யோரணியின் மறையோராகிப்-பிறவி யேழும் பிறந்து வாழ்குவரே' 'மன்னவரணியின் மன்னவர் சூழ-இந்நில வேந்த ராவ ரெழுபிறப்பும்' 'வணிக ரணியின் மணி பொன் மலிந்து தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்' 'சூத்திர ரணியின் தோகையர் கனகம் நெல்-வாய்ப்ப மன்னி மகிழ்ந்து வாழ்குவரே'

வயிரத்தை வலன் என்பவனுடைய எலும்பு என்பர்.

மரகதம்:

ஏகையும் மாலையும் ஆகிய குற்றங்களை இருளென் னும் குற்றத்துடன் நீங்கின பசுமை நிறைந்த மெய்யை யுடைய பசிய கதிரொளி பரவியவை மரகதச் சாதி. (ஏகை–கீற்று, மாலை-தார், இருள்-கருகுதல்)

இதற்குக் குற்றங்கள் எட்டு: கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பொரிவு, தராசம், இறுகுதல். இவற் றுள் மிக்கு குற்றங்கள் முற்கூறிய மூன்றும்.

குணங்கள் எட்டு: "நெய்த்தல், கிளிமயில் கழுத் தொத்தல், பைம் பயிரிற்-பசுத்தல், பொன்மை தன்னுடன், பசுத்தல் - பத்தி பாய்தல், பொன்வண் டினவயி - றொத்துத் தெளிதலொ டெட்டும் குணமே"

வலனுடைய வயிற்றிற் பித்தைக் கொத்தி விழுங் கிய கருடன் நகைத்தலால் உமிழ, அஃது இமவான் முத லிய பல மலைகளிலும் ஊறிப் பிறத்தலின் கருடோற்காரம் என்றும் மரகதம் பெயர் பெறும்.

மாணிக்கம் :

நூல்களில்விதித்தமுறையிற் பிழையாதனவாய்விளங்கிய பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும் என்னும் நால்வகைச் சாதியானவை மாணிக்க வருக்கம்.

"மாணிக்கத்தியல் வகுக்குங் காலைச்—சமனொளி சூழ்ந்தவொரு நான்கிடமும் — நால்வகை வருணமும் நவின்றவிப் பெயரும்—பன்னிரு குணமும் பதினறு குற்றமும்—இருபத் தெண்வகை இலங்கிய நிறமும்—மருவிய விலையும் பத்தி பாய்தலும்—இவையென மொழிப இயல் புணர்ந் தோரே"

பதுமம் : பதுமராகம், சாதுரங்கம் என்றுமாம்.

நீலம் : நீலகந்தி, சௌகந்தி என்றுமாம்.

விந்தம் : குருவிந்தம், இரத்த விந்து என்றுமாம்,

படிதம் : கோவாங்கு.

இவற்றின் நிறம் : 'தாமரை கழுநீர் சாதகப் புட்கண்-கோபம் மின்மினி கொடுங்கதிர் விளக்கு-மாதுளைப் பூவிதை வன்னி யீரைந்தும்-ஓது சாதுரங்க ஒளியா கும்மே'

'கோகிலக்-கண் செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாசம்-அசோகப்பல்லவமணிமலர்க் குவளை-இலவத் தலர்களென் றாறுகுணமும்-சௌகந் திக்குச் சாற்றிய நிறனே'

'திலகம் உலோத்திரம் செம்பருத்திப் பூக்-கவிர்மலர் குன்றி முயலுதிரம்மே-சிந்துரம் குக்கிற்கண் என எட்டும்-எண்ணிய குருவிந்தம் மண்ணிய நிறமே'

'கோவைநற் செங்கல் குராமலர் மஞ்சளெனக்-கூறிய நான்குங் கோவாங்கு நிறனே'

புருடராகம் :

பூனைக்கண் போன்ற உருவினையுடைய பொன்னை மாசறத்தெளிய வைத்தால் ஒத்தவை புருடராக வருக்கம்.

வயிடூரியம் :

குற்றமில்லாத ஞாயிற்றின் ஒளியெனவும் தேன் துளியெனவும் சொல்லப்பட்டவை வயிடூரிய வருக்கம்.

நீலம் :

இருளைத் தெளிய வைத்தாலனையவை நீலமணி வருக்கம். இதற்குச் சாதி நான்கு, குணம் பதினொன்று, குற்றம் எட்டு.

சாதி நான்கு : வெள்ளை, சிவப்பு, பச்சை, கருமை என நாற்குலத்திற்கும் வகுக்கப்பட்ட நிறம்.

குணமும் குற்றமும் வந்தவழிக் கண்டுகொள்க.

கோமேதகம் :

மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்த நிறமுடையவை கோமேதக வருக்கம்.

ஒரு முதலிலே தோன்றி வேறுபட்ட ஐந்து வனப்பினையுடையவை மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வயிடூரியம் என்னும் ஒளிவிடும் மணிகள்.

முத்து :

காற்றேறு மணலேறு கல்லேறு நீர்நிலை என்னும் மிக்க குற்றங்கள் ஒரு துகளளவும் இல்லையாதலாலே, தெளிந்த ஒளியை உடையனவும், வெள்ளி அங்காரகன் போல வெண்ணீர்மை செந்நீர்மையை உடையவாய் உருண்டனவுமாகியவை முத்து வருக்கம்.

வேறு குற்றங்களும் குணங்களும் உளவேனும் இங்குக் கூறப்பட்ட நான்கு குற்றமும் இரண்டு குணமுமே மிக்கவை.

பவளம் :

கருப்பத்தே துளைபட்டனவும் கல்லிடுக்கிலே புகுந்து முடங்குற்றனவும் திருக்கு முறுக்குண் டெழுந்தனவும்

என்னும் இக்குற்றங்கள் நீங்கிச் செம்மை மிகுத்துக் கொழுவிதாக வளர்ந்தவை கொடிப்பவள வருக்கம்.

வேறு குற்றங்கள் உளவேனும் இவை மிக்க குற்றங்கள். இனிக், குணம் மிக்குக் குற்றங்கள் நீங்கியவை நிறமும் உருட்சியும் சிந்துரமும் ஈச்சங்காயும் முசுமுசுக்கைக் கனியும் தாதுவழுதுணம் பழமும் போல்வன.

இவ்வொன்பது வகைப்பட்ட மணியின் பிறப்பு முதல் சிறப்பீருகத் தெரியவல்ல வணிகர் தொகுதலாற் சிறப்புப் பெற்றோங்கிப் பகைவரால் தெறுதல் தொழிலை எக்காலத்தும் கண்டறியாத பயன்மிக்க இரத்தினக் கடைத்தெருவைச் சுற்றிப் பார்த்தான் கோவலன்.

பொற்கடைகள்:

சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைச் சாதிப் பெயர் பெற்றோங்கிய கோட்பாட்டையுடைய பொற்பேதத்தைப் பகுத்தறியும் பொன் வாணிகர் எவ்விடத்தே எப்பொன் உளதென்று ஐயுறும் துன்பம் ஒழிக்கும்படி இவ்விடத்தே இப்பொன் உள்ளதென விளக்கக் கொடிகள் ஆங்காங்கே எடுக்கப்பெற்ற நன்மை பொருந்திய பொற்கடைகளைக் கோவலன் பார்த்தான்.

புடைவைக் கடைகள்:

நுண்ணிய பருத்தி நூலினாலும் எலி மயிரினாலும் பட்டு நூலினாலும் தத்தம் பகுதிகளால் நெய்யப்பட்ட ஆடை வகைகளில் ஒவ்வொன்றை நூருகத் தெரிந்தெடுக்கப்பட்ட அடுக்குப் பலநூறு ஆகிய நறுமடிப் புடைவைகள் நெருங்க வைத்த புடைவைக் கடைகளைக் கண்டான்.

கூலக்கடை:

நிறுக்கும் துலாக்கோலையும் மறிக்கும் பறையையும் அளக்கும் மரக்காலையும் உடையராய்த் தரகு செய்வோர் ஓரிடத்திலேயே நில்லாமல் எங்கும் தடுமாறும்படி எக்காலும் பெரிய மிளகு பொதியும் பாக்கும் நிறுக்கும் வேறு

பண்டப் பொதிகளும் பதினாறு வகையான கூலங்களும் குவித்த கூலக்கடைத் தெருவைக் கண்டான்.

பறை: இரும்பால் வாய்மட்டாகக் கட்டின கண்ணும் பெரிய அரையும் உடைய ஒரு கருவி. பதினாறு வகையான கூலங்கள்: ‘நெல்லுப், புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி எண்கூலம்’ என்னும் எட்டும் எள்ளுக் கொள்ளுப் பயறு ழுந்தவரை-கடலை துவரை மொச்சை என்றுங்-குடனிவை முதிரைக் கூலத்துணவே’ என்னும் எட்டு மாகும்.

பிறதெருக்கள்:

குலம் நான்காகப் பகுத்தவகையால் அறியப்பட்ட அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனச் சொல்லப்பட்டவர் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும், முச்சந்தியும், நாற்சந்தியும், கோயிலங்காடியும், பலிபெறும் மன்றிடங்களும் கவர்க்கும் நெறிகளும் தேர்த்தெருக்களும் இவ்விடங்களில் ஞாயிறு வானின் நடுவே நின்று வெப்பமூட்டிச் செல்லுதலின் அதனுடைய வெங்கதிர்கள் நுழையப்படாத புதிய கொடியும் பதாகையுமாகிய இவற்றின் பந்தர் நிழலிலே திரிந்து பாண்டியனது பெரிய நகரத்தைச் சுற்றிப் பார்த்த கோவலன் மகிழ்ச்சியினாலே வந்த வேலையை மறந்து திரும்பிவிட்டான்.

15. அடைக்கலக் காதை

மாடலன் கூறுங் கோவலன் சிறப்பு :

நிலம் தரு திருவாகிய விளைவின் நிழலிலே இருந்து அறவாழியை முறைமையாலே மேற்கொண்டு செலுத்தும் பாண்டியருடைய மிக்க புகழ் பொருந்திய கோலின் செம்மையும் குடையின் குளிர்ச்சியும் வேலின் வெப்பமும் விளங்கிய கொள்கையை யுடைய அவ்விடத்தினின்றும் நீங்குதல் அறியாத முறைமை மேம்பட்ட மதுரை மூதூராகிய மாநகரைக் கண்டு, அந்நகரிலே அறத்தைப் பிறர்க்கருளும் நெஞ்சினையுடைய அறவோர் நிறைந்த, மதிலின் புறத்திலே உள்ளதாகிய மூதூர்ப் பொழிலிலே தவத்தினர் இருக்கும் பள்ளியிலே புகுந்த கோவலன், குற்றங்கள் நீங்கிய மதுரையின் சிறப்பையும் பாண்டியன் வெற்றியையும் கவுந்தியடிகளுக்குக் கூறிக் கொண்டிருந்தான்.

அப்போது, காவிரிப்பூம்பட்டினத்தின் அருகிலே உள்ள தாழ்ந்த நீர் சூழ்ந்த தலைச் செங்காடென்னும் ஊரினிடத்தே நான்கு மறைகளையும் ஓதி முடித்த நலம் புரியுங்கொள்கையை உடைய மறையவர்க்கு முதல்வனாகிய மாடலன் என்போன், அகத்தியனுடைய பொதியின் மலையை வலஞ் செய்து, குமரியாற்றிலே முறைப்படி நீராடித் தன் ஊரை நோக்கி மீண்டு வந்தான். அவன் வழி வந்த வருத்தத்தால் உண்டாகிய களைப்பு நீங்குதற்குத் தாழ் பொழிலிலே கவுந்தியடிகள் இருக்கும் பள்ளியை அடைந்தான். அவனைக் கோவலன் கண்டு சென்று வணங்கினான்.

அவனைக் கண்ட சொல்வன்மை மிக்க மாடலன் வியப்புடன் நீ இங்ஙனம் வரக் காரணம் யாதென வினவியறிந்து வருந்திக் கூறுகிறான்.

கரிகாலன் கொடுத்த மிக்க தலை வரிசையாலே சிறந்த புகழினைப் பெற்ற மான்தளிர் போலும் மேனியை யுடைய

மாதவியாகிய மடந்தை, மேலே பெறத்தகும் நல்ல பகுதி யைக் கொண்ட குழவியைப் பெற்றெடுத்து வாலாமை நாட்கள் கழிந்த பிறகு, மிகவும் வயது முதிர்ந்த கணிகை யர் மாதவி மகளுக்குப் பெயரிடும் நல்லுரையைச் செய் வோம் என்று, தாம் இன்பமடையும் தகுதி பெற்ற மொழி யைக் கேட்ட நீ, "முன்னளிலே அலை வீசுங் கடலிலே நள்ளிரவிலே தன் மரக்கலம் உடையப்பெற்ற எம் குடி முதல்வனெருவன் முற் பிறப்பிலே புண்ணியத்தையும் தரும தானத்தையும் புரிந்தோனுகையால், தன்னை எவ் வகை இடையூறும் எங்கும் அணுகுதலின்றி, அக் கட லிடையே சில நாட்களிருந்தனன். அப்போது ஒரு தெய் வம் தோன்றி, 'இத்தீவிலுள்ளாரை அரக்கர் துன்புறுத்தா மல் இந்திரன் ஏவலாலே காப்பாற்றி வாழ்கின்றேன். நின் துயர் கண்டு அதனை நீக்க வந்தேன். இனி நீ அஞ் சாதே, என் பெயர் மணிமேகலை. நீ முன் பண்ணின மிக்க தானத்தாலே வரும் புண்ணியம் நின்னை விட்டு நீங்காதாகையால் அதனுலும் என்னுலும் நீ இத் துன்பத்தி னின்று விலகி, இக் கடலினின்றும் கரையேறுவாய்', என்றுரைத்துத் தன் விஞ்சையினுலே ஒரு திடரிலே பெயர்த்துச் சேர்த்துத் துன்பத்தை நீக்கிய எம் குல தெய்வத்தின் பெயரை ஈங்கு நீவிர் இடுமின்" என்றனை, மேகலை யணிந்த பல கணிகையர் கூடி நீ கூறியபடியே மணிமேகலை யெனப் பெயர் கூறி அரசனையும் நகரையும் வாழ்த்தினர். அற்றை நாளிலே நிறைந்த அழகை யுடைய மடந்தையாகிய மாதவியுடன் நின் செங்கையாலே செம்பொன் மாரி பொழிந்தனை. அப்போது, வீட்டுலகஞ் சேர்தற்குரிய நல்ல நெறியாகிய ஞானத்தின் எல்லையாகிய மறையவன் ஒருவன் முதுமையாலே யாக்கை வளைந்த வனுய்த் தளர்ந்த நடையுடன் தான் பிடித்த தண்டினைக் காலாக ஊன்றிக் கூனி நடந்து தானங் கொள்வதற்குரிய தகுதியுடன் வந்தான். அவனைப் பாகர் செயலை மதியாமல் எங்கும் பறை கொட்ட வரும் மத வேகமுடைய யானை சினத்துடன் பற்றியது. அதைக் கண்டு ஒய்யென உரப்பி அந்நொடியிலே யானையை நெருங்கிக் கையினுலே பறை

யோனை விடுவித்து அதன் கையிலே அகப்பட்டாய். யானை கையால் வளைத்தது. புரை பொருந்திய வளைந்த அத் துதிக்கையினின்றும் நீங்கி, அதன் வெண் கோட்டிலே அடங்கி, அதன் ஆதரவாலே மத்தகத்தின்மீது ஏறிக் கரிய பெரிய குன்றின்மீது விஞ்சையன் வீற்றிருப்பதைப் போலப் பிடரில் அமர்ந்து, சினம் நீங்காத அதன் மதத்தை யடக்கினை! அத்தகைய அருள் வீரன் நீ.

ஒரு பார்ப்பனி தான் வளர்த்த கீரியைத் தன் குழந்தைக்குக் காவலாக வைத்து வெளியே சென்றிருந்தபோது, ஒரு பாம்பு குழந்தையின் அருகே வந்தது. அதைக் கண்ட கீரி, பாம்பைக் கௌவித் துணித்துக் குருதி படிந்த வாயுடன், அவள் வரவை எதிர் கொண்டு சென்றது. குருதி வாயுடன் கீரியைக் கண்ட அவள் தன் குழந்தையைக் கடித்ததென் றெண்ணித் துணுக்குற்றுத் தன் கையிலிருந்த மணையால் அடித்துக் கொன்று விட்டாள். அவள் கொழுநன் அவளை வெறுத்துக் கங்கையாட வடதிசையை நோக்கிச் சென்றான். அவளும் பின் தொடர்ந்தாள். அவன் இகழ்ந்து, 'நின் ஒழுக்கத்தில் உண்டு மனையறம் புரிந்து வாழும் வாழ்க்கை இனியும் தக்கதன்று. ஆதலால், வடமொழி வாசகம் எழுதிய இவ் வேட்டினை, இதன் பொருளுணரும் ஆற்றலை யுடைய மாந்தர் கையிலே கொடு' எனச் சொல்லிப் போய்விட்டான். அவள் கடைத்தெருவினும் மாடங்கள் நிறைந்த பிறமறுகினும் ஒவ்வொரு மனையினும் சென்று வேண்டித் திரிந்து, 'கருமக் கழிபலம் கொண்மின்' என்று கூவினாள். நீ அவளைக் கூப்பிட்டு, 'நீ இங்ஙனம் ஆவதற்கு நீயுற்ற இடர் யாது? இப்பொழுது கூறியது யாது?' என்று வினவினை. அம்மாது தான் கொலை செய்தலாலே கொழுநன் பிரிய, அதனாலே தான் அடைந்த பெருந்துயரைக் கூறி, 'இத்திறமாகிய பொருளை யெழுதிய ஏட்டை வாங்கிக் கொண்டு, பொருள் அளித்து, என் கடுந்துயரைக் களைக!' என்று வேண்டினாள். 'இனி நீ அஞ்சாதே. நின் துயரை

யானே நீக்குவேன். நெஞ்சிற் கொண்ட மிகுதுயரத்தை நீங்குக!' என்றுரைத்து அப்போதே, மறையறிந்த அந்தணருரைத்த நூல் வழியே அப் பார்ப்பனிக்குளதாகிய கொலைப் பாவம் நீங்குதற்குத் தானம் புரிந்து அவள் துன்பத்தை நீக்கிக் காட்டுநெறியிலே சென்ற கணவனையுங் கூட்டுவித்து, அவர்களுக்கு எதிர்காலத்திற்குத் தளராத பல படைப்பாகிய செல்வத்துடன் மிக்க கைப் பொருளையுங் கொடுத்து நல்வழிப்படுத்திய தொலைவற்ற செல்வமுடையவன் நீ.

கற்புடையா ளொருத்தி பொய்ப்பழி யெய்தும்படி வறியவனுன ஒருவன் அவள் கணவனிடம் பொய்ச்சான் றுரைத்தான். அதனுல், தவமறைந்தொழுகுவோர் முதலானவர்களைப் புடைத்துண்ணும் பூதம் தன்கரிய பாசத்தினிடத்தே அவனைப் பற்றியது. அவனுடைய அன்னை அதனுலே அடைந்த துயரத்தைப் போக்க எண்ணி அப் பூதம் ஏந்திய பாசத்திலே நீ விரைந்து புகுந்து, 'ஏ பூதமே! நினக்குணவாக என் உயிரைக் கொண்டு இவன் உயிரைத் தருக!' என்று இரந்தனை. அதற்குப் பூதம் அவனுயிரைத் தராமல், 'இக்கீழ் மகன் உயிருக்கு நினது நல்லுயிரைக் கொண்டு மேலான கதியை இழக்கும் முறைமை என்னிடமில்லை. ஆதலால், இக்கருத்தை விடுக! நின் முன்பே இவனைப் படைத்துண்பேன்' என்று புடைத்து விழுங்கிற்று. அதனுல் நெஞ்சழிந்த துன்பமுடையாளுடன் திரும்பி வந்து, அவளுடைய சுற்றத்தினுள்ளாரிடமும் தொடர்புற்ற கிளைஞரிடமும்-நெஞ்சுற்ற நின் கிளைஞரைப்போல அன்பு காட்டிப் பசிப் பிணியை நீக்கிப் பல்லாண்டு பாதுகாத்த இல்லத்தோர் தலைவன் நீ!

முதிர்ந்த அறிஞனே! கோவலனே! இப்பிறப்பிலே யான் அறிய நீ செய்தன வெல்லாம் நல்வினையே. இங்ஙனமாகவும் இம் முழு மாணிக்கக் கொழுந்துடனே போந்து தனியே வருந்தியது முற்பிறப்பிலே செய்த தீவினையின் பயனே தான்!''

இவ்வாறு வினவி வருந்தினுன்.

கோவலன் கனவு

கோவலன் கூறுகிறான் :

"காவலிற் சிறந்த அரசன் ஆளும் இக்காவல் நகரிலே ஒரு கீழ்மகனாலே மணமிகும் ஐம்பாலையுடைய இவள் நடுங்குதற்குரிய துயரம் உறும்படி, யான் உடுத்த கூறை பிறரால் கொள்ளப்பட்டுக் கோட்டினையுடைய எருமைக் கடாவின் மேலே ஏறவும், அணிபெற வகுக்கத்தக்க புரி குழலையும் ஆயிழையையும் உடைய இவளுடனே பற்றற்ற முனிவர் பெறும் பேற்றை யான் பெறவும், காமக் கடவுள் மலர்வாளியை வெறுநிலத்தே எறிந்து செயலற்றேங்கும்படி போதியறவோனாகிய புத்தனிடத்தே மணிமேகலையை மாதவி அளிக்கவும் செறிந்த இருளையுடைய வைகறை யாமத்தே உண்மையே போலக் கண்டேன். வைகறையிலே கண்டதனால் நன்றன்று. இப்போதே வந்துவிடும்."

இக்கனவைக் கேட்ட கவுந்தியடிகளும் மாடலனும், "துறவற நெறிநிற்கும் மாந்தர்க்கல்லது இப்புறஞ்சிறையில் இருக்கும் இருப்புப் பொருந்தாது. ஆகையால், நகரினுள்ளே வாழும் வணிகர் நின்னை மாசாத்துவான் மகன் என்று பரவிய புகழினாலே ஏற்றுக் கொள்வர். எனவே, இவ்விடத்திலே தங்கியிராமல் கதிரவன் மறையுமுன்னே நின் காதலியுடன் மதுரை மாநகரிலே புகுக" என்று கூறினர்.

மாதரி வரவு—அடைக்கலச் சிறப்பு

இவர்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்போது, ஆயர்குலத்து முதியவள் மாதரி என்னும் பெயரினாள் ஒருத்தி, மலர்போலுங் கண்களையுடைய ஆரியாங்கனையாகிய இயக்கி என்னும் தெய்வத்திற்குப் பாற்சோறு படைத்து வழிபட்டு வருகின்றவள் அறம்புரிந்த நெஞ்சினையுடைய அறவோர் பலரும் இருக்கின்ற, மதிற்புறத்துப் பள்ளியில் இருந்த கவுந்தியடிகளைக் கண்டு வந்து அடி தொழுதாள்.

அவனைக் கண்டவுடன், கவுந்தியடிகள், "ஆக்களை அச்சமும் நோயு முறாமற் காத்துப் புல்லார்த்தி நீரூட்டி ஓம்பி, அந்த ஆக்களின் பாலை யாவருக்கும் அளிக்கும் இந்த இடையருடைய இல்வாழ்விலே ஒரு கொடுமையு மில்லை. மேலும் இவள் நம் உரைவழி நிற்பவளாதலின் மனத்தில் அழுக்கிலாள், முதியவள்; அருளுள்ளமுடை யாள். ஆகையால், இம்மாதரியிடத்தே இம்மடந் தையை அடைக்கலமாக இற்றைக்கு வைப்பதனால் எத் தீங்கும் வராது" என்று எண்ணினர்.

பிறகு, மாதரியை நோக்கிக் கூறுகிறார் :

"மாதரி! கேட்பாயாக! இம்மடந்தை கணவனாகிய இவன் தந்தையின் பெயரைக் கேட்பாரானால், அவன் குலத்தில் உள்ள இவ்வூர் வணிகர் பெறுதற்கரிய பொருளைப் பெற்றாரைப் போல நல்விருந்தாக எதிர் கொண்டு, கரிய பெரிய விழிகளையுடைய இவளுடன் இவனைத் தங்கள் காவலையுடைய மனையகத்தே கொண்டு போய் வைத்துக் கொள்வர். பெருஞ் செல்வமுடைய அவர்களின் மனைக்கு இவர்கள் செல்லுமளவும், இடைக் குல மடந்தையாகிய உனக்கு நான் இவளை அடைக் கலமாகத் தந்தேன். மங்கல மடந்தையாகிய இவளை நறு நீராட்டிச், சிவந்த கயலனைய நீண்ட கண்களிலே மை தீட்டி, நறிய மெல்லிய கூந்தலிலே சில மலர்களைச் சூட்டி, தூய மடிப்புடவையை உடுத்து, இவ் வாயிழைக்கு ஆய மகளிரும் செவிலித்தாயரும் நற்றாயும் நீயே யாகித் தாங்குவாயாக!

இவ்வாறு, துயருற்று என்னோடு போந்த இளங் கொடிபோலும் நங்கையின் அழகிய சிற்றடியை முன்பு மண்மகளும் கண்டறியாத வண்ணம் இல்லிலேயே இருந்த வள். தன் காலிலே கொப்புளங் கொண்டதனாலே இப் போதும் தன் அடியை மண்மகள் அறியாதவாறு நடந்து வந்தாள். அங்ஙனம் இருந்தும் கதிரின் வெம்மையாலே தன் காதலன் மெய் வருந்தியதென்று நடுங்கு துயரம் உற்று நாப்புலர வாடித் தன் துயர் என் வேறு நினையாத

பெருமை பொருந்திய பூங்கொடியாளுள். தம் காதலர்க்கு இனிய வாழ்க்கைத் துணையாகிய மகளிர்க்கு இன்றியமையாத கற்பாகிய கடமையைப் பூண்ட இத் தெய்வத்தையன்றி வேறு பொலிவினையுடைய தெய்வத்தை யாம் கண்டிலேம். மேலும், 'கற்பு மகளிர் இருந்த நாடு காலமழை பொய்யாது ; வளங்குறையாது ; வேந்தர் கொற்றம் சிதைவுருது' என்று நல்லோர் அத்தகு மிகுதியையுடைய அறநூலுரையை நீ அறிகையோ ? அறியாயோ?

தவத்தோர் தந்த அடைக்கலம் அப்போது சிறிதாயினும் பின்பு மிகப் பெரிய இன்பத்தைத் தரும் என்பதை யான் கூறக் கேள்.

காவிரியைத் தன் தோட்டத்திற்கு எல்லையாகவுடைய பட்டினத்திலே மலர்விரிந்த, பொதுமை நீங்கிய அழகிய நிழலையுடைய் அசோகின் அடியிலே, சாவக நோன்பிகள் ஒருங்கு கூடியிட்ட விளங்கும் ஒளியையுடைய சிலாதலத்தின் மீதேயிருந்து தருமத்தை யாவர்க்கும் போதிக்கும் சாரணரின் முன்பாக, வானவில்போல ஒளிவிட்டு அழகுதரும் திருமேனியும் மக்கள் கண்ணிற்குப் புலப்படாத வானவர் பலரும் தொழூம் தெய்வ வடிவும் ஒருபக்கத்துக் கை கருவிரற் குரங்கின் கையுமாக உள்ள பெருவிரலுடைய வானவன் ஒருவன் வந்து நின்ருன்.

அறங் கேட்கக் கூடியிருந்த சாவக ரெல்லோரும் அவனைப் பார்த்து, எழுந்து சாரணரைத் தொழுது, 'இவ்வானவன் யார்? இவன் இவ்வாருனதற்குக் காரணம் யாது?' என வினவினர்.

சாரணர் கூறுகிருர் : "இல்லற நெறியினனுகிய எட்டிப் பட்டத்தையுடைய சாயலன் என்னும் வாணிகன் ஒருவன் இருந்தான். அவன் மனையிலே இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் உண்ணு நோன்புடையோர் பலரும் புகுந்து தம் நோன்பை நிறைவேற்றுவது வழக்கம். அவ்வாறு, அவன் மனைக்கிழத்தி ஒரு பெரிய தவ முதல்வனைத் தன்வினை நீங்க எதிர்கொள்கின்றபோது, அவ்வூரிலே

பலராலும் துரத்தப்பட்டு, உணவுங் கிடைக்காமல். சிறுமையுற்ற ஒரு கருங்குரங்கு அச்சத்தோடு ஒதுங்கி வந்து, இம் மனையகத்தே புகுந்து, அருளறத்திலே யிடு பட்ட அம் மாதவனுடைய திருவடியிலே வணங்கி, அவன் உண்டு மிகுந்த சோற்றையுண்டு கைகழுவிய நீரைப் பருகிப் பெரும்பசி யடங்கியதால், மாதவனின் முகத்தை நோக்கி நின்றது. அதன் முகச் செவ்வியைக் கண்ட சலியா மனமுடைய மாதவன் மனம் மகிழ்ந்து, அவ்வில் லக்கிழத்தியைப் பார்த்து, 'நீ நின் மக்களிலே ஒரு தன்மை யாக இதனைப் பாதுகாப்பாயாக' எனக் கையிலே ஒப்ப டைத்தான். அவளும் உயர்ந்த அவனாற் கூறப்பட்ட மெய்ம்மொழி தவறாமற் காப்பாற்றி வந்தாள். பிறகு, அக் குரங்கு இறந்தபோது, அதற்கென வைத்த ஒரு பகுதியை, இதன் தீய பிறப்பொழிக! என்று வேண்டித் தானஞ் செய்தாள். ஆதலால் மத்திம நாட்டிலே வாரணவாசி என்னும் நகரிலே* உத்தர கௌத்தன் என்னும் அரச னுக்கு ஒரு மகனாகி, அழகுடனும் மெய்ச் செல்வத்துட னும் பழம்பிறப்புணர்வுடனும் தோன்றி, மிகுந்த வெற்றி யுடன் தானம் பலவும் புரிந்து முப்பத்திரண்டாம் வயதிலே இறந்தான். பிறகு, இத்தகைய தெய்வ யாக்கையைப் பெற்றான்.

ஆகையால், அவ்வாறு பெற்ற செல்வத்தின் மிகு பயன் எல்லாம் தன்னைக் காத்தளித்தவளின் தானச் சிறப்பே யென்று மனங்கொண்டு, முற்பிறப்பிலே கருங் குரங்கான வடிவிலே சிறிய கையைத் தன் பெரிய ஒரு பங்கிலே கொண்டு, 'நலம் மிகுந்த சாயலனுடைய மனை யாள் தலைநாளிலே செய்த தானத்தாலே இவ்வடிவமுடை யேனானேன். இதனை நீவிர் அறிமின்' என்று சாவக நோன்பிகளுக்கெல்லாம் அறிவித்துக் காட்ட இவ்வானவர் குமரன் தோன்றினன்."

* 'உத்தரனென்னும பெயருடன் கவிப்பன் என்னும் வணிகனுக்கு ஒரு மகனாகி' எனவும் கூறுவர் என்பர் அடியார்க்கு நல்லார்.

இங்ஙனம் சாரணர் கூறிய தகுதிபெற்ற நல்லுரையைத் தெய்வமொழியாகக் கொண்டு, அறத்திலே தலைப்பட்டு, அந்நகரிலே யிருந்த அருந்தவ மாக்களும், தவத்தினர்க்கெல்லாம் பொதுப்பட்ட வாழ்க்கையையுடைய சாவக மாந்தரும் தானமிட்ட எட்டியும் அவன் மனைவியும் தடையற்ற இன்பத்தையுடைய பேரின்ப வீட்டுலகை அடைந்தனர்.

இத்தகைய அடைக்கலப் பயனைக் கேட்டாய், இனி, இந்த நறுமண மிகுங் கற்றைக் குழலியுடன் பொழுது போமளவும் இங்கே நீட்டித்துத் தங்கியிராமற் செல்வாயாக!

மாதரி மனையடைதல் :

இவ்வாறு கூறிய கவுந்தியடிகளை மாதரி மகிழ்வுடன் போற்றித் தொழுதாள். பிறகு, வளராநின்ற இளைய அழகிய முலைகளையும் மூங்கிலின் அழகைத் தான் வாங்கிக் கொண்டு பருத்த தோள்களையும் முளைபோன்ற இள முறுவல்களையும் சிறு பருவத்திலே பேரறிவினையும் உடைய கண்ணகியுடன், மேற்றிசையிலே சென்ற ஞாயிற்றின் சுருங்கின கதிர்களையுடைய மாலைப் பொழுதிலே செல்லும் போது மடி சுரந்து கன்றைத் தேடிவரும் பசுக்களினுடைய முழங்குகுரல்கள் ஒலிக்க, ஆட்டுக்குட்டியையும் கோடரியையுமுடைய தோளிலே உறி கட்டின காவையும் சுமந்த இடையருடன் வரும் நெருங்கின வளையல் அணிந்த இடைச்சியரிற் சிலர் இவளழகு கண்டு புறத்திலே சூழ்ந்து வந்தனர்.

இந்நிலையிலே காவற் காடும், அகழியும், வளைந்து தானே எய்யும் பொறி வில்லும் கரிய விரலையுடைய குரங்குபோல் இருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லை உமிழுங் கவணும், காய்ச்சி இறைத்தலாலே, சேர்ந்தாரை வருத்தும் நெய்யும், [1] செம்புருக்கும் மிடாவும், உருகக் காய்ச்சிஎறிதற்குஎஃகுபட்டிருக்கும்உலைகளும், இடங்கணிப் பொறிக்குக் கல்லிட்டு வைக்கும் கூடையும், தூண்

* 1. பாகுகாயும் குழிசியுமாம்.

டில் வடிவாகச் செய்து வைத்துக் கிடங்கைக் கடந்து வந்து மதிலைப் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் கருவியும், [1] கழுக்கோல் போலக் கழுத்திற் பூட்டி முருக்குஞ் சங்கிலியும், ஆண்டலைப் பறவை போலச் செய்து பறக்க விட்டு உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும்படி அமைந்த பொறி நிரைகளும், அகழியிலிருந்து மதிலைப் பற்றி ஏறினல் மறித்துத் தள்ளும் இருப்புக் கவையும், [2] கழுக்கோலும், அம்புக்கட்டும், அம்பறைகளும், [3] பற்ருக்கை தூக்கிப்போட்ட [4] விட்டமும் மதிலைப்பற்றின கையைப் பொதுக்கும் ஊசிப் பொறிகளும், பகைவர் மேற் பாய்ந்து கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறியும், மதிலில் ஏறினருடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பினுற் செய்து வைக்கப்பட்ட பன்றிப் பொறியும், மூங்கில் வடிவாக அடித்தற் கமைத்த பொறியும், கதவுக்கு வலியாக உள் வாயிற் படியிலே நிலத்திலே வீழவிடும் மரங்களும், கணையமரமும், விட்டேறும், சிறுசவளமும், [5] வல்லயமும், சதக்கினி, தள்ளி வெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப்பொறி, அரிநூற் பொறி என்பனவும், குருவித்தலைகளும் (ஏவறை யென்பாருமுளர்) ஆகிய இவை மிகுந்து, நாள்தோறும் வென்று வென்றெடுத்த கொடிகள் நுடங்கும் மதில்வாயிலைக் கழிந்து இவர்களுடன் மாதரி தன் மனையிலே புகுந்தாள்.

———

• 1 கயிற்றுத் தொடக்குமாம. 2 கழுகும் பாடம். 3 கதவை அணுகாத படி கற்கவி தொடங்கி நாற்றும் துலாமுமாம்; சாணம் புக் கூடென் பாரும்; சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திரம் என்பாரும் உளர்; 4 சிப்பு அகப்படக் குறுக்கேயிட்ட மரமுமாம். 5 ஈட்டி முதலியனவுமாம.

16. கொலைக்களக் காதை

இடைச்சியர் ஆதரவு:

தனக்குக் கிடைத்தற்கரிய பாவைபோல்வாளைக் கவுந்தியடிகளால் அடைக்கலமாகப் பெற்ற, மிகவும் பெரிய மகிழ்ச்சியை அடைந்த இடைக்குல மடந்தையாகிய மாதரி, மோர் விலையை உணவாகக் கொண்ட ஆய்ச்சியருடன் இடையர் குடியிருக்கும் இல்லத்திலன்றிக், கட்டு வேலி சூழ்ந்த காவலையும் அழகு பெற விட்ட குளிர்ந்த பந்தரையும் உடைய செம்மண் பூசப் பெற்ற சிறிய இல்லமாகிய புதிய மனையிலே அவர்களை இருத்தினாள். பிறகு, தன் சுற்றத்திலுள்ள செறிந்த வளையை யுடைய ஆய்ச்சியர் சிலருடன் தானுமிருந்து நறிய மலர்க் கோதையுடைய கண்ணகியைப் புது நீர் கொண்டு நீராட்டினாள். "இக் கூடல் நகரிலே மகளிர் கொள்ளும் அரிய விலையை யுடைய புதிய ஆடகப் பொன்னாலே செய்த கோலத்தை அழிக்கச், செய்யாக் கோலத்துடன் வந்த உமக்கு அடித் தொழிலாட்டியாக என் மகள் ஐயையைக் கொண்மின்! யான் உம்மைப் பொன் போலப் பொதிந்து காப்பேன். ஆதலின், அணிந்த மலர்க் கோதையை யுடைய நங்கையீர்! இனி ஒன்றற்குங் கவலைப்படாமல் இருப்பீராக!" என்று சொல்லித் தொழுதாள்.

பிறகு, 'மாதவத் தாட்டியாகிய கவுந்தியடிகள் நுமக்கு வழியிலே எவ்வகைத் தீங்கும் நேராமற் காத்து, வருத்தம் சிறிதும் இல்லாத இவ்விடத்தே சேர்ப்பித்தார். ஆதலின், நும் கொழுநர்க்கு இங்கு மனக் கவலை யேதும் உண்டாகாது.' என்று கூறினாள்.

பின்னர், அடிகள் சாவக நோன்பிகள் ஆதலின், கண்ணகியார்க்கு நாத்தூண் நங்கையாகிய ஐயையுடன்

நீங்களும் பகலிலேயே சமைத்துண்ணும்படி பொருந்திய நல்ல புதிய கலங்களை விரையக் கொண்டு வந்து கொடுமின்!' என்று மற்ற இடைச்சியரிடம் கூறினாள்.

அங்ஙனமே இடைக்குல மடந்தையர் தகுதியிற் குறையாத அட்டிற் கலத்துடன் மாண்புறும் மரபினை யுடைய பலாவின் கொழுவிய திரண்ட கனிக்காயும் வளைந்த வரியை யுடைய வெள்ளரிக்காயும் பசிய கொம்மட்டி மாதுளங் காயும் இனிய மாங்கனியும் வாழைக் கனியும் செந்நெல் லரிசியும் தம்மிடமுள்ள பாலும் நெய் யும் ஆகிய இவற்றைக் கொண்டு வந்து, 'நேரிய வளை யணிந்த கண்ணகியே! கொள்க!' என்று கொடுத் தனர்.

கண்ணகி உணவு சமைத்துக் கணவனுக்குப் படைத்தல் :

இவ்வாறு அவர்கள் கொடுத்த பலவேறு வகைப் பட்ட பசுங் காய்களை வளைந்த வாயை யுடைய அரிவா ளாலே, மெல் விரல்கள் சிவப்ப அரிந்தாள். அதனால் அவளுடைய திருமுகம் வியர்த்தது. செங்கண்கள் சிவந் தன. கரிய இடமுடைய அட்டிலைக் கண்டு முகம் மாறிப் பெயர்ந்தாள். அவள் நிலைகண்ட ஐயை வைக்கோலைக் கொண்டு தீ மூட்டிக் கொடுத்தாள். கண்ணகி அவள் துணைகொண்டு தன் காதலனுக்குத் தன் கைவல்ல முறை யிலே உணவு சமைத்தாள்.

பின்னர், மிகவும் வெண்மையான பனையோலையாலே கைவன்மையுடையவள் அழகுறப் புனைந்து செய்த தொழிற்பாடு மிகுந்த இருக்கையிலே தன் செல்வன் வந் திருந்த பிறகு, மணமிகும் மலரனைய அங்கையாலே மட் கல நீரைக் கொண்டு, அவன் அடிமலரைக் கழுவித் தொழுது அந்நீரை மாற்றினாள்; மண்ணக மடந்தை தன் நிலைகண்டு மயங்கிய மயக்கத்தைத் தீர்ப்பவள் போலத் தன் கையாற் குளிர்ந்த நீரைத் தெளித்துத் தடவி மண்ட லஞ் செய்தாள்; ஈனாத வாழையின் குருத்தை விரித்து

அதனகத்தே அமுதைப் பெய்து, 'அடிகளே! இங்கு வந்தமர்ந்து அமுது செய்தருள்க!' என்று வேண்டினுள்.

கோவலன், வணிகர்க்கென அருமறையிலே உரியவாக விதித்த வாய்பூச்சுப் பலியிடுதல் முதலியவெல்லாம் ஒருவகையாக முடித்த பிறகு,

"இந்த மதுரையில் இந்த ஆயர்பாடியில் யாம் பெற்ற இந்த நல்லமுதத்தை உண்கின்ற இந்த நம்பி, அந்த மதுரையில் ஆயர்பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுதம் உண்ணும் புதிய காயாமலர் போலும் வண்ணமுடைய கண்ணன்தானே? இவனுற்ற பசித் துயர் போக்கும் இந்தப் பல்வளைத் தோளியும் காளிந்தியாற்றிலே தூய நீல மணிவண்ணனின் துயரைப் போக்கிய நப்பின்னையென்னும் விளக்குத்தானே? இவர் காட்சியை நம் கண்கள் கொள்ளும் ஆற்றலுடையவல்ல"

என்று உவகை பொங்கி ஐயையும் மாதரியும் புகழ்ந்து கூற, அமர்ந்து இனிதே உண்டு அமர்ந்தான்; கரிய நீண்ட குழலையுடைய கண்ணகி, கோவலனுக்கு அழகிய மெல்லிய சுருளுடன் பிளவையும் கொடுத்து நின்ருள். அவளைக் கோவலன் வருக என்று அருகிலமர்த்தி அணைத்துக்கொண்டு கூறுகிருன்:

கோவலனுடைய வருத்தம்

"எம்முடைய முதுகுரவர், 'பருக்கைக்கல் பொருந்திய சிறுநெறியாகிய அருநெறியிலே செல்வதற்கு மடந்தையின் அடிகள் சிறிதும் வன்மையுடைய அல்லவே' என்று வெம்மைமிகும் எயினர் வழிப்பறி செய்யும் சுர நெறியிலே போந்ததற்கு இரங்கி என்ன துன்பம் உற்றனரோ? யாம் இங்ஙிலை அடைந்தது கனவோ? நனவெனின் முன்செய்த தீவினையின் அளவு எத்தகையதோ? யான் இப்போது உள்ளம் கலங்குதலால் எதனையும் உணரும் ஆற்றல் இலேன்! பயனில கூறுவோருடனும் புதிய காம நுகர்ச்சியை விரும்புங் காமுக

ருடனும் கூடிப், பிறரைப் புறங்கூறும் குற்றவையிலே வெடிச்சிரிப்புக்குட்பட்டு, ஒழுக்கத்தை மறந்து, நற்பொருள் கூறுவோர் விரும்பும் நன்னெறியைக் கெடுத்த எனக்கு இனித் தீக்கதியே கிடைக்கும்! இருமுதுகுரவர்க்கும் பணிபுரியாமல் தவறிழைத்தேன். சிறுவயதிலே பேரறிவு படைத்த நினக்கும் சிறுமைபுரிந்தேன். இவ்வொழுக்கம் இழுக்குடையதெனச் சிறிதும் நினைத்திலேன். யான் இத்தன்மையேன் ஆகவும் நம்முடைய நகரிலிருந்து இந்நகருக்குப் புறப்படுக என்றவுடன், அது முறைமையன்றென மறுமல் உடன் வர ஒருப்பட்டெழுந்தனையே! நீ என்ன செய்துவிட்டாய்!''

கண்ணகி மாற்றம்

இவ்வாறு கோவலன் இரங்கிக் கூறியதற்கு வருந்திய கண்ணகி கூறுகிறாள்:

''சாவக நோன்பிகட் களித்தலும் அந்தணரை ஓம்பலும் துறவியரையும் விருந்தினரையும் எதிர்கொள்ளுதலும் ஆகிய இவற்றை இழந்த என்னை நும் பெருமகளுடன் பெரும்புகழை மேற்கொண்ட பெருஞ்சிறப்புடைய இருநிதிக் கிழவனின் முன், நீர் இல்லாத வெறுப்பை மறைத்து ஒழுகினேன், அவர்கள் அதனைக் குறிப்பால் உணர்ந்து, தம் உள்ளத்திலே மிகுந்த அன்புடன் அருள் கலந்த மொழியாலே என் பொறுமையைப் பாராட்டினர்; யான் உள்ளத்தே மறைத்த மெய்வருத்தமும் மனக்கவலையும் வெளிப்பட்டு வாய்திறந்து சொல்வதுபோலே யிருந்தனவென்று என் பொய்ம்முறுவலுக்கு அவர் வருந்தினர். இவ்வாறாக நீர் போற்றாவொழுக்கம் புரிந்தீராகவும், யான் உம்முடைய மொழியைச் சிறிதும் மாற்றாத உள்ள வாழ்க்கை உடையேன் ஆதலாலே உடன்பட்டெழுந்தேன்.''

கோவலன் ஆறுதல்மொழி

இம்மொழி கேட்ட கோவலன், ''தாய் தந்தை முதலியோரையும் குற்றேவல் புரிவோரையும் செவிலி முதலி

யோரையும் தோழிகளையும் விட்டு, நாணத்தையும் மடனை யும் நல்லோர் புகழ்ச்சியையும் கற்பையும் துணையாகக் கொண்டு, அறிவில்லாத என்னுடன் வந்து, என் தனி மையை நீக்கிய பொன்னே! கொடியே! அணிந்த மலர்க் கோதாய்! நாணமுடைய பாவாய்! பெருநிலத்திற்கு விளக்கே! கற்பின் கொழுந்தே! அழகின் செல்வியே! யான் நின் சிற்றடி அணியாக உள்ள சிலம்பிலே ஒன்றைக் கொண்டுபோய் விற்று வருவேன். வருந்துணையும் நீ தனி மையால் மயங்காதிருப்பாயாக!" என்று கூறிக் கருங்கயல் நெடுங்கண் காதலியை மெய்யொன்றத் தழுவி ஆதரவு செய்தான். பிறகு, அவள் அருகில் எவருமின்றித் தனி யிருக்க நேர்ந்த அதனைக் கண்டு உள்ளம் வெதும்பி மல்கிய கண்ணீரை அவள் காணின் வருந்துவாளென்று கரந்தன னாகிப் பல பசுக்களையும் பல எருமைகளையும் உடைய இடையர் இல்லங்களை விட்டு நீங்கித் தளர்ந்த நடையுடன் தெருவூடே சென்றான்.

கோவலனும் பொற்கொல்லனும்

செல்லும்போது இமிலையும் கொல்லுமியல்பையு முடைய எருதொன்று எதிர்த்துப் பாய வந்தது. அது சகுனத்தடையென்று இடையர்குலத்தாரே அறிவரன்றி, வணிகரறியார். ஆதலின் அதனைக் கடந்து மகரந்தத் தாள் நிறைந்த மன்றமெல்லாங் கழிந்து, பொதுமகளிர் தெருவையுங் கடந்து கடைத்தெருவிலே சென்றுகொண் டிருந்தான்.

அப்போது, அங்கே, உருக்குத் தட்டாரும் கைத் தொழிலிற் பயின்ற பணித்தட்டாருமாக நூற்றுவர் பின் வர, அரசனளித்த சட்டையுடன், தன் சாதிக்கேற்பத் தெருவின் ஓரமாக ஒதுங்கி நடக்கும் நடையுடனும் கை யிற் பிடித்த கொடிற்றுடனும் வரும் பொற்கொல்லனைக் கோவலன் கண்டான்; பாண்டியன் பெயருடன் வரிசை பெற்ற கொல்லன் இவனெனக் கருதினான்; அவனை நெருங்கி, 'அரசன் தேவி பூணலாவதொரு சிலம்பினை விலைமதிக்க வல்லையோ?' என வினவினான்.

காலதூதன் போலவந்த பொற்கொல்லன் கைகுவித்துத் தொழுது, 'மகளிருடைய அடிக்கலம் விலை மதித்தற்கறியேன் எனினும், வேந்தரின் முடிக்கலம் முதலியன யான் சமைப்பேன்' எனப் புகழ்ந்து கூறினான்.

கோவலனும், யாவர்க்கும் புகழ இயலாத சிலம்பினைப் பொதிந்து வைத்திருந்த பொதியின் வாயை அவிழ்த்தான். அப்போது தலைமையான மணியுடன் வயிரத்தை ஒழுங்குறப் பதித்த கேவணத்தையுடைய, கிளிச்சிறை யென்னும் பசும்பொன்னாற் செய்த, புடைபட்டு உட்கருவையுடைய, சித்திரத் தொழிலையுடையதாகிய சிலம்பின் தொழிலருமையையெல்லாம் பொய்ச் செய்தி சார்ந்த தொழிலையுடைய பொற்கொல்லன் நெஞ்சம் இடுவந்தி கூறுதலைப் புரிந்து நோக்கவும் கண்கள் சிலம்பை நோக்கவும் இவ்விரு நோக்கும் கண்டார்க்கு ஒரு நோக்கமே போலத் தோன்ற நோக்கினான்.

பின்னர், 'அரசனுடைய பெருந்தேவிக்கல்லது இப் பெருவிலைச் சிலம்பு வேறொருவர்க்கும் வினுவாகாது என்று சொல்லி, 'யான் நின் திருமுன்னின்றும் போய் வெற்றி மிக்க வேந்தனுக்கு இதனை அறிவித்து வருமளவும் என் சிறு குடிலுக்கு அருகேயுள்ள அவ்விடத்தே நீர் இருப்பீராக!' என வேண்டினான். கோவலனும் அக் கீழ் மகன் இருப்பிடத்திற்கு அயலதாகிய ஓர் அக்கசாலைப் பள்ளியின் மதிலகத்தே புகுந்து தங்கினான்.

பொற்கொல்லனின் வஞ்சச் செயல்:

பிறகு, அவ்வஞ்சகக் கொல்லன், 'யான் முன்னர் வஞ்சித்துக்கொண்ட சிலம்பு என்னிடத்தேயே இருக்கிறது என்பது பலரும் அறிய அரசனுக்கு வெளிப்படு முன்னே, வேறொரு நாட்டினின்றும் போந்த புதியவனாலே நீக்கிக் கொள்வேன்' என்று துணிந்த நினைவைக் கலக்கமின்றி மறைத்துச் சென்றான்,

அப்போது, கூடலில் உள்ள நாடக மகளிரின் ஆடலிலே தோன்றும் முகக் கவர்ச்சியும், அவர் ஆடல் வகைக

ளும், ஆடலுக்கேற்ற பாடலின் வேறுபாடுகளும், யாழிசையின் பயன்களும் மன்னன் உள்ளத்தைப் பின்னின என்று கருதி, ஊடிய உள்ளம் வெளிப்படாமல் ஒடுக்கி, வருத்தத்தைச் செய்யும் தலைநோயைத் தன் மேலே சுமத்திக் கொண்டு, குலப்பிறப்பாட்டியாகிய பட்டத்தரசி அரசனுடன் அமர்ந்திராமல், அரண்மனையிலே அந்தப்புரத்தே சென்று புகுந்தாள். அரசனும் காம மயக்குடையனாகி, அமைச்சர் குழுவை விட்டுப் பிரிந்து, செவ்வரி சிந்திய கண்களையுடைய ஏவல் மகளிருடன் கோப்பெருந் தேவியின் கோயிலை நோக்கிச் சென்றான். அவ்வாறு செல்லும் அரசனைக் காவலையுடைய வாயிற் கடையிலே பொற்கொல்லன் கண்ட அளவிலே வீழ்ந்து வணங்கிப் பலகால் ஏத்திச் சொல்கிறான்:

"கன்னக்கோலும் கவைக்கோலும் இல்லாமலே தன் மனத்திலே பயின்ற துயில் மந்திரமே களவுக்குத் துணையாகக்கொண்டு, வாயிற் காவலரை மயங்குந் துயிலடையச் செய்து, அரண்மனையில் இருந்த சிலம்பைக் கவர்ந்து கொண்ட கள்வன், கல்லென்னும் ஆரவாரமுடைய இப் பேரூரின் காவலர் கண்ணை மறைத்து, அடியேனுடைய இழிவுமிக்க சிறு குடிலகத்தே வந்திருக்கின்றான்!"

இம்மொழி கேட்ட, சினையில் அலரும் வேப்பமலர் மாலையணிந்த பாண்டியன் ஊர் காக்கும் காவலரை அழைத்து, "இங்கிருந்து களவுபோன என் அரசியின் சிலம்பு, இவன் கூறிய களவிலே பயின்ற கள்வனுடைய கையிலே உள்ளதெனின், அவனைக் கொல்ல அச்சிலம் பொடு ஈங்குக் கொணர்க!" எனக் கூறக் கருதியவன் வினை விளைகின்ற காலமாதலின் சிறிதும் ஆராயாமல், காம மயக்கினாலே, "அவனைக் கொன்று அச்சிலம்பை அரசியின் ஊடலைத் தீர்க்க உதவுமாறு இங்கே கொணர்வீராக!" என்றுரைத்து விட்டான்!

கோவலன் கொலையுறுதல் :

அரசன் இவ்வாறு கூறி விடுத்த வேலிளையருடன் செல்லும் கருந்தொழில் கொல்லன் ஏவப்பட்ட வுள்ளத்

திலே தான் எண்ணியது முடிந்ததென்று மகிழ்ந்தவாறு, தீவினையாகிய முற்றிய வலையிலே சென்று அகப்பட்டிருந்த கோவலனை அண்மினன்.

பொய்த்தொழிற் கொல்லன் வெற்றிமிக்க படை வேந்தன் ஏவியதனாலே சிலம்புகாண இவர்கள் வந்தார்கள். அச்சிலம்பைக் காட்டுமின்! எனச் சொல்லி, அச்சிலம்பை வாங்கிக்கொண்டு, தொழிலருமை மிகுந்த அதன் அமைப்பை யெல்லாம் கூறுவான் போலக் கொலையாளரைத் தனியே அழைத்து வந்து, அரண்மனைச் சிலம்பே அது என்பதற்குரிய பொருத்தங்களைக் காட்டி விளக்கினன்.

ஆனாற் கொலையாளியாகிய அரிய திறலினர், 'மெய்யின் இலக்கணத்தாலும் இருக்கின்ற முறைமையானும் நீ கூறிய கள்வனல்லன். ஆகையாற் கொல்லப்படுவானுமல்லன்' என்று கூறினர். கருந்தொழிலையுடைய தட்டான் நகைத்து, அவர்களை இகழ்ந்து, களவுநூலில் உள்ள ஏதுக்களைக் காட்டிக் கூறுகின்றான் :

" இழுக்குடைய மரபினராகிய களவு செய்துண்ணும் மாக்கள் மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடன், காலம், கருவி என்ற எட்டையுமன்றோ படையாகக்கொண்டு திரிகின்றனர்? இவன் மருந்திற் பட்டீராயின், பெரும் புகழையுடைய வேந்தனால் இப்போதே தண்டம் பெற்றீராவீர்! தாம் கற்ற மந்திரத்தை நாவினாலே வழுத்துவராயின், வானவர் குமரரைப் போல, நம் கண்ணுற் காண முடியாமல் மறைந்து விடுவர்! தாங்கள் வழிபடுந் தெய்வம் தம்முன் நிற்கும்படி தெளிவுற நினைப்பாராயின், தம் கையில் அகப்பட்ட பொருளை நமக்குக் காட்டி விட்டுந் தப்பி விடுவர்! மருந்தினாலே நம்மை மயக்குவராயின் நாம் இருந்த இடத்தை விட்டுப் பெயரவும் மாட்டோம்! தாம் அறிந்த நிமித்தம் வாய்ப்புப் பெற்றாலன்றிப் பெறுதற்கரிய பொருள்தானே வந்து கையிற் புகுந்தாலும் களவு செய்யமாட்டார்! களவுநூலிற் கூறப்

பெறும் தொழில்களை அறிந்து நினைத்துச் செய்வாராயின், மண்ணுலகிலே தாம் இருப்பினும் விண்ணுலகிலுள்ள இந்திரன் மார்பின் ஆரத்தையும் பெறுவர்! இவ்விடமே இப்பொருளைக் கொள்ளுதற்குரிய இடமென இவர் துணியின் அவ்விடத்தே அவரை யாவர் காண வல்லார்! களவு செய்தற்குரிய காலத்தை ஆராய்ந்து சென்று பொருளைக் கைப்பற்றுவாராயின், மேலோராலும் தடுக்க முடியாது! கருவிகளைக் கொண்டு, அரியபொருள்களைக் கைப்பற்றுவாராயின் இந்நில மருங்கிலே யாவராலும் காண இயலாது!

இவர்களுக்கு இரவும் பகலுமென்று வேறுபாடில்லை. இக்களவு நூலை யாம் கேட்பின் கூறி முடியாது.

முன்னாளிலே ஒரு கள்வன் தூதர் உருக்கொண்டு வந்து கொற்றவன் வாயிலிற் பகற்போது கழித்து, வலிய இரவிலே மாதருருவைக் கொண்டு உள்ளே புகுந்து, விளக்கின் நிழலிலே பள்ளியறையில் அஞ்சாது புகுந்து, நம் அரசனின் தம்பியாகிய இளங்கோ துயின்று கொண்டிருக்கும்போது அவ்விளங்கோ வேந்தின் மார்பிலே ஒளி வீசும் வயிரம் பதித்த ஆரத்தை விரைந்து கழற்றினன். உடனே இளங்கோ துயில் நீங்கித் தோளிலே ஆரங் காணுமல் உடைவாளை உருவினன். கள்வனே அவ்வாளின் உறையைக் கையிலேந்தி, இளங்கோ குத்துந்தோறும் வாளிலே உறையைச் செறிந்தான். அதனல், இளங்கோ மற்போராலே கள்வனை அடக்க எண்ணி அதற்கு முயல, அக்கள்வன் ஆண்டுற்ற தூணென்றைத் தானெனக் காட்டி நீங்கித் தன் களவுநூற் கல்வியாலே தப்பியோடி விட்டான். அவனை இதுவரையிற் கண்டார் உளரெனிற் காட்டுக! ஆதலால் இவர்க்கு இவரே ஒப்பாதல் அன்றி இவ்வுலகிலே பிறரை ஒப்பாகக் கூறுதல் உண்டோ?

இவ்வாறு கொலைத் தொழிலுக்கஞ்சாத கொல்லன் சொல்ல, ஆங்கிருந்த அவர்களில் வேலேந்திய ஒருவன், "முன்னொருநாள், நிலத்தை அகழும் உளியை உடையவனாய், நீல ஆடையுடுத்துப் பல கலன்களையும் விரும்பிய

வேட்கையுடன் பற்றிய பொருளை விடாத இயல்பால், ஊனைக் கவ்வி விடாத புலிபோன்றவனாகிய ஒரு கள்வன் மாரிக்காலத்து ஒரு நள்ளிரவிலே, கண்களை மயங்கச் செய்யும் கொடிய இருளிலே, ஊர் முற்றும் தூங்கும் போது காணப்பட்டான். அவனைக் கண்ட நான் என் வாளை உறையினின்றும் எடுத்தேன். அவ்வாளை அவன் பற்றிக்கொண்டு மறைந்து விட்டான். இன்னும் அவனை யும் என் வாளையும் எங்கும் கண்டிலேன். ஆதலால், இவர் செய்கை அறிதற்கரியது. இவனை நாம் நெகிழ விடின், அரசன் நம்மைத் துன்புறுத்துவான். ஆதலால், உறுபடை யுடையீர் உடனே செய்தற்குரிய தொன்றை உடனே கூறுமின் '' என்றான்.

இங்ஙனம் இவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போது, கல்வியறிவில்லாத களிமகன் ஒருவன் கொலைக்கஞ் சானாகித் தன் கைவாளாலே கோவலனை வெட்டினான். அது அவன் மெய்யைக் குறுக்கே துணித்தது! துணிபட்ட உடற்குறையின் புண் வழியே கொப்புளித்தெழுந்த குருதி குதித்து நிலமெங்கும் பரவியது! நிலமடந்தை தனக்கு நேருந் துன்பம் உணர்ந்து மிக்க துயரமுற, அப் பாண்டியனுடைய செங்கோல் வளைய, முன்னைத் தீவினை முதிர்தலாலே வெட்டுண்ட கோவலன் விழுந்தான்.

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகிதன் கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

[பாண்டியன் முன்செய்த தீங்கின் விளைவாகி வந்த வினையாலே, மண்ணில் இதுவரை வளையாத செங்கோல், கண்ணகியின் கேள்வனைக் காரணமாகக் கொண்டு வளைந் தது. ஆதலால், உலகீர்! செய்தவினை இருவினையும் நண் ணும் என்பதை அறிந்து, நல்வினையே செய்யுமின்!]

——

17. ஆய்ச்சியர் குரவை

ஆயர்பாடியில் :—

இமயமலையின் உச்சியிலே தான் பொறித்த கயலுக்கு அயலில் எழுதிய புலியையும் வில்லையும் கொடியாகக் கொண்ட சோழனும் சேரனும் ஆகிய மன்னரும் மற்றும் இந்த நாவலந்தீவிலுள்ள பிற மன்னரும் குறுநிலமன்னரும் தன் ஏவல் கேட்டு நடக்க, நிலமுழுதும் ஆண்ட முத்துமாலை பொருந்திய வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியன் அரண்மனையிலே பள்ளியெழுச்சி முரசு முழங்கும். நமக்கு இன்று அரண்மனையிலே நெய் யளக்கும் முறையென எண்ணி ஐயையாகிய தன் மகளை யழைத்துக் கடைகயிறும் மத்துங்கொண்டு, இடையர்குல முதுமகளாகிய மாதரி தயிர்த்தாழி யிருக்குமிடத்திற்கு வந்து நின்றாள்.

வந்தவள் அங்கிருக்கும் நிலையைக் கண்டு அஞ்சிக் கூறுகிறாள் :-

"நாம் பிரையிட்ட குடங்களிற் பால் தோயவில்லை! நம் ஆநிரையிலே திரண்ட திமிலையுடைய விடையின் கண்களும் நீரைச் சொரிகின்றன! ஏதோ நமக்குத் தீங்கு வருமென்று தெரிகிறது! முதல்நாள் உறியிலே வைத்த வெண்ணெய் உருக்கின் உருகவில்லை! ஆட்டுக்குட்டிகளும் துள்ளி விளையாடாமற் குழைந்து கிடக்கின்றன! ஏதோ நமக்குத் திங்கு வருமென்று தெரிகிறது! நாலு முலைகளை யுடைய ஆவின் திரள் மெய்ந்நடுங்கி நின்று அரற்றும்! பசுக்களின் கழுத்திலே கட்டப்பட்ட பெரிய மணிகளும் வீழ்கின்றன! ஏதோ நமக்குத் தீங்கு வருமென்று தெரி கிறது!"

இவ்வாறு குடப்பாலுறையாமையாலும், குவிந்த இமிலையுடைய ஏற்றின் மடக்கண்ணீர் சோர்தலாலும்,

உறியில் வெண்ணெய் உருகாமையாலும், மறி முடங்கி ஆடாமையாலும், ஆவின் கழுத்துமணி நிலத்திலே அற்று வீழ்தலாலும் வருவதான ஒரு துன்பம் உண்டென்று கூறிய மாதரி, மகள் முகம் நோக்கி, "மனம் மயங்காதே! மண்ணில் மாதர்க்கு அணியாகிய கண்ணகியுங் காணும் படி, ஆயர்பாடியில் ஒருமன்றத்திலே மாயவனுடன் அவன் முன்னவனுடிய குழந்தைப் பருவ நாடகங்களிலே, வேலனைய நீண்ட கண்களையுடைய பின்னையுடன் ஆடிய குரவைக் கூத்தை யாம் ஆடுவோம். அவ்வாறு ஆடினுற் கறவைகளும் கன்றுகளும் துயர்நீங்கி நிற்கும்" என்று கூறினுள்.

குரவைக் கூத்து

"தேன்பொருந்திய மலர்க்கோதையணிந்த இவள் இக் காரியேற்றின் சீற்றத்திற்கு அஞ்சாமல் அதனைத் தழுவிய வனை விரும்புவாள். இப் பொற்றொடியின் தோள் சிவந்த நெற்றிச் சுட்டியையுடைய இவ்வேற்றின் வலிமையை அடக்கினவனுக்கு உரியது.

இம்முல்லையம் பூங்குழலாள் இக்கொழுவிய இளைய ஏற்றைத் தழுவிச் செலுத்தினவனுக்கு உரியவள்.

இப்பெண் கொடியின் அழகிய தோள் நுண்ணிய புள்ளிகளையுடைய இவ்வெள்ளையை வென்றவனுக்கே ஆகும்.

இந்த நறுமணக்கொடியின் மென்முலை இம் மறை யெருத்தின் சீற்றத்தை அடக்கினவனுக்கே உரியன.

இக்கொன்றைப் பழம்போலும் கூந்தலையுடையாள் வென்றிமழவிடையாம் இதனை ஊர்ந்தவனுக்கே உரியவள்.

காயாமலர் போலும் புது நிறமுடைய இவள் இந்தத் தூய பால்வெள்ளை ஏற்றின் ஆற்றலை அடக்கினவனுக்கே மனைவியாவாள்.

இவ்வாறு கூறி இளங்கோதையர் எழுவரும் தொழு விலே எழுவகை ஏறுகளைக் குறித்து வளர்த்தனர்."

இங்ஙனம் தன் மகளிடம் மாதரி கூறிய பின்னர் இம்மகளிரைப் பழைய நரம்புகள் நிற்கும் முறையிலே நிறுத்தி இவர்கட்குப் பெயர் படைத்து இடுவாளாயினுள்:

மேலைத்திசையிலே குரல் நரம்பு முதலாகக் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என இவர்களுக்கு நிரல் செய்து இட்ட பெயரே மாதரி விரும்பிய பெயர்.

பாலை நான்கு வகைப்படும். ஆயப்பாலை, சதுரப் பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலையென.

என்னை ? "ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்ட மெனப், பாய நான்கும் பாலையாகும்" என்றுர்.

அவற்றுள், வட்டப்பாலை வருமாறு: "வட்டமென் பது வகுக்குங்காலை, ஓரேழ் தொடுத்த மண்டலமாகும்," "சாணளவு கொண்ட தொருவட்டந் தன்மீது, பேணியிரு நாலு பெருந்திசைக்-கோணத் திருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும், வருமுறையே மண்டலத்தை வை" என்பது சூத்திரம். என்னுதலிற்றோ வெனின், வட்டப் பாலை மண்டலம் வருமிடத்துச் சாணுக்குச் சாணாக ஒரு வட்டம் கீறிப் பெருந்திசைகளின் மேலே இரண்டு வரம்பு கீறி மண்டலம் செய்து பன்னிரண்டு கோணமாக வகுப் பது நுதலிற்று.

"எதிரு மிராசி வலமிட மாக, எதிரா விடமீன மாக-முதிராத, ஈராறி ராசிகளை யிட்டடைவே நோக்கவே, ஏரார்ந்த மண்டலமென் றெண்" என்பது சூத்திரம். என்னு தலிற் றோவெனின், இட்ட பன்னிரண்டு கோணத்திற் பன்னிரண்டி ராசிகளை நிறுத்தினுல் இவற்றுள் நரம் புடன் இயல்வன ஏழென்பது உணர்த்துதல் நுதலிற்று.

"ஏத்து மிடப மலவனுடன் சீயம், கோற்றனுக் கும்பமொடு மீனமிவை-பார்த்துக், குரன்முதற் றுர மிறு வாய்க் கிடந்த, நிரலேழுஞ் செம்பாலை நேர்." இவ்வேழும் இடபம் கற்கடகம் சிங்கம் துலாம் தனு கும்பம் மீனமென இவற்றுள் நிற்கும்.

"துலைநிலைக் குரலுந் தனுநிலைத் துத்தமும், நிலை பெறு கும்பத்து நேர்கைக் கிளையும், மீனத் துழையும் விடை நிலத் திளியும், மானக் கடகத்து மன்னிய விளரியும், அரியிடைத் தாரமு மணைவுறக் கொளலே."

இனி இந்நரம்புகளின் மாத்திரைகள் வருமாறு: "குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங், குரையா வுழையிளி நான்கு - விரையா, விளரியெனின் மூன் றிரண்டு தாரமெனச் சொன்னர், களரிசேர் கண்ணுற் றவர்" எனக் கொள்க.

இவற்றுள், தாரத்து உழை பிறக்கும், உழையிற் குரல் பிறக்கும்; குரலுள் இளி பிறக்கும்; இளியுள் துத்தம் பிறக்கும்; துத்தத்துள் விளரி பிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்குமெனக் கொள்க. இவற்றுள் முதலில் தோன்றிய நரம்பு தாரம்; இவை விரிப்பிற் பெருகும்; வந்தவழிக் கண்டுகொள்க.

இனி வட்டப்பாலையிலே நாலு பண்ணும் பிறக்கும் "தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண் குரல், ஒரு முழை தோன்றக் குறிஞ்சியாழ் - நேரே, இளிகுரலிற் ரேன்ற மருதயாழ் துத்தம், இளியிற் பிறக்க நெய்தலியாழ்." இவற்றுள், பாலையாழுள்ளே ஏழு பாலையிசை பிறக்கும். "குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று, வரையாது தாரத் துழைக்கும் விரைவின்றி, எத்தும் விளரி கிளைக்கீக்க வேந்திழையாய், துத்தங் குரலாகுஞ் சொல்"

இந்நரம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்கு மாத்திரை பெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்று மாத்திரை பெறும்; உழையும் தாரமும் இரண்டு மாத்திரை பெறும்; இவற்றுள் குரல் குரலாய் ஒத்து நின்றது செம்பாலை: இதனிலே குரலிற் பாகத்தையும் இளியிற் பாகத்தையும் வாங்கிக் கைக்கிளை உழை விளரி தாரத்திற்கு ஒரோவொன்றைக் கொண்டு சேர்க்கத் துத்தம் குரலாய்ப் படுமலைப் பாலையாம்; இவ்வாறே திரிக்க இவ்வேழு பெரும்பாலைகளும் பிறக்கும்; பிறக்குங்கால் திரிந்த குரல் ஏழும் முதலாகப் பிறக்கும்.

அவை பிறக்கு மாறு:— குரல் குரலாயது செம்பாலை; துத்தம் குரலாயது படுமலைப்பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை, உழை குரலாயது அரும்பாலை; இளி குரலாயது கோடிப்பாலை; விளரி குரலாயது விளரிப் பாலை; தாரம் குரலாயது மேற் செம்பாலையென வல முறையே ஏழுபாலையும் கண்டுகொள்க. இதனை வலமுறை யென்றும்; மேற்கே முகமாக இருந்து திரிதலான். கிழக்கே நோக்கியிருக்கின் இடமுறையாமெனக் கொள்க.

குரல் நரம்பை மாயவன் என்றாள். இளிநரம்பை வெற்றிமிக்கவனாகிய பலதேவன் என்றாள். துத்தநரம்பை ஆய்மகளாகிய பின்னையாம் என்றாள். மற்றைப் பெண் களைக் கைக்கிளை உழை விளரி தாரம் என்றாள்.

மாயவனென்று பெயர் கூறப்பட்ட குரல் நரம்பைச் சேரப் பின்னை என்னும் துத்தமும் தாரமும் நின்றன. பலதேவனாகிய இளிநரம்பைச் சேர உழையும் விளரியும் நின்றன. கைக்கிளையென்னும் நரம்பு பின்னைக்கு இடப் பக்கத்தே நின்றது முந்தையாகிய தார நரம்பிற்கு வலப்பக்கத்தே விளரி நின்றது.

பின்னர், வளவிய துழாய் மாலையை மாயவன் தோளில் இட்டு, இசை நாடக நூலாரால் வெறுக்கப் படாத குரவைக் கூத்தைத் தொடங்கினள். அப்போது, புகழ்மிக்க வையமளந்தவன் தன் மார்பை இடமாகக் கொண்ட அழகிய திருமகளை நோக்காமைக்குக் காரண மான சிறப்பையுடைய வளை பொருந்திய கையாளாகிய நம் பின்னை தானே யாம் என்று மாதரி வியந்தாள்.

ஆடத் தொடங்குதல்:

அம்மகளிர் சமநிலையிலே நின்று, நடுவிரலும் அணி விரலும் முன்னே மடக்கி மற்றையிருவிரலுங் கோத்த லாகிய நண்டுக் கை கோத்து மண்டலமாக இருந்து, அப் பொழுதே ஆடுவதற்குத் தாள உறுப்பை ஆராய்ந்துள்ள வரில் முதலில் எண்ணப்பட்ட குரலின் இடத்தே மாயவ னாக நின்ற நங்கை தன் கிளையாகிய துத்தத்தினிடத்தே

நின்ற பின்னையாக நின்றவளை நோக்கிப், 'பரந்தகன்ற கொல்லையிலே வஞ்சத்தால் வந்து நின்ற குருந்தை ஒசித்த அவனை முல்லையாகிய இனிய பண்ணாலே பாடியாடக்கடவேம்' என்றாள்.

பின்னர்ப் பாட்டெடுக்கின்றவள் குரல் என்னும் நரம்பு மந்த சுரமாக இளியென்னும் நரம்பு சமசுரமாக வந்த முறையே, துத்தமென்னும் நரம்புவலிசுரமாக விளரியையும் வலிமையில்லாத மந்த சுரமாகப் பிடிக்கின்றவள் தன் நட்பு நரம்பாகிய துத்த நரம்பாயவளுக்குப் பற்றுப் பாடுகின்றாள்.

அவள் அங்ஙனம் பாடுகின்ற பாட்டு:

1. கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

[தோழியே! ஆனிரை மேய்க்கும்போது, விளவின் கனியை உதிர்க்க விரும்பி, அங்கே மேய்கின்ற பசுவின் கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு உதிர்த்த மாயவன் நம் வழிபாட்டால் இங்குள்ள ஆனிரையிடத்தே வருவான். அவ்வாறு வந்தால், அவன் ஊதும் கொன்றையங் குழலோசையைக் கேட்போம்.]

2. பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

[தோழியே! கடல் கடையும்போது, மேருவரையாகிய மத்திலே சுற்றுங் கயிறு வாசுகி என்னும் பாம்பாகக் கொண்டு கடைந்த மாயவன் நம் வழிபாட்டினால் ஈங்கே நம் ஆனிரையிடத்தே வருவான். அவ்வாறு வந்தால், அவன் ஊதும் இனிய ஆம்பலங்குழலோசையைக் கேட்போம்.]

3 கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

[தோழீ! நம் புனக்கொல்லையைச் சார்ந்த இடத்திலே வஞ்சனையால் வந்து நின்ற குருந்தை முறித்த மாயவன் நம் வழிபாட்டினாலே பகலிலேயே நம் ஆனிரையிடத்தே வருவான். அவ்வாறு வந்தால், அவன் ஊதும் இனிய முல்லையங் குழலோசையைக் கேட்போம்.]

விளக்கம் :—

கொன்றை, ஆம்பல், முல்லை என்பன சில கருவி. இனி அவற்றைப் பண்ணொன்று கூறுப எனின், அவ்வாறு கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றையென ஒரு பண்ணில்லை யாதலானும் கலியுள் முல்லைத்திணையின் கண் ஆறும் பாட்டினுள் "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற் கண்-இமிழிசை மண்டை உறியொடு தூக்கி-ஒழுகிய கொன்றைத் தீங் குழல் முரற்சியர்-வழூஉச் சொற் கோவலர் தத்தம் இனநிரை-பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தர்" எனக் கருவி கூறினமையாலும், "அற்றைப் பகற்கழிந் தாளின் றிராப் பகல்-கன்றின் குரலும் கறவை மணிகறங்கக்-கொன்றைப் பழக்குழல் கோவலர் ஆம்பலும்-ஒன்றல் சுரும்பு நரம்பென ஆர்ப்பவும்" என வளையாபதியுள்ளும் கருவி கூறிப் பண் கூறுதலானும், இவை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த ஒத்தாழிசையாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக் கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூஉச் சேறலானும் அங்ஙனங் கூறல் அமையாதென்க.

குழலெனினும் வங்கியம் எனினும் ஒக்கும். அதன் நீளம் இருபது விரல், சுற்றளவு நாலரை விரல். துளையிடும்போது நெல்லரிசியில் ஒரு பாதி மரம் நிறுத்திக் கடைந்து, வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படும், தூம்பு முகத்தில் இரண்டு விரல் நீக்கி முதல் வாய்விட்டு, அம்முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு, வளைவாயினும் இரண்டு விரல் நீக்கி நடுநின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிடுக. இவற்றுள் ஒன்று முத்திரை யென்று

கழித்து நீக்கி, நின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊத வேண்டும். துளைகளின் பரப்பு ஒரு விரல் அகலம் கொள்க!

இனி, வங்கியம் ஊதும்போது வளைவாய் சேர்ந்த துளையை முத்திரை என்று நீக்கி, முன்னின்ற ஏழினையும் ஏழுவிரல் பற்றி வாசித்தல் வேண்டும். ஏழுவிரல்: இடக் கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி, மற்றை மூன்று விரலிலும் வலக்கையிற் பெருவிரல் ஒழிந்த நான்கு விரலும் ஆக ஏழும். இவ்வேழு துளைகளினும் ச ரி க ம ப த நி என்னும் முதலெழுத்துக்களையுடைய ஏழிசையும் பிறக்கும். இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும். இனிக் கஞ்சத்தாற் குமுத வடிவாக அணசு பண்ணிச் செறித்த லின் ஆம்பற் குழலாயிற்று. கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்து ஊதுவதாற் கொன்றைக் குழலாயிற்று. முல்லைக்கொடியால் முப்புரியாகத் தெறறிய வளையை வளைவாய்க்கண் செறித்தாதலால் முல்லைக்குழலாயிற்று. இவ்வாறு காரணக்கூறி கொள்க.

குரவை மகளிர் கூற்று:

தொழுனைத் துறைவனுகிய கண்ணனுடன் ஆடிய பின்னையின் அழகிய நிறத்தை யாம் பாடுவோம்.

இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம்.

[கண்ணால் நோக்குவோர் மென்மை கருதி, 'இப் பொழுது இறும்' எனத் தகும் இடை நுடங்கும்படி அசைபவளின் ஆடையை ஒளித்தவனுடைய வடி வழகையே புகழ்வோமோ! அன்றி, அவ்வாறு ஆடையை ஒளித்தவன் அவள் ஆடையின்மை கண்டு அயர்கின்றதைப் பார்த்துத் தானும் அயர்கின்ற நறிய மெல்லிய சாயலை யுடையவளின் காமக்குறிப்பையுடைய முகத்தழகையே புகழ்வோமோ!]

வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்.

[தொழுனையாற்றிலே வஞ்சம் புரிந்தவனுடைய நெஞ்சத்தைக் கவர்ந்தவளின் அழகையே புகழ்வோமோ! அன்றி, அவ்வாறு தன் நெஞ்சைக் கவர்ந்தவளுடைய அழகையும் வளையையும் ஒளித்துக்கொண்டவனுடைய வடிவையே புகழ்வோமோ!]

தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாம்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்.

[கலையையே அன்றி வளையையும்இழந்து நாணமிகுதியால் தன் கையிலே மறைந்த தையலின் முகத்தழகையே புகழ்வோமோ! அன்றி அவ்வாறு கையிலே மறைந்தவளின் முகத்தின் தன்மையைக் கண்டு வருந்திக் காமமயக்குற்று வாடியவனுடைய வடிவையே புகழ்வோமோ!

ஒற்றைந் தாளத்தின் கூறு:

கட்டவிழ்ந்த மலரணிந்த கூந்தலையுடைய பின்னை பகலவன் கதிரைத் தன் கையாழியாலே மறைத்த கடல் போலும் வண்ணமுடைய கண்ணனுக்கு இடப்பக்கத்திலுள்ளாள்; திங்கள் போலும் வெள்ளைத் திருமேனியையுடைய பலராமனுக்கு வலப்பக்கத்திலுள்ளாள். அவளுடைய தாள வொற்றறுப்பைப் புறங்காப்பவர் முதிய மறையின் சிட்சை யென்னும் அங்கத்தை ஆராயும் முதல் நரம்பை உளர்ந்து வாசிக்கின்ற நாரதனாவார்.

சிறுபுறமாகிய எருத்தத்தைக் கோட்டி நிற்கும் இப் பின்னை, மயிலின் புறங்கழுத்தைப் போன்ற திருமேனியை உடைய மாயவனுக்கு வலப்பக்கத்துள்ளாள்; பயின்ற வெண்மலர் போலும் மேனியையுடைய பலராமனுக்கு இடப் பக்கத்திலுள்ளாள், அவளுடைய தாள அறுதியைப்

புறங்காக்கின்றவர், குயிலுவருள் செறிப்புப் புணர்ந்திருக்கும் தாள அறுதியையுடைய நரம்பை உளர்ந்து வாசிக்கும் நாரதனார்.

ஆடுவோரைப் புகழ்தல் :

மாயவன் தன் தமயனோடும் வரிவளைக் கையாள் பின்னையோடும் ஆயச் சிறுமியரின் மணமாலைகள் புறத்தே வீழ்ந்தசையக் கோத்த கைகளில் அணிந்த வளைகள் ஒலிக்கின்ற தாள ஒற்றுக்கு ஒப்பாக மிதித்திட்டு, அசோதைப் பிராட்டியார் தொழுது வாழ்த்தத் துவாரகையிலே எரு மன்றத்தே அன்றாடிய குரவைக் கூத்து மிகவும் பெருமையை உடையதாயிருந்தது' என்று மாதரி வியந்தாள்.

உள்வரி வாழ்த்து–பூவை நிலை : (அரசனைத் திருமாலுடன் ஒப்பித்தல்)

பிறகு, நாமெல்லாம் கலுழப் பறவையூர்தியாகிய கடவுளை இக்குரவையுள் ஒரு பாட்டினாலே நன்கு போற்றுவோம்.' என்றாள்.

கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்.

[கோக்கப்படாத தன் பொதியின்மலையில் ஆரமும் (சந்தனமும்) கோக்கப்பட்ட தன் கொற்கைக் கடலில் ஆரமும் (முத்தும்) இந்திரன் முனிவுடன் இட்ட பூணாகிய ஆரமும் இம்மூன்றும் நம் பாண்டியன் மார்பிலுள்ளன. இவ்வாறு மற்ற ஆரங்களுடன் வானவர்கோன் ஆரத்தையும் அணிந்தவனை, வளமிகுந் துவரைப்பதியிலே ஆனிரைகளை மேய்த்துக் குருந்தொசித்தவன் என்றே சொல்லுவர்]

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்.

[பொன்னாகிய இமயமலையின் கொடுமுடியிலே தன் புலியைப் பொறித்து அதனை எல்லையாகக் கொண்டு இப் பாலுள்ள நிலமெல்லாம் ஆண்டவன் மதில்சூழ்ந்த புகாரில் வாழும் வளவனாகிய வேந்தன் அவனைப் பொன்னாழியைப் பொருதற்குப் படைக்கலமாகவுடைய திருமால் என்றே சொல்லுவர்.]

முந்நீரி னுட்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்.

[மண்ணைப் படைத்தலுங் காத்தலும் அழித்தலு மாகிய முச்செய்கையையும் உடைய கடலினுட் புகுந்து எப்போதும் மூவாத வஞ்சக் கடம்பை வெட்டினவன் வேந்தர் வேந்தனாகிய, வளமிகும் வஞ்சியைஆளும் சேரன். அவனை மலைபோன்ற தன் தோள்களைக் கொண்டு கடல் கடைந்த திருமால் என்றே சொல்லுவர்.]

முன்னிலைப் பரவல்:

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே.

[கடல் வண்ணனே! தாமரை மலர்ந்த உந்தியாய்! நீ முன்னர் ஒரு நாள் மேருமலையை மத்தாக நாட்டி, வாசுகி யாகிய பாம்பைக் கயிறாகப் பூட்டிப் பாற்கடலின் வயிற்றைக் கலக்கினை! அங்ஙனம் கடலைக் கலக்கிய நின் கைகள் அசோதையம்மையாருடைய தயிர்கடையுங் கயிற்றாலே கட்டுண்ட கைகள் எனின் இது ஒரு மாயமோ! மிகவும் மயக்கத்தையூட்டுகின்றதாயுள்ளது!]

அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே.

[வளவிய துழாய் மாலையனே! ஐயமற்ற பொருள் இவன் என்று அமரர் திரளெல்லாம் உன்னைத் தொழு தேத்தவும், மிக்கதாகப் பசி சிறிதும் இல்லாமலே உலகம் அடங்கலும் உண்டனை! அவ்வாறு உண்டவாய் களவி னாலே உறி வெண்ணெயைப் பெரும்பசியாலே உண்ட வாயெனின் இஃது ஒரு மாயமோ? எங்கட்கு மயக்க முண்டாக்குகிறது.]

திரண்டமரர் தொழுதேத்துந் திருமானின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.

[திருமாலே! நரமடங்கலாய் மாற்றானை யழித்த வனே! வானவர் திரண்டு ஏத்துகின்ற நின் செந்தாமரை போலும் அடிகள் இரண்டாலே உலகம் மூன்றும் இருள் நீங்க நடந்தனை! அவ்வாறு நடந்த அடி பஞ்சவர்க்காகப் பிறகு தூது சென்ற அடியெனின் இஃது ஒரு மாயமோ? எங்கட்கு மயக்கந் தருகின்றது.]

படர்க்கைப் பரவல்:

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே,
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

[மூவுலகும் இரண்டடிக்குக் குறைபடும்படி முடி யத் தாவிய சிவந்த அடிகள் மேலும் சிவக்கும்படி தம்பி யோடும் வனத்தின்கண் போந்து, சோ என்னும் அரணும் அந்த அரணில் உள்ளோரும் போரிலே தொலைந்து மடிய வும், பழைய இலங்கையையும் காவலழித்த வீரனுடைய புகழைக் கேளாத செவிகள் என்ன செவிகளோ! அத்திரு மாலின் புகழைக் கேளாத செவிகள் என்ன செவி களோ!]

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

[எல்லாத்தேவரினும்பெரியவனை, மாயங்களில் வல்லவனைப், பெரிய உலகையெல்லாம் விரிக்கின்ற தாமரையுந்தியையுடைய வானவனைக், கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் சிவந்து மேனிமட்டும் கருமையாகவுள்ளவனைக் காணப்பெறாத கண்கள் என்ன கண்களோ! அவ்வாறு காணும்போதும் இமையாமற் காண முடியாமல் இடையே இமைத்துக் காண்பவர்களின் கண்கள் என்ன கண்களோ!]

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.

[அறியாமை தங்கிய நெஞ்சத்தையுடைய கஞ்சனார் வஞ்சத்தைக் கடந்தவனைத், திசை நான்கும் போற்றும் படியும் மறை தொடர்ந்து முழங்கவும் பஞ்சவர்க்காக நூற்றுவர்பால் தூது நடந்தவனை ஏத்தாத நா என்ன நாவோ; நாராயணா! என்றுரையாத நா என்ன நாவோ?]

இவ்வாறு வாழ்த்தின பிறகு, 'நாம் தொடுத்தகுரவைக் கூத்திலே நாம் ஏத்திய திருமாலாகிய தெய்வம் நம் ஆனிரையிலே தலைப்பட்ட பிணிகளைத் தீர்த்தருள்க! வெற்றி மிகும் இடியை வச்சிரப்படையாகக்கொண்ட இந்திரனின் முடியை உடைத்த தொடி பொருந்திய தோள்களையுடைய பாண்டியனின் கடிப்பாலடிபடும் முரசம் வேந்தர் மருள எப்போதும் பகைவரை வென்று முழங்குவதாக!' எனக் கூறி வாழ்த்திக் குரவைக் கூத்தை முடித்தனர்.

18. துன்ப மாலை

கண்ணகி கேட்டாள் :

இவ்வாறு அவர் ஆடிய குரவை முடிந்த அளவில் மாதரி நீர் வற்றாத வையை யாற்றின் கரையிலே அந்தர வானத் தெம் பெருமான் என்னும் நெடுமால் திருவடியைப் பூ முதலியவற்றைத் தூவி வழிபடற்குப் போயினாள். அப்போது வேறோரிடைச்சி அக நகரிலே உண்டாகியதொரு மொழியைக் கேட்டுக் கூறுதற்கு விரைந்து புறஞ்சேரியாகிய இடைச்சேரிக்கு வந்தாள்.

அவ்வாறு விரைந்து வந்தவள் கண்ணகிக்குத் தன் வாயாற் சொல்ல மனந்துணியாமல் தன் மெய்ப்பாட்டாலேயே அவள் உணரும்படி நின்றாள். அங்நிலையிற் குரவைமுடித்து நீராடி வந்த ஆயர் மகளிருக்கு மறைவாகக் கூறி அவர்களுடன் தானும் விம்மியவாறு நின்றாள். கண்ணகியின் இளமையும் அழகும் தனிமையும் அவள் நெஞ்சிலே ஆற்றாமையை விளைவித்தலால் நெஞ்சழிந்து நின்றாள். எனினும் சொல்ல நாவெழாது திகைத்தாள். அவர்களின் நிலைகண்ட கண்ணகி கலங்கினாள்.

"தோழியே! என் காதலன் வரக் காண்கிலேன். நெஞ்சு கலங்கி நோய் கைகடந்து நிற்கிறது. அதுவுமன்றி, உலையில் ஊதும் துருத்தியின் மூக்கும் தோற்குமாறு என்மூச்சும் வெப்பம் மிக வருகிறது. இவை இங்ஙனம் ஏதோ துன்பம் எனக்கு வருமென அறிவிக்கும் நிலையிலே என்னை நோக்கி இவ்வாய்ச்சியர் குறிப்பாற் கூறுகின்றது யாதோ?"

"தோழியே! நண்பகற் பொழுதிலேயே நடுக்கமுறுவிக்கும் கவலை நோய் ஒருகாலைக் கொருகால் கைம்மிகுகின்றது! அதுமட்டுமோ? என் அன்பன் வரக்காணு

மலும் என் நெஞ்சு அலமருகின்றது! இங்ஙனம் என் நெஞ்சு வருந்தும் நிலையிலே இம்மகளிர் பலரும் குறிப்பாலே கூறுகின்றது யாதோ?"

"தோழியே! இங்கே அயலார் பேசிக்கொண்டிருக்கும் மறை எளிதாயிராது போலும்! அதற்கேற்ப என் தலைவன் வருகையையும் காண்கிலேன். ஆதலின், என்னை ஏதோ வஞ்சித்திருக்கிறது; என் நெஞ்சம் மயங்குகிறது! இவை இவ்வாறிருப்பதால், இவர்கள் குறிப்பாகப் பேசிக்கொள்வது யாதோ என அறிகிலேன்!"

இவ்வாறு கூறி ஐயையைப் பார்த்துக் கண்ணகி கலங்குவதைக் கண்ட, அகனகர் சென்று வந்த இடைச்சி, "அரசன் விரும்பித் தங்கும் அந்தப்புரத்திலிருந்த அழகுநிறைந்த சிலம்பை வருத்தமின்றித் தன் கையிலே கொண்டிட்ட கள்வன் இக் கோவலனே என்று ஒலிக்கும் கழலணிந்த வேலினளைஞர் கொலை செய்தலை மேற்கொண்டனர்" என்று துணிந்து கூறிவிட்டாள்.

மாழ்கினுள்!

கண்ணகி அம்மொழிகேட்டுத் தன் கணவனைக் கள்வனென்றதனுற் பொங்கியெழுந்தாள். கொன்றுரென்றதனுல் வசமழிந்து சோர்ந்து விழுந்தாள். அவள் விழுந்த தோற்றம் திங்களொன்று நீர்பொழியக் கால் கொண்ட முகிலுடன் பெருநிலத்திலே விழுந்தாற் போலிருந்தது, விழுந்தவள் தன் கணவன் முன்னர் வருகெனத் தழுவிய போது காதலாற் சிவந்து செவ்வி பெற்ற கண்கள் இப்போது கலங்கிச் சிவக்கும்படி தன் கையால் மோதிக்கொண்டழுதாள். தன் கணவனை "நீ எவ்விடத்திருக்கிருய்" என்று வருந்திப் பொருமி மயங்கி ஒன்றுந் தோன்ருமல் அழுதாள்.

"தம்முடன் இன்புற்ற தம் கணவர் இடரைச் செய்யும் எரியின்கண் மூழ்க, அவருடன் அதனிடை மூழ்காமல் துன்பமுறுந் தன்மையுடைய கைம்மை நோன்பை நோற்று இடர்ப்படும் துயர் மகளிரைப்

போல, உலக மக்கள் தன்னைப் பழிக்கும்படி பாண்டியன் தவறிழைக்க அன்பனை யிழந்த நான் இருந்தழுது அழிவேனோ?"

மணம் மிக்க அகன்ற மார்பினையுடைய தம் நண்பன் நெருப்பிலே மூழ்க, அவனை இழந்து ஏக்கமுற்று, நீர்த்துறைகள் பலவற்றிலும் தாம் குளிரப் புகுந்து மூழ்கித் துயரமுற்றழும் மகளிரைப்போல, மறத்திலே பயின்று, அறத்தின்மாறுபட்ட கோலையுடைய பாண்டியன் தவறிழைப்பப் பார்த்திருந்த அறக்கடவுளாகிய அறிவற்றவனே! யான் அவ்வாறு வருத்தமுற்றிருந்து அழுதழிவேனோ?

தம்முடன் பொருந்திய அன்பும் தலைமையும் மிகுந்த கணவன் அழலும் எரியிலே மூழ்கத் தாம் அவனொடு மூழ்காமல், கைம்மை நோன்பு மிகும் நீர்த்துறைகளிலே குளிர மூழ்கும் உயவற் பெண்டிரைப் போலச், செம்மையினின்று நீங்கின கோலையுடைய தென்னவன் தவறிழைப்ப,, இப்பிறப்பின் புகழையும் மறுமையின்பத்தையுமிழந்து மிக வருந்தி அழுதழிவேனோ?

தோழி! இதனைக் காண்பாயாக! தீமை வருமென எண்ணி அதனை நீக்கிக்கொள்ள அறிவின் துணைகொண்டு சாந்திக்காக ஆடிய இக்குரவையிலே வந்து திரண்ட ஆய மடமகளிரே! எல்லிரும் கேண்மின்! ஆய்மட மகளிரே! எல்லிரும் கேண்மின்! காய்கதிர்ச் செல்வனே! பரந்த கடலை வேலியாகக் கொண்ட உலகிலே நடைபெறுவன யாவும் நீ அறிவாய். என் கணவன் கள்வனோ?" என்றாள் கண்ணகி. 'கரிய கயலனைய கண்களை யுடையாய்! நின் கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்ற இவ்வூரை எரியுண்ணும்' என்று ஒரு குரல் கூறியது.

———

19. ஊர்சூழ் வரி

கண்ணகி தெருவூடே அழுது சென்றாள்:

இவ்வாறு கதிரவன் கூறினன். பின்னர்க் கண்ணகி அங்கே நின்றிலள். கோவலன் விற்க எடுத்துச் செல்லாமல், மிகுதியாக நின்ற சிலம்பைக் கையிலே ஏந்தினாள். ஆயர் பாடியைக்கடந்து,மதுரை மாநகரின் தெருவூடேசென்றாள்.

"முறை செய்தல் இல்லாத அரசன் இருக்கின்ற ஊரின்கண் இருந்து வாழும் கற்புடைய பெண்டிர்களே! என் கையில் இருக்கும் சிலம்பு என் கணவன் விற்கக் கொண்டு சென்ற சிலம்பின் இணைச் சிலம்பான ஒன்றாகும். பாருங்கள்! உலகிடை வேறெப் பெண்களும் படாத துயரம்பட்டேன்! சாவின் துயரம் போலத் துயரம் பெற்றேன்! இனி எனக்கு வரவேண்டிய துயரம் ஒன்றுண்டோ? என்கணவன் கள்வனல்லனே! என்காற்சிலம்பு பெறும் விலையைக் கைக்கொள்ளுங் காரணத்தாலே கள்வனென இடுவந்தியிட்டுக் கொன்றார்களே! இஃதொரு கொடுமை! தம் காதலராலே காதலிக்கப்பெறும் கற்புடைய மனைவியர் முன்னே என் கணவனைப் பண்டுபோற் காண்பேனோ! காண்பேனெனின் அஃதொரு புதுமையன்றோ! அவ்வாறு என் கணவனைக் கண்டால், அவன் வாயினாலே சொல்லும் குற்றமற்ற நல்லுரையைக் கேட்பேனோ? அவ்வாறு கேட்பின் அஃது எனக்கு ஓர் உறுதியாகும்! குற்றமற்ற நல்லுரையைக் கேளாதொழிவேன் எனின் என்னை 'இவள் நோதக்க செய்தவள்! கள்வன் மனைவி' என்று இகழுமின்! இவ்வாறு இகழ்தல் உங்களுக்குக் கிடைக்கும் ஒரு வாய்ப்பாகும்," என்று அல்லலுற்று ஆற்றாது அழுது கொண்டே சென்றாள்.

அழுது செல்லும் அவளை வளமுறும் மதுரையார் எல்லோருங் கண்டு ஆற்றும் வழி அறியாமல், இரங்கி அழுது மயங்கினர்.

"இறக்கும் அளவும் நீங்காத துன்பத்தை இம் மாதரசிக்கு உண்டாக்கி, அதனுனே இதுவரை ஒருபோதும் வளையாத செங்கோல் வளைந்ததே! இதனுலே மேலே விளைவது யாதோ! மன்னவர்க்கெல்லாம் மன்னன், திங்களனைய குளிர்ந்த குடையினன்; பகைவர்க்கு வெய்ய வாளையுடைய வேந்தன் ஆகிய பாண்டியனின் அரசியல் அழிந்ததே! இதனுலே மேல் விளைவது யாதோ? உலகு குளிர அறத்தையும் பகைவர் நடுங்க மறத்தையும் செய்யும் வேலையுடைய நெடுந்தகையின் தண்ணளி செய்யுங் குடை வெம்மையை விளைத்ததே! இதனுலே மேலே விளைவது யாதோ? செம்பொன்னுலாகிய சிலம்பொன்றைக் கையில் ஏந்திநமக்குக் கற்பின் திறனைக் காட்டுதற் பொருட்டுப் புதுமையையுடைய பெரிய தெய்வம் ஈண்டு வந்தது! இதனுலே மேலே விளைவது யாதோ? வியப்பூட்டுஞ் செவ்வரி பரவிய மையுண்ட கண்ணிணுள் விம்மி விம்மி வாய்விட் டரற்றுகின்றவள் தெய்வம் ஏறினுள் போலும் தகையளா யிருக்கின்ருள். இதனுலே மேலே விளைவது யாதோ?"

என்பன போன்ற துயர்மிகு மொழிகளைக் கூறி, இவள் நிலைமைக்கு வருந்தியும் மன்னன் நிலைக்கு ஏங்கியும் கோல்கோடிய மன்னனைப் பழிதூற்றும் நிலையதாகியது மதுரை.

கணவனைக் கண்டாள்-அழுது அரற்றினள்-தழுவினுள்

அப்போது, அம்மதுரையிலே சில காட்சிகளைக் கண்டு திரிகின்ற மக்கள் கண்ணகிக்கு அவள் கணவனைக் காட்டினர். செம்பொற் கொடியனையாள் கணவனைக் கண்டாள்! அவளைக் காணும் ஆற்றலில்லாத செங்கதிரோன் துயர் மிகுதியால் தன் செங்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு, வள மிகும் பேருலகையிருளிலே முழுக்குவித்து மேலை மலை மிசைச் சென்றெளித்தான். அத்தகைய மயக்கந் தரும் புல்லிய மாலைப்போதிலே கண்ணகி அழுத ஆரவாரத் தாலே ஊர்முழுதும் ஒல்லென்னும் ஒலியெழுந்தது.

அன்று காலைப் பொழுதிலே, ஆயர்பாடியிலே, தன் கணவனைத் தழுவி, அவனுடைய வண்டுகள் முரலும் முடியிலணிந்த மலர்மாலையை வாங்கித் தன் நீண்ட குழலிடத் தணிந்த கண்ணகி, மாலைப் போதிலே அவன் மெய்யிற் புண்ணிலிருந்து குதிக்கின்ற குருதிப்புனல் நிலமெங்கும் நனைப்ப, அவன் தன்னைக் காணமுடியாத துயர்மிகும் நிலையைக் கண்டாள்.

" தனிமைமிக்க என் துயரைக் கண்டிருந்தும், இவள் இதனால் இடருறுவாளே என்று நினைக்கின்றிலீர்! அது நிற்க! நும்முடைய கலவை மணங்கமழும் பொன்போலும் திருமேனி பொடியாடத் தகுவதொன்றோ? இஃது இங்ஙனமாயின், அரசனாற் செய்யப்பட்ட இம் மறவினையின் இயல்பறியாத எனக்கு முற்பிறப்பிலே நான் செய்த தீவினையை எனக்கு இந் நாட்டிலே உரையார்களோ? துணையாக ஒருவரும் இன்றி மருட்சியையுண்டாக்கும் இம் மாலைக் காலத்திலே மிக்க துன்புறுகின்ற தமியேன் கண்முன்னேயே, மாலைத் திரளில் முழுகும் நும் திருமார்பு வெறு நிலத்தே முழுகிக் கிடக்கத் தகுமோ? இஃதிவ்வாறாயின், பாரிலுள்ளோர் மிகவும் பழி தூற்றுதற்குக் காரணமாகப் பாண்டியனுடைய தவற்றையெண்ண வெட்டுவித்த தீவினையிது என இந் நாட்டினர் உரையாரோ? கண்கள் பொழியும் நீர் சோரும் கடிய வினையை யுடையேன் முன்னேயே, வெட்டு வாயினின்றும் குதித்துப் பெருகும் குருதியை யுடையீராய்ப் பொடியாடிக் கிடக்கத் தகுமோ? இஃதிவ்வாறாயின் மண்ணிலுள்ளார் பலரும் பழிதூற்றற்குக் காரணமாக மன்னவன் தவறு நினைக்க நுகர்வதோர் வினையிதுவே யென்று இந்நாட்டினர் உரையாரோ?

இந்நாட்டிலே,

பெண்டிரும் உளரோ? பெண்டிரும் உளரோ! தம்மைக் கொண்ட கொழுநரின் மிகு குறையைப் பொறுக்கும் பெண்டிரும் உளரோ?

சான்றோரும் உளரோ? சான்றோரும் உளரோ! ஈன்ற குழவியை அன்புடன் எடுத்து வளர்க்கும் சான்றோரும் உளரோ!

தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ! என் கணவனைப் பிழையிலா திருந்தும் கூரிய வாளாலே வீழ்த்திய மன்னவன் மதுரையிலே தெய்வமும் உளதோ?

என்பன போன்ற மொழிகளைக் கூறி அழுகின்றவள் தன் கணவனுடைய, திருமகள் துயிலும் மார்பு தன் மார்புடன் பொருந்தும்படி தழுவிக் கொண்டாள்.

இருக்க எனப் போனான்!

என்னே வியப்பு! **கோ**வலனுடைய வெட்டுண்ட இரு துண்டங்களும் ஒன்றாகக் கூடின. கோவலனும் உயிர் பெற்று எழுந்து நின்றான். 'நிறைந்த மதிபோலும் முகம் கன்றியதே!' என்றுரைத்து, அவள் கண்ணீரைக் தன் கையாலே துடைத்தான். கண்ணகியும் அழுதேங்கி நிலத்திலே வீழ்ந்து தன் கணவனுடைய தொழுதகைமையுடைய திருந்திய அடியைத் தன் வளையணிந்த இரு கைகளாலும் பற்றித் தழுவினாள். அப்போது பழுதுமிக்க இவ்வுடம்பை விட்டு வானுலகடைய எழுந்த கோவலன், 'நீ இருக்க!' என்றுரைத்துப் போய் வானவர் குழுவிலே ஒன்றினான்.

அரசனை நாடிச் சென்றாள்

'என் கணவன் இவ்வாறு எழுந்து நின்றது மாயமோ! வேறெதுவோ! என்னை மருட்டியது ஒரு தெய்வமோ! ஒன்றுந் தெளிகிலேன்! இம் மாயம் பொருளுடைய ஒன்றன்று! எங்கும் போய் என் கணவனை ஆராய்ந்து கூடுவேன். எனினும் என் மிக்க சீற்றம் தணிந்தால் அன்றிக் கூடேன். அக் கொடிய வேந்தனை யான் சென்று கண்டு என் கணவனைக் கொன்ற இத் தீத்திறத்தைக் கேட்பேன்.'

இவ்வாறு அம் மாதராள் தன் நெஞ்சொடு கூறினுள். எழுந்து நின்ருள்; தன் ஊரிலே கண்ட தீக்கனுவை நெடிது நினைந்தாள்! நெடுங் கயற் கண் நீர் சோர நினைந் தாள்! பின்னர், உறுதியுற்றுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அரசனுடைய வளவிய அரண்மனை வாயிலை நோக்கிச் சென்ருள்.

---

20. வழக்குரை காதை

கோப்பெருந்தேவியின் தீக்கனு :

"தோழி! வெண்கொற்றக் குடையும் செங்கோலும் வீழவும், வாயிலிற் கட்டிய ஆராய்ச்சிமணியின் ஒலியைக் கேட்கின்றேன்! எட்டுத் திசையும் அதிர்ந்திடும், அஃதன்றிக் கதிரவனை இருள் விழுங்கக் காண்பேன் தோழி! இரவிலே வானவில் இடும்! வெம்பகலிலே பேரொலியுடன் விண்மீன் விழும்!

இவ்வாறு செங்கோலும் வெண்குடையும் திண்ணிய நிலத்திலே மறிந்து வீழவும், நம் அரசனுடைய வெற்றி வாயிலிலே ஆராய்ச்சி மணி நம் உள்ளம் நடுங்க நடுங்கவும் இரவிலே வானவில்லிடவும், பகலிலே மீன் விழவும் இரு நான்கு திசையும் அதிர்தலும் ஆகிய இவற்ருல் ஏதோ துன்பம் ஒன்று வருதல் உண்டு. மன்னவற்கு இதனை உரைப்போம்"

என்று கோப்பெருந்தேவி கூறினுள்.

உடனே, ஒளிவீசி விளங்கும் அணியிழையினர் கண்ணுடி ஏந்தினர்; அணிகலன் ஏந்தினர்; புத்தாடை ஏந்தினர்; பட்டாடை ஏந்தினர்; வளமிகு வெற்றிலேயுடைய அடைக்காய்ப் பெட்டி ஏந்தினர்; பலவண்ணமேந்தினர்; சுண்ணப் பொடி ஏந்தினர்; கத்தூரி கலந்த சந்தனம் ஏந்தினர்; கண்ணிகள் ஏந்தினர், பிணையல்கள் ஏந்தினர்; கவரிகள் ஏந்தினர், நறும்புகை ஏந்தினர் பின்னர் கூனரும் குறளரும் ஊமரும் கூடிய குற்றேவல் இளைஞர் நெருங்கிச் சூழ்தரவும், மணங்கமழும் நறிய குழலினர் பலர், 'கடல்சூழ்ந்த உலகைக் காக்கும் பாண்டியனுடைய பெருந்தேவி வாழ்க!' என்று உரைத்து வாழ்த்தவும், ஆயத்தாருங் காவலரும் வந்து அடியிணைகளிலே போற்றுரைத்து வணங்கவும் கோப்பெருந்தேவி

சென்று தான் கண்ட தீக்கனவைக் கூறினாள். அதனைக் கேட்டவாறு சிங்கம் சுமந்த செழும்பொன் கட்டிலின் மேல் (திருமகள் விரும்பும் மார்பினனாக முன்னிருந்து இப்போது) திருமகள் நீங்கும் மார்பினனான பாண்டியர்கோன் இருந்தனன்.

வாயிலோன் முன் கண்ணகி :

இனி, அரண்மனை வாயிலில் வந்து நின்ற கண்ணகி, "வாயிலோய்! வாயிலோய்! அறிவைப் பறிகொடுத்த நல்வினையற்ற உள்ளமுடைய, அரச நெறி பிழைத்த பாண்டியனுடைய வாயிலோய்! இப்போது கொல்லப்பட்டவன் கையிலிருந்த சிலம்பிற்கு இணையான அரியுறும் சிலம்பொன்று ஏந்திய கையளாய்க் கணவனையிழந்தவள் ஒருத்தி வாயிலில் வந்திருக்கிறாள்" என்று விரைந்து அறிவிப்பாயே! அறிவிப்பாயே!" என்று கூறினாள்.

வாயிலோன் அரசனிடம் :

வாயிற் காவலன் அரசனிடம் ஓடிவந்து,

"வாழி! எம் கொற்கை மன்னவா! வாழி! தெற்கிலுள்ள பொதியமலைத் தலைவா! வாழி! செழியனே! வாழி! தென்னவனே! வாழி! பழியொடு செல்லாத பஞ்சவனே! வாழி! மிகுத்தெழுங் குருதி அடங்காத பசியதுண்டமாகிய மயிடன் தலையிலே ஏறி மடக்கொடியாகிய, வெற்றி வேலேந்திய நீண்ட கையினளாகிய கொற்றவையும் அல்லள்; ஏழு கன்னிகைகளில் இளைய நங்கையாகிய பிடாரியும் அல்லள்; சிவபெருமானை ஆடல் கண்டருளிய அணங்காகிய பத்திரகாளியும் அல்லள்; அச்சமூட்டும் காட்டிலே விரும்பி வாழும் காளியும் அல்லள்; தாருகனுடைய பெரிய மார்பைக் கிழித்த துர்க்கையும் அல்லள் செற்றமுடையாள் போலும், சீற்றமுடையாள் போலும் ஒரு பெண் கணவனையிழந்தவள் நம் வாயிலிலே நிற்கிறாள்! கணவனையிழந்தவள் வாயிலிலே நிற்கிறாள்" என்றான்.

அரசன் அம்மொழி கேட்டு, "அவளை வரவிடுக! இங்கே அழைத்து வருக!' என விரைவொடு கூறினன். உடனே வாயிலோன் கண்ணகியை அழைத்து வந்து அரசன் முன்விட்டான்.

அரசனும் கண்ணகியும்:

கண்ணகி அரசனை அணுகி நின்றாள்.

"நீர்வழியும் கண்களுடன் எம்முன் வந்தவளே! மடக்கொடி போல்வாய்! நீ யார்?"

"ஆராய்ச்சியில்லா அரசனே! கூறுவேன் கேள். குற்றமற்ற சிறப்பினையுடைய வானவரும் வியக்கும்படி ஒரு புறு அடைந்த மிகுந்த துன்பத்தை நீக்கினவனும் அவனேயன்றி, வாயிற்கடையில் கட்டிய மணியின் நடுநா நடுங்கவும், ஆவின் கடைக்கண் மணி சிந்திய நீர் தன் நெஞ்சுசுடவும் கண்டு, தான் தன் கிடைத்தற்கரிய மகனைத் தேராழியூர்ந்து மடித்தவனும் ஆண்ட மிகுபுகழ் பெற்ற புகாரே என் நகரமாகும். அவ்வூரிலே பழிப்பற்ற சிறப்பினையுடைய புகழ் விளங்கும் பெருங்குடி வணிகனாகிய மாசாத்துவானுடைய மகனாகப் பிறந்து, வாழ்தல் வேண்டி ஊழ்வினை தூண்டியதால், கழலணிந்த வேந்தனாகிய நின் நகரிற் புகுந்து, இங்கே என் காற்சிலம்பை விற்க விரும்பி வந்து, நின்னாலே கொலைக்களத்திலே பட்ட கோவலனுடைய மனைவி நான்! என் பெயர் கண்ணகி என்பது"

"பெண்களில் தெய்வம் போல்வாய்! கள்வனைக் கொல்லுதல் தாய செங்கோலின் கொற்றம்; கடுங் கோலாகாது!" என்று அரசன் கூறினன்.

ஒள்ளிழை, 'நற்றிறத்திலே செல்லாத கொற்கை அரசனே! என் காலில் அணிந்த பொற்சிலம்பு மணிகளால் இழைத்த பரல்களையுடையது' என்றாள்.

பாண்டியன், 'தேன்போலும் இனிய மொழியையுடையாய்! நீ உரைத்தது செவ்வையான நல்ல மொழி, எம்

அரசியின் சிலம்பு முத்துக்களாகிய பரல்களையுடையதே ஆகும்' என்றுரைத்துப் பணியாளிடம் கோவலனிடம் பெற்ற சிலம்பைக் கொண்டுவரக் கூறி, வாங்கிக் கண்ணகி முன் வைத்தான்.

கண்ணகி அவ்வாறு வைத்த அழகிய மணிப்பரல்களை யுடைய காற் சிலம்பை உடைத்தாள், அப்போது மணி கள் மன்னவன் முகத்திலே தெறித்தன.

பாண்டியன் அழிவு

மணிகண்ட பாண்டியன், "என் குடை தாழ்ந்தது! என் செங்கோல் தளர்ந்தது! பொன் செய்யும் கொல்லன் சொல்லைக் கேட்ட யானோ மன்னன்! யானே கள்வன்! குடிகளைக் காக்கும் தென்னாட்டாட்சி என்னாலேயே முதன் முதலாகத் தவறியது! என் ஆயுள் கெடுக!" என்று மயங்கி வீழ்ந்தான்.

கோப்பெருந்தேவி

அப்போது பாண்டியனுடைய பட்டத்தரசியாகிய மடமொழியாள், குலைந்து நடுங்கிக், 'கணவனை யிழந் தோரைத் தெளிவிக்கக் காட்டக்கூடியது ஒன்றும் இன்று' என்று தன் கணவனுடைய இணையடிகளைத் தொழுத வாறே வீழ்ந்து உயிர் துறந்தாள்.

——

அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே — பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் றேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்.

[மிகக் கொடிய வினையையே செய்த வெற்றி வேந்தன் தேவியே! அல்லவை செய்தார்க்கு அறமே கூற்றுவன் என்னும் பல அவையோர் மொழியும் பழுதா காது! தீவினையேன் செய்வதையும் பார்.]

காவி யுகுநீருங் கையிற் றனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும் — பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னன்.

[காவியனைய கண்களிலிருந்து வழியும் நீரும் கையிலேந்திய ஒற்றைச் சிலம்பும் உயிர் குடிபோன அவ்வடிவும் பாவியேனுடைய காடெங்கும் சூழ்ந்த கரிய கூந்தலையும் கண்டு அஞ்சியே கூடல் மன்னன் வெற்றுக்கூடானன்.]

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும் — வையைக்கோன்
கண்டளவே தோற்றனக் காரிகைதன் சொற் செவியில்
உண்டளவே தோற்றா னுயிர்.

[மெய்யிலே புழுதியும் விரித்த கரிய கூந்தலும் கையிலேந்திய ஒற்றைச் சிலம்பும் கண்ணீரும் ஆகிய அக்காரிகையைக் கண்டு செய்வதன் அளவை மறந்தான். அவள் சொல்லைச் செவியில் உண்ட அளவே உயிர் தோற்றான்.]

21. வஞ்சின மாலை

கற்புடைய மங்கையர் எழுவர் பிறந்த பதிப் பிறந்தேன்

கோப்பெருந்தேவி உயிர் துறந்ததை யறியாமல் மூர்ச்சித்து விழுந்தாள் என்றே கண்ணகி கருதினள். அக் கருத்தொடு கூறுகிருள் :

"கோவேந்தன் தேவியே! தீவினையாட்டியான யான் ஏதும் தெரியாத இயல்பினேன் என்ருலும் முற்பகலிலே பிறனுக்குக் கேடு செய்தவன் பிற்பகலிலே தன் கேட்டைக் காண்குறும் இயல்புகளை நல்ல பகல்போல விளங்க அறிக!

யான்,

வன்னி மரத்தையும் மடைப்பள்ளியையும் சான்ருக வைத்து மணம் புரிநது கொண்டு, பின்னொரு காலத்திலே பூசல் நேர்ந்தபோது தன் மூத்தாளுக்கு அவற்றைச் சான்ருக வரவழைத்துக் காட்டிய மொய்குழலாளும்,

காவிரியாற்றிலே விளையாடும்போது மணற்பாவையை நின் கணவன் என்று சில மாதர் கூற, அதனை ஏற்றுக் கொண்டு, அம்மாதரொடு செல்லாமல் ஆற்றிலேயே தங்கி, வெள்ளம் வந்து அழியாமற் சுற்றிப் போகத் தான் அம் மணற்பாவையுடன் உந்தியிலே (ஆற்றிடைக்குறையிலே) நின்ற மாதரசியும்,

*புகழ்பெற்ற மன்னனான கரிகால் வளவனின் மகளாகி, சேர மன்னனான ஆட்டனத்தி என்னும் தன் கணவனைக் காவிரி வெள்ளம் இழுத்துச் செல்லத், தான் புனலின் பின்னேயே சென்று, 'கல் போன்ற தோளனே! என்னக் கடல்நீர் அவனைக் கொண்டு முன்னிறுத்திக்

* குறுந் : 31; அகம் : 45, 76; 222, 236, 376, 396; பார்க்க.

காட்ட அவனைத் தழுவிக் கொண்டு அழகிய பொற்கொடி போல வந்த ஆதிமந்தியும்,

மணல் நிறைந்த அழகிய கடற்கரையிலே, கலத்தில் வரும் தன் கணவனை நோக்கி, அவன் வரும் வரையிலே கல்லாகப் பொருந்தியிருந்து, கணவன் வந்தபோது கல் லுருவத்தை நீத்தவளும்,

தன் குழவிக்கு இணையான மாற்றாள் குழவி கிணற் றிலே விழத் தன் குழவியையும் இட்டு, இருகுழவிகளையும் உயிருடன் ஏற்றெடுத்த வேற்கண்ணாளும்,

மற்றொருவனுடைய நீண்டநேர நோக்கத்தைக் கண்டு நிறைமதி போலும் அழகிய ஒளிபொருந்திய தன் முகத் தைக் குரங்கு முகமாக ஆக்கிக்கொண்டு, அயல்நாடு சென் றிருந்த தன் கணவன் வந்த பின் அக் குரங்கு முகத்தை முன்போல மதிமுகமாக ஆக்கிக் கொண்டு சிவந்த மாணிக்க மேகலையணிந்த பூம்பாவையும்,

"பெண்ணறிவு என்பது பெரும் பேதைமையுடைய தாகும் என்று நுண்ணறிவினோர் உரைத்த விழுமிய நோக் கத்தை நோக்காமல், நாங்கள் சிறுமிகளாக விளையாடும் இடத்தே, 'யான் ஒரு மகளையும் நீ ஒரு மகனையும் பெறின் நின் மகன் என் மகளுக்குக் கொழுநன்' என்று நான் கூறிய மொழியை மெய்யாகக்கொண்டு இப்போது என் தோழி கூறக் கேட்ட துன்பத்தாலே என் சிந்தை நோய் மிகுகின்றது" என்று தன் தந்தையிடத்திலே தாய் உரைத் துக் கொண்டிருப்பதைக் கேட்டவளாய், கொடுப்பாரும் அடுப்பாரும் இல்லாமலே ஒரு புத்தாடையை உடுத்துக் குழலைக் கட்டிக்கொண்டு, கணவனை நெடிதாகத் தலையிலே விடாமற் சுமந்த பொற்பாவையனையாளும்,

ஆகிய எழுவரும் பிறந்த புகார் நகரிலே பிறந்தேன். உண்மையாக யானும் ஒரு கற்புடையாளேயெனின், அரசும் மதுரையும் இனிதிருக்க இசையேன்; இரண்டை யும் ஒழிப்பேன். என் பட்டிமையையும் நீ காண்பாய்!" என்று கூறி அவ்விடத்தைவிட்டு வெளிவந்தாள்.

"நான்மாடக்கூடலில் உள்ள மகளிரும் மைந்தரும் வானக் கடவுளரும் மாதவரும் கேட்பீராக! யான் விரும்பிய என் காதலனுக்குத் தீங்கு செய்த அரசனையும் அவன் ஆளும் நகரையும் சீறினேன். யான் குற்றமிலேன்"

எனக் கூறித் தன் இடப்பக்க மார்பை வலக்கையாலே திருகி ஏந்தி மதுரை வலமாக மும்முறை மனமறுகலுடன் சுற்றி வந்து, அழகிய மார்பைச் சுழற்றி விட்டெறிந்தாள்.

அப்போது எழுதிய ஓவியம்போல நீலநிற மேனியும் நீண்ட திரிக்கப்பட்ட செஞ்சடையும் பாலனைய வெண் முறுவலும் கொண்டு பார்ப்பனக் கோலத்துடன், ஒழுங்கான தீக்கடவுள் தோன்றி, "பெருமைமிக்க வீரபத்தினியே! நினக்குத் திண்ணிதாகத் தீமை செய்த நாளிலே இந்த நகரத்தைப் பரவிய தீயின் வாயிலே ஊட்டும்படி முன்னரே ஓர் ஏவல் உடையேன். இத்தீயிலிருந்து காப்பாற்றப்பட வேண்டியவர் யாவர்?" என்றான்.

"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி எனும் இவர்களைக் கைவிட்டுத் தீமை மிக்கார் பக்கமே சேர்க" என்று, சினந்த பொற்கொடியாள் ஏவினாள். அப்போது அழகிய தேரையுடைய பாண்டியன் நகரிலே புகையும் அழலானது மண்டியது.

வெண்பா

பொற்பு வழுதியுந்தன் பூவையரு மாளிகையும்
விற்பொலியுஞ் சேனையுமா வேழமுங் — கற்புண்ணத்
தீத்தரு வெங்கூடற் றெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று.

[அழகிய பாண்டியனும் அவன் மனைவியும் அந்தப்புர மகளிரும் வில்லேந்திய படைஞரும் குதிரையும் களிறும் தீயுண்ணும்படி கற்புடையாள் ஏவுதலினாலே அக்கொடிய கூடலிலிருந்த தெய்வக் கடவுளர் தம் பெரிய தெய்வத் தன்மையால் மறைந்தனர்.

22. அழற்படு காதை

அரசாங்க அலுவலாளர் விடை கொள்ளல் :

கண்ணகியின் ஏவலைப் பெற்ற தீக்கடவுளின் எரிமுகம் திறந்தது. நகர்க் காவலாக மதில்வாயில் நான்கினும் நின்ற தெய்வங்கள் தம் காவலை விடுத்து நீங்கின. வேந்தர் வேந்தனாகிய அடுபோர்வல்ல ஆரியப் படை தந்த நெடுஞ்செழியன் தன் செங்கோல் வளைந்து இழுக்கம் உற்ற அளவிலே தன் உயிராகிய ஆதரவைக் கொடுத்து, அங்கே பெருநில மகளுக்குத் தன் செங்கோலைக் காட்டுவதற்குக் குற்றமற்ற கற்பினையுடைய தேவியுடன் அரசு கட்டிலிலேயே இறந்ததையறியாமல், ஆசானும் பெரிய கணியும் அறக்களத் தலைவரும் காவிதிகளும் மந்திரவோலையெழுதுவோரும் அரண்மனை அலுவலாளரும் குறியதொடியணிந்த மகளிரும் ஓவியத் திரளைப் போலப் பேச்சவிந்திருந்தனர். யானையை நடத்தும் குத்துக்கோற்காரரும் யானைப்பாகரும் குதிரைப் பாகரும் விரையுந் தேரைச் செலுத்துவோரும் கூரிய வாயையுடைய வாளேந்திய மறவரும் ஒன்றுகூடி மயங்கி, அரசர்பெருமகன் கோயிலின் வெற்றி வாயிலிலே தீப் பரவுதலைக் கண்டு வெளியேகினர்.

தெய்வங்கள் விலகல் :

[முத்தாகிய அணிகலன்களாலே நிலவு வீசி விளங்கும் ஒளியுடன், தண்ணிய கதிரையுடைய திங்களன்ன மேனியுடன், முத்துக்களைப் பதித்த பிற அணிகளுடன் வெண்டாமரை மலரும் அறுகும் நந்தியாவர்த்தமும் ஆகிய வற்றைப்புனைந்த நல்லநிறமுடைய முடியினன், பால்நுரை போல விரிந்த நுண்ணிய பூவேலை செய்த ஆடையைப் புலராமல் உடுத்தவன், வட்டிகை முதலான நால்வகைச்

[] இக்குறியிலே உள்ளவை சில பிரதிகளில் இல்லையாம்.

சாந்தினையும் கொட்டத்துடன் அரைத்தணிந்த மார்பினன், தேனும் பாலும் சருக்கரைக் கட்டியும் பொருந்தச் சேர்வன பெற்ற நறும்புகையுடன் படைக்கும் சோற்றினன். குளக்கரைகளிலும் தெய்வக் கோயிலிலும் மறையோதுஞ் சாலையிலும் எப்போதும் நின்று, பிற்பகலிலே விரும்பிச் செல்வோன், நண்பகற்போதிலே வரவடியூன்றிய காலினன், விரிகுடையும் தண்டும் கமண்டலமும் காட்டமும் நீங்காத் தருப்பையும் பிடித்த கையினன், நாவால் ஓதும் நூலும் மார்பிலணியும் நூலும் உடையவன் ஆகி] முத்திப் பேணும் வாழ்க்கையிலே முறை பிறழாத பிரமன் விதித்த வேள்வியுறுப்புக்களையுடைய ஆதிப்பூதமாகிய தலைமைத் தெய்வமும்,

[வென்றி மிகும் ஞாயிற்றின் ஒளி போன்ற செவ்வொளி படைத்த மேனியன், குன்றாத மணிகளிழைத்த பூணினன், முடிமுதலாயின அணிந்த அழகிய முடியுடன் சண்பகமும் கருவிளையும் செங்கூ தாளமும் தண்மையுறும் நீர்ப்பூக்களும் கொண்டு கட்டுகின்ற கண்ணியும் தொடுக்கின்ற மாலையும் திரணையும் விடுபூவும் அணிந்தவன் குங்கும நிறங்கொண்ட மார்பினன், பொங்கொளியுடைய செம்பட்டாடையினன், மல்லிகை அரும்பனைய செந்நெல்லரிசிச் சோற்றைப் பொற்கலத்திலே ஏந்தி, பொருந்தும் நற்சுவைக் கறிகளும் தகுதியுறக் கொணர்ந்து வெம்மையுடன் படைக்கும் உணவினன், செம்மை பெறப் பவளம் போன்ற செஞ்சுடர் திகழும் ஒளி பொருந்திய மேனியன், ஆழ்கடல் சூழ்ந்த நிலவுலகையாள்வோனைப்போல, முரசும் வெண்குடையும் கவரியும் நெடுங்கொடியும் அங்குசமும் வடிவேலும் வடிகயிறும் ஆகியவற்றைப் பிடித்த கையினன், ஆகி, எண்ணவியலாத சிறப்பினையுடைய வேந்தரைப் புறங்கண்டு, நிலவுலகைக் கைக்கொண்டு செங்கோல் செலுத்திக், கொடிய தொழிலை நீக்கி வெற்றியைக் கொண்டு, நிலவுலகிலே நிலைபெறும் புகழை வளர்த்து, உலகைக் காக்கும் புகழ்பெற்ற சிறப்பினையுடைய திருமாலைப் போல அரச பூதமாகிய அருந்திறலையுடைய கடவுளும்,

செந்நிறமும் பசும்பொன் அனைய ஒளியும் உடைய மேனியன், பொருந்திய சிறப்பினையும் மறவேலையும் கொண்ட மன்னவரின் அரச முடி மட்டும் இல்லாமற் பிற பூண்கள் யாவும் பூண்டவன், வாணிகர் குலத்தாலே பெரு நிலத்தைக் காத்துக் கலப்பையும் தராசும் ஏந்திய கையினன்,

புகழமைந்த பொன்னிற உடையினன், வெட்சியும் தாழையும் தேன் கமழ் அல்லியும் சேடலும் நெய்தலும் பூளையும் மருதமும் சேர்த்து முடித்த முடியினன், மிகுந்த ஒளியையுடைய பொன்போலப் பரவிய நல்ல நிறமுடைய சந்தனத்தைப் பூசிய மார்பினன், கொள்ளும் பயறும் துவரையும் உழுந்தும் விரும்பிக் கலந்து கொள்க எனப் படைக்கும் உணவினன், பக்கங்களில் உள்ள நெற்களம், பறவைகள் கொண்ட கழனி, வணிகம் புரியும் கடைத் தெரு, பெருநிழலையுடைய காஞ்சி என்னும் இடங்களில் நீரைக் கையிலேந்தி முற்பகற்பொழுதிலே மகிழ்வுடன் உண்போன், கலப்பையும் தராசும் சூழ்ந்த ஒளியையுடைய நாவும் யாழும் கொண்டு, விருந்தினைப் பதமாகத் தந்தும் மலைபடுபொருளும் கடல்படுபொருளும் கொண்டு வந்து வேண்டுவோர்க்கு விலையாகத் தந்து உழவுத் தொழிலுக் குதவும் பழுதற்ற வாழ்க்கையையுடையவன் என்பவன் விளங்கும் ஒளியையுடைய முடியிலே இளம்பிறை தரித்த இறைவன் வடிவினையுடையவன் ஆகிய விளங்கொளி தவழும் மிகவும் பெருமைபொருந்திய பூதக்கடவுளும்,

கருவிளமலர்போலும் மேனியன், மாணிக்கமும் வெள்ளியும் கலந்த பூணினன், தெளிந்த ஒளிவீசும் கரிய உடையினன், திண்ணிய அகிற்சாந்து பூசி உலர்ந்த அகன்ற மார்பினன், கொம்பு கொடி நீர் நிலம் ஆகிய இடங்களிலே மலர்ந்த மலர்களை முடித்த சிகழியன், தச்சர் இயற்றிய தொழிற் பாடமைந்த கலப்பையை ஏந்திச் செந் நெறியிலே வருகின்ற சிறப்பைப் பொருந்தி நீராடி, நீல மணிபோல் விளங்கும் மேனியன் ஒள்ளிய கருநிறஞ் சேர்ந்த உடையினன், வெற்றிக்கிசைந்த அவற்றுடன்

பொருந்திப் பாடலுக்குப் பொருந்திய பலதுறையினும் போகி, ஒலி பொருந்திய கூடலிலே படைக்கும் உணவை ஏற்றுக்கொள்ளும் பூதத் தலைவனும்—

வெளிப்பட்டு வந்து, "அரசன் முறை பிழைத்த நாளில் இந்த நகரம் தீயால் முறையாக உண்ணப்படுவதாகிய ஒரு திறன் உண்டு என்பதை ஆம் முறையாக அறிந்தோம். ஆகையால், யாமும் முறையாக வெளிப்பட்டுப் போய்விடுவது இயற்கையல்லவோ?" என்றுரைத்துக் கொங்கையால் நகரை எரித்தலை மேற்கொண்ட வெற்றிமிகும் கண்ணகியின் முன்னிலையிலிருந்து நால்வகைப் பூதமும் தம் தம் பகுதிக்கேற்றவாறு பிரிந்து சென்றன.

நகரெங்கும் எரிமூண்டபோது—

கூலம் விற்கும் கடைவீதியும் கொடியணிந்த தேர் வீதியும் பால்வகை விளங்கிய நால்வகைத் தெருவும், வலிய குரங்குக் கொடியேந்திய வில் வீரனாகிய அருச்சுனன் காண்டவம் என்னும் வனத்தை எரியூட்டிய நாள் போலக் கலங்கின. அறவோர் வாழிடங்களில் தீக்கொடி படர்ந்திலது. மறவோர் வாழிடங்களில் எரி கலந்து மண்டியது. கன்றையும் ஆவையும் வெந்தீ சேர்ந்திலது; அவைகள் ஆயர்பாடியின் பரவிய தெருக்களை அடைந்தன. போருக்குரிய வெங்களிறுகளும், மடப்பிடியின் தொகுதிகளும், விரையும் நடையுடைய குதிரைகளும் மதிலின் புறத்தே போய்விட்டன. சந்தனம் தோயந்த ஏந்திய அழகிய இளமுலைகளையுடைய, மைதீட்டிய பெருங்கண் மங்கையர் தம் கணவருடன் செப்பின் வாயைத் திறந்து சொரிந்த நறுமணப் பொருள்களும் நல்ல மணமலர் விரிந்த மணமிகும் மயிர் முடியிலுள்ள மலர்ப் பிணையலில் சொரிந்த மகரந்தப் பொடியும், குங்குமம் எழுதிய கொங்கையின் முகட்டிலிருந்து பிரித்தெடுத்து வீசிய முத்தாரமும் பரவிய தூயமென்மை பொருந்திய பாடலிலே ஊடல் இன்பத்தை நுகராமல், காமமாகிய களியாட்டத்தை

விட்டுச் சோர்ந்தனர். குதலைமொழி பேசும் செவ்வாயையும் குறுநடையையும் உடைய புதல்வரைப் பெற்ற, மணங் கமழ் கூந்தலினர் தம் குழவிகளைப் பஞ்சணைகளிலே துயிலினின்றும் விழிக்கச் செய்து, வெண்ணரைக் கூந் தலையுடைய முதிய பெண்டிருடன் தீயிலிருந்து தப்பி வந்தனர். வந்த விருந்தினரை ஓம்பும் இல்லறத்திலே தவருத பெருமனைப் பெண்டிர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "விளங்கும் பூண் அணிந்த மார்பையுடைய கணவனை யிழந்து, சிலம்பினுலே தன் வழக்கை வென்ற சேயிழை யாகிய கண்ணகியின் கொங்கை விளைத்த இத்தீக்குழப்பம் கொடியதன்று" என்று கூறி, அழலும் தீக்கடவுளைத் தொழுது வாழ்த்தினர். அறுபத்து நான்கு கலைகளையும் பயின்ற இசை மடந்தையரின் பயன் பொருந்திய தெரு விலே, தண்ணுமையும் முழவமும் மனத்தைத் தாழ வைக் கும் இன்னிசைக் குழலும் பண்களின் கிளையை இசைக் கும் இசையுடைய யாழும் ஆடரங்கும் ஆகியவற்றை இழந்த நாடக மடந்தையர், "எந்நாட்டினளோ? யார் மகளோ? அறியோம்! இந்நாட்டினிலே இந்நகரிலே தன் கணவனை இழந்து, ஆராயாத அரசனைச் சிலம்பினுலே வென்று, இவ்வூரையும் தீமூட்டிய ஒப்பற்ற மகளா யினள்!" என்று வியந்தனர்.

இவ்வாறுதலுடன், மாலை நேர விழாவும், மறை யோசையும், தீவேட்டலும், தெய்வ வழிபாடும், மனை தோறும் விளக்கெடுத்தலும் மாலையணிதலும், முரசு முழக்கமும் இழந்த மாநகரிலே, கணவனையிழந்த வருத்தத் துடன் உள்ளம் கொதித்து, ஊதுகின்ற கொல்லுலையிலே துருத்தி போல வெம்மூச்சுவிட்ட கண்ணகி தெருவிலே சுற்றுவாள்! சந்துகளிலே கவன்று நிற்பாள்! சென்று சென்று திரும்புவாள்! மயங்கி மயங்கிச் சோர்வாள்! இவ்வாருகப் பெருந்துன்பமுற்ற வீரபத்தினியின் முன் னுலே, மதுரையம்பதி கொளுத்தும் அழல்மிக்க நெருப்பி னுலே உண்ணப்பட்டதைப் பொருதவளாக மதுராபதி என்னும் தெய்வம் வந்து தோன்றினுள்.

மாமகளும் நாமகளும் மாமயிடற் செற்றுகந்த
கோமகளுந் தாம்படைத்த கொற்றத்தாள்—நாம
முதிரா முலைகுறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுரா பதியென்னு மாது.

[திருமகளும் கலைமகளும் கொடிய மயிடனைக் கொன்றுயர்ந்த வீரமகளும் கொண்ட வெற்றியைத் தானே படைத்தவளாகிய மதுராபதி என்னும் மாது, அச்சமுண்டாகத் தன் இளமுலையைப் பறித்த கண்ணகி முன்னே வந்தாள்.]

23. கட்டுரை காதை

மதுராபதியும் கண்ணகியும்

சடையும் பிறையும் பொருந்திய முடியினள், குவளை மலரனைய மையுண்ட கண்களையுடைய முத்தனைய ஒளி வீசும் முகத்தினள், இதழ்க் கடையிலே இருபக்கமும் தோன்றிய வளைந்த எயிறுடைய பவளச் செவ்வாயினள், வளைந்த எயிறுகளின் இடையிலே நிலவு விரிந்த முத்தனைய மூரலினள், இடப்பக்கம் இருண்ட நீல நிறமானாலும் வலப்பக்கம் பொன்னிறம் பொருந்திய மேனியள், இடக்கையிலே பொன்மயமான தாமரை மலரை ஏந்தினும் வலக்கையிலே அழகிய ஒளி மிகும் வளைந்த வாளை ஏந்தியவள், இடக்காலிலே ஒப்பற்ற சிலம்பு சூழ்ந்து ஒலித்தாலும் வலக்காலிலே புனைகழல் கட்டியவள், ஆகிய மதுராபதி, குளிர்ந்த நீர்த்துறையையுடைய கொற்கைத் தலைவனும் குமரித்துறைவனும் பொன்மலையிலே தன் ஆட்சியின் எல்லை கண்டவனும் பொதியமலைத் தலைவனும் ஆகிய பாண்டியனுடைய குலமுதற் காவலுரிமையுடையாளாதலின் மனங்கலங்கி, ஒருமுலை குறைத்த திருமாபத்தினியின் முன்னே தோன்ற அஞ்சிப் பின்னே தோன்றி,

'வாழி! நங்கையே! என் குறையைக் கேட்டிடுக!' என்றாள். அதுகேட்ட கண்ணகி தன்னுடைய சோர்ந்த திருமுகத்தை வலப்பக்கமாகத் திருப்பி, 'என் பின்னர் வருகின்ற நீ யார்? என்னுடைய பெருந்துன்பத்தையும் துயரத்தையும் அறிதியோ?' என்றாள்.

மதுராபதி கூறுகிறாள்:

"அணியிழாய்! நின் பெருந்துன்பத்தையும் துயரத்தையும் அறிந்தேன். இப்பெருங்கூடலாகிய மதுரைக்குத் தலைவி நான். நினக்கு உறுதிமொழியொன்று கூற வந்தேன். நின் கணவனுக்கு நேர்ந்ததையெண்ணிக் கவலை

யுறுகிறேன். பைந்தொடியே! கேள்! பெருந்தன்மை யுடைய பெண்ணே! என் நெஞ்சம் வருந்திப் புலம்பும் இந்நோயைப் பற்றி ஒரு மொழி கேள்! என் தோழியே! எம் வேந்தனுக்கு ஊழ்வினை வந்தவற்றைப் பற்றி ஒரு சொல் கேள்! மாதராய்! நின் கணவனுக்குத் தீமையுற வந்த வினையைப் பற்றி ஒரு மொழி கேள்!

எம் வேந்தன் மறையோதும் நாவின் ஒலியையன்றி எவ்வகையிலும் ஆராய்ச்சி மணியொலியைக் கேட்டதும் இலன்! இவன் அடியைத் தொழுது வணங்காத மன்னர் களே அன்றிக் குடிகள் பழிக்குங் கொடுங்கோலன் அல்லன்! இன்னும் கேள், அழகிய நெற்றியையுடைய பெண்களின் இளமைசான்ற நோக்கமாகிய மதவாய் திறந்து, அதனால், இளமைக் களிறு நெஞ்சின் இடம் கழிந்து, அடங்காத உள்ளத்துடன் ஓடுமானாலும், ஒழுக் கத்துடன் கூடிய சிறந்த இக்குடியிலே பிறந்தவர்களுக்குத் தவறான செயலை உண்டாக்குவதில்லை. இதனையும் கேள்.

வார்த்திகன் கதை:

பிறர்க்கு உதவமுடியாத வாழ்க்கையையுடைய கீரந்தை என்னும் அந்தணன் மனைவி தனியே இருந் ததை உணராமல், இப்பாண்டிய மரபிலே மன்னனொரு வன் ஒருநாள் நகர்ச் சோதனையின் போது தாழில்லாத கதவைத் தட்டினான். 'அரச வேலி யல்லாமல், வேறு குற்றம் அற்ற வேலி உனக்கு இல்லை யென மொழிந்து, அரணில்லாத இவ் வீட்டிலே விடுத்துச் சென்றீர். அவ்வாறே, இன்று அவ்வேலி காவாதோ?' என்று அவள் வாய்விட்டுக் கூறிய மொழி செவியிலே தீயிற் காய்ச்சிய ஆணிபோலப் புகையும் அழலுமாகப் புகுந்து நெஞ்சத்தைச் சுட்டது. அதனாலே, அஞ்சி நடுங்கி, வச்சிரம் ஏந்திய தடக்கையனான வானவர் தலைவன் தலை மீதிருந்த பொன்முடியை ஒளிபொருந்திய வளை யென்னும் படைக்கருவியாலே உடைத்த தன் கையைக் குறைத்துக் கொண்டான். அத்தகைய செங்கோலையும்

குறையாத வெற்றியையும் உடைய இம் மன்னர் குடியிற் பிறந்தோர்க்கு வசையின்மையை இன்னும் உண்மையுணரக் கேள்.

பாண்டவர்க்கும் துரியோதனன் முதலான நூற்றுவர்க்கும் நடந்த போரிலே படைவீரர்க்குப் பெருஞ்சோறுபடைத்த திருந்திய வேற்கையனான சேரனுடைய, செல்வம் நிலை பெற்ற பெரிய நாளோலக்க இருக்கையிலே, அறம் அறிந்த செங்கோலையும் மறநெறிக்குரிய நீண்ட வாளையும் உடைய - புறவுக்காகத் துலையேறியவனும் கறவைக்காகத் தன் மகனை முறைசெய்தவனும் பிறந்த மரபிற் பிறந்த நீர் நிறைந்த கழனிகளையுடைய புகார் வேந்தனாகிய சோழன் ஆளும் நிலந்தாங்கா விளையுள் மிகுந்த நாட்டிலிருந்து வறுமையால் வெளியேறிய பார்ப்பான் பராசரன் என்பவன், அச்சேரனுடைய கொடைத்திறத்தைக் கேள்வியுற்று, 'வளமிகுந் தமிழ் மறையோனான கோதமன் என்பவனுக்கு வேள்வியின் மூலமாக வானவாழ்வை வழங்கிய மரபினனாகிய, திண்ணிய திறலையும் நீண்டவேலையும் உடைய சேரலனைக் காண்பேன்' என்று முடிவுசெய்தான். காடும் நாடும் நகரமும் கடந்து, நீண்டகால நிலைபேறுடைய பொதியத்தைக் கடந்து சென்றான். சேரன் அவையிலே, ஒப்பற்ற வீடுபேற்றை விரும்பிய கொள்கையையும் இருபிறப்பினையும் முத்தீயோம்பிவரும் செல்வத்தையும் உடையவராய், ஐம்பெரு வேள்வியாகிய 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற' ஐம்புலத்தினரையும் ஓம்பி, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறுதொழிலையும் உடைய அந்தணர் பெறும் முறையை அச்சேரனுக்கு வகுத்தற்கு, வாதம் புரிந்து நாவினாலே வெற்றிபெற்றுப் பகையை வென்று, 'பார்ப்பன வாகை' அணிந்தான். அதனாற் பரிசாகக் கிடைத்த தகுதிபெற்ற நல்ல அணிகலன்களைக்கொண்டு தன் பதியை நோக்கி வந்தான். வரும்போது, செங்கோலையுடைய தென்னவன் நாட்டிலே,

நல்ல தொழிலையுடைய மறையவர் வாழும் திருத்தங் கால் என்னும் ஊரை யடைந்தான். பசிய இலைகள் தழைத்த போதி மன்றத்திலே தன்னுடைய தண்டும் கமண்டலமும் வெண்குடையும் சமித்தும் பண்டம் பொதிந்த சிறு மூட்டையும் அடியரணையும் வைத்து விட்டுக் களைப்பாறினன். 'காவலாகிய வெண்குடையை யும் விளைந்து முதிர்ந்த வெற்றியையும் உடைய திற லோன் வாழ்க! கடலிலே இருந்த கடம்பை வீழ்த்திய காவலன் வாழ்க! விடரையுடைய இமயகலையின் கண்ணே வில்லை எழுதிய வேந்தன் வாழ்க! அழகிய குளிர்ந்த பொருநையையுடைய சேரன் வாழ்க! மாந் தரஞ் சேரல் மன்னவன் வாழ்க!' என்று சேரனை வாழ்த்தினன்.

அப்போது, குழலையும் குடுமியையும் மழலைச் செவ் வாயையும் தளர் நடையையும் உடையவராய்த் தம் உறவினரை விட்டு வந்து விளையாடுகின்ற சிறுவரெல் லோரும் அவனைச் சூழ்ந்தனர். அவன் அச்சிறுவரை நோக்கிப், 'பார்ப்பனச் சிறுவர்களே! என்னுடன் மறையை ஓதி இப் பண்டச் சிறுபொதியைக் கொண்டு போங்கள்' என்றான். அவ்வாறே அச்சிறுவர்கள் ஓதப், புகழத்தக்க சிறப்பினையுடைய வார்த்திகன் மகன் தக்கிணாமூர்த்தி என்னும் பெயருடன் வளர்ந்தவன் பால் மணக்கும் செவ்வாய்ச் சிறுவர்முன்னாலே, குதலை மொழியாயினும் மறையொலி மாறாமல், உளம் நிறைந்த மகிழ்வுடன் அந்த அந்தணனைப் போலவே ஓதினன். ஆகவே, அவன் அச்சிறுவனை வியந்து முத்துப் பூணா லும் அழகு தக்க அணிகலமும் கடகமும் தோடும் கையுறையாகக் கொடுத்துவிட்டுத் தன் ஊருக்குப் போயினன்.

பின்னர் அச்சிறுவன் தார்முதலியன புனைவதையும் கடகம் முதலியன பூண்பதையும் பொறாதவராய்ப் பாண் டியமன்னனின் ஏவலர் அச்சிறுவன் தந்தையான வார்த்தி கனைக் காவல்செய்து கொண்டுவந்து, அரசன் ஆணை

யில்லாமலே, 'திருட்டுப் பொருள் கொண்ட பார்ப்பனன் இவன்' எனக் குற்றஞ் சாட்டிச் சிறைக் கோட்டத் திட்டனர்.

அதனால், வார்த்திகன் மனைவி கார்த்திகை என்னும் பெயரினள் துன்புற்றேங்கியழுதாள்; வாழ்வை வெறுத்து நிலத்திற் புரண்டாள்; பொங்கினாள்! அவள் நிலைகண்டு குற்றமற்ற சிறப்பினையுடைய ஐயையின் கோயிலிலே தொழிற்பாடமைந்த கதவு தானே அடைத்துக் கொண்டது. அதனை வீரவேல் மன்னவன் கேட்டு மயங்கிக், 'கொடுங்கோன்மை நேர்ந்தது போலும்! ஐயை வெறுக்கும்படி நேர்ந்த துன்பத்தையெல்லாம் அறிந்து வருக!' என்றான். ஏவலாளர் அரசனைத் தொழுது, வார்த்திகனைச் சிறைப்படுத்திய உண்மையை உரைத்தனர். 'இது தக்கதன்று' என்று நீளவுரைத்து, 'அறிவிலா மக்களாலே ஆட்சி முறை மாறிய என்னாலே அரசியல் தவறியது. பொறுப்பது நும் கடமை' என்று வார்த்திகனுக்குப் பரவிய நீர் நிலைகளையுடைய கழனி சூழ்ந்த திருத்தங்கால் என்னும் ஊரையும், குறைவில்லாமல் விளைகின்ற வயலூரையும் கொடுத்து, அவன் அடிகளில், (நிலமகள் தன் மார்பைப் பெறுமல் தணியாத வேட்கையைத் தணிப்பவன்போல், நிலமிசைவிழுந்து) வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அப்போது, நிலை பெற்ற கூடலின் நீண்ட தெருக்களிலே மலைபோலுயர்ந்த மாடங்களெங்கும் கேட்கும்படி ஆரவாரத்துடன், கலையூர்தியான ஐயையின் கோயிற் கதவு திறந்து கொண்டது.

அப்போது, சிறைச்சாலைகளைத் திறந்து விட்டுத் தூய்மை செய்ம்மின்! வரி நல்குவோர்க்கெலாம் சிறிதும் வேண்டா என்று வரி நீக்குமின்! பிறர் வரவிட்ட பொருளாயினும் புதையலாகக் கிடைத்த பொருளாயினும் அப்பொருள்களை ஏற்றவர்களுக்கும் எடுத்தவர்களுக்குமே ஆகும்'' என்று, யானையின் பிடரிலிருந்து அழகிய முரசை அறைந்த கோல்முறை தவி

ராத கொற்ற வேந்தன் தவறு செய்யும்படி நேர்ந்த தகுதியையும் நீகேள். ஆடித்திங்களிலே பேரிருளை யுடைய தேய்பிறைநாளிலே [கார்த்திகை பரணியிலே?] அட்டமித்திதியிலே வெள்ளிவாரத்திலே புகழ் பெற்ற மதுரையை ஒள்ளிய நெருப்புண்ணு மென்றும் அரசு கேடுறும் என்றும் ஓருரையும் உண்டு.

நிரையாக வளையணிந்தவளே! இதனையுங் கேள்!

கோவலன் ஊழ்வினைக்காதை

மணமிகும் பொழில் சூழ்ந்த கலிங்க நாட்டிலே வடிவேலேந்திய தடக்கையினராகிய வசு என்பவனும் குமரன் என்பவனும் தாயவேந்தர்கள். நறு நீர்ப் பழனத் தையுடைய சிங்க புரத்திலே வசு ஆண்டான். மூங் கில் வனஞ்சூழ்ந்த கபில புரத்திலே குமரன் ஆண்டான். இங்ஙனம் அரசாளும் செல்வத்தையும் அணிமிகுதாரை யும் கெடாத திருவினையுடைய சிறந்த குடிப்பினையும் உடைய இவ்விருவரும் தம் முட் பகைகொண்டனர். அத னால், இவ்விரு நகருக்கும் இடையே உள்ள ஆறு காதப் பரப்பினில் எவ்விடத்தும் இருவரது வென்றி காரணமாகச் செல்வோரிலராயினர்.

ஆகையால், சங்கமன் என்னும் வணிகன் அரிய பொருள் வேட்கையினாலே மிகு கலன்களைச் சுமந்து கொண்டு காதலியுடன், மறைந்து வாழும் மக்களைப் போலக் குறையாத புகழையுடைய சிங்கபுரத்திலே ஓர் அங்காடியிலே தங்கி அருங்கலனை விற்று வந்தான். அப்போது, பைந்தொடியாகிய நின் கணவன் முந்தைப் பிறப்பிலே, அக் கொடுந்திறலுடைய வசு மன்னனுக்குப் பணி புரிவோனாகப் பரதன் என்னும் பெயருடன் இருந்தான். அவனுக்குச் சங்கமனிடத்திலே உண்டான பொருமையாலே அறத்தினின்றும் வழுவிச் சங்கமனை ஒற்றன் என்று பற்றிக்கொண்டு சென்று, மன்ன னிடம் காட்டிக் கொல்ல வழி செய்தான். அதனாற் கொலைக்களத்தில் இறந்த அவன் மனைவி நீலி யென்ப

வள் ஆதரவு காணுமல், 'அரசரே! முறையோ! பரதரே!' முறையோ! ஊரிலுள்ளீர்! முறையோ! சேரியீர்! முறையோ!' என்று நீதிமன்றத்தினும் தெருவினும் சென்று கூக்குரலிட்டாள். பதினுன்கு நாள் வரையில் ஒரு நீதியும் பெற்றிலள். எனவே, பதினுன்காம் நாள் தன் கணவனைக்கண்டு தொழும் நாள் இது என்று விளக்கமுற வாழ்த்தினுள். பின்னர் ஒரு மலையுச்சியிலே ஏறி நின்று தன் கணவனை அடைய முயன்றவள், "எமக்கு இத்தகைய மிகுதுயரைச் செய்தோர், எவ்வகையிலும் தாமும் இத்தகைய மிகுதுயர் பெறுக!" என்று கூறி, விழப்போகும் அவள் இட்ட தவருத சாபத்தை இப்போது நீவிர் பெற்றீர்! ஆகையால், இனி நுமக்கு உறுவது கூறுவேன், கேள்!

"முற்பிறப்பின் வினைவந்து சீறும்போது, நன்னெறியிலோர்க்குத் தாம் செய்த தவம் உதவியாகாது. நீண்ட தொகுதியான கூந்தலையுடையாய்! நின் காதலனை அப்பதினுன்கு நாள் எல்லை கழித்து, வானவர் வடிவிலன்றி மானவர் வடிவிலே காணமாட்டாய்!".

இவ்வாறு மதுராபதி யெனும் தெய்வம் பெருமைமிக்க பத்தினிக்கு ஊழ்வினையியல்பைக் கூறித் தீயிலிருந்து விடுதலை பெற்றது.

பிறகு, கண்ணகி, 'என் கருத்துற்ற கணவனைக் கண்ட பின்னரன்றி ஓரிடத்தில் இருத்தலும் விழையேன், நிற்றலும் விழையேன்' என்றுரைத்துக் கொற்றவை கோயிலின்வாயிலிலே தன் பொன்வளைகளை உடைத்தாள். 'கீழ்த்திசை மதில் வாயிலிலே கணவனுடன் புகுந்த நான் மேற்றிசை மதில் வாயிலிலே வறிதே திரும்புகிறேன்' என்று மயங்கிப் பிறிதொரு செயலுமற்றுச் சோர்வுடன், இரவும் பகலுமாக, வெள்ளப்பெருக்கு மிகுந்த வையையின் ஒருகரையிலே வழிக்கொண்டு நடந்து, பள்ளமெனப் பாராமல் இறங்கியும், மேடெனப் பாராமல் அடிவைத்தேறிச் சென்ருள்

பின்னர், ஆழ்கடலின் வயிற்றைக் கிழித்துக் கிரவுஞ்சம் என்னும் மலையின் நெஞ்சைப் பிளந்து, அவுணரை வென்ற ஒளிமிகும் நெடுவேலேந்திய செவ்வேளின் திருச் செங்குன்றின்மிசை அடிவைத்தேறிய கண்ணகி மலர்ந்த வேங்கைமரச் செறிவின் நிழலிலே, 'நான் ஒரு தீத்தொழிலாட்டியேன்' என்றேங்கியுரைத்துப் பதினான்கு நாள் வரையிருந்தாள். பதினான்காம் நாள், 'என் கணவனைத் தொழும் நாள் இது' என்று விளங்க வாழ்த்திப் பகல் கடந்து மாலைப் போதிலே, சிறப்புமிகு கண்ணகியின் பெரும்பெயரை ஏத்தி, வாடாத வான்மலர்களை மாரியெனப் பெய்து, இந்திரனுடைய ஏவலர் வந்து வாழ்த்தினர். மணமிகும் புரிகுழலுடைய கண்ணகியும் மதுரையிலே யிழந்த கோவலனுடன் வானவூர்தி யேறினள்.

வெண்பா

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து.

[வேறு தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தெய்வமாகத் தொழுவாளைத் தெய்வமே தொழுமென்னும் மேன்மை திண்ணமாகும். நிலவுலக மாதர்களுக்கு அணியான கண்ணகி தெய்வமாகி வானுலக மாதர்களுக்கு விருந்தாயினள்.]

கட்டுரை

முடியுடைய வேந்தர் மூவரினும் படையேந்திய தடக்கையராகிய பாண்டிய மரபினரின் அறமும் மறமும் வலிமையும் அவருடைய பழமையான விறல்மிகும் மூதூரின் பண்பு மேம்படுதலும் திருவிழா மலிந்த சிறப்பும் வானவர் வரவும், நீங்காத இன்பமுடைய அவர் நாட்டிலே வாழும் குடியின் பெருக்கமும் உணவின் மிகுதியும், அவர்களுடைய வையைப் பேராறு வளத்தைச் சுரந்து ஊட்டலும் குறையாத முகில் புதுமாரி பெய்தலும், ஆரபடி சாத்துபதி என்ற விருத்திகளும் பொருந்தத் தோன்றும் வரிப்பாட்டுக் குரவைக் கூத்தும் என்ற இவை யாவும் இவைபோன்ற பிறபொருள் அமைப்புடன் பொருந்தித் தோன்றும்; திண்மையான நிலையும் வடநாட்டாரியரின் படையை வென்று தென் தமிழ்நாடெங்கும் அறியக் குற்றமற்ற கற்பினையுடைய தேவியுடன் அரசுகட்டிலிலே துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனுடன் ஒருவகையாக நோக்கிக் கிடந்த மதுரைக் காண்டம் முற்றிற்று.

— —

மூன்றாவது

வஞ்சிக் காண்டம்

24. குன்றக் குரவை

வேடிச்சியர் விளம்புகின்றனர் :

"குருவியை ஓட்டியும் கிளியைத் துரத்தியும் குன்றிலே தினைப்புனத்திலே சென்று தங்கி, அருவியில் ஆடியும் சுனையில் நீர் குடைந்தும் சோர்வுற்று வந்த எங்கள் முன், மலைவேங்கை மரத்தின் நல்ல நிழலிலே மனம் நடுங்குமாறு ஒரு முலையிழந்து, வந்து நின்ற வள்ளி போல வந்து நின்றீர் ! நீவிர் யாவிர் !" என்றோம். அதற்கு அத்தெய்வமகளார் முனிவின்றி, 'மணமதுரையுடன் அரசும் கேடுறுமாறு ஊழ்வினை வந்து சீறியபொழுது, கணவனையிழந்து வந்த கடுவினையேன் யான்' என்றாள். அதனைக் கேட்டதும் அஞ்சி வளையணிந்த இருகைகளையும் குவித்து வணங்கி நின்றோம். அவ்வெல்லையிலே குன்றவர் யாவரும் கண்டுநிற்கும்படி வானவர்கள் மலர் சொரிந்து வந்து கொழுநனுடன் அவளைக் கொண்டு சென்றனர். ஆதலின், இவள் போலும் நம் குடிக்கு ஒரு தெயவம் இல்லை.

சிறுகுடியீர் ! சிறுகுடியீர் ! தெய்வமாக இவளைக் கொள்ளுமின் ! சிறுகுடியீர் ! ஒளிவிளங்கும் அருவி விழும் பறம்பின் பக்கமலையிலே நறிய கிளைகளுடன் கூடிய வேங்கை மரத்தில் நல்ல நிழலிலே ஒரு தெய்வமாக இவளைக் கொள்ளுமின் ! சிறுகுடியீர் ! தொண்டகத்தை முழக்குமின் ! சிறுபறையை ஒலிமின் ! ஊதுகொம்புகளை ஊதுமின் ! ஓசைமிகும் மணிகளை இயக்குமின் ! குறிஞ்சி வளத்தைப் பாடுமின் ! நறும்புகையை ஏந்துமின் ! மலர் தூவுமின் ! காப்புக் கொள்ளுமின் ! ஒருமுலையிழந்த மங்

கையை, இப்பெருமலையிலே வளம் சுரப்பதற்காக வாழ்த்த லும் புரிமின்!"

கொளுச் சொல்

அழகிய அணிகளையுடையாய்! இதோ அஞ்சனப் புழுதியும் கத்தூரியின் இடியலும் சிந்துரச் சுண்ணமும் ஆகிய இவற்றைச் செறிவுறத் தூவித் தேன்மணங்கமழ வானவில்லின் அழகினைக் கொண்டு, இழும் என்னும் ஒலி யுடன் வந்திழியும் மலையருவியைப் பார்! நாம் இவ்வருவி யில் ஆடுவோம்! ஆடுவோம் தோழி! ஆடுவோம் தோழி! அஞ்சாமல் இரு என்றுரைத்து நம் அழகை நுகர்ந்து மீண்டும் அளியாதவனுடைய, முகில் சூழும் சோலை நிறைந்த மலையருவியிலே ஆடுவோம்!

சிறைப்புறமாகத் தலைவன் வரும்போது தோழிக்குத் தலைமகள் கூறியது:

எற்றொன்றுங் காணேம் புலத்த லவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனல் மற்றையார்
உற்றாடி னோந்தோழி நெஞ்சன்றே; 1

என்னொன்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
பொன்னாடி வந்த புதுப்புனல்
பொன்னாடி வந்த புதுப்புனல் மற்றையார்
முன்னாடி னோந்தோழி நெஞ்சன்றே; 2

யாதொன்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
போதாடி வந்த புதுப்புனல்
போதாடி வந்த புதுப்புனல் மற்றையார்
மீதாடி னோந்தோழி நெஞ்சன்றே. 3

[அவர் கொடுமை செய்தார் என்று, அவர் மலையிலே கல்லைத் தழுவி வரும் புது நீருடன் புலத்தற்குச் சிறிதும் காரணம் இல்லை. இப்புது நீரிலே நாமாடாமல் பிற மகளிர் உற்று ஆடின் தோழியே! நம் நெஞ்சு நோம்.

அவர் செய்த கொடுமையை எண்ணி, அவர் மலை யிலே பொன்னைக் கொழித்து வரும் புது நீருடன் புலத்

தற்குச் சிறிதும் காரணம் இல்லை. இப்புது நீரிலே நாமா டாமல் பிற மகளிர் ஆடின் தோழியே! நம் நெஞ்சு நோம்!

அதர் செய்த கொடுமையை எண்ணி, அவர் மலையிலே மலர்களைச் சுமந்து வரும் புதுநீருடன் புலத்தற்குச் சிறிதும் காரணம் இல்லை. இப்புதுநீரிலே நாமாடாமல் மற்ற மகளிர் ஆடின் தோழியே! நம் நெஞ்சு நோம்!]

வரைவு முடிவாகத் தெய்வம் பராயது

மாதே! நம்முடைய மையுண்ட கண்கள் சிவக்கும் படிக் குற்றமற்ற நீரிலே குடைந்தாடினோம். ஆதலால் இனி, கடல் நடுவிலே மாமரத்தை வீழ்த்திய வேலை ஏந்திய முருகனைப் போற்றிக் குரவையாடல் தொடங்கி இனி ஒன்று பாடுவோமா? சொல் தோழி!

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே. 1

அணிமுகங்க ளோராறு மீராறு கையும்
இணையின்றித் தானுடையா னேந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே. 2

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் றிருக்கைவே லன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே. 3

[அழகு பொருந்திய செந்திலும் திருச்செங்கோடும் சுவாமிமலையும் திருவேரகமும் நீங்காத இறைவன் கையில் ஏந்திய வேலே, முன்னொரு காலத்திலே பாரில் முதிர்ந்த கடலினுள்ளே புகுந்து, முன்னொரு நாள் சூரனாகிய மாமரத்தை வெட்டிய ஒளிமிகும் இலைமிக வெள் வேலாகும்.

அழகிய ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் ஒப்பில்லாமல் தானே கொண்ட இறைவன் ஏந்திய வேலே, மயிலின்மீது ஊர்ந்து, அவுணருடைய பெருமை கெடும்படியும், நீனிற வானிலே இந்திரன் ஏத்தவும் பகைவரை அழித்த வேள் வேலாகும்.

சரவணப் பொய்கையிலே தாமரை மலர்ப் பள்ளியறையிலே கார்த்திகை மாதர் அறுவரின் திருமுலைப்பாலை உண்ட இறைவனின் திருக்கையில் ஏந்திய வேலே, கிரவுஞ்ச மலையைச் சூழவரும் அவுணனுடைய மார்பைப் பிளந்து, அக்குன்றையும் பிளந்த நீண்ட வேலாகும்.]

அறத்தொடு நிலை

இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாள்மற் றன்னை யலர்கடம்ப னென்றே
வெறியாட லுன்விரும்பி வேலன்வரு கென்றாள் 1

ஆய்வளை நல்லா யிதுநகை யாகின்றே
மாமலை வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்றான் மடவன்; 2

செறிவளைக்கை நல்லா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்; 3

நேரிழை நல்லாய் நகையா மலைநாடன்
மார்பு தருவெந்நோய் தீர்க்க வரும்வேலன்
தீர்க்க வருவேலன் றன்னினுந் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின் 4

[முன்கையில் வளையணிந்த நல்லாய்! மிளகு வளரும் குளிர்ந்த மலைநாட்டினன் உண்டாக்கிய நோயைத்தவிர்க்க, நம் அன்னை அறியாளாய், அலர்ந்தகடம் பணிந்த முருகனே இந்நோய் செய்தான் என்றெண்ணி வெறியாடலை விரும்பி, 'வேலன் வருக!' என்றாள். இது நகைப்பைத் தருகின்றது.

அழகிய வளையணிந்த நல்லாய்! பெருமலைத் தலைவன் செய்த நோயைத் தீர்க்க வேலன் வருவான். அவ்வாறு

வரின், அவ் வேலன் அறிவிலான்! அவனிலும் அவ்வேலன் மீது ஆவேசித்து வரும், கிரவுஞ்சம் பிளந்த முருகன் அறிவிலான்!

வளையல் அணிந்த கையினுய்! மலர் மணங் கமழும் மலையன் செய்த நோயைத் தீர்க்க வேலன் வருகிறுன். அவ்வாறு வேலன் வந்தால் அவன் அறிவிலான். ஆலின் நிழலை விரும்பிய செல்வன் மகன் வந்தால் அவன் அவ் வேலனிலும் அறிவிலான்!

அழகிய அணிகளை அணிந்த நல்லாய்! மலை நாடன் மார்பு தரும் விருப்ப நோயைத் தீர்க்க வேலன் வருகிறுன். கார்காலத்திலே மலரும் கடப்ப மலர் மாலையணிந்த எம் இறைவன் வருவானெனின், மலைநாடன் மார்புதரும் நோயைத் தீர்க்க வருகின்ற வேலனிலும் அறிவிலான்!]

வேலனுர் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னேடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தால்
மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே; 1

கயிலைநன் மலையிறை மகனை நின் மதிநுதல்
மயிலியன் மடவரன் மலையர்தம் மகளார்
செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயன்மண மொழியரு ளவர்மண மெனவே; 2

மலைமகள் மகனை நின் மதிநுதன் மடவரல்
குலைமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவ ரெனவே; 3

குறமக ளவளெம குலமக ளவளொடும்
அறுமுக வொருவநின் னடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே; 4

[வேலன் வந்து வெறியாடும் இடத்திலே நீல மயிலின் மேல் அழகிய அணியாள் வள்ளியுடனும் ஆலமர்ந்தோன் மகன் வருவான். வந்தால், பெரிய பெரிய மலையையுடைய வெற்பனுல் மணவணி பெற வேண்டுவோம். கயிலைமலை யிறைவன் மகனே! மலையிறைவன் மகனே! பிறை

நுதலையும் மயிலின் சாயலையும் இளமையையும் உடைய, மலை நாட்டவர் மகள் ஆகிய நின் காதலி வள்ளியின் அசோகின் தளிரையும் தாமரை மலரையும் போன்ற திருவடிகளைத் தொழுதோம். அயலார் மணத்தை ஒழித்து எங்காதலரே மணக்கும்படி அருள்புரிவாய்.

மலைமகளாகிய பார்வதி மகனே! நின் காதலியாகிய, பிறையனைய நுதலையும் இளமையையும் தொடர்மலை வாழ்வையும் உடைய குறவர் மகளாரின் திருவடியையும் உயர்ந்த நிலையையுடைய கடவுளாகிய நின் இணையடியையும் தொழுதேம். பலரும் அறியும் படியாக எம் காதலர் எம்மை மணம்புரிந்து கொள்ள அருள்புரிவாய்.

குறமகள் வள்ளி எம் குலமகள். அவளோடு கூடிய ஆறுமுக முடைய ஒப்பற்ற இறைவனே! நின் இணையடிகளைத் தொழுதோம். நீர்த்துறையிலே நின் திருவடிகள் இரண்டையும் தொட்டுப் பணிவோர் தம் காதல் மணத்தைப் பெறவும் பிறைமணம் விடவும் அருள் புரிவாய்.]

இவ்வாறு யாம் பாடியதை வேலிப்புறத்தே நின்று கேட்டருளியவனாக, மணமிகுமலர்க் கண்ணி யணிந்த மலைநாடன் வெளிவந்தான். அவன் முன் நான் சென்றேன். அவன் திருவடியைக் கையால் தொழுது நின்று நான் உரைத்ததைக் கேட்பாய் தோழி!

"கடப்ப மலரைச் சூடி, வேலேந்தி, இம் மடந்தைக் காக இவ் வூருக்கு வருவது (தகாது). ஏனெனில், ஆறு முகம் இல்லை! அழகிய மயில் இல்லை! குறமகள் இல்லை! செறிந்த பன்னிரு தோள் இல்லை! ஆகையால், இச் சிறு குடியோர் மடவோராதலின் தம்மைக் காக்கக் கடமை பூண்ட தெய்வமாக நின்னை நேரார்!"

இவ்வாறு இங்கே நம்மைப்பற்றி அலரெழுந்ததைக் குறிப்பாக யானுரைத்ததைக் கேட்டுப் புலர்ந்து வாடிய நெஞ்சத்துடன் திரும்பிப் போனான். அம் மலை நாட்டுத்

தலைவன் திருமணத்துக் குரிய முயற்சிகள் செய்வான் போலும்.

கண்ணகியைப் பரவுதல்

இனி, மாமதுரைக்குத் தன்முலையினாலே கேடிழைத்தவளும் பலரும் தொழும் பத்தினியுமான கண்ணகிக்கு அவள் காதற் கணவனை வானவராகிய தமரெல்லாம் கூடிக் காண்பித்துக் கொடுத்த அந்த ஒப்பற்ற காட்சியைப் பாடுவோம் நாம்.

பாடுவோம் வா! தோழி! யாம் பாடுவோம்! பாடுவோம் வா! தோழி! யாம் பாடுவோம்! அரசன் முறை தவறியதாற் கொடிமாடம் நிறைந்த கூடலைத் தீயால் எரித்தவளைப் போற்றி நாம் பாடுவோம்.-அவ்வாறு பாடும்போது நம் மாமலைநாட்டனுடைய மணவணியை வேண்டுவோம்.

"பெருமையுற்றுப் பத்தினிப் பெண்கள் வாழ்த்தி வணங்கும் அவள் அரவின் படமனைய அல்குலையுடைய ஒருத்தி நம் பசிய புனத்திலே கோயில் கொண்டவளே. அவள் கணவனை விண்ணோர்கள் அழைத்து வந்து காட்டியும் அவளைப் புகழ்தலை விடாராய் அந்த வானகவாழ்க்கையையுடைய அமரர் தொழுதேத்தும்படி காட்டில் நறிய வேங்கையின்கீழ் அக்காரிகை நின்றாள்! அவ்வாறு வேங்கையின்கீழ் நின்றவள் வானக வாழ்விலிருந்து மீட்சி அடையாள்! அத்தகையாளை நாம் ஏத்திப் பாடுவதால் இவ்வூரும் ஒருதகுதியைப் பெறுக! இவ்வூர் தகுதி யுடையதே! தகுதி யுடையதே! பொன் வளையணிந்த இவளை இவள் காதலன் மணப்பதைக் காணும் தகுதியுடையதே!"

இவ்வாறு பொருள் கொண்ட நிலையை அமைத்துப் பாடி நாம் ஆடும் குன்றக் குரவையை நம் காதலர் கண்டு மணம்புரிய வந்தார். இனிய மதுவையுண்டு அமையா வைகல்தொறும் அவர் வாழ்க! "வில் எழுதிய இமயத்தோடு கொல்லியாண்ட குடவர்கோ வாழியர்!"

---

25. காட்சிக் காதை

பேராற்றங் கரையிலே சேரமன்னன்

கரிய நீர்ப் பரப்பாகிய கடலை வேலியாகக் கொண்ட கடம்பை வீழ்த்தி, வானவரும் மயங்கும்படி இமயமலையிலே வில்லை எழுதிய வாளேந்திய சேரர் பெருமான் ஒருநாள், விளக்கமுற்ற நீராவி சூழ்ந்த வெள்ளிமாடத்திலே, அரசி வேண்மாளுடனும் இளங்கோவடிகளுடனும் அமர்ந்து, ஓய்வில்லாத முழவொலி போல அருவி ஒலிக்கும், முகில் தவழும் சோலைகளையுடைய மலைவளங் காண்போம் என எண்ணி முடிவு செய்தான். பின்னர், அரசி வேண்மாளுடனும் இளங்கோவடிகளும் அமைச்சரும் பிற ஆயமும் ஒன்று சேர்ந்து திரண்டு பரவிவர, வஞ்சியை விட்டுப் புறம் போந்தான்.

வளமிகும் கற்பக மலர்க்காவிலே அரம்பையருடன் விளையாட விரும்பிய வெற்றி வேலேந்திய இந்திரன் பொன் மலர்க்காவும் நீர்நிறைந்த ஆற்றுப்பரப்பும் அங்கேவிளங்கும் நீர்த்துருத்தியும் இளமரச் சோலையும் அரங்கும் பள்ளியிடமும் நூற்று நாற்பது யோசனைப் பரப்பில் ஒருங்கே அமைத்துக் கொண்டு, பெரிய மாண்புடைய களிற்றின் மீது வருவோன் போலப் பரிசனஞ்சூழ, களிற்றின் மீது வந்து கோங்கும் வேங்கையும் கொத்தாக மலரும் கொன்றையும் சுரபுன்னையும் திலகமும் நறிய வயிரமுடைய சந்தனமும் ஆகிய மலர்கள் உதிர்ந்த பரப்பிலே பெருகும் புனல் மறைந்து, மதுகரம் ஞிமிறு என்னும் வண்டினம் முரலத், திருமாலின்மார்பிலே ஆரத்தைப் போல, பெரிய மலையிலே குறுக்கிட்டுப் பெருகும் பேராற்றின் கரையிலே, வெள்ளத்தால் இடப்பட்ட மணன்மேட்டிலே விருப்பத்துடன் சேரன் இருந்தான்.

அப்போது, குன்றக் குரவையும், குறத்தியர் பாடலும், வெற்றியையுடைய செவ்வேளைப் பரவும்

வேலனுடைய பாட்டும், தினையைக் குற்றுவோர் பாடும் உலக்கைப் பாட்டும், தினைப் புனத்திலே குறமகளிர் கிளி யோட்டும் ஒலியும், தேனிறாலைக் கிண்டிய குறவர் ஓசையும் பறையென ஒலிக்கும் அருவியின் பயன்தரும் ஒலியும், புலியொடு போர் செயும் யானையின் பிளிறுதலும், மிக வுயரமான பரணின் மேலிருப்போன் எழுப்பும் பேரொலியும், படுகுழியிலே வீழ்ந்த யானையைக் கொணரும் பாகர் ஒலியும் சேரனுடைய படையொலியுடன் கலந்து மலை யெங்கும் ஆரவார மெழுந்தது.

வேடர்கள் காணிக்கை

இங்ஙனம் சேரன் செங்குட்டுவன் பேரியாற்றங் கரை யிலே வேண்மாளுடன் அமர்ந்து மலைவளம் நுகர்ந்து கொண்டிருக்கும்போது, அளவிட்டு முடிவுபோகாத அரிய கலன்களாகிய திரையைச் சுமந்து, வளம் பல நிறைந்த வஞ்சிமாநகரின் முற்றத்திலே சேரவரசனைக் காணும் செவ்விகிடையாமல் நிற்கும் பகைமன்னர் போல,

யானையின் வெண்மையான தந்தமும், அகிற் கட்டை களும், கவரிமான் மயிரும், தேன் குடங்களும், சந்தனக் குறடுகளும், சிந்துரக் கட்டிகளும், அஞ்சனக் குவையும், அழகிய அரிதாரமும், ஏலக் கொடியும், கரிய மிளகுக் கொடியும், கூவைக் கிழங்குப் பொடியும், கொழுவிய கொடியிலுள்ள கவலைக் கிழங்கும், தேங்காயும், இனிய மாங்கனியும், பச்சிலை மாலையும், பலாப் பழமும், வெள் ளுள்ளியும், கரும்பும், பூங்கொடியும், வளமிகு கமுகினி லிருந்து வெட்டி யெடுத்த செழுவிய பாக்குக் குலையும், வாழையிலிருந்து வெட்டிய பெரிய வாழைப் பழக் குலையும், ஆளிக் குட்டியும், சிங்கக் குட்டியும், வளைந்த கோடுடைய புலிக் குட்டியும், யானைக் கன்றும், குரங்கின் குட்டியும், வளைந்த அடியை யுடைய கரடிக் குட்டியும், மலையிலே விளையாடும் மலையாட்டுக் குட்டியும், இளமான் குட்டியும், கத்தூரிக் குட்டியும், குற்றமற்ற கீரிப்பிள்ளையும்,

தோகைமயிலும், புனுகு பூனைக் குட்டியும், காட்டுக் கோழியும், இனிய மொழி பேசும் கிளியும்,

ஆகிய இவற்றை மலைவாழ் மக்கள் சுமந்து வந்து சேரனை வணங்கினர்.

வேடர்கள் கூறியது

"அரசே! வாழ்க நின் வெற்றி! எழ்பிறப்பினும் அடியேம் யாங்கள். காட்டு வேங்கையின் கீழே ஓர் அழகியமாது-ஒருமுலை யிழந்தவள்–தனிமையாகிய துயரத்தை அடைந்து, வானவர் வாழ்த்தத் தன் கணவனுடன் கூடி, அவ்வானவருடன் வானகம் அடைந்தாள். அவளை நின் நாட்டிலே கண்டதாக நினைவிலோம். எந்நாட்டாளோ! யாருடைய மகளோ! பல நூறாயிரம் ஆண்டு வாழ்க!" என்று வணங்கினர்.

சாத்தனுர் கூறியது

அப்போது அங்கே சேரமன்னனைக் காணவந்து, கண்ட களிப்பினுலே மயங்கியிருந்த, அரசனிடம் பேரன்புடைய சாத்தனுர்,

"அசைவிலாத ஆற்றலுடைய மன்னனே! நான் ஒளிவீசும் வளையலணிந்த கண்ணகிக்கு நேர்ந்ததையெல்லாம் கூறக் கேள்" என்று தொடங்கி, அவர்களுடைய தீவினைப் பயன் கிடைத்தற்குக் காரணமான சிலம்பின் வாயிலாக அந்த அழகிய தொடியினளின் கணவனுக்கு நேர்ந்த கொலையும், வெற்றி பொருந்திய படைவேந்தன் முன்னர் மற்றைச் சிலம்பைக் கையிலேந்திச் சென்று சிறந்த அணியினள் கூறிய வழக்கும், அதனுலே வேந்தனுக்கு நேர்ந்ததும், தன் செவ்விய சிலம்பை எறிந்து, அரசியின் முன்னர் வஞ்சினம் கூறிய சாலப் பெருங் கற்புடையாள் 'அழகிய சில்லோதியே! என் கற்பினை அறிக' என்று வெளிவந்து, தன் இளமுலை முகத்தெழுந்த தீயினுலே மதுரைப் பழம்பதியாகிய பெருநகரை எரித்ததும் கூறினர்.

பின்னர், "சிங்கம் சுமந்த அணைமீது அமர்ந்திருந்த திருமகள் விழ்தற்குரிய மார்பினையுடைய பாண்டிய மன்னன் விளங்கும் கொத்தாக மலர்ந்த மலர்மாலை யுடையாளின் துயரைப் பொறுமல் மயங்கினுன் போலும் என்றெண்ணி, அரசியானவள் அவன் மலரடியை வருடிப் பார்த்தாள்; இறந்தான் என்றறிந்தாள். எனவே கண்ணகி கூறிய வீரமொழியைக் கேளாமலும் கலக்கம் கொள்ளாமலும், தனக்கு நேர்ந்த கொடிய துயரைப் பொறுக்க முடியாமலும், 'அரசன் சென்ற வழியே யானும் செல்லக் கடவேன்' என்று நினைத்தவளாய்த் தன் உயிரைக் கொண்டு அவன் உயிரைத் தேடுகின்றவள் போல அக்கோப்பெருந் தேவியும் அவனுடனே இறந்தாள். வெற்றி வேந்தன் முறை பிறழ்ந்த தன்மை இவ்வாறென்று அரசனுகிய நினக் குரைக்கவந்தவள் போலத், தன்னுடைய நாட்டிற்குக் கணவனைப் பிரிந்து தனியே செல்லாமல், நின்னுடைய நாட்டின்கண் அந் நங்கை அடைந்தனள். இவ்வுலகிலே நின் வீரம் பொருந்திய வென்றி வழிவழியாகப் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்க!" என்று கூறி முடித்தார்.

சேரனுடைய வருத்தம்

அதனைக் கேட்ட வேந்தர் வேந்தனுகிய சேரன் வருந்திக் கூறுகிருன்:

எங்களைப் போன்ற ஒரு வேந்தனுக்கு நேர்ந்த நெறி தவறினுன் என்ற இழிமொழி உலகினர் செவியிலே படுவதற்கு முன், உடலைவிட்டு உயிர் நீங்கிய செய்தி சென்று உறுக என்றற்கு, வெவ்வினையால் வளைக்கப்பட்ட கோலை அவனுடைய செல்லும் உயிர் நிமிர்த்துச் செங்கோலாக மாற்றியது. மழை வளம்பெறப் பெய்யாவிடின் அச்சம்! ஒருயிர்க்கு யாதானுமொன்றுல் தவறு நேர்ந்தால் மிகவும் பெரிய அச்சம்! குடிகளைக் காப்பாற்றினுலும், கொடுங்கோல் நேருமென்றஞ்சிக், குடிகளைக் காக்கும் இந்த நல்ல குடியிலே பிறத்தல் துன்பமே அன்றித் தொழத்தக்கது அன்று"

இவ்வாறு கண்ணகிக்கு நேர்ந்த துன்பத்தை ஆராய்ந் துரைத்த நன்னூலறிந்த சாத்தனார்க்கு நன்றாக விளங்க உரைத்த சேரன், தன் அரசி வேண்மாளை நோக்கித் தன் கணவன் உயிருடன் தன் உயிரையும் விடுத்த ஒப்பற்ற கோப்பெருந்தேவி, செற்றத்துடன் வந்த இக் கண்ணகி ஆகிய இருவரில், நல்ல நெற்றியையுடைய நீ வியக்கும் நலமுடையார் யார்?" என்று வினவினான்.

வேண்மாள் வேண்டுகோள்

அவன் மொழிகேட்ட அரசி வேண்மாள், "தன் காதலன் உற்ற துன்பத்தைக் காணமுடியாமல் அவனுடன் இறந்த அம்மாதரசி வானிலே பெருந்திருவடைக! அத்திறம் நிற்க! நம் பெருநாட்டினை வந்தடைந்த பத்தினிக் கடவுளைப் பரவுதல் வேண்டும்" என்று கூறினாள்.

அரசன் அவள் விருப்பத்திற் கிணங்கி, நூலறிந்த அறிஞராகிய அமைச்சர் முதலானோரை நோக்கினான்.

நூலறிபுலவர் கூற்று

அவர்கள், "குறையாத பழமையுடைய பொதிய மலையிலாவது, முன்னர் நம் வில்லைப் பொறித்த மிகப் பெரிய இமயத்திலாவது கற்கால் கொள்வது தெய்வத்திற் காகும். பின்னர்க் கங்கைப் பேராற்றிலாவது காவிரிப் புனலிலாவது செய்யும் நீர்ப்படை தகுதியுடையதாகும்" என்றனர்.

செங்குட்டுவன் நெடுமொழி

"பொதியிலாகிய மலையிலே கல்லைக் கொண்டு வந்து தொன்னீர்க் காவிரியிலே நீர்ப்புடை செய்தல். வீரமும் தகுதியுமுடைய நீண்ட வாளேந்திய எம் குடியிலே பிறந்தவர்கட்குச் சிறப்பினைத் தருஞ் செயலாகாது. புல்லிய மயிர்ச் சடை முடியையும் உலராத ஆடையையும் முந்நூலணிந்த மார்பையும் முத்தீயால் வரும் செல்வத்தையும் இருபிறப்பினையும் உடைய அந்தணரோடு, இளமையும்

பெருமையும் உடைய மாபெரும் பத்தினிக்குக் கடவுட் படிமம் அமைக்க ஒரு கல் தாரான் எனின், வழிவழியாக நின்று பயன் தராத தகுதியற்ற வாழ்வினை, அவ்வாழ்வி னின்றும் இறந்தோர் இறவாதோர்க்குக் காட்டிய யாக்கை நிலையாத காஞ்சியும், தன் பழங்குடியிலே பிறந்த இளங் குமரியாகிய உமையை மதிமுடித்த இறைவனுக்குக் கொடுத்த மகட்பாற் காஞ்சியும், தென் திசையிலுள்ள என் வஞ்சியுடன் வடதிசை எதிராக நின்று தடுத்த நீண்ட பெருங் காஞ்சியும், நிலவின் தண்கதிர் படிந்த நீண்ட பெரிய முடியிலே, மலர்ந்த மந்தார மாலையுடன், அங்கே அதன் அருகிலே மலர்ந்த வேங்கை மலராலே தொடுத்த விளங்கும் வெற்றிக்குரிய மாலையை உயர்வாக அந்த இமய மன்னன் அணிதலையும் இப்போது காண்பேன்''

என்று வீரமொழி விளம்பினன் செங்குட்டுவ மன் னன். மேலும், "குடைநாட் கோளும் கொற்றவஞ்சியும் நெடிய மாராயம் நிலைபெற்ற வஞ்சியும், வென்றி பெற் றோர் விளக்கம் உற்ற சிறந்த வஞ்சியும், பிற்படாத சிறப் பினை யுடைய பெருஞ்சோற்று நிலையும், குறைவற்ற சிறப் பினையுடைய கொற்றவள்ளையும், இடையே முறிவு பெறாத பெருமைமிக்க பனத் தோட்டுடன், மேற்கோளை யுடைய படைகள் விளங்கத் தானத்தாலே அணிவித்து, அழகிய வஞ்சி நகரின் புறத்திலே, என் பகைவரைப் பொருத தொழிற் சிறப்புடைய வாளுக்கு மாலை சூட்டு வோம்'' என்று கூறினன்.

வில்லவன் கோதை விளம்புதல்

வில்லவன் கோதை அம்மொழி கேட்டு, "நும்வெற்றி பல்லாண்டு வாழ்க! நும்மைப் போன்ற அரசர் நும்முடன் மாறுபட்டுக் கொங்கரது போர்க் களத்திலே போர் செய்த போது, புலிக்கொடியையும் மீனக்கொடியையும் நுமக்குக் காணிக்கையாகத் தந்து ஓடினர். அச்செயல்கள் திசைக் களிறுகளின் காதுகளிலே கேட்கப்பட்டன! கொங்கண ரும் கலிங்கரும் மாறுபட்ட கருநாடரும் வங்காளரும் கங்கரும் வேலேந்திய பல கட்டியரும் வட ஆரியருடன்

கூடி எதிர்த்தபோது அவர்களுடன் தமிழ்ப்படை போர் செய்த போது, நும் மதக்களிறு செய்த போர்க்கள வேட்டை என் கண்களினின்றும் பிரியாது! கங்கைப் பேராற்றிலே விரைந்து செல்லும் வெள்ளத்திலே எம் அரசர் பெருமாட்டியின் பத்தினிக்கல்லை நீர்ப்படை செய்தபோது, ஆரிய வேந்தர் ஆயிரவர்க்கு எதிராக நீர் தனியே நின்று பொருத போர்க்கோலத்தைக் கடுந் தொழிலையுடைய கூற்றுவனும் தன் கண்ணை விழித்துப் பார்த்தான் அல்லனோ? இனி, ஒல்லென ஒலிக்கும் கடல் சூழ்ந்த இந்நிலம் முழுவதையும் தமிழ்நாடாக்க விரும்பி, இமயத்தே கற்கால் கொள்ளுதலாகிய இதனை நீர் கருதினால், நும்முடன் எதிர்ப்பவர் இவ்வுலகிலே ஒருவரும் இலர்!'' என்று செங்குட்டுவன் திறனைப் பாராட்டினான்.

பிறகு, "எம் அரசர் பெருமான் பேரிமயத்திலே கற்புடைய தெய்வத்திற்குப் படிமம் அமைக்க ஒரு கல் பெறுதலை விரும்பியே ஆகையால், இதனைக் குறிப்பிட்டு வடநாட்டு மன்னர்க்கெல்லாம், தென்னாடாகிய வளமிக்க தமிழ்நாட்டு வில்லுங் கயலும் புலியும் என்னும் இவற்றை இலச்சினையாகக் கொண்ட திருமுகங்களை இப்போதே வரைந்தனுப்புக'' என்றான்.

அழும்பில்வேள் விளம்புதல்

அதனைச் செவியேற்ற அழும்பில் வேள் என்னும் அமைச்சன் இந்தத் தண்ணிய நாவலம் பொழிலிலே உள்ள பகைவரின் ஒற்றர்கள் நம் காவலையுடைய வஞ்சிமா நகரின் வாயிலிலே நீங்காது நிற்பன. ஆதலால், கச்சணிந்த யானைகளையுடைய அப்பகை வேந்தரின் ஒற்றரே அவர்களுடைய செவிக்கு அறிவித்து விடுவர். ஆகையால், வடதிசைச் செலவு குறித்து நம் நகரிலே பறையறைவித்தலே போதும்'' என்றுரைத்தான்.

வஞ்சி திரும்பினர்

அக்கருத்தைத் தடுத்தற்கரிய படைஞரையுடைய சேர மன்னன் ஏற்றான். பின்னர் யாவரும் பகைவர் தந்த திறையுடன் சிறப்புற்ற வஞ்சியை யடைந்தனர்.

பறை யறைதல்

"எம் அரசர் பெருந்தகையான சேரமன்னன் வாழ்க! பல்லாண்டு பல்லாண்டாக நிலவுலகு புரந்திடுக! முன்னரே நம் அரசர் பெருமானுடைய வில்லெழுதிய கொடியைத் தன்னிடத்தே ஏற்றுக்கொண்ட சாலப்பெரிய இமயமலையிலே, பத்தினிக் கடவுளுக்கு ஒரு கல்லைக் கொண்டுவரச் செல்கின்றனர் நம் அரசர். ஆகையால் வட திசையிலே வாழும் வேந்தர் யாவரும் இடற்குரிய திறையுடன் வந்து எதிர் கொள்க. அவ்வாறு கொள்ளீராயின், கடலிலே கடம்பை வீழ்த்திய கடிய போர்ப் புகழையும், இமயமலைமிசை வில்லைப் பொருத்திய மிகப் பெரிய மொழியையும் கேட்டு வாழ்க! கேளீராயின், நும் தோளைத் தழுவி வாழ்க்கைத் துணை புரியும் மகளிரைப் பிரிந்து துறவுகொண்டு வாழ்மின்! நீண்ட கழலையணிந்த மன்னனின் அழகிய திருமேனி வாழ்க! படைத்திரள் வாழ்க!"

இவ்வாறு, பறையினை அரசனுடைய பட்டத்து யானையின் பிடரில் ஏற்றி வள்ளுவன் அறைந்ததனால் எழுந்த ஒலி அழகிய நகரமெங்கும் மிகுதியாக ஒலித்தது.

— —

26. கால்கோட் காதை

செங்குட்டுவன் வஞ்சினம்

இவ்வாறு பறையறைவித்த பிறகு, சேரன் செங்குட்டுவன் தன் முன்னோர் வீற்றிருந்து அரசு புரிந்த அரியணையிலே அமர்ந்தான். அப்பொழுது ஆசானும் பெரிய நிமித்திகனும் அரிய ஆற்றலுடைய அமைச்சர்களும் படைத்தலைவரும் வந்துகூடி, 'அரசர்க்கரசன் வாழ்க;' என்று வாழ்த்தி அவன் நோக்குந்திசையில் இருந்து அவன் மொழிகளை முறைமை வழுவாது கேட்டிருந்தனர்.

அப்போது, தான் வரும்படி பணித்திருந்த படைத்தலைவரையெல்லாம் பார்த்து, வெற்றிவேந்தன் கூறுகிறான்: "இமயத்திலிருந்து வந்த தாபதர்கள் ஈங்கு எமக்கு உணர்த்திய, நிறைவுறாத உயிர்வாழ்வினையுடைய வடவேந்தர் ஒரு விருந்திலே கூறிய 'தென்தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து-மின்தவழும் இமய நெற்றியில் விளங்கு வில் புலி கயல் பொறித்த நாள்-எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்' என்ற வாய்மொழி, எம்மைப் பற்றிக் கூறியதாயின், அது எம்மைப்போன்ற சோழபாண்டியர்க்கும் இகழ்ச்சியைத் தரும். ஆகையால், வடதிசையிலே உள்ள அவ்வேந்தரின், மணிமுடியணிந்த தலையிலே பத்தினித் தெய்வத்திற்குரிய ஒரு கல்லை ஏற்றிக்கொண்டு வருவோம். அங்ஙனம் இன்றி எம் வாய்வாள் வறிதே திரும்பும் எனின், நெருங்கிய வீரக்கழல் அணிந்த கொடிய போர்க்கோலத்துடன் எதிர்த்த பகை மன்னனை நடுங்கச் செய்யாது, நலம்பல நிறைந்த நாட்டிலே உள்ள குடிகளை நடுங்கச் செய்யும் கொடுங்கோலன் ஆவேன்"

ஆசான் ஆறுதல்மொழி

"ஆத்திமலரால் புனைந்த மாலையையும் அலர்ந்த வேப்பந் தாரினையும் சிறப்புற்ற மணிமுடியிலே அணிந்த

சோழ பாண்டியரையன்றி, அச்சமுற்றோரை ஆதரிக்கும் அடுதல் மிக்க போர் வேந்தனாகிய நின் வஞ்சின மொழி கட்கு எதிராகும் அரசரும் உளரோ? எனவே, இமைய வரம்பனாகிய நின்னை அவர்கள் இகழ்ந்திரார்! சோழனை யும் பாண்டியனையுமே இகழ்ந்திருப்பர். ஆகையால், நின் செற்றத்தைத் தணித்துக் கொள்க!" என்று ஆறுதல் கூறினான்.

பெருங்கணி கூறியது

அரசனுடைய வஞ்சினத்தைக் கேட்ட ஆசான் :

பின்னர், இராசி பன்னிரண்டினும் உள்ள கிரக நிலையை நன்கு பயின்று, திதி முதலிய ஐந்து கேள்வியும் அமையப் பெற்ற பெருங்கணி எழுந்து, "கொடுந்திறல் மிக்க மன்னனே! நின் கொற்றம் வாழ்க! பெருநில வேந்தர் எல்லோரும் நின் அழகிய சேவடி மலரிலே வணங் கும் நல்ல வேளை இது. ஆகையால், நீ விரும்பிய திசையின் மேற் போருக்கு எழுவாயாக! என்று கூறி வணங்கினான்.

வாளும் குடையும் நாட்கொள்ளுதல்

அதனைப் பின்வாங்காத வென்றியையுடைய மன்னன் கேட்டு, 'நம் வாளையும் குடையையும் வடக்கு நோக்கிப் புறப்படச் செய்க!" என்று பணித்தான்.

அரசன் ஆணைப்படியே, வலிய நிலத்தினைச் சுமந்த பாம்பின் தலை நடுங்கும்படி போர்க்கானம் பாடுவோரின் ஆரவாரத்துடன் போர்முரசம் எழுந்து முழங்கியது. இருள் இல்லாமல் நீக்கிய ஒழுங்காகிய மணிவிளக்கின் ஒளியிலே கொடிகள் விரவி நெருங்கிய, பகைவர்க்கு நரகத் துன்பத்தைப் போலும் துன்பத்தைச் செய்யும் தானை களுடன், ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும், விரையும் பரிகளையும் யானைகளையும் உடைய சேரமன்னனுக்குரிய சிறப்புடைய புரோகிதரும் கணிகளும் அறங்கூறுத நாவினரும் சேனாதிபதிகளும், 'மண் திணிந்த ஞாலத்தும்

ஆளும் சேரமன்னன் வாழ்க!' என வாழ்த்திப், பிண்டித்து வைத்த கவளத்தையுண்ணும் பெரிய பட்டக்களிற்றின் பிடரிலே மறம் மிகுந்த வாளையும் மாலை மிகுந்த வெண் குடையையும் வைத்து, மதிலின் புறத்திலுள்ள கோட்டத் தின் மதிலுள்ளே நிறுத்திக் குற்றமற்ற வஞ்சி மாலையைப் பனம்பூ மாலையுடன் தொடுத்தணியும் சேரனது விளங்கிய அவையை வந்தடைந்தனர்.

அரசன், பிறகு அரிய படைக்கலத்தை ஏந்திய வீரர்க்கும் போரை விரும்பிச் செருக்கிய பெரும்படைத் தலைவருக்கும் பெருஞ்சோறாகிய விருந்தினை அளித்தான்.

அரசன் புறப்படல்

பின்னர்ப் பூவா வஞ்சி வேந்தனாகிய, கூரிய வாளேந் திய அரசர் பெருந்தகை பூத்த வஞ்சியைத் தன் மணிமுடி யிலே சூடினான். கோயில் வாயிலிலே, பிறநாட்டு மன்னர் கள் வைகறையிலே இடும் திறையை அழைக்கும் காலை முரசம் முழங்கினவுடன், தண்கதிர்ப் பிறையை முடித்த நீண்ட பெரிய சடைமுடியையும் உலகினைத் தன்னிடத்தே அமைத்திருக்கிற உருவத்தினையும் உடைய சிவபெருமான் திருவடிகளை வெற்றி பொருந்திய வஞ்சிமாலையுடன் அணிந்து, ஒருவருக்கும் வணங்காத தலையைத் தாழ்த்தி வணங்கி வலம் வந்து, அந்தணர் ஏந்தி வந்த ஆகுதியின் நறிய புகை தேன் மிகுந்த மலர்மாலையின் நல்ல இடத்தை வருத்த, மதத்தினாற் செருக்கிய களிற்றின் பிடரிலே ஏறினன். அப்போது, 'மேலைத் திசை வேந்தனாகிய குட்டுவன் வெற்றி பெறுக!' என்று வாழ்த்தித், திரு வனந்தபுரத்திலே ஆடகமாடத்தில் அறிதுயில் கொண்ட நெடுமாலின் சேடத்தைக் கொண்டுவந்து சிலர் துதித்தனர். சேரமன்னன் கங்கையைப் பொதிந்த சிவந்த சடையை யுடைய சிவபெருமானின் அழகிய திருவடிகளைத் தன் மணிமுடியிலே வைத்திருந்ததனால், திருமாலின் சேடத்தை வாங்கித் தன் அழகிய மணித்தோளிலே தாங்கித் தகுதி பெறச் சென்றான்.

செல்லும்போது, நாடக மகளிர் ஆடும் அரங்குகள் எங்கும் கூப்பிய கையுடன் விளங்கி, "வென்றி வேந்தே! வாகையும் தும்பையும் மணிபோலும் இதழையுடைய பனம்பூவுடனே தொடுக்கப்பெற்று, முகபடாம் அணிந்த நின் களிற்றின் உயர்ந்த முகத்திலே ஓங்கித் தோன்ற, வெண்கொற்றக் குடையின் நிழலில் எம்முடைய வெள் வளைகளைக் கவரும்-எம் கண்கள் மகிழ்ச்சியாலே மதர்க்கும் காட்சியை உடையையாகுக!" என்று வாழ்த்தினர்.

சூதரும் மாகதரும் வைதானிகரும் 'நல்ல வெற்றி விளங்குக!' என்று வாழ்த்தினர். யானை மறவரும் குதிரை வீரரும் கூரிய வாட்படை மறவரும் வாளின் வென்றியை வாழ்த்தினர். அவுணர் மீது போர் தொடுக் கத் தன் பதியினின்றும் நீங்கும் வானவர் தலைவனான இந்திரன் போல வஞ்சிப் பதியினின்றும் சேரன் நீங்கினான்.

நீலகிரியின் புறத்தே—

சேனைத்தலைவரும் முதன்மையான தூசிப்படையும் வெண்திரைகளையுடைய கடலின் ஓரம் நிறைந்து சென்றன. அச்செலவினாலே மலையின் முதுகு நெளியவும் காடு நாடெல்லாம் வழியுண்டாகவும் ஆடுகின்ற குதிரைகள் பூட்டிய தேர்ப்படையுடன் சென்ற சேரர் பெருமான் நீல கிரியின் பெரும்புறத்தே தங்கினான். வென்றி பொருந்திய யானைப்படையும் குதிரைப்படையும் தேர்ப்படையும் பெருமைமிக்க காலாட்படையும் விலகாமற் காத்திருக்க அரிய காவலையுடைய படைவீட்டில், நடுநிலையை விரும் பும் சேரன் தான் ஆளும் நிலமகளுக்குத் தன் திருவடியை அளித்து, அரிய திறலையுடைய வீரர்கள் தன் அடி யீட்டை வாழ்த்தப் பெருமைபொருந்திய அமளியிலே அமர்ந்தான்.

அப்போது, உலாவும் படைவீரர்களின் முழக்கத்தா லுண்டான பேரொலியிசைத்தலால், விண்ணிலே இயங் கும் முனிவர்கள், பெருநிலங்காக்கும் இந்திரனைப்போன்ற

செல்வம் பெற்ற சேரனைக் காண்போம் என்று, வானி லிருந்து இறங்கி அரசன் வீற்றிருக்கும் அவையிலே மின் னொளியை மயக்கும் மேனியொளியுடன் தோன்றினர். மன்னவன் எழுந்து வணங்கி நின்றான். "செஞ்சடை வானவனான சிவபெருமான் அருளாலே வஞ்சிநாடு விளங் கத் தோன்றிய சேரனே! கேட்பாயாக! யாம் பொதிய மலையை நாடிச் செல்கிறோம்! நீ சாலவும் பெருமைபொருந் திய இமயமலையை நாடிச் செல்கின்றாய். ஆதலால் அங்கே வாழும் அரிய மறைகளை உணர்ந்த அந்தணரை நலிவின் றிக் காத்தல் பெருநிலமாளும் அரசனாகிய உனக்குக் கடமையாகும்," என்று கூறி அரசனை வாழ்த்திச் சென்ற னர்.

பின்னர்க், கொங்கண நாட்டுக் கூத்தரும் கருநடரும் தம் மரபிற்கு ஒதப்பட்ட தகுதிமிக்க ஒப்பனையுடன், இருள் போலக் கரிய நெருங்கிய சுருண்ட சிகையும் கலப்புறப் பரப்பிய இலைமாலையும் உடையராய், மணி வடங்களைச் சுமந்து உயர்ந்த அழகிய இளமுலைகளும் கயலனைய விழிகளும்கொண்ட மங்கையருடன், "கடல் சூழ்ந்த நிலவுலகையாளும் சேரர் பெருமான் வாழ்க!" என வாழ்த்திக் கொண்டு வந்தனர். அவர்கள், "கருங்குயில் பாடவும் பல இன வண்டுகள் யாழொலியைச் செய்ய, அரும்புகள் அலரும் காலமாகிய இளவேனில் வந்தது! நம் காதலரோ இன்னும் வந்திலர்" என்னும் பெருஞ் சிறப்பினையுடைய வரிப்பாட்டுடன் தோன்றினர்.

கரிய, கயலனைய பெருங்கண்களையும் திரண்ட வளை யல்களையும் உடைய மாதருடன் குடகர்கள், "திரண்ட வளையணிந்த மாதே! ஒப்பனை செய்து கொள்! காலத் தைப் பார்! கடிதாக இடித்து முழங்கிக் கொண்டு கார்ப் பருவம் வந்தது! நம் காதலர் ஏறிச் சென்ற தேர் செய் வினை முடிந்து திரும்பி விட்டது!" என்று பாடும் குரவைப் பாட்டுடன் தோன்றினர்.

ஏத்திப்பாடும் ஓவர்கள், நிலைபெற்ற ஒப்பனையை யுடைய தம் மகளிருடன் மகிழ்ச்சி மிகுந்து, "வாள்வினை

வென்றியுற முடித்து வீரவாள் வேந்தனுகிய சேரர் பெருமான் ஊழியூழியாக வாழ்வானுக!" என்று வாழ்த்திக் கொண்டு தோன்றினர்.

இவர்கள் எல்லோரும் ஆடலாசிரியன் காட்டிய முறைப்படி மன்னனைப் புகழ்ந்து பாடி ஆடினர். அவர்களுக்கு அவர்கள் இதுவரை அறியாத பேரணி கலன்களை நல்கி, அரசர் குழுவினர் நடுங்கும் வேற்படை வேந்தன் இருந்தபோது, ஆடல் மகளிர் நூற்றிருவரும், இசைகூடும் குயிலுவக் கருவியாளர் இருநூற்றெண்மரும் தொண்ணூற்ருறு வகையான சமயசாத்திரத் துறையிலே கற்றுத் தெளிந்த நகையைத் தரும் வேழம்பர் நூற்றுவரும், தாமரைஅரும்பு போலும் கொடிஞ்சியை யுடைய பெரிய தேர்கள் நூறும், கடுமையும் மதக்களிப்பும் உடைய யானை ஐந்நூறும், கொய்யப்பட்ட பிடரி மயிரினை யுடைய குதிரைகள் பதினுயிரமும், பிறரெவரும் அறியப்படாத வடநாட்டு வளம்பொதிந்து சரக்கின் பெயர் அளவு முதலியன பொறிக்கப்பட்ட பொதிகளைச் சுமந்த அணிமிகும் வண்டிகள் இருபதினுயிரமும், சஞ்சயனைத் தலைவனுகக் கொண்டவர்களும் அரசனுற் பெற்ற தலைப்பாகை யுடையவர்களும் ஆன சஞ்சய முதல்வர் ஆயிரவரும் வாயிலில் வந்து நின்றனர். வாயிற் காவலர் இவர்கள் வந்திருப்பதை அரசனுக்குத் தெரிவித்தனர்.

'நாடக மகளிரும் சிறப்புடைய பிறரும் குயிலுவரும் சஞ்சயனுடன் வருக!' என அரசன் பணித்தான். அவ்வாறே, சேரர் பெருமானுடைய மலர்மகள் விளங்கும் அவையின்கண் சஞ்சயன் வந்து வணங்கிப் பலவாருகப் போற்றி, அரசன் ஆணைப்படி வந்த முற்கூறிய நாடக மகளிர் நூற்றிருவரையும் சிறந்த தொழில் வல்லாரையும் வகை பெறக் காட்டி, "செங்கோல் வேந்தே! வேற்றுமையின்றி நின்னோடு நட்புக் கொண்ட நூற்றுவர் கன்னரும், 'சேரர் பெருமான் வடதிசை நோக்கிப் பெயர்வது தெய்வம் அமைக்க ஒரு கற்காண்

டற்கே எனின், உயர்ந்த இமயத்திலே கற்கால் கொண்டு, பெருகிவரும் நீர்ப்பரப்பையுடைய கங்கையிலே அதனை நீர்ப்படைசெய்து, சேரன் வஞ்சியின்கண் கொண்டு வந்துதரும் ஆற்றலுடையேம்' என்று மொழிந்தனர்'' என்று கூறி, 'கடல்சூழ்ந்த உலகைக் காக்கும் வேந்தே! வாழ்க' என வாழ்த்தினர்.

பகைத்த வலிமைமிக்க வேல்வேந்தரின் சிறந்த உயிரைப் பருகும் கடலனைய பெரும் படையை யுடைய சேரமன்னன் கூறுகிறான் :

''பால குமரன் மக்களாகிய கனகனும் விசயனும் நாவினைக் காவாதவராய், ஒரு விருந்திலே, அங்கு வந்த மன்னர்களுடன் கூடி அரிய தமிழரின் ஆற்றலை யறியாமற் பேசினரென்று கொண்டு, கூற்றுவனை அழைத்துக்கொண்டு இச் சேனை செல்கிறது. இதனை நூற்றுவர் கன்னர்க்குக் கூறி, ஆங்கே கங்கைப் பேராற்றைக் கடத்தற்கு வேண்டுவனவாகிய மிகுதி ஓடங்களை அமைத்திடுக!''

இவ்வுரை கொண்டு சஞ்சயன் சென்றான்.

பின்னர், மொழியாற்றல் மிக்க கஞ்சுகமாக்கள் ஆயிரவர் சந்தனக் குவியலும் நீர்மைதங்கிய முத்துமாகப் பாண்டியர் இட்டதிறையுடன் கொண்டு வந்தனர். திருமுகம் எழுதுவோர் மாநிலங் காவலனாகிய மன்னவனது இலச்சினையிட்ட திருமுகத்தினை அம்மன்னவர்க்குக் கொடுத்தனர். அவர்கள் வாங்கிச் சென்றனர்.

பகைவர் நாட்டிற் பாசறையில்

பின்னர், நிலைபெற்ற கடல்சூழ்ந்த உலகினையாளும் செங்குட்டுவன், பெருமைமிக்க நாட்டினையாளும் வேந்தரெல்லோரும் தம் மேம்பாட்டை விளம்பி வாழ்த்தப் பாடி வீடாகிய இருக்கையினின்றும் புறப்பட்டுச் சென்று, நூற்றுவர் கன்னரிடம் பெற்ற மரக்கலத் திரள்களாலே கங்கைப் பேராற்றின் வடகரையை அடைந்தான்.

அங்கே, நூற்றுவர் கன்னர் சேரமன்னனை எதிர் கொண்டழைத்துச் சென்றனர். அவர்களுடன் அவர் நாட்டினைக் கடந்து, கடலை வேலியாகக் கொண்ட வட நாட்டினை அடைந்து, தடுத்தற்கரிய படைவீரர்களுடன் பாசறையிலே தங்கினான்.

போர்

அப்போது, உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன் சித்திரன் சிங்கன் தனுத்திரன் சிவேதன் என்னும் வடதிசை வேந்தரெல்லோரும் தென்தமிழின் ஆற்றலை யாம் காண்போம் என்று கனகவிசயருடன் நட்புடையவராய்க் கூடிக்கொண்டு, நிலவுலகைச் சுருக்கிப் பெருகிய சேனைகளுடன் போருக் கெழுந்தனர்.

இவர்கள் நிலையுணர்ந்த சேரன், உணவு வேண்டி வேட்டைக்கெழுந்த சிங்கம், பெருங் கூட்டமாகிய யானைகளைக் கண்டு ஊக்கம் மிகுந்து அவற்றின் மேற் பாய்ந்தாற்போல, வேற் படையினையுடைய பல அரசர்களின் எதிரூன்றிய படையுடன் போர் புரிய எழுந்தான். ஞாயிற்றின் கதிர்களை மறைத்த துகிற் கொடிகளாகிய பந்தரில், செப்பஞ் செய்து எடுத்த தோலினாலே மூடப் பெற்ற கொடும்பறையும், வெண்மையான சங்கும், நீண்ட ஊதுகொம்பும், இடிபோலும் ஒலியையுடைய முழவும், இழுமென்னும் ஓசையையுடைய வெண்கலத் தாளமும், உயிர்ப்பலியுண்ணும், இடியென முழங்கும் பேரொலியுடைய மயிர்க்கண் முரசும் திசைகள் அதிர முழங்கின.

வில்லினைத் தோளிற் கொண்ட வீரரும், போர்புரியும் வேலினைக் கையிற்கொண்ட வீரரும், கரிய கிடுகினை வாளுடன் ஏந்திய வீரரும், விரைந்து செல்லும் தேரினையூரும் வீரரும், வெள்ளிய கொம்புகளையுடைய யானையூரும் மறவரும், விரைந்த செலவினையுடைய குதிரை வீரரும், ஆகிய இவர்களுடைய நடையினால், நிலவுலகின் கண்ணை மூடிய இந்தப் பெரிய நிலத்திலிருந் தெழுந்த புழுதி, போர்க்களத்தை அடைந்து யானைகளுக்குக்

கட்டின. கவிழ்ந்த மணிகளின் நாவும் விளங்கும் கொடியுடன் கட்டிய மிக்க ஒலியை யுடைய சங்குகளின் வாயும் அசையும் தொழில் ஒழிந்து அவற்றினுள்ளே நிறைந்தது.

தூசிப்படையும் தூசிப்படையும் ஒன்றோடொன்று நெருங்கிப் போர்புரிந்தன. அப்போது, தோளும் தலையும் துணிபட்டு வெவ்வேருகிய, வில்வீரர்களின் உடற் சுமையாகிய குன்றுகளில், வெட்டுண்ட பிணத்தால் இடறப்பட்ட தலையற்ற உடலினையுடைய கவந்தங்கள், பறைபோன்ற பெரிய கண்களையுடைய பேய்மகளின் தாளத்திற்கிசைய ஆடின. பிணங்களை இழுத்துச் செல்லும் நிணம் பொருந்திய குருதியாற்றிலே தன் கணத்துடன் கூடிய பேய்மகள் கூந்தலைத் தாழவிட்டு ஆடினுள். போரில் வல்லமைபெற்ற தேர்ப்படைகளையுடைய வடநாட்டு மன்னரின் கொடிய படைவீரர்களைப் பெரிய தேரின் மொட்டுக்களும் கொடிய களிறுகளின் பிடரும் விரைந்துசெல்லும் குதிரைகளின் முதுகும் பாழ்படுமாறு கொன்று களத்திலே குவித்து, எருமையாகிய ஊர்தியை யுடைய கூற்றுவன் உயிர்த் தொகுதிகளை ஒரு பகல் அளவிலேயே உண்பான் என்பதனை, ஆரியவேந்தர் தம் போர்க்களத்திலே அறியும்படி கொன்று குவித்த வீரக்கழல் அணிந்த சேரமன்னவன் பனம் பூவினுடன் தொடுக்கப்பட்ட பருவமுடைய தும்பையைத் தன் உயர்ந்த பெரிய முடியிலே சிறப்புற மிலைந்தான்.

பின்னர், வாயாகிய வாள்வீரத்தைத் துணையாய்க் கொண்டு வளமிகுந் தமிழ் மன்னரை இகழ்ந்த, காய்ச்சிய வேலேந்திய கனகனும் விசயனும் தம்முடன் துணையாக வந்த, விரைந்த செலவினையுடைய குதிரைகள் பூட்டிய தேர்வல்லார் ஐம்பத்திருவருடனும் செங்குட்டுவனுடைய சீற்றமாகிய வலையிலே அகப்பட்டனர். தோல்வி உறுதியென அறிந்தவுடன் உயிர்தப்ப உறுதி கொண்டு சடையும் காவியுடையும் சாம்பற் பூச்சுமுடைய துறவிகளாயும், மணையும் மயிற் பீலியுமேந்திப் பெரிய

நோன்பினையுடைய சமணராயும், பாடும் பாட்டும் பல இசைக் கருவிகளை அடக்கிச் சுருங்கிய பையை இட்ட தோளும் உடைய கூத்தராகியும், தாம் ஏந்தியிருந்த வாட் படைகளை ஆங்காங்கே எறிந்துவிட்டுத், தாம் அறிந்த வாறு கொண்ட விச்சைக்கோல முடையவராய் வேண்டு மிடம் நோக்கி விரைந்து சென்றனர்.

கழுத்திலே கச்சையணிந்த யானைகளையுடைய மன்னர்கள் நடுங்கும்படி, கோடுகளையுடைய களிறுகளை எருதாகப் பூட்டி, வாளே உழவுக் கோலாக, ஆளாகிய போரை இறக்கிக் கடா விட்ட வாளேருழவனுன செங்குட்டுவனுடைய போர்க்களத்தை வாழ்த்தி, வீரத்தொடியணிந்த நீண்ட கைகளைத் தூங்கும் வண்ணம் தூக்கி, முடியணிந்த கரியதலையை முற்பட ஏந்திய வண்ணம், பாற்கடலின் வயிற்றைக் கலக்கியபோது எழுந்த வானவர் தானவர் போரும், கடலை அகழியாக வுடைய இலங்கையிலே நடந்த இராமராவணப் போரும், கடல் வண்ணனுன கண்ணன் தேரூர்ந்து நடத்திய பாரதப் போரும் பாடிப் பெரும் புகழையுடைய சேரமன்னனை முன் தேர்க்குரவையிலே வாழ்த்திப் பிறகு பின் தேர்க்குரவையிலே பேய்கள் ஆடின. அப்போர்க்களத்திலே முடிசூடிய தலையாகிய அடுப்பிலே, யானையின் தலையாகிய தாழியில், வீரத்தொடி யணிந்த தோளாகிய துடுப்பினுலே துழாவிச் சமைக்கப் பட்ட ஊனுகிய சோற்றை, மறம் பொருந்திய பேயாகிய மடையன் பதமறிந்து ஊட்டச் சிறந்த உணவினை உண்ட பேய்க் கூட்டங்கள், 'முறை தவருத வென்றியினுலே அறக்களஞ் செய்தோன் பல்லாண்டு வாழ்க!' என்று வாழ்த்தின.

போருக்குப் பின்

இவ்வாறு போர்க்கள வினையை முடித்த தப்பாத வாளையுடைய செங்குட்டுவன், "வடதிசையின் கண்ணே மறையைப் போற்றிவாழும் அந்தணருடைய முத்தீயினை அவியாமல் ஓம்பும் பேரருள் வாழ்வினைக் குறிக்கொண்டு

காப்பீராக!" என்று தூதுவர்க்குரைத்தான். பின்னர், வில்லவன் கோதையுடன் சேர்ந்து போரை வென்று முடித்த பல வேற்படைஞரைச் செங்குட்டுவன் ஏவிப் பொற்கோட்டினையுடைய இமயத்திலே ஒப்பற்ற பத்தினிக் கடவுட்குக் கற்கால் கொண்டான்.

— —

27. நீர்ப்படைக் காதை

வடக்கிலுள்ள பேரிமயத்திலே, வானம் வழங்கும் சிறப்பினையுடைய பத்தினிக் கடவுளுக்குக் கற்கால் கொண்ட பிறகு, அதனைச் சினவேலாண்மையையும் கொடிய போர்க்கோலத்தையும் கொண்ட கனகவிசயரின் ஒளிபொருந்திய மணிமுடியிலே ஏற்றி,

துன்பந் தரும் கொலைத்தொழிலிலே முதிர்ந்த கூற்றுவனுடைய தொழில் மிகுமாறு உயிர்த்திரளை உண்ட போர்கள்—வானவர் தானவர் போர் பதினெட்டாண்டினும், இராம இராவணப் போர் பதினெட்டுத் திங்களிலும், பாரதப் போர் பதினெட்டு நாளிலும் செங்குட்டுவன் கனகவிசயருடன் செய்த போர் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தன என்று—யாண்டும் திங்களும் நாளும் நாழிகையும் ஆகக் கடல் சூழ்ந்த இவ்வுலகம் ஒன்று சேர்ந்து எண்ணும்படி,

வீரக்கழலணிந்த தன்னுடைய தென்தமிழாற்றலை அறியாமல் மலைந்த ஆரியவேந்தரைப் பெரும்படை குவிந்த போர்க்களத்திலே ஒரு பகலிலே உயிர்களைக் கொன்று குவித்து வென்ற செங்குட்டுவன் தன் வேற்படைவீரருடன் கங்கைப் பேராற்றின் கரையை அடைந்தான்.

அங்கே நூலிற் கூறிய பகுதிப்படி பத்தினிக் கடவுளை நூலறிந்த மக்களைக் கொண்டு நீர்ப்படை செய்தான். பின்னர் அரசன் தங்கும் கோயிலும், மணிகளிழைத்த மண்டபங்களும், பொன்னாற் புனைந்த நாடக அரங்கும், மலர்களாற் புனைந்த பந்தரும், அரசனுரிமை மகளிர் தங்கும் பள்ளியும், மலர்ந்த மலர்க்காவும், அழகிய மலர்ப்பொய்கையும், வரிக்கூத்தினைக் காண்பதற்குரிய அரங்கும் பெரும்புகழ் வேந்தர்க்குரிய தகுதியுடைய பிறவும் ஆக ஆரிய மன்னர் அழகுற அமைத்த தெளிந்த

நீரையுடைய கங்கையாற்றின் தென்கரையிலே வெளி யிடத்தில் அமைத்த பாசறையிலே புகுந்தான்.

வீரர்க்குச் சிறப்பு

பெரிய உலகையாளும் வேந்தரின் உள்ளத் தருக் கினை ஒழித்து வானுலக அரம்பையரால் மணமாலை யணியப் பெற்றோரும், அழியாத கொடிய போர்க்களத்தே போர் செய்து வென்று, தலையும் தோளும் அரசரால் மதிப்புறும்படி போர்க்களத்தே கிடந்தோரும், தம் வாழ் நாளை விலையாகத் தரும் வீரருள் சிறந்த போர்க்களப் பரப்பிலே வாளாற் போர் செய்து வீரத்தொடு பட்டோ ரும், ஆழ்ந்த கண்களையுடைய பேய்மகள் தன் குரவைப் பாட்டிலே சேர்த்துத் தான் வீரருலகு செல்லும் வழி யிலே நின்று பாடும்படி வாளுடன் இறந்தோரும், தம் கணவருடன் விளங்கும் பூணணிந்த அக்கணவரின் மார்பினைத் தழுவியவாறு காதலியர் மடிய மடிந்தோரும் ஆகிய வீரர்களின் மக்களையும், மாறுபட்டுத் தம்மிடம் போர்புரிய வந்தோர் வாளுடன் மடிய முதன்மை பெற்ற வாகை மாலையைத் தம் முடியில் அணிந்தோரையும், திண்ணிய தேர்க்கொடிஞ்சியுடன் தேர்வீரர் வீழும்படி பொருது அவர் புண்ணினின்றும் போந்த குருதி படித லால் அழகுறும் வீரரையும், பெயர்த்தற்கரிய சிறப்பினை யுடைய மணிமுடிகவித்த பெரிய தலையைக் கூற்றுவனும் கண்கொண்டு பார்க்கும்படி அறுத்துப் போர்க்களங் கொண்ட மறவரையும், உருச் சிதைந்த கவசத்துடன் மார் பிலே புண்மிகுந்து, பகைவரைப் புறங்காட்ட ஓட்டி மீண்ட போர் சிறந்த வாள்வீரரையும் வருக என்றழைத் துப் பொன்னாலாகிய வாகை மலரைத் தான் பிறந்த நாளும் பின்னிடும்படி சிறப்புடன் கொடுத்து, இதழ் பொருந்திய பனம்பூ மாலையுடன் தும்பை மாலையைச் சூடி வீரரைப் புகழும் புறத்துறையெல்லாம் முடித்த வெற்றி வேந்தன் வெற்றி மங்கை திகழும் மார்புடன் அரசிருக்கை கொண்டான்.

மாடலன் வாழ்த்துரை

அப்போது மாடலன் என்னும் மறையவன் ஆங்கே வந்து அரசனைக் கண்டு, 'எம் வேந்தே! வாழ்க! மாதவி யாகிய மடந்தையின் கானல்வரிப் பாட்டு கனகவிசய ருடைய முடித்தலையை நெரித்தது. கடல்சூழ்ந்த இவ் வுலகைத் தன் கீழ்ப்படுத்தி ஆட்சி புரிந்த மன்னனே! வாழ்க!' என்று வாழ்த்தினன்.

அதனைக் கேட்ட மன்னன், 'இங்குள்ள பகைப் புலத்து மன்னர் பலரும் அறியாத நகைத் திறத்தைக் கூறினை! நான்மறையோனே! நீ கூறிய மொழியின் பொருள் யாது?' என்று வினவினன்.

மதுரையிலும் புகாரிலும்

மாடலமறையோன் கூறுகிறான்:

"சோலை சூழ்ந்த குளிர்ந்த துறையையுடைய கடல் விளையாட்டிலே, மாதவி பாடிய வரிப்பாட்டுடன் ஊடுதல் உண்டானபோது ஊழ்வினை சினந்து பயனளிக்க வருத லாலே மாதவியுடன் கூடாமற் பிரிந்து சென்று, உயர்குடி யிற் பிறந்த கண்ணகியுடன் மாடங்கள் நிறைந்த பழம் பதியான மதுரையை அடைந்து, அந்நகரிலே இலைவிரவிய மாலையணிந்த பாண்டிய மன்னன் அழகிய துறக்கம்புகக், கொலைக்களத்திலே மடிந்த கோவலன் மனைவியாகிய கண்ணகி, குடநாட்டுத் தலைவனே! நின்னுட்டின்கண் புகுந்து, வடவரசரின் முடித்தலையிலே ஏறினள். பகைவ ரொடு மாறுபடும் வேலேந்திய பெரிய கையையுடைய வேந்தர் வேந்தே! யான் இங்கே வந்த காரணத்தைக் கூறுகிறேன், கேள்! அகத்தியன் வாழும் பொதியமலையை வலம்புரிந்து குமரியின் அழகிய பெரிய துறையிலே நீராடி மீண்ட யான், முன்னை வினைப்பயனால், புகழ்மிக்க சிறப் பினைக் கொண்ட வாய்வாட் பாண்டியனுடைய மதுரை அடைந்தேன். வெற்றிமிகும் படையையுடைய பாண்டிய மன்னனைக் கண்ணகி தன் சிலம்பினாலே வென்றாள் என்ற செய்தியைக் கேட்டவுடன், தாதாகிய உருப் பொருந்திய

மன்றிலே மாதரி வந்து, "கோவலன் குற்றமற்றவன்! மன்னனே தீவறிழைத்தான்! இடைக்குல மக்களே! யான் அடைக்கலமாக ஒப்பிக்கப்பட்ட கண்ணகியைக் காக்குந் திறனின்றி இழந்துவிட்டேன். அரசனுடைய குடையுங் கோலும் பிழை செய்தனவோ?" என்று கூறி நள்ளிரவிலே தீயில் மூழ்கினுள். தவத்தின் சிறப்பினையுடைய கவுந்தியடிகளின் சீற்றத்தை மிக்குயர்ந்த செங்கோலையுடைய பெருநில வேந்தனுகிய பாண்டியனது சாக்காடு தணித்திடலாற் பொறுமைமிக்க கவுந்தியடிகள் இவ்விருவர் தீவினையும் என்னேடு இவர்களைக் கொணர்ந்து பயனளிக்கத் தோன்றினவோ என்றெண்ணி, உண்ணு விரதத்தினை மேற்கொண்டு உயிரைவிட்டனர். இவ்விரு செய்தியுடன் அழகிய தேரினையுடைய பாண்டியனின் பெரிய மதுரை நகரத்திற்கு உற்ற தீமையையும் முற்றும் உணர்ந்தேன். என் உள்ளம் பெருந்துன்பமடைந்து அதனைப் பொறுத்துக்கொண்டு சோழன் பெரும்பதியை அடைந்து கோவலன் பெற்ருேருக்கும் கண்ணகியின் பெற்ருேருக்கும் பிற உறவினர்க்கும் இந்நிகழ்ச்சியை உரைத்தேன்.

தன் மகனுக்கும் மருமகளுக்கும் நேர்ந்தவற்றையும் செங்கோல் வேந்தனுகிய பாண்டியனுக்கு உற்றதையும் கோவலன் தந்தை அறிந்தவுடன் கொடுந்துயரமுற்றுத் தன் சிறந்த பொருள்களையெல்லாம் மிக்க சிறப்புடைய தானமாக் அளித்துவிட்டு, அப்போதே இந்திரன் புத்த சைத்தியத்திலே அமைத்த விகாரம் ஏழனுள்ளும் புகுந்து, ஆங்கே, வானிலியங்கும் சாரணராகிய, பிறந்த யாக்கையாலே பிறப்பு நீங்க முயலும் துறவிகள் முந்நூற்றுவர் முன் தானும் துறவினை அடைந்தான். மாசாத்துவான் மனைவி தன் மகனடைந்த துயரைப் பொருமல், வரம்பு கடந்த துன்பத்தினுலே வருந்தி உடம்பை விட்டாள். கண்ணகியின் தந்தை முனிவர் கோலத்துடன் தலைமையமைந்த மிக்க தவத்தினையுடைய ஆசீவகர் முன்னுலே புண்ணியமாகிய தானம் புரிந்து துறவறத்தினை மேற்

கொண்டான். கண்ணகியின் தாய் வாழ்நாளைத் துறந்து நல்லுயிரையிழந்து உடம்பினைவிட்டாள். அச்செய்தியை மாதவி கேள்வியுற்றுத் தன் தாயை நோக்கி, 'யான் நன்னெறியிலே புகுவேன். நீ மணிமேகலையை மிக்க துன்பமூட்டும் இக்கணிகையர் கோலத்தினளாகச் செய்யற்க' என்று கூறித் தன் கூந்தலைக் கோதையுடன் களைந்து போதி மாதவர் முன் தானம் புரிந்து துறவறங் கொண்டாள். என் வாய்மொழி கேட்டு இருவர் இறந்தமையால் நான் தூயநீர்க் கங்கையிலே நீராட வந்தேன். அரசர்க்கரசே! வாழ்க!"

இவ்வாறு மாடலன் கூறவும், பனம்பூவைத் தும்பை மலருடன் முடிந்த வஞ்சி வேந்தனாகிய சேரர் பெருமான், 'பாண்டியன் இறந்த பிறகு, செல்வம் மிக்க சிறப்பினையுடைய் பாண்டியன் நாடு செய்ததனை இப்போதுரைப்பாயாக!' என்றான்.

அதற்கு மாடலன் கூறுகிறான்:

"பெருநில வேந்தனே! நீ நீடுவாழ்க! நின் மைத்துனனாகிய சோழன் பெருங்கிள்ளியுடன் சேராத ஒற்றுமையுடைய ஒன்பது மன்னர்கள் தாம் இளவரசாக இருத்தலைப் பொறாமல், அக்கிள்ளியின் ஏவலையும் கேளாமல், வளம் மிகுந்த அந்த நாட்டின் ஆட்சியைச் சிதைக்கும் தன்மையை உடையர் ஆதலின், அந்த ஒன்பது குடைகளையும் ஒரே பகலில் ஒழித்து ஒரு நிலைப்படச் செய்து, அவ்வளவனது பொற்றிகிரியை ஒரு வழியிலே உறச் செய்தாய். பழையன் என்பான் காத்த குழை பயின்ற நீண்ட கோட்டினையுடைய வேம்பினை அடியொடுவீழ்த்திப் பனம்பூ மாலையுடைய பொறையனே! கேட்டருள்க! கொற்கையை ஆண்ட வெற்றிவேற் செழியன் பொற் கொல்லர் ஆயிரவரை, மதுரையை எரித்த மாபெரும் பத்தினிக்கு வருபகற் பொழுதிலே உயிர்ப்பலியாகக் கொடுத்து உரை சென்று பரவிய மதுரைப் பழம்பதி அரசனை யிழந்து மயங்கும் துன்பம் மிக்க காலத்தே, தென்னாட்டின்கண் குற்றமில்லாத சிறப்பினையுடைய, உயிர்த் தொகுதியைக் காக்

கும் மரபிலே முதன்மை பெற்ற அரியணையிலே, நிரையாக மணித்தார் புனைந்த ஏழு குதிரைகள் பூட்டிய, ஒப்பற்ற தனியாழியை யுடைய தெய்வத் தேரின்மேல், காலைப் போதில் செங்கதிர் வானவனாகிய ஞாயிறு ஏறினாற் போல, மாலையிலே தோன்றும் திங்கள் மரபினன் ஆகிய அவன் ஏறினான். பல்லாண்டு பல்லாண்டாக உலகங் காத்து எம் வேந்தே வாழ்க!''

மாடலன் கூறிய மாற்றத்தை யெல்லாம் செங்குட்டுவன் கேட்டுக் கொண்டிருந்தபோது, அகன்ற இடத்தினை யுடைய உலகத்தைப் பேரிருள் விழுங்கும்படி, ஞாயிறு மறைந்தது. மிக்க வருத்தத்தைச் செய்யும் மாலையாகிய சிவந்த தீயானது பரவிய திசையின் முகம் எங்கும் விளக்கமுறும்படி, மாலைச் செவ்வானத்திலே வெள்ளிய பிறை தோன்றியது. அப்பிறையைச் செங்குட்டுவன் நோக்கினான். அவன் குறிப்புணர்ந்த கணி எழுந்து, 'நிலவுலகாளும் வேந்தே! நீ வஞ்சியினின்றும் நீங்கி முப்பத்திரண்டு திங்களாயின! நீவாழ்வாயாக!' என்று போற்றினான்.

நீண்ட குத்துக் கோல்களிலே சேர்த்துப் பூந்திரைகளை வரிசையாக அமைத்த வளைந்த கூடகாரமாகிய நீண்ட மதிலையுடைய கொடிகட்டிய தேர் நிற்கும் தெருவிலே, குறுகியனவும் நெடியனவு மாகிய மலைகளைக் கண்டாற் போன்ற வீடுகளையுடைய குறுந் தெருவின் ஒரு பக்கத்தே சென்று, ஓவியநூல் வல்லாரது கைத்தொழில் சிறந்து விளங்கிய ஓவியம் அமைந்த மேற்கட்டியுடன் கூடிய கோயிலிலே செம்பொன்னிருக்கையிலே அரசன் அமர்ந்தான்.

பின்னர், வாயில் காப்போரால் மாடலனை வரவழைத்து, 'இளவரசராகிய ஒன்பது வேந்தரும் இறந்த பிறகு, வளமிகும் நல்ல சோழநாட்டிலே வேந்தன் வென்றியும் செங்கோலும் நலமோ?' என்று வினவினான்.

மாடலன், 'எம் மன்னர் மன்னனே! வாழ்க!' என்று ஏத்திக் கூறுகின்றான்:

ஒளிவிளங்கும் மணிக்கலன் பூண்ட வானவர் வியக்க வானிலே தூங்கிய மூன்று மதிலையும் அழித்த வலிமை மிகும் வேலின் வென்றியும், குறுநடையுடைய புறுவின் சாவாகிய பெருந்துயரம் நீங்கவும் அப்புறுவினைத் தாக்க வந்த பருந்தின் பசித்துன்பம் நீங்கவும் தன் உடம்பினை அரிந்து அப்பருந்திற்களித்த சிபியின் அறம் வளர்க்கும் செங்கோலும் பிறழ்ந்து மாறுபடுங் காலமும் உண்டாகுமோ! மழை பெய்யாது வற்கடத்திலும் காவிரியாலே காப்பாற்றப்படும் நாட்டையுடைய சோழமன்னனுக்குச் சிறிதும் தீதுவராது!'

துலா நிறைத்தானம்

இதனைக்கேட்ட பனம்பூமாலையணிந்த சேரமன்னன் அம்மறையோனை விரும்பி, அவனுக்குத் தன் உடம்பின் நிறையாகிய ஐம்பது துலாம் என்னும் பெருநிறையுடைய பொன்னைக் கொள்க என்று கொடுத்தான். பிறகு, ஆரிய வேந்தராகிய நூற்றுவர் கன்னரைத் தம் சிறப்புறும் நாட்டிற்குச் செல்லப் பணித்தான். தாபதக்கோலம் பூண்டு உயிர்தப்பிப் பிழைத்த அறிவில்லாத பனம்பூவைச்சூடிய தமிழ்வேந்தன் ஆற்றலை அறியாது பொருத கனகவிசயரையும், மிகப் பெரும் படைகளையுடைய அரசகுமரர்களையும், சுருண்ட தாடியும் இருண்ட கூந்தலும் செவ்வரி பரந்து நீண்ட கொழுவிய கயற் கண்ணும் விரிந்த வெள்ளிய தோடுகளும் வெண் முறுவலும் பவளவாயும் சூடகமாகிய வரி வளைகளும் அசைகின்ற மூங்கிலனைய பருத்த தோள்களும் அழகிய வளர்கின்ற இளமுலையும் தளிர் போன்ற சாயலும் மின்னலனைய இடையும் பரிபுரம் அணிந்த சிற்றடிகளும் உடைய ஆரியப் பேடியுடன் சோழ பாண்டியர்கட்குக் காட்டுமாறு, தோல்வியறியாத பிற மன்னரின் நெடுமொழியைப் பொறுமல் மறுத்துரைக்கும் ஆற்றலையுடைய கஞ்சுக முதல்வர் ஆயிரவரை ஏவினன்.

இச் செயல்களை முடித்துக் கொண்டு திருந்திய துயிலை மேற்கொள்ளத் தொடங்கியபோது, எங்கணும் பரவிய

நீரையுடைய கங்கையைச் சூழ்ந்த கழனிகளில் உள்ள பசிய இலைகளுடன் நெருங்கிய புதிய தாமரை மலர்களில் வண்டினங்கள் யாழ்போல முரல ஒளி தரும் இளஞாயிறு விரிந்த கதிர்களைப் பரப்பிக் கொண்டு, கீழைத்திசையிலே மலைமுகட்டிலே தோன்றினான். மேலைத்திசையை ஆளும் வெற்றி வேந்தனாகிய செங்குட்டுவன், வடதிசையிலே தும்பைமுடித்துப்போர் செய்து வெற்றிபெற்று வாகையைச் சூடிய சேனையுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டான்.

வஞ்சியில் வேண்மாள்

இனி, வஞ்சியில் செல்வம் கொழிக்கும் பெருங் கோயிலிலே, நீடிய நிலைகளுடன் உயர்ந்து ஞாயிற்றின் செலவைத் தடுத்த பொன் மாடத்தில் முத்துக்களை நிரல் பெறக் கோத்த சல்லியும் தூக்குமாகியவற்றால் முற்றும் வளைக்கப் பெற்றதும், ஓவியங்கள் அமைத்த மேற்கட்டியினையுடையதும் விளங்கும் ஒளியையுடைய மாணிக்கத் தொகுதியை இடையிடையே அழுத்திக் குறுக்கிட்டோடும் ஒளியையுடைய வயிரத்தை இழைத்த பொற்றகட்டால் அமைத்ததும் ஆகிய மூட்டுவாய் செறியப் பொருந்தின சிறந்த பொற் கட்டிலாகிய, பக்கந்திரண்ட பொற்கால்களையுடைய மஞ்சத்தின் மேல், சேவலுடன் புணர்ந்த அன்னப்பேடை புணர்ச்சியால் உருகி நெகிழ்ந்த மென்மை பொருந்திய தூவியாற் செறிக்கப் பெற்ற பலவாக அடுக்கப் பெற்ற அணைகளையுடைய படுக்கையிலே அரசிவேண்மாள் அமர்ந்த துயிலைப் போக்கி, வட திசையிலே பகைவரை அழித்துப் போர்க்களத்தைத் தனதாகக் கொண்டு விளங்கும் தேர் வென்றியை அறிந்து, கட்டுரையிலே வல்ல முதுபெண்டிராகிய செவிலியர் கூட்டம், 'கணவனைப் பிரிந்து வருந்திய துன்பத்தை இனி ஒழிவாயாக!' என்று பாட்டுடன் சேர்த்துப் பல்லாண்டு கூறி வாழ்த்தினர். மற்றும் சிறிய குறளரும் கூனரும் சென்று, 'அரசன் வந்தான். இழந்த நின் அழகைப் பெறுக! நின் கூந்தலும் ஒப்பனையுறுக!' என்று கூறினர்.

நானில நிகழ்ச்சி

மூங்கிலில் விளைந்த தன்னைப் பருகிய வேட்டுவன் கவணாற் கல்லையெறிந்து தாக்குகின்ற காவலைக் கைவிடுதலால், பெரிய தினைப் புனத்திலே தினைக்கதிரை உண்ண விரும்பி வந்த உயர்ந்த இலக்கணமுடைய யானை அயர்ந்து உறக்கம் அடைய, வாகையையும் தும்பையையும் வடநாட்டின்கண் முடித்த விரைந்த செலவையுடைய யானை வரும் வழியிலே செல்வதற்கு உடனே போ என்று, அரசனுடைய வெற்றியைத் திறம் அமைந்த பண்களாலே கூறி மிகவுயர்ந்த பரண்மிசை இருந்து குறத்தியர் குறிஞ்சிப் பாட்டுப் பாடினர்.

"வடநாட்டு வேந்தரின் நிலைபெற்ற மதிலை அழித்து உண்ணுவரகு விதைத்த கழுதை பூட்டிய ஏரை உழுவோனாகிய குடநாட்டு வேந்தன் வந்தான். நாளைப் பகையரசர்களின் கால் விலங்கைக் கழற்றுவதாகிய அரசன் பிறந்தநாள் பெருமங்கலம் ஆகும். ஆகையால், பகடே! நீயும் நுகம் பூண்டு உழுவதினின்றும் ஓய்வு பெறுவாய்." என்று விழாக்கொண்டு உழும் உழவர்கள் மருதப் பாடல் பாடினர்.

குளிர்ந்த ஆன் பொருநையிலே நீராடுவோர் எறிந்த வண்ணக்குழம்பும் பொற்சுண்ணப் பொடியும் மலர்களும் பரவி, இந்திரவில்லைப் போல் விளங்கும் பெரிய நீர்த் துறைகளிலே, வண்டுகள் தேனை உண்ண மலர்ந்த நீல இதழ்களையுடைய குவளை மலர்களை முள்ளிப்பூவுடன் தொடுத்த மாலையணிந்த சிகையின்கண் மணம் விரியும் தாமரை மலரையும் முழுமலராக அணிந்து, குருகுபோலும் அலர்ந்த தாழையின் கிளைமீது அமர்ந்து கொண்டு, "விற்கொடி வேந்தன் வந்தான். ஆகையால், அவன் சாலவும் பெரிய இமயத்திலிருந்து கொணர்ந்த பல ஆனிரைகளுடன் நீங்களும் சேர்ந்துகொள்ளுங்கள்" என்று சேரமன்னனுடைய ஆனிரைகளை நீர்த்துறையிலே நீராட்டிய பின் கோவலர்கள் வேய்ங்குழலிலே பாடினர்.

ஆழமாகிய நீரையுடைய கடலின் வெள்ளிய அலை பொருத வெண்மணல் செறிந்த அடைகரையிலே திரண்ட பெரிய புன்னையினிடத்தே வலம்புரிச் சங்கம் ஈன்ற அழகிய முத்துக்களை ஆரவாரஞ் செய்கின்ற ஆயத்தாருடன் கழங்காடுகின்ற மகளிர், வளையல் உலாவும் முன் கைகள் மலர அக்கழங்குகளை ஏந்தி, “சேரர் பெருமான் வந்தான். நம்முடைய வளரிள வனமுலைகள் அவனுடைய தோள் நலத்தைத் துய்த்தற் பொருட்டு, இள மகளிரே! யாம் அவன் முடித்த பனம் பூவையும் தும்பையையும் பாடுவோம்” என்று அழகிய சொற்களையுடைய நெய்தல் நில மகளிர் பாடினர்.

வஞ்சியிற் சேரன்

இவ்வாறு நானிலமக்களும் பாடிய பாட்டின் ஒலியைக் கேட்டுக் கொண்டு தூங்காமலிருந்த கோப்பெருந்தேவியின் கைகளிலே அழகிய வளையல்கள் கழலாமற் செறியவும், வலம்புரிச் சங்கு வென்றி தோன்ற முழங்கவும், வாகை சூடிய முடியுடன் விரைந்து செல்லும் யானையின் பிடரிலே மாலையணிந்த வேடன் கொற்றக் குடையின்கீழ் விளக்கமுற்றமர்ந்து, யானை நிரையுடன் திருநகர் எதிர் கொள்ளச் செங்குட்டுவன் வஞ்சியிலே புகுந்தனன்.

———

28. நடுகற் காதை

மாலைக்காலம்

தண்ணிய திங்களைப் போன்ற பொன்தொழிலமைந்த பெருங்குடை மண்ணக மெங்கும் நிழலைத்தர, வீரவாள் ஏந்திய, உலகிற்குப் பல செல்வத்தினையும் தரும் பெரு வேந்தனுடைய வெற்றி விளையுஞ் சிறப்பினையுடைய வஞ்சிப்பழம்பதியிலே, ஒளி பொருந்திய வளையணிந்த பெரிய கையினல் பொலிவு பெற்ற மலர்களைத் தூவி வெள்ளிய திரியையுடைய விளக்குகளை ஏந்திய மகளிர், 'இவ்வுலகை யாளும் அரசன் வாழ்க!' என வாழ்த்திப் பலருந் தொழ வந்தது மாலைக் காலம். அம் மாலையிலே பனம் பூ மாலையையும் பொன்னுற் செய்த தும்பைப் பூ மாலையினையும் சூடிய தம் மன்னனுடைய போர்த்தொழிலை முடித்த வாளேந்திய வீரர்களின் களிற்றின் வெண்கொம்பு பாய்ந்த மார்பினையும், நீண்ட வேல் கிழித்த பெரும்புண் தங்கிய மார்பினையும், பகைவர் எய்த அம்பு துளைத்த பெரிய அழகிய மார்பினையும், கூரியவாள் வெட்டிய மணிக்கலன் பூண்ட மார்பினையும் அவர்களுடைய காதலியராகிய கருங்குவளை மலர்போலும் மைதீட்டிய கண்களையுடைய மகளிரின் மார்பகத் தடங்காமல் திரண்ட தொய்யில் எழுதிய முலைகளாலே வெம்மையுற வேதுகொண்டு, அகிற் புகையினைக் கொள்ள விரித்த அழகிய மெல்லிய கூந்தலாகிய முகிலின் உள்ளே தோன்றும் முகமாகிய திங்களினிடத்துள்ள புருவமாகிய வளைந்த கரிய வில்லின் கீழ் அமைந்த, மகரக் கொடியோனுகிய காமனுடைய மலரம்புகளை வென்று, சிதறிய செவ்வரிபரந்த மதர்த்த கண்களின் கடையாகிய தூது முன்னர்ப் பாசறையிலே செய்த நோய்க்கு மருந்தும் ஆகச் செய்தது இம் மாலை என்று புகழ்ந்தனர்.

மற்றும், அம்மாலையிலே பெரிய கொவ்வைக் கனியும் பவளமும் போன்ற வாய் இள நிலவைப் பரப்பக் கரிய

கயல் மீன் பிறழும் அழகிய காட்சியுடன் அழகிய பற்கள் புதிய புன்முறுவலையும் மாந்தளிர் மேனிமடவார் தம் காதலராகிய காளையர்க்கு நல்கிக், கத்தூரித் திலகமாகிய கரிய மறுத் தங்கிய குற்றமற்ற ஒளி தவழும் முகத்தையும் தேனைப் பருகவந்த வண்டுடன் சுருண்டுகிடந்த கூந்தலையும் மாலையையும் ஒப்பனையையும் காணத் தம் நிழலைக் காட்டும் கண்ணாடியைத் தம் எதிரே நிறுத்தி, வளைந்த தண்டினையும் இசை பொருந்தும் நரம்பினையும் பத்தரினையும் உடைய சிறிய யாழை எடுத்துத் தழுவிக் குரல்குரலாக வரும் செம்பாலைப் பண்ணுடன் துத்தம் குரலாகிய படுமலைப் பாலையும் அவ்வாறே செவ்வழிப்பாலை முதலாயினவும் அழகிய இனிய குறிஞ்சிப்பண்ணும் ஆகியவற்றைப் பாடுதலையுடைய மகளிர் தம் காதலர்க்குச் சிறந்த விருந்தினைச் செய்தனர்.

இந் நிலையைத் தரவந்த அந்த மாலைக்காலம் பகைவேந்தரின் முடியின் புறம் தேய்க்கும் கழற்காற் செங்குட்டுவன் குடிகளைக் காக்குங் காலத்துத் தோன்றும் அவன் முகம் போல, உலகம் தொழ விளங்கிய மலர்ந்த தண்கதிர்களையுடைய திங்களை யாவரும் போற்றும் மூதூரில் உள்ளார்க்குக் காட்டி நீங்கியது.

திங்கள் ஒளியிலே

காளையரும் மங்கையரும் தன் பின்னே நின்று தன் மொழி கேட்டு நடக்க, ஐங்கணை யேந்திய நெடுவேள் அரசனாக வீற்றிருந்த வெண்ணிலாத் தவழும் முன்றிலையும், விருப்பமூட்டும் மலர் நிறைந்த படுக்கையினையும் சுதைதிட்டிய அரங்கினையும், அழகிய மலர்ப்பந்தரையும் வெள்ளிய கால்களையுடைய கட்டில்களையும் மேற்கட்டியினையுடைய மேடைகளையும் குளிர்ந்த கதிர்களையுடைய அத் திங்கள் விளங்கியது.

பல வகைப் பயன்களும் உண்டாகும் கடலாற்சூழப் பெற்ற பயன் பொருந்திய இப்பெரிய உலகின் நடுவில்

நின்று உயர்ந்த நீண்ட சிகரங்களையுடைய மேருவினைப் போலக், கொடிகளையுடைய மதில் சூழ்ந்த பழம் பதியாகிய வஞ்சியின் நடுவிலே நின்றுயர்ந்த பொன்மாளிகையிலே அழகு தவழும் நிலாமுற்றத்தில் அமர்ந்து, பட்டத்தரசி யான வதுவை வேண்மாள் திங்களின் அழகைக் காண வந்தாள். அப்போது ஒருபக்கம் ஒளிவீசும் வளையணிந்த மகளிர் ஏந்திய விளக்கின் ஒளி பல்லாண்டு என்னும் வாழ்த்தொலியுடன் பரவியது. ஒருபக்கம் மார்ச்சனை ய்மைந்த திரண்ட மத்தள ஒலியும் வளைந்த கோட்டினை யுடைய யாழோசையும் இசைகனிந்த மிடற்றுப் பாட லும் பரவின. ஒருபக்கம் கத்தூரிக் குழம்பையும் தொய்யில் எழுதும் வெண்மையான சந்தனத்தையும் கூனும் குறளும் ஏந்தின. ஒருபக்கத்தே எழுதும் வண் ணங்களையும் பூசும் சுண்ணங்களையும் மலர்ந்த பூமாலை களையும் பெண்மைமிக்க பேடியர் சுமந்து நின்றனர். ஒருபக்கத்தே மலர்களும் நறும்புகைப் பொருள்களும் விருப்பமூட்டும் நறுமணப் பொருள்களும் தூவியமைந்த அழகிய பள்ளியைச் சூழ்ந்திருந்தன. ஒருபக்கத்தே ல்ண்ணுடி ஆடை அழகுதருங் கலன்கள் ஆகியவற்றைப் பணிமகளிர் ஏந்தி நின்றனர். இவ்வகைச் சிறப்புடன் வந்த அரசிவேண்மாளுடன் அழகிய மணிகள் பதித்த நிலாமுற்றத்திலே கடல்சூழ்ந்த இவ்வுலகை ஆளும் செங் குட்டுவன் அமர்ந்தான்.

அப்போது, பாடகம் அசையாமலும் தோள்வளை நடுங்காமலும் மேகலை ஒலிக்காமலும் மெய்யியமுலை ஆடா மலும் நீண்ட குழை அசையாமலும் நீலமணிபோலும் கூந்தல் அவிழாமலும் உமையம்மை தன் இடப்பக்கத்தே யிருக்க மாதேவனாகிய இறைவன் நடித்த கொடுகொட்டி என்னும் கூத்தைப், பருத்தலரிய நான்மறைகளையுடைய அந்தணர் வாழும் பறையூரில் உள்ளவனாகிய கூத்தச் சாக்கையன் ஆடினான். அக்கூத்தின் சிறப்பைக் கண்ட செங்குட்டுவன் மகிழ்ந்து அவனுக்குச் சிறப்புப் பலவும் நல்கினான். கூத்தச் சாக்கையன் அரசனைப்

போற்றி நீங்கினன். பின்னர்ச் செங்குட்டுவன் அரசிருக்கையாகிய பேரோலக்க மண்டபத்தை அடைந்தான்.

சோழபாண்டியர் இகழ்ச்சி

அப்போது நீலன் முதலிய கஞ்சுகம் அணிந்த தூதுவர் மாடல மறையோனுடன் வந்து வாயில் காப்போரால் அரசனுக்குத் தம் வருகையை அறிவித்தனர். அரசன் வரச்சொல்லியவுடன் காவலர் பின்சென்று மன்னனை வணங்கிக் கூறுகின்றனர்.

"தும்பை சூடிய, வெம்போரிற் கழலணிந்த வேந்தனே! யாங்கள் சோழமன்னனுடைய பழம் பதியை அடைந்தோம். அங்கே வச்சிர நாட்டுப் பந்தரும், அவந்தி நாட்டுத் தோரண வாயிலும், மகத நாட்டுப் பாடி மண்டபமும் ஆகிய இவை கூடிய, ஓவியத் தொழில் முற்றிய ஓலக்க மண்டபத்திலே சோழமன்னன் வீற்றிருந்தான். போரிலே தோற்றோடிய இக் கனகவிசயருடன் அரசன் ஏவலர் பின்சென்று வணங்கினோம். வானவில் போலப் பல நிற மலர்மாலையணிந்த சோழர் பெருந்தகையாகிய அம் மன்னன், 'பெரும் போர்க்களத்திலே மிகப் பெரிய வீரத்துடன் தாம் தாங்கி வந்த வாளையும் குடையையும் எறிந்து விட்டுப் பகைவர் கொல்லவும் சம்மதியாத தவக்கோலத்துடன் உயிர்தப்பிய பகைவேந்தரை, வென்றி நல்கும் போரிலே பிடித்துக்கொள்ளுதல் தலைமையான தேர்ப்படையினையுடைய சேரற்கு நலமன்று!" என்று கூறினன்.

"அறநெறியில் நிற்கும் செங்கோல் வேந்தனே! அச் சோழநாட்டினின்றும் நீங்கி, உயர்ந்த சிறப்பினையுடைய பாண்டிய வேந்தனைக் கண்டோம். "ஆரிய மன்னர்கள் போர்க்களத்தே பற்றிய சிறப்புடைய வெண்கொற்றக் குடையின் காம்பை, அங்கே பெரிய யானையின் பிடரின் மீதிருந்து மிகவுயர்ந்த (இந்திரன் மகனான) சயந்தன் வடிவாகிய தலைக் கோலாகக் காட்டியும், இமய மலையின் முடியின் பக்கத்தே பெரிய குயிலாலுவம்

என்ற இடத்திலே அமர்ந்த, உமையை இடப்பக்கத்தே கொண்ட ஒப்பற்ற இறைவனை வணங்கியும் போர்க் களத்தை நம் வேந்தனுக்கே கொடுத்துவிட்டுத் தவப் பெருங்கோலங் கொண்டனர். அவ்வாறு தோல்வி யுற்றவர் மேல் வெந்தீயனைய சீற்றங்கொண்ட சேர னுடைய வெற்றி எமக்குப் புதுமையானது'' என்று வெற்றிவேற் செழியன் கூறினான்.

செங்குட்டுவன் சினம்

இவ்வாறு இரு பெரு வேந்தருங் கூறிய அறிவுசான்ற சொற்களை நீலன் கூறக் கேட்ட அளவில், தாமரை மலரனைய தண்ணிய நோக்கமுடைய கண்கள் செந்தீ யெனச் சிவக்கச் செங்குட்டுவன் வெகுண்டு நகைத்தான். அவன் நிலையுணர்ந்த மாடலன், 'மன்னவர் மன்னனே! நின் வெற்றி வாழ்க!' என வாழ்த்திக் கூறுகிறான்.

மாடலன் மாற்றினன்

''மிளகுக் கொடிபடரும் மலையில் தூங்கும் யானை யினையுடைய, சிறிய கொத்தாக நெய்தல் மலரும் விய லூரை அழித்து வெற்றிபெற்ற பிறகு, ஆத்தி மலராலே புனைந்த மாலையணிந்த ஒன்பது சோழரை நேரிவாயில் என்னும் இடத்தே நிலைத்த போரில் வென்று, பெரிய தேர்ப்படையுடன் இடும்பில் என்னும் ஊர்ப்புறத்தே தங்கிக் கொடும் போரிலே வென்றிகொண்டு, நெடுங்கட லிலே மரக்கலத்தை ஓட்டி, எதிர்த்துவந்த ஆரிய வேந் தரைக் கடும்புனற் கங்கைக் கரையிலே வென்றாய். நீண்ட மாலையணிந்த பெரும்படைமன்னனே! உயர்ந்த அறி ஞருடன் கூடி, அவர்களைப்போலவே உண்மைப் பொருளை உணர்ந்த அரசர்க்கரசே! நின் சீற்றம் தணிவதாக! நிலவுலகாளும் நீண்முடி வேந்தே! நின் வாழ்நாட்கள் தண்ணிய ஆன் பொருநை மணலினும் மிகுக! அகழ்ந்த கடலாற் சூழப்பட்ட மண்ணுலகாளும் மன்னனே! வாழ்க! என் சொற்களை வெறுமற் கேட்டருள்க! இவ்வுலகைக் காக்கும் தொழிலை மேற்கொண்ட நின் நல்லாண்டுகள்

ஐம்பது முடிவுற்ற பின்னரும் அறக்களத்திற் செய்யும் வேள்வியை மேற்கொள்ளாமல் யாண்டும் மறக்கள வேள்வியே செய்பவனுயினை! அரசர் இயற்ற வேண்டிய வினைகளைக் குறைவின்றி முடித்த வாளேந்திய வென்றியை யுடைய பனம்பூமாலை யணிந்த நின் முன்னோருள்ளே, கடலிடத்தே பகைவரின் கடம்பை வெட்டிய காவலனும், இமயமுடியிலே வில்லை யெழுதிய வேந்தனும், நான்மறையந்தணனுகிய பார்லைக் கௌதமனுடைய செய்யுளை ஏற்று; அவனைத் துறக்கத்துச் செலுத்திய மன்னனும், நிலைபெற்ற உயிர்களை வயது முதிர்ந்தபிறகே முறைப்படி கொள்வாயாக என்று கூற்றுவனை முறைப்படுத்திய கொற்றவனும், கொடுஞ் சொல்லை யுடைய யவனரின் வளமிகும் நாட்டினை ஆண்டு, பொன் சொரியும் பெரிய இமயமலையிலே புக்கவனும், மிகப் பெரிய சேனையுடன் பெரிய போரினை வென்று பகைவர் மதிலை அழித்த அரிய வலிமையுடையோனும், அச்சம் தோன்றும் முறையையுடைய அயிரை யாற்றிலே கொற்றவை யென்னும் தெய்வத்தை நீராட்டி வழிபட்டு, ஒரு பகலிலேயே இரு கடல் நீரையும் கொணர்வித்து முழுகினேனும், சதுக்கப் பூதங்களை வஞ்சியிலே கொணர்வித்து மதுவைக் கொள்ளும் வேள்வியை இயற்றினேனும் ஆகிய இவர் போன்ற பெரும்புகழுடையோர் ஒருவரும் இல்லாமல் இறந்ததனுலே, உடல் நிலையற்றதென்பதனை நீ அறிந்தாய்.

இனி, வளம் நிறைந்த இப் பெரிய உலகிலே வாழும் மக்களிடத்திலே பொருள் நில்லாது என்பதனை, வெல்லும் போரினை யறிந்த தண்ணிய தமிழ்க் காவலரை இகழ்ந்த ஆரிய மன்னரிடத்தே அறிந்தனை!

மற்றும், இளமைப் பருவம் அழியும் என்பதனை விளக்கி அறிவுடைய மக்கள் மேற்கோள் வாயிலாக உரைக்க வேண்டுவதில்லை! திருமகள் தங்கிய பரந்த மார்பினையும் செங்கோலையும் உடைய வேந்தனே! நரைத்தலுடன் முதிர்ந்த மெய்யை நீயும் உணர்ந்தாய்!

வானவர் வடிவுடன் துறக்கம் புகுந்த நல்லுயிரானது மக்கள் வடிவுடன் இவ் வுலகிற்குத் திரும்பினும் திரும்பும். மக்கள் மெய்யை மேற்கொண்ட ஒருயிர் விலங்கின் உடலை அடையினும் அடையும். விலங்கின் உடலினின்றும் நீங்கிய இனிய உயிர், உள்ளம் நடுங்கற்குக் காரணமாகிய துன்பத்தைத் துய்க்கும் நரகர் மெய்யை நண்ணினும் நண்ணும்! ஆடுகின்ற கூத்தரைப்போல, அரிய உயிரானது ஓரிடத்திலே சேர்ந்தவடிவுடன் எப்போதும் நிலையாக நில்லாமல், தான் செய்த வினையின் வழியதாய் உயிர் செல்லும் என்பது தெளிந்த அறிஞரின் உண்மைக்கூற்று.

ஏழு முடிகளாற் செய்த ஆரத்தைப் பூண்டவனே! நீ எடுத்த ஆணையாழி மேலும் மேலும் சிறப்புறுவதாக! வெற்றிகாணும் வாளினையுடைய மன்னனே! யான் அரிய பொருளைப் பெறும் பரிசிலன் அல்லேன். மிகப் பேருடலைக் கொண்ட அறஞ் செய்த உயிரானது பரவிய இடத்தையுடைய உலகின்கண் பிறஉயிர்கள் செல்லும் பொது நெறியிடத்தே செல்வதைப் பொறுத்தலாற்றேன், அறிவின் எல்லையிற் சிறப்புற்றவனே! விண்ணவர் புகழும் வீட்டுநெறியை உனக்குத் தருகின்ற, நான்மறை கூறும் வேள்வியைச் செய்கின்ற அந்தணனைக் கொண்டு, அரிய மறைகளிலே அரசர்க்கென அமைத்த உயர்ந்த நல்ல வேள்வியை நீ செய்தல் வேண்டும்.

இனி, அறத்தை நாளைக்குச் செய்குவோம் எனின், கேள்வியின் அளவேயான நல்லுயிர் இன்றே விலகினும் விலகும்! தம் வாழ்நாளை இவ்வளவென எல்லை செய்து அறிந்தவர் கடல்சூழ்ந்த உலகிலேயாங்கும் இல்லை. வேள்வி செய்தற்குரியளாகிய வேண்மாளுடன் கூடி, கழலணிந்த அரசர்கள் நின் அடியினைத் துதிக்க, ஊழியோடு ஊழி உலகம் காத்து நெடுந்தகையே! நீ வாழ்க!"

வேள்வி

இவ்வாறு மாடல மறையோன் தன் மறைநாவினாலே உழுது நிலையாமைப் பொருளாகிய விதையினைச் செங்குட்

டுவன் செவியைக் கழனியாகக் கொண்டு விதைத்தான். அவ்விதை முளைத்து வளர்ந்து பெரும்பயனை விளைத்தது. அதனை நுகரும் விருப்பமும் கழலணிந்த செங்குட்டு வனுக்கு உண்டாயிற்று. உடனே, நான் மறையை முறைப் படியறிந்து, நயந்தெரிந்த நாவினையுடைய, பல்வகை நூற்கேள்விகளையும் முடித்த கேள்வி மாக்களை, மாடல மறையோன் கூறிய முறைப்படி வேள்விச்சாந்தியாகிய விழாவைச் செய்ய ஏவினன்.

பின்னர், ஆரிய மன்னரை அரிய சிறையினின்றும் விடுவித்து, அவர்களைப் பெரும்புகழ் பெற்ற வஞ்சியின் புறத்தே, ஆழமாகிய நீரை வேலியாகக் கொண்ட தண் ணிய அழகிய மலர்ப் பொழிலில் உள்ள வேளாவிக்கோவின் பெயர் பெற்ற மாளிகையிலே இருக்கச் செய்தான். மற்றும், வேள்விமுடிந்த மறுநாள் அவர்களது பெரிய நகரை அவர்கள் அடையலாமென மகிழ்வுடன் கூறி, அம்மன் னர்க்குத் தகுவன செய்யுமாறு வில்லவன் கோதையை ஏவினன்.

பின்னர் அழும்பில் வேளுடன் ஆயக்கணக்கரைச், சிறையாளரைச் சிறைச் சாலையினின்றும் விடுதலை செய்க! வரி கொடுக்கும் நாடுகளை யெல்லாம் வரி நீக்கம் செய்க!' என ஒலிக்கும் நீரையுடைய மூதூர்களிலே ஏவினன்.

இவற்றை முடித்த பின்னர்,

'அரிய ஆற்றலையுடைய வேந்தர் தம் அறத்தை ஒழுங்காகச் செய்தால் அன்றிப் பெரும் புகழையுடைய மகளிர்க்குக் கற்புநிலை சிறப்புறாது' என்ற பண்டையோர் உரைத்த இனிய நல்ல தமிழுரையைப் பார் தொழுது போற் றும் கற்புடையளாகிய தான் ஆர்புனைந்த முடியினனாகிய சோழனுக்குரியதாக்கியும்,

செவ்விய கோல் வாடின் உயிர் வாழா இயல்பைத் தென்னாடு காக்கும் பாண்டியனுக்குரிய தாக்கியும்,

'மன்னர் தாம் உரைத்த வஞ்சினம் நிறைவுற்ற பின் னர் அல்லது தம் சினம் சிறிதும் தணியார்' என்பதை வட

திசை மருங்கிலுள்ள மன்னர் அறியும் வண்ணம் சேர நாட்டு வேந்தனுக்கு உரியதாக்கியும்,

பழம் பெரும்பதியாகிய மதுரை அழிவுறத் தன் உள்ளத்தே கொதித்துப் பொங்கிய சீற்றத்தாலே வெவ்விய தீயைத் தன் முலைக்கண்ணே தோற்றுவித்து, நம் நல்ல சேரநாட்டை அடைந்து குளிர்ந்த கிளைகளையுடையதும் பொன்போல் மலர் நிறைந்ததுமான வேங்கையின் புதிய நிழலிலே தங்கிய நங்கையை, அறக்களத்தினுக்குரியரான ஆசானும் பெருங்கணியும் வரச் சிறப்புடைய சிற்பியருடன் சென்று, உயர்ந்த அறிஞரும் விரும்பும் சிற்பநூலுணர்ந்த கம்மியராலே பல திறமாக வகுத்த பத்தினிக் கோயிலிலே, வானவர் வாழும் இமயமலையின் உச்சியிலுள்ள கடவுளை வாழ்த்திக், கைத்தொழில் வல்லார் செய்த சிறந்த அழகினையுடைய அணிகலன் யாவும் அணிவித்து, மலரிட்டுத், திசைப்பாலகரை நிறுவி, வேள்வியும் விழாவும் நாள்தோறும் ஒழுங்குறச் செய்து, வடநாட்டு மன்னரை அடிப்படுத்திய வேந்தர் சிங்கமாகிய சேரன், ‘மங்கலம் செய்க’ என மங்கலஞ் செய்தற்குரியாரை ஏவினன்.

29. வாழ்த்துக் காதை

கண்ணகி கோயிலில்

தென்குமரி முதல் வடஇமயம் வரையில் தன் ஒரு மொழியேசெலுத்திஉலகையாண்ட சேரலாதனுக்கு, விளங்கும் ஒளியினையுடைய ஞாயிற்றின் மரபிலே தோன்றிய சோழன் மகள் பெற்ற மகனும், கொங்கர் செங்களத்திலே மன்னரை வென்று களவேள்வி செய்து, தன் அன்னைக்குப் பத்தினிக்கல் நீராட்டக் கங்கைப் பேராற்றுக் கரையின் கண் சென்றவனும் ஆகிய செங்குட்டுவன் வடநாட்டு மன்னரிடத்தே சினமிகுந்து வஞ்சியிலே வந்திருந்த போது,

வட ஆரிய வேந்தராகிய கனகவிசயர், இவ்வட நாட்டிலே ஓர் இளமங்கையின் மணவிழாவிலே எல்லா அரசருடனும் தங்கியிருந்த காலத்தில், தம்மில் ஒத்த இகழ் நகையினராய்த் "தென் தமிழ் நாடாளும் வேந்தர் போரை விரும்பித் தருக்குற்று வந்து, மின்னொளி தவழும் இமயத்தின் உச்சியிலே விளக்கமாக வில்லும் புலியும் கயலும் தீட்டிய நாளிலே எம்மைப் போன்ற முடிவேந்தர் இங்கே இருந்திலர் போலும்" என்று கூறிய மொழியை, அந் நாட்டிலே வாழும் மாதவர்கள் வந்து கூறியபோது,

இயல்பாக உருளும் மாணிக்க வட்டினைக் குறுந்தடியால் செலுத்தியது போலப் பெரிய இமயமலையின் கல் பத்தினித் தெய்வமாகும் என்று கூறிய மொழி, போருக்குச் செல்லும்படி தூண்ட, அதனாலே, ஆரிய மன்னரைப் புறங் கண்டு அம்மன்னரது முடித்தலையிலே தெய்வமாகிய பேரிமயக் கல்லைச் சுமத்தி, மீண்டுவந்து, விரும்பிய கொள்கையுடன் கங்கைப் பேரியாற்றங் கரையிலே தங்கி, நங்கைக் குரிய கல்லை நீர்ப்படுத்தி, கொடிய வெகுளியாகிய வெப்பம் நீங்கி, வஞ்சிமாநகரைச் சேர்ந்து, மாநில வேந்தர் பலரும் தம் நீண்ட முடியாலே தொழுகின்ற தெய்வ உரு

தோளையுடைய கண்ணகிக்கு நான் தோழி யென்றறிவீர்! சோழ நாட்டரசர் புதல்வியாகிய இவட்கு நான் தோழி யென்றறிவீர்!''

காவற் பெண்டு

''இளமை தோன்றும் சாயலுடைய மாதவியை வெறுக்குங் கடமை யில்லாளாய், அன்பு நிறைந்த கணவன் கையைப் பற்றிக் கொண்டு, குடமும் புகமுடியாத குறுகிய கிணறுகளை யுடைய கொடிய கானகத்தின் வழியே சென்ற மிகப் பெருங் கண்களை யுடையாளுக்கு நான் செவிலித்தாய் என்றறிவீர்! தண்ணிய புகார் நகரப் பாவையாட்கு நான் செவிலித்தாய் என்றறிவீர்!''

அடித் தோழி

''தன்னைப் பெற்றவளிடத்தும் ஒரு சொல் சொல்லாமல், தன்னைக் காத்துவந்த செவிலித்தாயாகிய என்னைப் பெற்றவளிடத்தும் ஒரு சொல் சொல்லாமல், கற்பினைக் கடனுகப் பூண்டு கணவனைப் பின்பற்றி வந்த பொற்றொடியணிந்த பூவைக்கு நான் தோழி யென்றறிவீர்! பூம்புகாரின் பாவைக்கு நான் தோழியென்றறிவீர்!''

இவ்வாறு தங்களை அறிமுகஞ் செய்து கொண்ட மூவரும் கண்ணகியின் திருமுன் சென்று ஆற்ருமை மீதூர வாய்விட்டுக் கதறிக் கூறுகின்றனர்.

தேவந்தியரற்று

தீய கனவினை நீ உரைக்கக் கேட்ட அந்நாளிலே, செய்தவமில்லாத யான் அதன் பயனைப் பொருந்த உணராமல் இருந்து விட்டேன். அது எத்துணைப் பெருந் தவறென இப்போது உணர்ந்து வருந்துகிறேன். செறிந்த கூந்தலை யுடைய நங்காய்! நின் முலைப் பூசல் கேட்டு நின் தாய் உயிர் விட்டதனைக் கேட்டாயோ? தோழி! நின் மாமி இறந்ததையும் கேட்டாயோ? தோழி!''

காவற் பெண்டரற்று

"கோவலனுக்குக் கொடிய கீழ்மகன் ஒருவன் தீமை செய்ய, அதனாலே, பாண்டியன் உயிர் விட்டதைக் கேள்வியுற்று, ஏங்கி, இனி இறப்பே வாழ்வென்று உறுதி செய்து, பல தானங்களையும் புரிந்து மாசாத்துவான் துறவு பூண்டதைக் கேட்டாயோ! அன்னையே! மாநாய்கன் துற வினையும் கேட்டாயோ? அன்னையே!"

அடித்தோழி அரற்று

"காதலனாகிய கோவலன் இறந்ததையும் காதலி யாகிய நீ அடைந்த துன்பத்தையும் அயலார் கூறும் பழிப்புரையையும் கேட்டு ஏக்கமுற்றுப், போதிமர நிழலில் அமர்ந்த முனிவருக்கு முன்னாலே புண்ணியந்தரும் தானம் புரிந்த மாதவியின் துறவினையும் கேட்டனையோ? தோழி! மணிமேகலையின் துறவினையும் கேட்டனையோ? தோழி!'

தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றுதல்

"கவுந்தியடிகள் அளித்த அடைக்கலத்தைப் பாது காக்க வல்லமையற்ற நான் பித்துற்றேன் என்று கூறி உயிர்விட்ட அன்னையாகிய மாதரியின் மகள் இவள்! இன்னும் திருமணம் புரிந்திலாள், கூரிய முறுவலை யுடை யாள், நின் தோழி ஐயை வந்திருக்கிறாள்! நீ பார்த் தனையோ? தோழி! மாதரி மாமியின் இளம் பெண்ணைப் பார்த்தனையோ? தோழி!"

செங்குட்டுவன் வியப்புக் கூற்று

"ஈதென்ன வியப்பு! ஈதென்ன வியப்பு!! ஈதென்ன வியப்பு!!! காலில் அழகிய பொற் சிலம்பையும், இடையிற் புனையப்பட்ட மணிமேகலையையும் கையில் வளையையும் காதில் குற்றமற்ற வயிரத் தோட்டினையும், சாம்பூநதப் பொன்னணிகள் பிறவற்றையும் உடைய மின்னுக் கொடி ஒன்று உயர் வானிலே காணப் படுகிறதே!

செங்குட்டுவற்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டியது

"பாண்டியன் குற்றமில்லாதவன்! வானவர் கோன் கோயிலிலே நல்ல விருந்ினனாயினன்! நான் அப்பாண்டியன் மகளாவேன். யான் வென்றி வேலேந்திய முருகன் குன்றிலே விளையாடுதலை விடமாட்டேன். தோழியீர்! நீவிர் எல்லிரும் என்னுடன் விளையாட வாரீர்!

வஞ்சி மகளிர் கூற்று

"வஞ்சி நகர மகளிரே! வஞ்சிக் கொடிபோலும் இடையீரே! வலிமைமிக்க வேலேந்திய மன்னனுடைய ஆயத்தினராகிய செம்பஞ் சூட்டிய அடியினீர்! எல்லிரும் வம்மின்! கொங்கையினாலே மதுரை மூதூரைச் சிதைத்துப் பாண்டிய மன்னனைத் தன் காற்சிலம்பினாலே வென்றவளைப் பாடுவோம் எல்லிரும் வம்மின்! தென்னவன் மகளைப் பாடுவோம், எல்லிரும் வம்மின்! செங்கோல் வளைய நேரின் பாண்டியர் உயிர் வாழார் என்று எம் மரசனுடைய முறையறிந்த நா கூறும்படி, இந் நாட்டை யடைந்த பைங்தொடி யணிந்த பாவையைப் பாடுவோம், எல்லிரும் வம்மின்! பாண்டியன் மகளைப் புகழ்ந்து பாடுவோம், எல்லிரும் வம்மின்!"

ஆயத்தார் கூற்று

"எம் அரசனாகிய சேரன் மகள் என்றோம் நாம். அவள் தன்னைப் பாண்டியன் பெற்ற மகள் என்றாள். நாம் சேரனை வாழ்த்துவோமாக! தெய்வமாகிய கண்ணகி பாண்டியனை வாழ்த்துவாள்!"

வாழ்த்து

தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழ மதுரையார் கோமான்றன் றொல்குலமே ;

[முன்னைத் தீவினை காரணமாகத் துன்பத்திலே உழந்த கண்ணகியின் கண்ணினின்று சோரும் நீர் கொன்

றதனுலே தன் உயிரை யிழந்த வேந்தர் வேந்தன் வாழ்க! எப்போதும் வற்ருமல் பெருகும் நீரினையுடைய வையை யாறு சூழ்ந்த மதுரைப் பதியார்க் கரசனது தொன்று தொட்டு வரும் குலம் நீடு வாழ்க!]

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினுன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர்த்தண் பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் ளெல்குலமே ;

[மலையரசனுகிய இமயவான் பெற்ற மடப்பாவையை நிலங் காவல் பூண்ட ஆரிய மன்னரின் நீண்ட முடிமேல் ஏற்றிய எம் சேர மன்னன் வாழ்க! எப்போதும் வற்ருது பெருகும் நீரை யுடைய ஆன் பொருநையாறு சூழ்ந்த வஞ்சியார் மன்னன் பழங்குடி நீடூழி வாழ்க!]

தோழி! மலர் விரியுங் கூந்தலாய்! காவிரி சூழ்ந்த சோணுடுடையானைப் பாடுவோம்! புகார் நகரைப் புகழ்ந்து பாடுவோம்!

அம்மானை வரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

[பெரிய நீர்ப்பரப்பாகிய கடல் சூழ்ந்த உலகினை ஆண்டு, விண்ணவர் தலைவனுடைய உயர்ந்த மதிலைக் காத்த ஆற்றலுடையோன் யார்? உயர்ந்த மதிலைக்காத்த வலியுடையோன் யாவன் என்ருல், உயர்ந்த வானின்கண் அசையும் மூன்று மதில்களை அழித்த சோழனுவான். அத்தகைய சோழனது புகார் நகரைப் பாடுவோம்.]

புறவு நிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை ;

[புறு வொன்றுக்காகத் துலாத்தின் கண் ஏறி, விண்ணவர் போற்றக் குறைவற்ற தன் உடம்பை அரிந்தளித்த மன்னவன் யார்? அவ்வாறு அரிந்தளித்த மன்னவன் யாவன் என்றால், தன் வாயிலின் முன்வந்த ஆவின் பொருட்டுத் தன் மகன்மீது தேர்க்காலைச் செலுத்தி முறை செய்த மன்னவனே ஆவான். அத்தகைய மன்னனது அழகிய புகார் நகரைப் பாடுவோம்.]

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்றிக் கெட்டுங்
குடை நிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை;

["மதம் நிறைந்த மலையனைய திசையானைகள் எட்டும் கண்களை இமையாமற் காணும்படி இமயமலையின் நெற்றியிலே நீண்ட புலியை எழுதியோன் யார்? இமயமலையில் நீண்ட புலிக்கொடியை எழுதியோன் எட்டுத் திசைகளையும் தன் குடை நிழலிலே வைத்துக் காத்த மன்னவன் ஆவான். அத்தகைய மன்னனது அழகிய புகாரைப் பாடுவோம்.]

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார் நகரம் பாடலோ ரம்மானை;

[அழகிய அணிகலன்களை யுடைய மடவார்தம் மனையிலே அம்மனைக் காயைத் தம் கையிலே கொண்டு பாடுவார். அவர்கள் அவ்வாறு பாடும் இயல்பெல்லாம் ஆத்தி மாலை யணிந்த வேந்தன் தம் திரண்ட தொய்யில் எழுதிய முலைகளின் மேற் கூடுவதற்கே. அவ்வாறு அவன் கூடினல் அவ் வேந்தனது அழகிய புகார் நகரத்தைப் பாடுவோம்.]

கந்துக வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே ;

[பொன் விளங்கும் மலர்க் கொடியைப் போற் பொன்னாலான மாலை ஒளி வீச, மின்னென விளங்கும் மேகலைகள் ஒலிக்க ஒலிக்க, எங்கும் ஓடிப், 'பாண்டியன் வாழ்க! வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம்! 'இந்திரன் ஆரம்பூண்ட மார்பன் வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம்!

பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே ; 2

[ஒளிவிடும் இளமின்னற்கொடி வானிலிருந்து பெரிய நிலத்திலே இறங்கினாற் போலப் பின்னும் முன்னும் எங்கும் பெயர்ந்து துள்ளி உலாவிச் சென்று, 'தென்னன் வாழ்க! வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம். 'இந்திரன் ஆரத்தைப் பூண்ட மார்பன் வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம்.]

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே ; 3

['நெருங்கி வந்து கையிலே இருந்தது மில்லை! கையினின்றும் வானத்தில் எழுந்ததும் இல்லை' என்று கூறும் படி உலாவி 'தென்னன் வாழ்க! வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம்! இந்திரன் ஆரத்தைப் பூண்ட மார்பன் வாழ்க!' என்று வாழ்த்திப் பந்தடிப்போம்.]

ஊசல்வரி

வடங்கொள் மணியூசன் மேலிரீஇ யையை
உடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்

கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கை நெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல்; 1

[வடங்களாற் காட்டப்பட்ட அழகிய ஊசல் மீதிருத்தி, ஐயையுடன் நின்றாரில் ஒருவர் கையை நிமிர்த்து, ஒற்றைத் தாளத்துடன் மேலே செலுத்தக் கடம்பை அடியோடு வீழ்த்திய சேர வேந்தனைப்பாடி அகங்கை யளவு பெரிய கண்கள் பிறழும்படி ஊசல் ஆடுவோம்! வளைந்த வில் இலச்சினைபாடி ஊசல் ஆடுவோம்.]

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்; 2

[ஐவரும் நூற்றுவரும் தம்முள் மாறுகொண்டு எழுந்த போரிலே பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருதிறத்தாருக்கும் அளித்த சேரன் பொறையன் மலையன் என்றழைக்கப் பெறும் வேந்தன் திறனைப்பாடி, முகிலனைய குழல் சரிந்து ஆட ஊசல் ஆடுவோம். கடம்புதடிந்த இயல்பைப் புகழ்ந்து ஊசல் ஆடுவோம்.]

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல்; 3

[கொடுஞ்சொற் கூறும் யவனரது வளம்மிகுந்த நாட்டினையும் வலிய பெரிய இமயமலையினையும் தென்குமரியையும் ஆண்ட, போர்க்குரிய வில்லும் கயலும் புலியும் ஆகிய கொடியை யுடையானாகிக் குடிகளைப் புரக்கும் தலைவனாகிய சேர வேந்தனின் பண்புகளைப் புகழ்ந்து, மின் போன்ற இடைதுவள ஊசல் ஆடுவோம். வெற்றிக்குரிய வில் இலச்சினைபாடி ஊசல் ஆடுவோம்.]

வள்ளைப்பாட்டு

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார் மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்; 1

[இனிய கரும்பை நல்ல உலக்கையாகக் கொண்டு நல்ல முத்துக்களைப் பொலிவுற்ற காஞ்சிமர நீழலிலே குற்றுகின்ற புகார் நகர மகளிர், வலிய சக்கரத்தை யுடைய கொடிகட்டிய தேரை யுடைய சோழனது மணம் பரவிய மாலைசூடிய வலிய பெரிய மலையனைய தோளினைப் பாடும் பாடலே சிறந்த பாடலாகும். அம் மங்கையர் இசைக்கின்ற பாடலே சிறந்த பாடலாகும்.]

பாடல்சான் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்; 2

[பவளமாகிய உலக்கையாலே புகழ் மிகுந்த முத்தினை மாடங்கள் நிறைந்த மதுரை மகளிர் குற்றுவார்கள். அப்போது அவர்கள் இந்திரன் ஆரம் விளங்குந் தோளை யுடைய பாண்டியரின் மீனக் கொடியைப் பாடும் பாடலே சிறந்த பாடலாகும். உள்ளத்தை இன்ப வேதனைப்படுத்தும் வேப்பமாலையைப் பாடும் பாடலே சிறந்த பாடல்.]

சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்; 3

[சந்தன மர உரலிலே தகுதிவாய்ந்த அழகிய முத்தினை யிட்டுச் சிறந்த யானைக் கோட்டால் வஞ்சிமகளிர் குற்றுவர். அப்போது அம்மகளிர்,' பகைவரை முன்சென்று

எதிர்த்துத் தாக்கும் மாலையணிந்த சேரமன்னன் கடம்பின் முதலை வெட்டிய, இவ்வுலகிற் பரவிப் போர்த்த புகழினைப் பாடும் பாடலே சிறந்த பாடல்! உள்ளத்தினை உருக்கும் பனந்தாரைப் பாடும் பாடலே சிறப்புடைய பாடல்.]

கண்ணகியும் வாழ்த்தினள்

நீண்ட விற்பொறியையுடைய சேரனது நல்ல தாளை வணங்காத நிலவேந்தர்க்கு அவனை வாழ்த்தல் அரிதாகும். ஒளியினாற் சூழப்பெற்ற எம் கோமகளாகிய பத்தினிக்கடவுளும், 'செங்குட்டுவன் நீடூழி வாழ்வானாக' என்று வாழ்த்தினள்.

30. வரந்தரு காதை

மணிமேகலை துறவு

வடநாட்டு மன்னரைத் தன் அடிப்படுத்திய சேரர் பெருமான், கற்புக்கடவுளின் உருவம் தன் கண்ணுக்குப் புலப்பட்டபிறகு, தேவந்தியை நன்கு நோக்கி, நீ வாய் விட்டு அழுதபோது கூறிய மணிமேகலை என்பவள் யாவள்? அவள் துறத்தற்குரிய காரணம் யாது? இப் போது அதனை உரைப்பாயாக' என்று வினவினன்.

தேவந்தி, 'வேந்தன் வென்றி குறைவில்லாது உயர்க! நாட்டில்மிக்க செல்வம் பெருகுவதாக! என்று வாழ்த்தி, அழகிய மேகலையணிந்த மங்கையர் குழுவிலே அவரினும் உயர்ந்து காணப்பெறும் மணிமேகலையின் சிறந்த துறவை விளக்கிக் கூறுகிருள்:

"கரிய தண்ணிய குழல் வகைபெற்ற அழகுடன் ஐவகையாக முடிக்கும் பருவம் பெற்றுவிட்டது. சிவந்த அரிகள் படர்ந்த நீண்ட மழைக்கண்கள் கரவினை அறிந் தன. ஆயின், அவள் அதனை அறிந்திலள். தம்முள் ஒத்து விளங்கும் இரு பவளத்துள்ளே ஒளிமிக்க முத் துக் கோவை போலும் பற்கள் முதிராத அளவின ஆயின. புணர்முலைகள் விரும்பப்படுவனவாயின. புல்லத்தகும் மார்பு விரிந்தது. ஒல்கும் இடை சிறுத்தது. தகுதி யுற்ற அல்குல் அகன்றது. இரு துடைகளும் திரண்டன. செம்பஞ்சூட்டி அழகு செய்தலைப் பொருத நிறம் விளங் கும் சிற்றடிகள் நெய் தோய்ந்த தளிரினைப் போன்றன. தலைக்கோலினையுடைய ஆசிரியன் கூத்துப் பயிற்றுவிக்கக் காத்திருக்கின்றனன். குடிப்பிறந்த மக்கள் மணிமேகலை யின் அரங்கேற்றம் நிகழாமையின், கணிகையர் குல முறைப்படி அவளை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின் றனர். நின்கருத்து யாது! யான் என்ன செய்ய வேண்

டும்?'' என்று மாதவியை மாதவியின் நற்றுய் சித்திராபதி வினவினுள்.

அதனைக் கேட்ட மாதவி, 'என் இளமகள் மணிமேகலை வருக!' என வரவழைத்து உருவற்ற காமன் தன் ஒப்பற்ற பெரிய வில்லுடன் மணமலர் வாளியை வறிதே நிலத்தில் எறிந்து செயலறும்படி, ஒழுங்குற்ற மாலையைக் கூந்தலுடன் களைந்து போதியின் முன்னிலையிலே தானம் புரிந்து துறவறத்திலே இசைத்தனள். அதனைக் கேட்ட சோழனும் நகர மக்களும் உயர்ந்த நல்ல மாணிக்கத்தை ஆழம் மிகுந்த கடலிலே வீழ்த்தியவர் போன்று மிக்க துன்பமுற்றனர். நன்மொழி மாதவரான அறவண அடிகள், 'மணிமேகலை தன் துறவை எமக்கு அறிவித்தாள்' என்று அவளுடைய அன்பு மிக்க நல்லுரையை எம்மிடம் அருளுடன் உரைத்தார். துறத்தற்குரிய பருவம் வருமுன் பைந்தொடியணிந்த மணிமேகலை திருமகளும் விழையும் ஒப்பனையைத் துறந்தாள். ஆகையால் அரற்றினேன்.''

தெய்வமேறிய தேவந்தி

இவ்வாறு கூறிய தேவந்தியின் பூங்கொத்தணிந்த கூந்தல் குலைந்து பின்னே சரியப், புருவந் துடித்தன. பவளம் போன்ற செவ்வாய் மடிந்தது. நகைப்புத் தோன்றியது. பேசும் சொற்கள் குழறின. அழகிய முகம் வியர்த்தது. அழகிய கண்கள் சிவந்தன. கையை உயர்த்தி வீசினுள். காலைப் பெயர்த்து வைத்து ஆடினுள். ஆங்குள்ள பலரும் அறிய முடியாத தெளிவும் மயக்கமும் உடையவளாய் உலர்ந்த நாவினளாய் மேலான சொற்களைக் கூறித் தெய்வமேறியவளானுள்.

''மாடலமறையோனே! கண்ணகி கோயிலிற் பெரிய வாயிலில் உள்ளவனே! கொய்த தளிரை இடையிடையே கலந்து தொடுத்த குறிஞ்சி மலர்மாலை சூடிய செங்குட்டுவனுக்கு எதிரில் கண்ணகிக் கியற்றிய கடவுள் மங்கலத்தைக் காணவந்த மடமொழியையும் நல்லணியையும்

உடைய மகளிருள், அரட்டன் செட்டியின் மனைவிபெற்ற இரட்டைப் பெண்களையும், திருவனந்தபுரத்திலே பாம் பணையிலே துயிலும் திருமாலுக்குத் தொண்டியற்றும் சேடக்குடும்பியின் சிறுமகளும் ஈங்குள்ளனர். நீண்ட மூங்கில்கள் நிறைந்த செங்கோட்டினையுடைய மிகவுயர்ந்த மலையில் மங்கலமடந்தையின் கோயிலுள்ள அவ்விடத் திலே முருகனுடைய யானைபோலும் நெடிய கல்லின் பிடர் போலுள்ள இடத்திலே நீர் நிறைந்த அழகிய சுனைகள் பல உள. அச் சுனைகளின் நடுவிலே, வெண்சிறு கடுகு போலும் நுண்ணிய கற்களையும் முருக்கம் பூவின் நிற முடைய சிறு கற்களையும் மாவைக் கரைத்தாற் போன்று நெகிழ்ந்து சொரிகின்ற நீரினையும் உடைய சுனையொன் றுள்ளது. அதனுள்ளிறங்கி நீராடினோர் முன்னைப் பிற வியின் உணர்ச்சியைப் பெறுவர். ஆதலின் அதனைக் கமண்டலத்திலே கொணர்ந்து ஈங்கே நின் கையிலே தந் தேன். உறியிலே கமண்டலத்திலே உள்ள இந்த நீர் ஞாயிறு திங்கள் உள்ளளவும் குறையாத தெய்வத் தன்மை உடையது. இந்த நீரை இம் மூன்று மகளிர் மேலும் தெளித்து நீராட்டினால் இச் சிறு மகளிர் முன்னைப் பிறப்புணர்ச்சி யுடையராவர். இதனைச் செய்துபார். யான் பாசண்டச் சாத்தன், பார்ப்பனியாகிய தேவந்தி யினிடத்தே உற்றேன்"

என்பன தேவந்தியின் வாயிலிருந்து வந்தன.

செங்குட்டுவன் வியப்புற்றான்; மாடலன் முகத்தை நோக்கினான். மாடலன் மிக மகிழ்ந்து, 'அரசே! நின் தீமை கெடுவதாக! இதனைக் கேள்' என்று கூறுகிறான்:

மாடலன் கூறியது:

காப்பியக் குடியினளாகிய மாலதி என்னும் பெய ருடைய பார்ப்பனி ஒருத்தி தன் மாற்றாள் குழந்தைக்குப் பெருகும் அன்புடன் பாலூட்டினாள். பழந் தீவினையாலே பால் புரையேற அக்குழவியின் உயிரைக் கூற்றுவன் கொண்டு சென்றனன். மாலதி நடுங்கி ஆராத துன்பம்

உற்றாள்; பாசண்டச் சாத்தனிடத்தே சென்று வரங்கிடந்தாள். அத்தெய்வம் அவளுக்கிரங்கி, 'அன்னாய்! நின் பெருந்துயரை விடுக!' என்று கூறித் தான் குற்றமற்ற அக் குழந்தையின் வடிவாகி வந்து அவள் துயரைப் போக்கி, மாலதியிடத்தும் அவள் மாற்றாளிடத்தும் அழகு பெற வளர்ந்து, காளையாகி, இத் தேவந்தியை மணந்தான்; எட்டாண்டுகள் கழிந்தன. ஒருநாள் அவன் தன் முதிராத இளமையழகினை அவளுக்குக் காட்டி, 'என் கோயிலுக்கு வருவாயாக' என்று பிரிந்தான். அத்தெய்வம் மங்கல மடந்தை கோயிலிலே வாழும் ஓர் அந்தணனாக என்முன் வந்து, உறியிலே தங்கிய கமண்டலத்தை என்னிடம் கொடுத்து, அதனைக் குறிக் கொண்டு காக்குமாறு சொல்லிச் சென்றவன் பின்னர் வந்திலன். நான் அக்கமண்டலத்தைக் கொண்டுவந்தேன். இப்போது இந்தப் பார்ப்பனியின் மேல் தோன்றி இவ்வாறு கூறினன். மன்னர் மன்னனே! இப்போது இந்நீரினைத் தெளித்து அறிவோம்"

மாடலன் அந்த மூன்று சிறுமியர்மீதும் அந்நீரைத் தெளித்தான்.

சிறுமியரின் பழம்பிறப்பு

அச் சிறுமியர்க்கு மறைந்த பழம்பிறப் புணர்ச்சி வந்து தோன்றியது.

அவர்களில் ஒருத்தி, "நின்னாற் புகழப் பெற்ற காதலன் நின்னைப் பிரிந்த காலத்துப் பெரியோர் இகழும் அவன் ஒழுக்கத்தை இகழ்ந்து வருந்திய என்னையும் சிறிதும் நினையாமல், வேற்று நாட்டிலே எவருந் துணையில்லாமல் தனியே காதலனுடன் மிக்க துன்ப முற்றனை! யான் பெற்ற மகளே! எனக்குத் துணையாகத் தோழியைப் போல் இருந்தவளே! எம்மிகு துயர் தீர்த்த நங்கையே! வாராயோ?" என்றழுதாள் இவள். கண்ணகியின் தாய் என ஆங்குள்ளோர் அறிந்தனர்.

மற்றொருத்தி, "நீ பிரிந்த பிறகு என்னுடன் இருந்த விளங்கும் கலன் அணிந்த கண்ணகியிடம், இருள்மிக்க

இடையாமத்திலே பிறர் அடையாத துன்பத்தை யடைந்து வேற்று நாடு சென்றதற்கு என்னுள்ளம் வருந்திப் புலம்புறும். நீ அடைந்த துயரத்தை நான் தாங்கமாட்டேன். என்மகனே! அதனைத் தணிக்க வாராயோ?'' என்றழுதாள்.

இவள் கோவலன் தாய் என ஆங்குள்ளோர் அறிந்தனர். மூன்ருவது பெண், "நீர் பெருகும் வையையாற்றின் பெரிய துறையினின்றும் மீண்ட நான், அழகு மிக்க நகரத்தின் சிறுவர்களால் இக் கொடுஞ் செயலைக் கேள்வியுற்று மனைக்கு ஓடிவந்தேன். அங்கே நின்னைக் கண்டிலேன். எம்அன்னையே! இளையாளே! நீ எங்கே சென்ருெளித்தாயோ!'' என்றழுதாள்.

இவள் மாதரியென ஆங்குள்ளோர் அறிந்தனர்.

இவ்வாறு புகழை விரும்பிய செங்குட்டுவன்முன் அரற்றி வருந்தி வருந்தி ஏங்கி, மழலை மொழியும் செவ்வாயினையும் சிறிய வளையலணிந்த கையினையும் உடைய சிறுமியர் முதிர்ந்த பெரிய அரிவையர் கூறுமாறு போலக் கோயிலெதிரே புலம்பினபோது, இதழ் மலர்ந்த பனந்தாரணிந்த சேரன் மாடலன் முகத்தை நோக்கினன்.

அரசன் கருதியதை அறிந்த மாடலன், 'மன்னர் கோவே! வாழ்க!' என்று வாழ்த்திக் கூறுகிருன்:

"தன்னிடத்துத் தானங் கொள்ள வந்த பார்ப்பனன் அடைந்த கொடிய துன்பம் ஒழிய, மதஞ் சொரியும் கவுளினை யுடைய யானையின் கையத்தே நுழைந்த வள்ளலும், விண்ணோர் வடிவம் பெற்றவனுமாகிய கோவலனின் காதலியாகிய கண்ணகியிடம் அன்புடைய ராதலானும், துறக்கவுலகிற்கு அவருடன் செல்லுதற்குரிய கெடாத நல்லறம் புரிந்திலர் ஆதலானும் அழகிய செவ்விய மென்மைத் தன்மையுடைய கண்ணகி அஞ்சாமற் புகுந்த வஞ்சிப் பழம்பதியிலே கண்ணகியிடம் கொண்ட அன்பினுற் சிறந்த உள்ளத்துடன் அரட்டன் செட்டியின் மனைவி வயிற்றிலே மகிழ்தற்குரிய சிறப்புடன் ஒருங்கே பிறந்தனர். அவ்வாறே ஆயர்குல முதியவளாகிய மாதரி

கண்ணகியின்மேல் வைத்த காதலாலே தான் ஆடிய குரவைக் கூத்தின் நற்பயனுற் பாம்பணைமீது துயில்வோனுக்குத் தொண்டு செய்யும் சேடக்குடும்பியின் மகளாயினள். நன்மையைத் திறம்படப் புரிந்தோர் பொன்னுலகு புகுதலும், ஒரு பொருளிடம் அன்பு கொண்ட வளமுடையோர் அந்த அன்பின்வழியே அப்பொருளை அடைதலும், முற்பிறப்பிற் செய்த அறத்தின் பயனும் மறத்தின் பயனும் மறுபிறப்பிலே நன்மையாகவும் தீமையாகவும் விளைதலும் பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் புதுமையான நிகழ்ச்சி அல்லவே; படைப்புக் காலத்திருந்தே நிகழும் வாழ்க்கையே. ஆனேறு செலுத்துவோன் அருளாலே பிறந்து, மாநிலத்திலே புகழ் பெற்ற வேந்தன் ஆதலின், இங்ஙனம் முற்பிறப்பிற் செய்த தவப்பயன் இப்பிறப்பிலே கிடைத்தலையும் சிறந்தோர் படிவத்தையும் கையிற் கொண்ட பொருளைப் போலத் தெளிவுற அறிந்தனை. நெடுந்தகையே! ஊழிதோறும் ஊழிதோறும் உலகத்தை யாண்டு நெடிது இனிது வாழ்வாயாக!"

கண்ணகி வழிபாடு

இவ்வாறு மாடலன் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த செங்குட்டுவன், புலவர் புகழ்ந்து பாடும் பாடல் மிக்க சிறப்பினையுடைய பாண்டிநாட்டின் தலைநகராகிய ஆரவாரம் மிக்க மதுரையம்பதியிலே தீப்பற்றி மிகும்படி தன் இடப்பக்கக் கொங்கையைத் திருகியெறிந்த, இளமை தவழும் மேனியையுடைய கற்புக் கடவுளின் கோயிலுக்குப் படித்தரம் அமைத்து, நித்தல் விழாவணியும் நடைபெறுக எனப் பணித்து, மலரிட்டு நறுமணப் புகை யூட்டிப் பொருந்துங் கலவை முதலியவற்றை யணிந்து வழிபடுக என்று தேவந்தியை ஏவி, மும்முறை கண்ணகி கோட்டத்தை வலமாக வந்து உலக மன்னவன் நின்றான்.

அப்போது அரிய சிறையினின்றும் நீங்கிய ஆரிய வேந்தரும், அவ்வாறே பெரிய காவற் கூடத்திலிருந்து விடுதலை பெற்ற பிற மன்னரும் குடகநாட்டுக் கொங்

கரும் மாளுவ நாட்டு மன்னரும் கடல் சூழ்ந்த இலங்கையரசன் கயவாகுவும், 'இமயவரம்பனுகிய செங்குட்டுவன் செய்யும் அழகிய விழா நாளின்போது எம் நாட்டிலே யாங்கள் செய்யும் நாள் அணி வேள்வியினும் வந்தருள்புரிக' என்று வேண்டிப் பணிந்தனர்.

'அங்ஙனமே வரம் தந்தேன்' என்று வானில் ஒரு குரல் எழுந்தது.

அம் மொழி கேட்ட செங்குட்டுவனும் மற்றைய மன்னரும் மிகப் பெருஞ் சேனையும் கண்ணகியின் புகழைக் கூறிப் போற்றி, வீட்டின்பங் கண்டவர் போல் மகிழ்ந்தனர். பின்னர், வீரக் கழலணிந்த வேந்தர்கள் தன் அடியை வணங்க, மாடலமறையோன் பின் தொடர வேள்விச் சாலையைச் செங்குட்டுவன் அடைந்தான்.

அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தன்

அப்பொழுது யானும் கண்ணகி கோயிலுட் சென்றேன். என் எதிரே தேவந்திகைமேல் விளங்கித் தோன்றி, "வஞ்சிப்பழம்பதியிலே அரண்மனை அத்தாணி மண்டபத்திலே நின் தந்தையின் அருகிலே அமர்ந்திருந்த நின்னை நோக்கி, அரசு பெற்று வீற்றிருக்கும் அழகிய உடற்கூற்றியல் உண்டு என்று கூறிய நிமித்திகனை வெகுண்டு பார்த்து, மணம் விரிந்து நறுமலர் மாலையினையும் கொடித் தேர்ப்படையையும் உடைய செங்குட்டுவனுக்கு அம் மொழி கேட்டதனுல் உண்டான மன வருத்தம் ஒழியுமாறு, ஞாயிறு தோன்றும் கீழ்த்திசை வாயிலிலே துறவிகளின் எதிரே, பரவிய நிலவுலகச் சுமையை நீத்தொழிய விலக்கி, மனமும் செல்ல வியலாத மிகவும் நீண்ட தொலைவில் உள்ள 'அந்தம் இல் இன்பத்து அரசு ஆள் வேந்து' ஆயினை" என்று, என் வரலாறு கூறிய, விண்ணவர் மகளாகிய கண்ணகியின் இயல்புகளை விளக்கிய தகுதிமிக்க நல்லுரையை விளங்கக் கேட்ட மேன்மைசான்ற நன்மை யுடையீர்! வளமிகும் உலகிலே வாழ்வீர்!

"பிறர்க்குக் கவலையும் இடையூறும் விளைத்தலை முறைமையால் விட்டொழிமின்! கடவுள் உண்டென உணர்மின்! கடவுளை நம்பியோரை விரும்புமின்! பொய்ம் மொழி அஞ்சுமின்! புறங் கூறலை விலக்குமின்! ஊனுணவை ஒழிமின்! உயிர்க்கொலையை விடுமின்! தானம் புரிமின்! பலவகைத் தவமும் மேற்கொள்மின்! செய்ந்நன்றி மறவன்மின்! தீயோர் தொடர்பை வெறுமின்! பொய்ச் சான்று போகன்மின்! உண்மை மொழியை ஓம்புமின்! அறமுரைப்போர் அவைக்களத்தை நீங்காமற் சேருமின்! மறவோர் அவைக்களம் விடுத்து நீங்குமின்! பிறர் மனைவியை விருப்பன்மின்! துன்புற்ற உயிரைக் காமின்! இல்லறம் போற்றுமின்! தீச் செயல் ஒதுக்குமின்! கள்ளையும் களவையும் காமத்தையும் பொய்யையும் பயனில் கோட்டியையும் சூழ்ச்சியுடன் ஒழிமின்! இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையற்றவை. உலகில் வாழ்வென உள்ள நாட்கள் குறையா. வரவேண்டியது நீங்காது. ஆகையால், நாம் செல்லும் மறுமை நாட்டுக்கு உறுதுணையாகிய அறத்தினைச் செய்ம்மின்!"

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரங் கூறி முடித்தார்.

கட்டுரை

முடியுடைய வேந்தர் மூவரினும், மேலைத்திசையை யாளும் வென்றியிற் குறையாத, ஆரமார்பினையுடைய சேர வேந்தர் மரபினரின் அறமும் வீரமும் ஆற்றலும் அவர்களுடைய பழமையான விறல்மிக்க மூதூரின் தன்மை மேம்பட்டிருப்பதும் ஆங்கே விழவுமலிந்த சிறப்பும் விண்ணவரின் வரவும், நீங்காத இன்பமுடைய அச் சேரர் நாட்டிலே குடிகளின் செல்வமும் உணவின் பெருக்கமும் வரிப்பாட்டும் குன்றக் குரவையும் பொருந்திய கொள்கையினாலே, புறப்பொருள் துறையிலே அறத்துடன் கூடிய போர்த்துறை முடித்த வாய்வாட் படைஞரொடு, நீர் மிகும் கடற் பரப்பிலே சென்றும் கங்கைப் பேராற்றின் கரையைக் கடந்து சென்றும் பகைவரை வென்றுவந்த செங்குட்டுவனுடன் ஒருவாறு நோக்கும்படி அமைந்த வஞ்சிக் காண்டம் முற்றிற்று.

எடுத்தாண்ட பாட்டுக்களின்
முதற்குறிப்பு அகரவரிசை

Kumar